

Wrapper pages Printed at The Modern Printers, Madras.

பிச்சை எமனிடம் வாங்கிக் கொண்டார். துரியோதனன்முன்பு கிருஷ்ண பகவான் விசுவரூபம் காண்பித்ததுபோல், மகாத்மா காந்தி தமது விசுவரூபத்தை ராஜகோட்டையில் காண்பித்தார். உலகத்திலுள்ள எல்லோரும் விசுவரூபத்தைக்கண்டு, ஆச்சரியமும், பயமும் கொண்டார்கள். வணங்காமுடி மன்னனை துரியோதனன் எப்படியிருந்தானோ, அப்படியே தாகூர் சாகிப் இருந்தார்.

துரியோதனன் வணங்காமுடி மன்னனாகயிருந்த போதிலும், தூது சென்ற கிருஷ்ண பகவானை இம்சிக்கவில்லை, மரியாதைக் குறைவாகவும் நடத்தவில்லை. ஆனால் ராஜகோட்டை மன்னர் துரியோதனனைவிட ஒருபடி அதிகமாகச் சென்றுவிட்டார். சமஸ்தான ஊழியர்கள் மகாத்மாவை தூஷிக்கவும் செய்தார்கள். தாகூர் சொன்ன சொல்லை மாற்றிப் பேசியதுடனில்லாமல் காலிகளைத் தூண்டிவிட்டது வெட்கக்கேடாகும்.

நீத்தவராகியோர் நெருப்புயிர்த்திடிற்
காத்திடுங் கடவுளுங் கலங்கு மாதலா
லேத்துவதே கடனென்று மைந்தனே
யாத்தர்கள் பொறுப்பரென்றவ மதித்திடேல்

—"விநாயகபுராணம்."

இப் புத்தகத்தில் சமஸ்தானங்களின் வருஷ வரு[illegible]மானம், சர்க்காருக்குச் செலுத்தும் கப்பம், முதலியன [illegible]வகளை விபரமாகவும், சரியான கணக்குகளும் எடுத்[illegible] காட்டப்பட்டுள்ளன. சமஸ்தானங்கள் எங்கு இருக்[illegible]ன என்பதை வாசகர்கள் உடனே தெரிந்துக்கொள்[illegible]கு ஏதுவாக இந்தியா படமொன்று முன்னால் [illegible]சர்க்கப்பட்டுள்ளது. 562 சமஸ்தானங்களில் 147 சமஸ்தானங்களே சமஷ்டியில் குறிப்பிட்டுள்ளபடியால் இவைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு மற்றவைகளை

விட்டு விடப்பட்டன. சத்தியாக்கிரக சம்பந்தமான பூரா விஷயங்களையும் கொடுத்து உதவிய "தினமணி" ஆசிரியர் ஸ்ரீமான் டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளைக்கும், தினமணி காரியாலயத்தினருக்கும் எனது நன்றியை மிக வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகம் போற்றும் உத்தமோத்தமர் மகாத்மா காந்தியை; தேவரின் உதவியின்றித் தானே முன்னின்று நகைத்துத் திரிபுரத்தை எரித்த சிவபிரானுக்கு ஒப்பிடுவதா? அல்லது, இராக்ஷதர்களை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டவே அவதரித்த, ஸ்ரீராம பிரானுக்கு ஒப்பிடுவதா? அல்லது பல வடிவங்கொண்ட மகா மாயாவியான சூரபன்மனைக் கொன்ற குமரக் கடவுளுக்கு ஒப்பிடுவதா? என்று யோசிக்கவேண்டும். சூரபன்மன் போர்புரிந்து இறுதியில் மாமரமாக நின்றான். அக்குமாரக் கடவுள் மரத்தைப் பிளந்தபோது ஒரு கூறு மயிலாகவும், மற்றொரு கூறு சேவலாகவும் போருக்கு வர குமாரக்கடவுளோ மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கையிலேந்தி தரிசனம் கொடுத்தார்.

காங்கிரஸ் சத்தியாக்கிரகப் போர் நடத்துகையில் அதிகாரவர்க்கம் என்ற மாமரம் எதிரே நின்றது; இதைப் பிளந்ததும் ஒரு கூறு சமஷ்டியாகவும், மற்றொரு கூறு, பெயரளவில் மாகாண சுயாட்சியாகவும் போர்புரிகின்றது. இதனையும் காந்தி மகான் சமாளித்து, நம் அனைவருக்கும் கதிமோட்சம் தேடித் தருவாரென்பது திண்ணம். இப்புத்தகத்தை மகாத்மாவின் பாத காணிக்கையாக செலுத்துகின்றேன். சத்தியம் வாழ்க!

சென்னை,
22—4—39.

ஏ. கே சந்திரசேகரன்,
ஆசிரியன்.

தவம் செய்து தன்னுயிரைத் தனக்கு உரித்தாகப்
பெற்ற மகான் மகாத்மா காந்தியை உலகத்திலுள்ள
உயிர்கள் அனைத்தும் வணங்கு மன்றே!



"தன்னுயிர் தானறப் பெற்றானையேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்" —குறள்.

ராஜகோட்டை சத்தியாக்கிரஹம்

சமஸ்தானங்களின் சரிதம்.

முதல் அத்தியாயம்.

உலகத்திலுள்ள மக்களின் திருஷ்டியை காந்தம் போலக் கவர்ந்தது ராஜகோட்டை சமஸ்தானம். ஒரு சிறு சமஸ்தானம் உலகத்தையே கவரவேண்டுமானால், அதற்கு ஒரு தனிப்பெருமை வேண்டுமல்லவா? உலகம் போற்றும் உத்தம தவப்புதல்வன் மகாத்மா காந்தி அச் சிறு சமஸ்தானத்திற்குப் போய், உண்ணாவிரதம் மேற்கொண்டதால், உலகமே அங்கு நோக்க வேண்டியிருந்தது. மகாத்மா காந்தி காலடி எடுத்து அந்த ராஜகோட்டை சமஸ்தானத்தில் வைக்காதிருப்பின், அச் சமஸ்தானத்தையோ, அச்சமஸ்தான மன்னரான தாகூர் சாகிப்பையோ ஒருவரும் சிந்திக்க மாட்டார்கள். மகான் காலடியெடுத்து வைத்ததால், சரித்திரத்திலே இடம் பெற சந்தர்ப்பம் கிடைத்தது. ஆகவே சமஸ்தானங்களின் நிலைமையையும், அங்கு வாழும் குடிமக்களின் போக்கையும் சற்றேனும் தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஜனத்தொகையும் விஸ்தீரணமும்

உலக ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்கு கொண்டது இந்தியா. இத்தேசத்தின் விஸ்தீரணம் 1,773,000. சதுர மைல். 315,132,000 ஜனத்தொகை கொண்டது. இவ்வளவு ஏராளமான ஜனத்தொகை கொண்டதும், மிக அதிகமான சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ளதுமான இந்தியா ஒரு காலத்தில் உயர்

ந்த நிலையிலிருந்து இன்று அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்பட்டு பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. வீழ்ந்த நாட்டை மீட்கவும், மக்களை இரக்ஷிக்கவும், கங்கணம் கட்டிக்கொண்டு நிற்போர் காங்கிரஸ் மகா சபையாரும், ஒப்பில்லாத் தலைவர் மகாத்மா காந்தியும்தான்.

இந்தியாவின் பெரும்பாகம் இந்திய சர்க்காரின் ஆளுகையின் கீழ் கிடையாது. சுமார் 6,75,000 சதுர மைல்கள் கொண்டதும், 7¾ கோடி ஜனத்தொகையுமுள்ள பிரதேசங்கள் சுதேச சமஸ்தானாதிபதிகளின் ஆளுகைக்குட்பட்டது. 7¾ கோடி மக்கள் வாழும் 6,75,000 சதுர மைல் விஸ்தீரணத்தை சுமார் 562 சிற்றரசர்கள் ஆளுகின்றார்கள். இந்த 562 சமஸ்தானங்களில்; வருஷத்திற்கு 10 லக்ஷ ரூபாய்களுக்கு மேல் வரும்படியுள்ள பெரிய சமஸ்தானங்கள் 40 இருக்கின்றன. வருஷத்தில் 6½ கோடி வருமானமும், 82,700 சதுர மைல்கள் விஸ்தீரணமும், 1,44,63,148 ஜனத்தொகையுமுள்ளது ஐதராபாத் சமஸ்தானம். சமஸ்தானங்களில் பெரியது இது தான். ஆயிரம் சதுர மைல்களுக்குக் குறைந்த விஸ்தீரணமுள்ள சமஸ்தானங்கள் 454ம், பத்து லக்ஷ ஜனங்களுக்குக் குறைந்த சமஸ்தானங்கள் 452ம், வருஷத்தில் லக்ஷ ரூபாய்களுக்கும் குறைந்த வருமானமுள்ள சமஸ்தானங்கள் 374 இருக்கின்றன.

பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஒரு ஜில்லாவுக்கும் குறைந்த விஸ்தீரணமும், வருமானத்தில் பாதிக்கும் குறைந்துள்ள சமஸ்தான மன்னர்களிருக்கிறார்கள். இதற்கும் குறைந்த அதாவது ஒரு சதுர மைல் விஸ்தீரணம் கொண்ட சமஸ்தானங்கள் 15 உண்டு. இதில் மூன்று சமஸ்தானங்களில் நூறு பேருக்குமேல் கிடையாது. ரூபா 100 வருமானமுள்ள ஐந்து சமஸ்தானங்கள் இருக்கின்றன. மேற்சொன்ன எல்லா சமஸ்தானங்களைவிட மிகச் சிறியதும் 32 பேர்கள் கொண்டதும்,

வருஷத்தில் ரூபா 20 வரக்கூடிய சமஸ்தானங்களுமிருக்கின்றன. இவர்களெல்லோரும் மன்னர்கள்தான்! சிற்றரசர்கள்தான்! எல்லா மன்னர்களையும் ஒரே ரகத்தில் வைக்கக்கூடாதென்பதற்காக ஒவ்வொரு மன்னருக்கும் ஒவ்வொரு விதமாக "ஹைனஸ்," "ஹிஸ் ஹைனஸ்," "மஹா ராஜாதி ராஜா," "மஹா ராஜா," "ராஜா," என்னும் பட்டங்களை வெள்ளையர்கள் வழங்கியிருக்கிறார்கள். இந்திர போகத்திலும், பட்டங்களிலும் மகிழ்ந்து பாட்டாளி மக்களை மறந்தார்கள் மன்னர்களில் பலரும். பாட்டாளி மக்களை மறந்த மன்னர்களைத் தட்டி யெழுப்பவே காங்கிரஸ் மகாசபையின் தலைவர் மகாத்மா காந்தி தவக் கோலம் பூண்டார்.

நிர்வாகப் பொறுப்பு

சமஸ்தானங்களை ஆட்சி புரிவது, மன்னர்களெனத் தோன்றினும், முக்கியமான சமஸ்தானங்களை இந்திய சர்க்காரும், அவ்வளவாக முக்கிய மில்லாத சமஸ்தானங்களை ஏஜென்ஸி மூலமும், ரெஸிடெண்ட் மூலமும் நிர்வகிக்கின்றனர். சமஸ்தான மெஷினை ஓட்டுவது மேற்சொன்ன ஏஜென்ஸிகள். இந்த ஏஜென்ஸிகள் வெள்ளையர்களாகையால் அவர்களின் சாம்ராஜ்யத்திற்கு ஒரு சிறிதும் நஷ்டமின்றிப் பார்த்து வருவார்கள். வெள்ளை ஏஜெண்டுகள் சொல்லுமிடத்தில் சமஸ்தான மன்னர்கள் மூச்சுப் பேச்சில்லாமல் கையெழுத்துப் போடுவது வழக்கம். இதற்கும் குறைந்த சமஸ்தானங்களை அரசியல் ஏஜெண்டாவது அல்லது சமஸ்தானங்களுக்குப் பக்கத்திலுள்ள ஜில்லா கலெக்டராவது பார்த்துக்கொள்வார்.

ஏஜெண்டுகளின் அதிகாரம் பலதரப்பட்டது. பொதுவாகக் கூறினால், சில ஏஜெண்டுகள் தங்கள் ஆலோசனையைக் கூறுவதும் மேற்பார்வை யிடுவதுமாக யிருப்பார்கள். சமஸ்தான மன்னர்கள் மைனர்களா

யிருந்தால் ஏஜெண்டுகளே நேர்முகமாக நிர்வாகத்தை ஏற்று நடத்துவார்கள்; கவர்ன்மெண்டால் ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகாரிகளிருந்தும் நிர்வாகத்தை நடத்துவார்கள். பெயருக்கு மன்னர்களே யொழிய நிர்வாகத்திற்கல்ல! 5,90,886 ஜனத்தொகையுள்ள கூச் பீஹார் என்ற சமஸ்தானம் வங்காளத்திலிருக்கின்றது. இதன் அரசர் மைனரா யிருந்தபொழுது வங்காள சர்க்கார் நிர்வகித்து வந்தது. மைனரின் தாயார் லண்டனில் பறவை வேட்டை யாடிக்கொண்டிருந்தார். சமஸ்தானதிபதிகளின் போக்கைக் கூறவாவேண்டும்?

ஐக்கிய மாகாணத்திற்கருகில் ரீவா என்று ஒரு சமஸ்தான மிருக்கிறது. விஸ்தீரணம் 13,000 சதுர மைல், 16 லக்ஷ ஜனத்தொகை. வருஷ வருமானம் 60 லக்ஷம் ரூபா. சமஸ்தான நிர்வாகத்தை நடத்த 9 அங்கத்தினர்கள் கொண்ட கவுன்சிலிருக்கிறது. ராஜா தலைவர். மன்னருக்கு வேட்டை யாடுவதில் தான் விருப்பம். 459 புலிகளைக் கொன்றிருக்கிறார். இவ்விதமாகவே, பல மன்னர்கள் தங்கள் குடி ஜனங்களைக் கவனிப்பதே இடையாது. மக்கள் கஷ்டப்பட்டுக் கொடுக்கும் லக்ஷக் கணக்கான நீர்வைப் பணத்தை வசூலித்தது, குதிரைப் பந்தயங்களிலும், போலோ முதலிய ஆட்ட அரங்குகளிலும், உல்லாச யாத்திரைகளிலும், சிற்றின்ப வைபவங்களிலும் காலங் கழிக்கின்றார்கள். மன்னனுக்கு தன் நாட்டு மக்கள்மீது கவலை யில்லை யென்றால், அன்னிய நாட்டிலிருந்து வயிறு பிழைக்க வரும் வெள்ளையன் எங்ஙனன் கவலை கொள்ளப் போகின்றான்.

மன்னருக்குக் கல்வி

சமஸ்தான மன்னர்களின் புத்திரர்கள் நன்றாகப் படிக்கவேண்டு மென்பதில் வெள்ளை சர்க்காருக்கு மிகுந்த கவலையாம்! இளவரசர்களுக்குக் கல்வி போதிக்க தனி உபாத்தியாயர் ஒருவரை சீமையிலிருந்து இறக்கு

மதி செய்வார்கள். பிறகு ஸ்பெஷல் காலேஜ்களில் சேர்ப்பார்கள். அல்லது ஆஜ்மீர், ராஜ்கோட், இந்தூர், லாகூர் முதலியவிடங்களிலுள்ள ராஜகுமார் காலேஜ்களிலேயே இளவரசர்கள் படிப்பார்கள். சில காலம் டேராடூன் என்னுமிடத்திலுள்ள பட்டாளத்தில் பயிற்சி பெறுவார்கள்; இவ்வகைளை யெல்லாம் விடுத்து லண்டனுக்கும் போய் படிப்பவர்கள் பலர். மகாஜனங்கள் கொடுக்கும் வரிப்பணத்திலிருந்தே செலவு செய்ய வேண்டுமென்பதை நாம் இங்கு எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை.

இளவரசர்களின் கல்விச் செலவில் மூன்றிலொரு பாகத்தை சமஸ்தான ஜனங்களின் கல்விக்காகச் செலவு செய்யும் பக்ஷத்தில் நாடு எவ்வளவோ உன்னத ஸ்திதியை அடைந்திருக்க முடியும். மேனாட்டு உபாத்தியாயரிடம் கல்வி பயில்வதால், மேனாட்டு நாகரீகமும், டாம்பீகச் செலவும், சிறுவயதிலிருந்தே ஊறிவிடுகின்றன. தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை என்னும் பழமொழிக்கு ஆளாகிவிடுகிறார்கள். உலகத்திலுள்ள மற்ற இடங்களில் பிரபுத் தன்மையும், டாம்பீக வாழ்க்கையும் குறைந்து வந்தாலும்,இந்தியாவிலே மன்னர்களிடம் இவ்விரண்டும் குடிகொண்டுள்ளன. ராஜ்ய நிர்வாகம் பலவிதமா யிருந்தாலும், மன்னர்கள் டாம்பீக வாழ்க்கையில் ஒருவரோடொருவர் ஒத்திருப்பார்கள். இவர்களை ஏழை இந்தியர்களின் மன்னர்களென்று கூறுவதைவிட இந்திர லோகத்தரசரான இந்திரனின் வம்சத்தினர்களென்று கூறுவது மிகை யாகாது. ஏராளமாகச் செலவு செய்து படித்த மன்னர்கள் ஆங்கிலம் பேசுவதும் ஒரு நூதனமாகவே யிருக்கும். தேவேந்திர பாஷை யென்றுகூட ஜனங்கள் நினைப்பார்கள்.

திருவாங்கூர் சமஸ்தானம், வருமானத்தில் 100க்கு 18 ரூபா வீதம் கல்விக்காக செலவழிக்கின்றது. மற்ற சமஸ்தானங்களை விட கல்வியின் பொருட்டு அதிகமாக

செலவழிப்பது திருவாங்கூர் ஆகும். பரோடா சமஸ்தான வருமானத்தில் 100-க்கு 17 வீதமும். மைசூர் சமஸ்தானம் 100-க்கு 16 வீதமும் செலவழிக்கின்றன.

வருஷத்தில் 125 லக்ஷ வருமானமுள்ள ஒரு சமஸ்தானம் இந்தியாவிலிருக்கிறது. 65 லக்ஷ ரூபாய் சமஸ்தான மன்னரின் சொந்த செலவு, 40 லக்ஷ ரூபா நிர்வாகச் செலவு, (இதில் கல்விக்காக 2 லக்ஷ ரூபா செலவாகிறது) பட்டாளச் செலவு 20 லக்ஷம ஆக மொத்தம் ரூபா 125 லக்ஷம். மற்றொரு சமஸ்தான மன்னர், தனக்கு வேண்டிய மோட்டார் கார்கள், குதிரைகளுக்காக செலவு செய்வதில் சரிபாதிதான் பொதுஜன கல்விக்காக செலவு செய்கின்றார். இன்னொரு சமஸ்தானத்தில் பொதுஜன சுகாதாரத்திற்காக செலவு செய்வதைக் காட்டிலும் இரண்டு மடங்கு வாகனங்களுக்காக செலவு செய்கின்றார். அடுத்த மன்னர் ஒருவர் பொதுஜன சுகாதாரத்திற்காக செலவு செய்வதைக காட்டிலும் மூன்று மடங்கதிகமாக தனது காமக் கிழத்திகளுக்காக செலவழிக்கின்றார். இவ்விதமாகக் கூறும் பொழுது நாம் என்னமோ புரளி செய்வதாக வாசகர்கள் கருதலாம். உதாரணமாக புள்ளி விவரங்களைக் கீழே தருகின்றோம். ஆகவே வாசகர்களே உண்மையைத் தெரிந்துக் கொள்ளலாம்.

1923-24 வருஷம்

வருமானம்	கல்வி	வைத்தியம்	மொட்டார்
ரூ.	ரூ.	ரூ	ரூ.
1,72,77,498	2,84,492	1,96,077	3,25,398

மேற் சொன்ன புள்ளியிலிருந்து வைத்தியத்தைவிட இரு மடங்கும், கல்வியைவிட ஒரு மடங்கும் மோட்டார் வாகனத்திற்குச் செலவழிக்கின்றார்கள் மன்னர்கள். இதைவிட வேறு உதாரணம் கூறவேண்டுமா? இவ்விதமாக செலவழிக்கும் அநியாயத்தை யார் கேட்பது?

ஜனங்களின் நன்மையைக் கொஞ்சம் கவனிக்கக் கூடாதா வென்று மன்னரின் கவுன்சிலைக் கேட்டால், "நாங்கள் என்ன செய்வது? இந்திய சர்க்காரைக் கேளுங்கள்" என்று கவுன்சிலர்கள் கூறுவார்கள். இந்திய சர்க்காரைக் கேட்டால், சுதேச மன்னரின் ஆட்சியில் நாங்கள் பிரவேசிக்க முடியாது என்று கூறிவிடுவார்கள். ஜனங்கள் எழுதி மன்னரைக் கேட்டால், மன்னர் தான் சமஸ்தானம், சமஸ்தானம்தான் மன்னர், ஆகவே நீங்கள் யார் கேட்பதென்று விரட்டி விடுவார்கள். இவ்விதமாக ஏழைகள் தவித்துக் கதறி அழும் குரலோசையைக் கேட்ட மகாத்மா காந்தி அஞ்சேல்! அஞ்சேலென்று ஆவலோடு ஓடிவந்தார் சமஸ்தான ஜனங்களைப் பாதுகாக்க.

சட்டசபையும், கவுன்சிலர்களும்

தேசீய இந்தியாவில் சட்டசபைக்கு அங்கத்தினர்களை ஜனங்கள் தேர்ந்தெடுத் தனுப்புவது போல சமஸ்தான சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுத்தனுப்புவதில்லை. அசெம்பளி என்ற சட்ட சபையும், "எக்ஸிகியூட்டிவ் கவுன்சில்" என்ற பரிபாலனச் சபை யொன்றும் ஆக இரண்டு சபைகளிருக்கும். முதல் தரமான 108 சமஸ்தானங்களில் 30 சமஸ்தானங்களில்தான் சட்ட சபைகளிருக்கின்றன. மற்ற சமஸ்தானங்களிலெல்லாம் மந்திராலோசனை சபைகளே யிருக்கின்றன. ராஜபுதனத்திலுள்ள 21 சமஸ்தானங்கள் பிதுரார்ஜித தன்னரசுகளாக விளங்குகின்றன. பிகானீர் சமஸ்தானமொன்று தவிர மற்றவைகளுக்கு சட்ட சபையே கிடையாது

பிகானிர் சமஸ்தான சட்டசபையின் மொத்த அங்கத்தினர்கள் 45 பேர்கள். அதில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் 20 பேர்கள், நியமன மூலம் 25 பேர்கள். தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் 20 பேர்களென்று

சொன்னேமே யொழிய அவர்களை பொதுஜனங்கள் தேர்ந்தெடுப்பதில்லை. சமஸ்தான அதிகாரிகளால் நடைபெறும் முனிசிபாலிடியிலிருந்து தேர்ந்தெடுத்தனுப்புவார்கள். இப்படியே கூடும் சமஸ்தான அசெம்பளி நிறைவேற்றும் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியாது. மந்திராலோசனை சபை செய்யும் தீர்மானம் தான் அமுலுக்குவரும். மந்திராலோசனை சபையினர் அசெம்பளிக்குக் கட்டுப்பட்டவர்களல்ல. மந்திராலோசனை சபையினர் "வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை" என்கின்ற நிலைமையிலே சமஸ்தான ஆட்சி நடைபெறும்.

பிகானிர் சமஸ்தானத்தின் விஸ்திரணம் 23,317 சதுர மைல்கள். 9,36,218 ஜனத்தொகை, 1,17,42,357 ரூபா வருமானம். இந்திய சமஸ்தானங்களில் ஏழாவதாக நிற்கின்றன. ஏராளமான வருமானமுள்ளதும், அதிக ஜனத்தொகையுமுள்ள சமஸ்தான சட்டசபை நடைபெறுவதோ வருஷத்திற்கு இருமுறைதான். 1927-28 வருஷத்தில் ஜனவரி மாதத்தில் மூன்று தினங்களும், செப்டம்பர் மாதத்தில் இரண்டு தினங்களும் சபை கூடிற்று. பட்ஜட் சமர்ப்பிக்கும்பொழுது, 6 தீர்மானங்களும் இரண்டொரு உப கேள்விகளும், 6 பில்களும் வந்தன. சபையின்முன் மந்திரி சமர்ப்பித்து பேசினார், முடிவில் சமஸ்தானாதிபதி வாழ்த்துக் கூறினார். அத்துடன் சபை மங்களகரமாக முடிந்துவிட்டது. இவ்வளவு பெரிய சமஸ்தானமே இந்த கதியில் நடைபெற்றால் மற்றவைகளைப் பற்றி என்ன சொல்லவேண்டியிருக்கிறது.

ஜனநாயகமென்கின்ற பெயரை வைத்துக்கொண்டு சர்வாதிகாரத்தன்மையிலே ஆட்சி நடைபெறும். பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள சட்டசபையைப்போல சட்டத்தை நிறைவேறலாம், ஆனால் அச்சட்டங்களை ஆக்கவோ, அழிக்கவோ, கூட்டவோ, குறைக்கவோ

சமஸ்தான மன்னருக்கு சர்வாதிகாரமுண்டு. மன்னரிடும் கட்டளையை நிறைவேற்றத் தவறும் மக்களைத் தண்டிக்கலாம். மன்னரின்மீதோ அல்லது அவரின் நண்பரையோ கோர்ட்டுக்குக் கொண்டுவந்து நம்பிக்கைத் துரோகமாக நடந்ததற்குத் தண்டிக்கமுடியாது சில்லரை அதிகாரிகள், யாராவது தவறிழைத்தால் அவர்கள்மீதுகூட, தலைமை உத்தியோகஸ்தரின் உத்திரவின்றி கோர்ட்டில் விபாஜ்ஜியம் தொடரக்கூடாது. குடிஜனங்கள் தவறிழைத்தால் அவர்களுடைய சொத்தைப் பறிமுதல் செய்ய அதிகாரிகளுக்கு அதிகாரமுண்டு. பொதுக் கூட்டங்கள் கூடுவதையோ, சங்கங்கள் ஸ்தாபிப்பதையோ, பத்திரிகைகள் நடத்துவதையோ தடை செய்ய வியக்தமான சட்டமொன்றில்லாதிருந்தபோதிலும், தலைமை அதிகாரியின் உத்திரவின்றியொன்றும் ஆரம்பிக்கக்கூடாது. சமூக சம்பந்தமான கூட்டங்கள்கூடப் போடக்கூடாது. ஏதாவதொன்றிரண்டு ஆரம்பித்தால் போலீஸ் உதத்தியோகஸ்தரே தடுத்துவிடலாம். இதற்குப் பரிகாரமே கிடையாது.

அரசர் தப்பிதம் செய்யமாட்டார்.

கடவுள் எப்படி தவறு இழைக்கமாட்டாரோ அப்படியே அரசரும் தவறிழைக்க மாட்டாரென்பது ஒரு வசனம். இவ்வசனத்தையே சமஸ்தான ஜனங்களிடம் மன்னரின் உத்தியோகஸ்தர்கள் கூறுவதுண்டு. கடவுளுக்கு அடுத்தவர் அரசராகையால் தவறு செய்ய முடியாது! ஆகவே இந்த வேதாந்தத்தின்படி தவறு செய்பவர்கள் சமஸ்தான ஜனங்களென்று நன்கு தெரிகின்றதல்லவா? தவறு செய்கின்ற ஜனங்களை அரசர் உடனே தண்டித்து விடுவார். சமஸ்தானத்திலுள்ள பத்திரிகாலயங்களுக்கும் இதே கதி தான். சமஸ்தானத்திற்கு வெளியிலுள்ள பத்திரிகைகள் ஜனநாயகம் எழுதினால், சமஸ்தான எல்லைக்குள் வரவொட்டாமல் தடுத்து விடலாம். மீறி தருவிக்கின்றவர்களையும், படிக்கின்றவர்களையும்

தண்டிக்க சமஸ்தானாதிபதிக்கு அதிகாரம் கடவுள் கொடுத்திருக்கிறார். கடவுள் கொடுக்கும் தண்டனைக்கு எப்படி அப்பீல் கிடையாதோ, அதைப் போலவே சமஸ்தான மன்னர் கொடுக்கும் தண்டனைக்கும் அப்பீல் கிடையவே கிடையாது. சமஸ்தான ஜனங்களின் உடல், பொருள், ஆவி, ஸ்திரீகள் மானம் காப்பாற்றப்பட வேண்டுமானால், சபல புத்தியுடைய மன்னரின் தயவு வேண்டும். இல்லையேல், ஆபத்துத்தான். உடல், பொருள், ஆவி மூன்றுக்கும், இவ்விதமான ஆபத்துக் காலங்களில் கோர்ட்டில் பிராது கொடுத்தால், கேஸ், அதல சுதல பாதாளத்தில் விழுந்து விடும். கேஸ் வெளிவர இரண்டு தலைமுறையாவது குறைந்தது பிடிக்கும். மத்திய சர்க்காருக்குத் தெரிவித்தால், மனுக்களை வாங்கிப் பார்த்து வைத்து விடுவார்கள்.

ஜனங்களின் விருப்பப்படியாவது, சட்ட சபைகளின் தீர்மானப்படியாவது, நாட்டை வசப்படுத்தியாவது, போர் தொடுத்து ஜெயித்தாவது, சமஸ்தானங்களை ஆளவில்லையென்பதை நன்றாக மன்னர்களறிவார்கள். ராஜகுடும்பத்திற்குத் தத்து புத்திரனாகவோ, தெய்வாதீனமாக பிறந்ததினாலேயோ, மத்திய சர்க்கார் தங்களை அரசராக ஒப்புக் கொண்டார்களென்பது உலகமறிந்த இரகசியம். எதேச்ச அதிகாரம் சமஸ்தானத்துள்ளும், வெளியேயும் கூட கொடி கட்டிப் பறக்குமாகையால் நியாயம் கிடைப்பது அரிதினும் அரிது. யாராவது சமஸ்தானத்தின் கணக்கு வழக்குகளையும், சமஸ்தானாதிபதியின் உண்மையான வாழ்க்கையையும் சுயரூபத்தில் எடுத்துக் காண்பித்தால் அதைத் தடை செய்து, காண்பிக்கின்றவர்களைத் தண்டிக்க "சமஸ்தான பாதுகாப்புச்சட்டம்" தலைமேல் வந்துவிடும்.

சமஸ்தானாதிபதிகள் குற்றம் செய்தால், குற்றமாகக்கருதப்படாது. குற்றத்தை நிறைவேற்ற ஜனங்கள் தடையாக இருந்தால், அவர்களை 24 மணி நேரத்

திற்குள் சமஸ்தானத்தை விட்டு வெளியேற்றி விடுவார்கள். கலியாண வைபவத்தைக்கூட கலைத்து விடலாம். குழந்தைகளுக்கு வார்சு பாத்தியதை இல்லாமல் செய்து விடலாம். மக்களைப்பிடித்து காவற்கூடங்களில் வைத்து விடலாம். ஜீவிய காலம் வரை கஷ்டப்படுத்தலாம். குற்றம் செய்ததாக பாவித்துக்கூட தண்டிக்கலாம். குற்றம் செய்தவர்களையே எமன் தண்டிப்பானென்று புராணங்கள் கூறுகின்றன. சமஸ்தான மன்னர்கள் குற்றம் செய்தவரையும், செய்யாதவரையுங் கூட தண்டிக்க முடியும். சமஸ்தான ஆட்சி முறை தெய்வாதீனமானது. இந்த முறையைக் கேட்பார் யாருமில்லை. சமஸ்தானுதிபதியின் இன்பத்திற்காக கொலை செய்தாற்கூட குற்றமாகக் கருதப்படமாட்டாது. இதற்கு நேர்மாறாகக் கொலை செய்பவருக்குத் துரைத்தனமும் கிடைக்கும்.

பேச்சுரிமை

பிரிட்டிஷ் இந்தியாவில் ராஜத்துரோகமாகப் பேசினுல் இரண்டு வருஷ தண்டனை கிடைக்கும். சமஸ்தானங்களில் ராஜத்துரோகமாகப் பேசினுல் ஐந்து வருஷ தண்டனை கிடைக்கும். பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஆள்வார் சமஸ்தானத்தில் எல்லா விதமான கடுமையான சட்டங்களுடன், விசேஷ சட்டமொன்றிருக்கிறது. அதாவது சமஸ்தானத்திலிருக்கும் ஒருவர் வெளியேயிருந்து ஏதாவது சாமானை தருவித்தாலும், தருவிப்பதற்கு கையொப்பமிட்டாலும், 5 வருஷ தண்டனையோ அல்லது ரூபாய் 2000 அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ தண்டிக்கப்படுவார்கள். ராஜத்துரோகமாக பேசுபவர்களை மார்வார் சமஸ்தான ஜனங்கள், இடங்கொடுத்தாலும், சாப்பாடு போட்டாலும், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தாலும் குற்றமாகக் கருதி தண்டிக்கப்படுவார்கள். இவ்விதம் செய்பவர்களை 48 மணி நேரத்தில் மாஜிஸ்டிரேட்டிடமாவது, போலீஸ் உத்தியோகஸ்தரிடமாவது தெரிவிக்கவேண்டும். சமஸ்தா

னங்களுக்கு விரோதமாக எழுதும் பத்திரிகைகளைக் கூட ஜனங்கள் படிக்கக் கூடாது. சமஸ்தான ஜனங்கள், மன்னர் கண்களுக்கும் மன்னரின் உத்தியோகஸ்தர்கள் கண்களுக்கும் யோக்கியராகத் தோன்றுவிடில் ஆபத்துத்தான். வீட்டை விட்டு புறப்படுமுன் முகக்கண்ணுடியில் தங்களைத் தாங்கள பார்த்துக்கொண்டே புறப்பட வேண்டும்.

வரி வசூல்

அரசனுக்கே ஜனங்களிடம் இரக்கமில்லாதபோது உத்தியோகஸ்தர்களுக்கு இரக்கமிருக்க வேண்டிய அவசியமே யில்லை. சூரியன் உதயமானவுடன் உத்தியோகஸ்தர்கள் வரி வசூல் செய்ய, தானிய களஞ்சியத்திற்குப் போய் விடுவார்கள். மந்திரி முதல் சேவகன்வரை தங்கள் உத்தியோகம் அடுத்த 48 மணி நேரத்திற்குள் இவ்விதமேயிருக்குமென்று உறுதிசொல்லமுடியாது. எந்த நிமிஷத்திலும் வேலையை இழக்க வேண்டியிருக்கும். இதற்குக் காரணங்கள் கடவுளுக்குத்தான் தெரியும். ஆகவே உத்தியோகம் எப்பொழுது உறுதியென்பதில்லையோ, உத்தியோகஸ்தர்கள் லஞ்ச லாவணத்திலிறங்கி விடுவார்கள். சென்ற வருஷத்தில் கொடுத்த வரியையே இவ்வருஷமும் கொடுப்போமென்று ஜனங்களும் எண்ணமுடியாது. வரியைக் கூட்டுவதெல்லாம் சர்க்கார் கஜானாவைப் பொறுத்தது. ஏராளமான வரும்படியிருந்தாலும் மன்னர் கஜானா காலியாகவே யிருக்கும்.

வரி உயர்வுக்கு முக்கியமான காரணங்கள் இரண்டுதான். சமஸ்தான மன்னருடைய செலவுக்கு எவ்வளவு பணம் வேண்டும்? மற்றொன்று ஜனங்களிடம் எவ்வளவு வசூலிக்க முடியும்? முதல் காரணம் தான் முக்கியமே யொழிய இரண்டாவது காரணம் அவ்வளவு முக்கியமில்லை. சமஸ்தான மன்னரின் இந்திரபோகச் செலவுக்குத் தக்கபடியே வரி விதிக்கப்படும். ஒரு சமஸ்தானத்தின் தீர்வை 1922 வருஷத்தில் 3,32,476

ரூபாயாக இருந்ததை இரண்டொரு வருஷத்திற்கெல்லாம் 5,02,386 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இவ்வளவு உயர்த்தியும் சமஸ்தான மன்னரின் சுகபோகங்களுக்குக் காணவில்லை. ஜனங்களிடை ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள். கொஞ்சம் இனிப்பு தட்டிற்று, உடனே விசேஷ கெஜெட்டை பிரசுரித்து, கால்நடைகள், வண்டி மாடுகள், நடக்கும் ஜனங்களின் மீதும் வரி போட்டிருப்பதாக பிரசுரித்து விட்டார்கள். இந்த வரியும் போதாமையால் ஒட்டகத்திற்கும், வண்டிக்கும் வரி ரூபா 5 ஆக இருந்ததை 10 ரூபாயாகவும், குதிரைகளுக்கு ரூபா 1 ஆக இருந்ததை 5 ரூபாயாகவும், ஜனங்கள் நடப்பதற்கு ஒரு ரூபாயாக இருந்ததை இரண்டு ரூபாயாகவும் உயர்த்திவிட்டார்கள். 1925ம் வருஷத்தில் இத்தீர்வை ஐந்து மடங்காக உயர்ந்துவிட்டது.

சமஸ்தானங்களின் வரும்படி பெரும்பாலும், பயிரிடுவோரிடமிருந்து தான் வரவேண்டும் தொழில் வரி, ஏற்றுமதி இறக்குமதி வரிகளுமுண்டு. சில சமஸ்தானங்களில் பிறப்பு இறப்பு வரியுமுண்டு. வரியை ரொக்கமாகவும், பொருளாகவும் வசூலிப்பார்கள். ஒரு கிராமத்தின் ஜனத்தொகை 1500 பேர்கள். அதில் விவசாயிகள் 90 பேர்கள். இந்த விவசாயிகள் நியாயமாக கொடுக்கவேண்டிய தீர்வையைவிட, அதிகமாகவே வசூலித்தார்கள். 16 வருஷத்தில் ரூ. 56,000 கூடிற்று. எவ்வளவோ மனுக்கள் விண்ணப்பித்தும் பிரயோஜனமில்லை. அதிகமாக வசூலித்த வரியை ஈடு செய்யவும் முடியவில்லை. நிலைமை இவ்விதமாக இருக்கும் பொழுது சமஸ்தான அதிகாரிகள் நூற்றுக்கு $37\frac{1}{2}$ ரூபா வீதம் நிலத்தீர்வையை உயர்த்திவிட்டார்கள். இத்துடன் இருக்காமற்படி கோவிலுக்கு வரி நூற்றுக்கு ரூ 25 வீதம் போட்டு $1\frac{1}{2}$ லக்ஷ ரூபா வசூலித்தார்கள். மற்றொரு சமஸ்தானத்தில் கலியாண வரி போட்டார்கள். முதலில் நூற்றுக்கு நூறு வீதமும், பிறகு நூற்றுக்கு 86 வீதமும் வசூலித்தார்கள். இது 1926வது வருஷம் மே

மாதம் நடந்தது. கோவிலுக்கு வரி போட்ட சமஸ்தானதிபதியின் கலியாணத்திற்காக 32 லக்ஷ ரூபா வரி போட்டு வசூலித்து விமரிசையாக விவாகம் செய்து கொண்டார். இந்த வரி எப்படி போட்டு வசூலித்தாரென்பதற்கு நாளது வரையில் கணக்கே கிடையாது. ஜனங்கள் மூச்சுப் பேச்சு காட்டாமல் கொடுத்து விட்டார்கள். கொடுக்கத் தவறினால் கடுந்தண்டனை கிடைக்குமென்பது ஜனங்களுக்குத் தெரியும்.

இவ்விதமாக வரி கொடுக்கும் ஜனங்கள் சாப்பிடுவதெப்படி? என்பதை நண்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஒருவன் திருட்டுக் குற்றம் செய்ததாக குற்றம் சாற்றப்பட்டு கோர்ட்டுக்குக் கொண்டு வந்தார்கள். விசாரணையின் போது, தான் ஓர் எருமைக் கன்றைத் திருடியதாக ஒப்புக்கொண்டு, மேலும் கூறியதாவது, "இரண்டு நாட்களாக உண்ண உணவு கிடைக்காமையால் எருமைக் கன்றைக் கொன்று தின்று பசியைப் போக்கிக் கொண்டதாகக்" கூறினன். வயது முதிர்ந்த கிழவி ஒருத்தி எறும்புப் புற்றிலிருந்த தானியத்தை எடுத்து வந்து பசிப்பிணியைப் போக்கினாள். ஹரிஜன் பெண்மணி தனது மூன்று குழந்தைகளுடன் மூன்று நாள் பட்டினியாக இருந்து மாண்டாள். அவளின் புருஷன் கண்ணில்லாத கபோதி. இவ்விதமான கொடுந்துன்பங்கள் பல உண்டு. ஆனால் அந்தசமஸ்தானதிபதியின் மோட்டார் செலலவு ரூபா 2,45,000.

அடிமையிலும் அடிமை

இந்நாட்டில் அரசன்முதல் ஆண்டி வரையில் அந்நியனுக்கு அடிமையா யிருக்கிறோம். ராஜபுதன சமஸ்தானத்தில் அடிமைமகளின் தொகை 1,61,735 பேர்கள். இவர்களை மிருகங்களைவிடக் கேவலமாக வேலைவாங்குவார்கள். வேலை செய்தவர்களுக்கு உணவு கிடைப்பது கஷ்டம். அடிமைகொண்ட எஜமானர் வீட்டுப் பெண்களுக்காவது, பிள்ளைகளுக்காவது விவாகமானல்,

அடிமைகளைச் சீர் கொடுத்து விடுவார்கள். எதிர்த்துப் பேசமுடியாது. சொல்லாமல் ஓடிப்போகவும் முடியாது. அடிமைகள் எப்படி எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கிறார்களோ அப்படியேதான் அடிமைகொண்ட எஜமானர்களுமிருக்கிறார்கள். சமஸ்தான மன்னர் இதைப் பற்றி யெல்லாம் சிந்திக்க நேரமிராது. அங்கு 31 சதுர மைலுக்கு ஒரு பள்ளிக்கூட மிருக்கிறது.

சமஸ்தானங்கள்		சமஸ்தான செலவு	கல்வி செலவு
பிக்கானீர்	வருமானத்தில்	11%	1·5
ஜோத்பூர்	,,	16	3
ஆள்வார்	,,	50	1

சமஸ்தான மன்னரின் சுகபோகங்களுக்காக செய்யும் செலவில் 50-ல் ஒரு பங்குகூட குடி ஜனங்களின் கல்விக்காக செலவு செய்வது கிடையாது. வைத்திய வசதி, கல்வி, வெளிச்சம், ரோட், முதலிய எவ்விதமான வசதிகளும் ராஜபுதன சமஸ்தானத்தில் காணமுடியாது. வைத்திய உதவியின்றி ஆயிரக்கணக்கான மக்கள் இறக்கின்றார்கள். ராஜபுதன பெண்களைக் காணவே சகிக்க முடியாது. விவாகமான பெண்களில் 100-க்கு 41 பேர்கள் விதவைகள். இரண்டொரு ராஜாக்களைத் தவிர மற்ற ராஜாக்களுக்கெல்லாம் அநேக மனைவிகளுண்டு. காலஞ்சென்ற ஜோத்பூர் மஹாராஜா தன் அரண்மனையில் 3,000 பெண்களுக்கு மேல் வைத்திருந்தார்.

உத்தியோகஸ்தர்களின் நிலைமை

பொதுஜனங்களுக்குச் சேவை செய்யவே போலீஸ் சேவகர்களிருக்கிறார்கள். இவர்களில் நூற்றுக்கு ஒருவனுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் விசேஷம். படிப்பு தெரியாவிட்டாலும், வேலை செய்ய சக்தியுமிராது, அறிவுமிராது. போலீஸ் சேவகனின் சம்ப

ளம் ரூபா 3 முதல் 10 வரையிலும், போலீஸ் சூப்பிரண்டெண்டின் சம்பளம் ரூபா 35 முதல் 40 வரையிலுமிருக்கும். குற்ற மிழைப்பவர்களில் நூற்றுக்கு பாதி பேர்களைத்தான் கண்டு பிடிப்பார்கள். திருடுபோன பொருள் திரும்பி வருவது கஷ்டம். கொலைக் குற்றம் செய்தவர்களை கண்டு பிடிப்பது கஷ்டம். ஒரு குற்றமும் செய்யாத நிரபராதிகள் சிக்கிக்கொண்டு கஷ்டப்படுவார்கள். கிராமவாசிகள் போலீசாருக்குக் கீழ்படிந்து நடக்காவிடில், அவன் எவ்வளவு அறிவுள்ளவனாகயிருந்தாலும் சரி, பணக்காரனாகயிருந்தாலும் சரி, அவன் மீது ஒரு பொய்க்கேஸைத் தொடுத்து கோர்ட்டுக்குக் கொண்டுவந்து விடுவார்கள். போலீஸ்காரன் கொண்டு வரும் கேஸ் தப்பு என்று தோன்றினாலும், தள்ளுவதற்கு மாஜிஸ்டிரேட்கூட பயப்படுவார். குற்றவாளியென்று சொல்லிவிட்டால் அவனுக்கு சாட்சி கிடைப்பது மிகக் கடினம். தப்பித்தவறிச் சொல்லுபவனுக்கு ஆபத்து. அநேகமாக குற்றங்களுக்கெல்லாம் மூல புருஷர்கள் போலீஸாராகவே யிருப்பார்கள். பழைய கேடிகளைப் பிடித்து கொள்ளையடிக்கச் சொல்லி போலீஸார் பாகம் பெறுவார்கள். கிராமங்களில் பெண்கள் அழகாகயிருப்பது ஆபத்து. பெண்ணை வசப்படுத்தி சமஸ்தானத்தில் சேர்த்து விடுவதில் போட்டி யேற்படும்.

சப் ஜட்ஜுகளுக்கு ரூபா 100 முதல் 150 வரையில் சம்பள மிருக்கும். 100 ரூபாயிக்கும் குறைவாயுள்ள உத்தியோகஸ்தரிடம் அதிகாரம், அதிகமாகயிருக்கும். 7-வருஷம் தண்டனை கொடுக்க மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அதிகார முண்டு. இந்த நிலையிலிருக்கும் அதிகாரிகளிடம் நியாயம் கிடைப்பது கஷ்டம்.

முக்கியமான சமஸ்தானங்களில் ஐகோர்ட்டு அல்லது சீப் கோர்ட்டு உண்டு. கோர்ட்டு ஜட்ஜ் திவான்களின் பந்துக்களாக யிருப்பார். மாதம் ரூபா 500 சம்பளம். சமஸ்தான அதிகாரிகளின்மீது வழக்கு

கொண்டுவரக் கூடாதாகையால் அவ்விதமான வியாஜ்ஜியமொன்றும் கோர்ட்டுக்கு வராது. தனிப்பட்டவர்களின் வியாஜ்ஜியம்தான் கோர்ட்டுக்கு வரும். வரும் வழக்குகளின் விசாரணை பூர்த்தியாகக் குறைந்து கால் நூற்றாண்டாவது செல்லும்.

சமஸ்தானத்தில் முக்கியமான நிர்வாகஸ்தர் திவான் அல்லது பிரதம மந்திரி. இந்த உத்தியோகத்தை வகிப்பவர்கள் புத்திசாலிகளாகவும், திறமைசாலிகளாகவும், விசால புத்தியுள்ளவர்களாகவும் இருப்பது அவசியம். ஆனால் அவ்வித மிருப்பதில்லை. சமஸ்தான வாசியாக இல்லாமலும், குடிகளுடன் பழக்க மில்லாதவர்களாகவும், ஜனங்களின் மீது இரக்கமற்றவர்களாகவும், குடிகளின் நன்மையை கவனியாதவர்களுமே மேற்சொன்ன திவான் பதவிக்கு வெளியே யிருந்து,கொண்டுவரப் படுவார்கள். ராஜாவை எப்படி திருப்தி செய்தால், தன் பதவி நீடிக்குமென்பதிலேயே திவான் கண்ணும் கருத்துமா யிருப்பார். ஆகவே முக்கியமான உத்தியோகங்களில் எல்லாம், திவானின் பந்துக்களிருப்பார்கள். தற்பொழுது இருக்கும் திவான்களைவிடவோ அல்லது மந்திரிகளைவிடவோ ராஜாவுக்கு திருப்திகரமான ஆள் கிடைத்து விட்டால், திவான் பந்துமித்திரர்களுடன் வெளியே வந்துவிட வேண்டியது தான். ஆகவே திவானுக்கு வேலை நிச்சயமாகயிருக்க வேண்டுமானால் ராஜாவின் மனங்கோணாதபடி "குஷி" ப் படுத்துவதே திவானின் முக்கிய வேலையாகும். ராஜா தாராளமாக செலவு செய்வதற்கு திவான் பணம் சேகரித்துக் கொடுக்க வேண்டும். திவானுடைய சம்பளம் 2000 ரூபாயாக இருந்தாலும் அந்தஸ்து மிக மிக உயர்ந்தது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும திவான்களுமிருக்கின்றார்கள்.

மன்னருக்கு மரியாதை.

சமஸ்தான மன்னர்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒரு சாராருக்கு குண்டு மரியாதைகளுண்டு. மற்றவர்களுக்குக் கிடையாது. குண்டு மரியாதை பெறும் சமஸ்தான மன்னர்களில் பல ரகமுண்டு. ஐதராபாத் நவாபுக்கு 21 குண்டுகள் போடப்படும். பங்கனபள்ளி ராஜாவுக்கு 9 குண்டுகள் போடப்படும். சமஸ்தான மன்னர்களின் தங்கள் நாட்டு விவகாரத் திறமையை மெச்சியோ ஆங்கிலேயர் குண்டுபோட்டு மரியாதைகள் செய்கிறார்களெனக் கருதவேண்டாம். சமஸ்தான மக்களின் இரத்தத்தைப் பிழிந்து வாழ்கிறார்களென்பதற்காக போலும்! ஏழை ஜனங்கள் குண்டின் வெடி சப்தத்தைக் கேட்டு கதிகலங்கிப்போவார்கள். வானத்தில் கோடையிடி இடிக்கும்பொழுது சர்ப்பங்கள் அலறுவதுபோல ஜனங்கள் அலறுவார்கள்.

யார் எஜமானர்கள் ?

ராஜாக்கள் இவ்விதமாக கோலாகல லீலைகள் அனுபவிப்பதற்கு குடியானவர்களின் வரிப்பணம்தான். இந்தியக் குடியானவர்களிடம் வாங்கும் வரிப்பணத்தில் எவ்வளவு தொகை ஜனங்களின் நன்மைக்காக செலவழிக்கிறார்கள்? சுதேச சமஸ்தானங்கள் எவ்வளவு செலவு செய்கின்றன என்பதைக் கீழே குறிப்பிட்டுள்ளோம்.

	வசூல் ரூ.	செலவு கல்வி.	சுகாதாரம்.
பிரிட்டிஷ் இந்தியாவில் நபர் ஒன்றுக்கு சராசரி வரி வசூலிப்பது	6-12-0	0-0-9	0-0-5
சுதேச சமஸ்தானங்கள்			
பிகானீர் நபர் 1-க்கு	16-8-0	0-0-5	0-0-4
இந்தூர் ,,	13-8-0	0-0-7	0-0-2
நவநகர் ,,	22-8-0	0-0-6	0-0-4

உதாரணமாக சில சமஸ்தானங்களைக் குறிப்பிட்டோம், அநேகமாக எல்லா சமஸ்தானங்களும் மன்னரின் அரண்மனைச் செலவில் கவனஞ் செலுத்துகின்றனவே யன்றி பொதுஜன நன்மையைக் கவனிப்பதில்லை. இவ் விஷயத்தை பொதுஜனங்கள கலந்து பேசினாலும் குற்ற மாகக் கருதி தண்டிக்கப்படுவார்கள. சமஸ்தானத்தின் மீது துவேஷப் பிரசாரம் செய்வதாகக் கருதப்படும். தண்டனையோ கடுந்தண்டனையா யிருக்கும். இதனால் தான் படித்த சுயமரியாதையுள்ளவர்கள் வேலைக்குக் கிடைப்பது அரிதாகின்றது.

வருஷத்தில் 10 லக்ஷ ரூபாய் வருமானமுள்ள ஒரு சமஸ்தானாதிபதி, தனது சொந்த செலவுக்கென்று பிரதி மாதம் 35 ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டும், செல வுக்குக் காணவில்லையென்று சுமார் 15 லக்ஷம் ரூபாய் கடனில் மூழ்கிவிட்டார். எவ்வளவு தொகை யிருந்தா லும், வேசிகளின் பொருட்டுச் செலவு செய்வதென்றால் இதற்கு எல்லையேது? தாசிகளின் வலையிலகப்பட்டுள்ள மன்னர்கள், அவளுக்கு அடிமையாகி விடுவதுடன், அவளின் உறவினர்களை ஆட்சிப் புரியவும் செய்து விடு கிறார்கள்.

அநேக சமஸ்தானங்கள், பொதுஜனங்களுக்குக் கிடைக்கும்படி நிர்வாக யதாஸ்தை பிரசுரிப்பதே கிடை யாது. அப்படியே பிரசுரமானாலும், அதற்கு மெருகு கொடுத்து, ஊழல்களை மூடிவிடுவார்கள். ஆகவே சரி யான கணக்கு வழக்குக் கிடைப்பதே கஷ்டம். அதிக வருமானமுள்ள மைசூர், திருவாங்கூர், காஷ்மீர் சமஸ் தானங்களைத் தவிர மற்ற எல்லா சமஸ்தானங்களும், பிரிட்டிஷ் இந்தியாவைவிட வரி அதிகமாகவே இருக் கின்றன. பரோடாவில் தலைக்கு வரி ரூபா 11-4-0ம், இந்தூரில் 13-8-0ம், ஆள்வார் 11-4-0ம், நவநகர் 22-8-0ம், பவநகர் 15-0-0ம், போபால் 12-12-0 வீதமு மிருக்கின்றன. அநேக சமஸ்தானங்களில் ரூபா

11-4-0 முதல் 13-8-0 வரையிலிருக்கின்றன. சமஸ்தானங்களிலுள்ள வரியுடன், பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள வரியையும் ஒப்பிட்டுப்பார்த்தால் சில இடங்களில் இரண்டு மடங்கும், மற்றும், சில இடங்களில் மூன்று மடங்கும் அதிகமாகயிருக்கின்றன. சென்னையில் நபர் ஒன்றுக்கு வரி ரூபா 6-3-4 ஆகவும், போபால் சமஸ்தானத்தில் ரூபா 12-12-0ம், நவநகர் சமஸ்தானத்தில் 22-8-0 ஆகவுமிருக்கின்றன. நாம் மேலே கூறிய புள்ளி விபரப்படி வரிப்பளுவு ஜனங்களால் தாளமுடியாமல் கஷ்டப்படும்பொழுது ராஜாக்கள் காதல் கிழத்திகளை இழுத்துக்கொண்டு உல்லாச யாத்திரை கிளம்பி விடுவதும், நாய், நரிகளை வேட்டையாடுவதும், வைசிராய்களுக்கும், கவர்னர்களுக்கும் விருந்தளிப்பதுமாக இருக்கின்றார்கள்.

தங்கள் நாட்டைவிட்டுப் போகாமல் சீராக ராஜ்ஜியத்தை நடத்தும் இரண்டொரு மன்னர்களுமிருக்கின்றார்கள். குதிரைப் பந்தயத்தில் வெறிகொண்டு பந்தயம் விடுமிடமெல்லாம் சுற்றித்திரியும் மன்னர்களுமிருக்கின்றார்கள். ஜனங்களின் கல்விக்காக செலவு செய்வதைவிட நான்கு மடங்குக்கும் அதிகமாக மோட்டார் வாகனங்களில் செலவு செய்யும் மன்னர்களுமிருக்கின்றார்கள். வேலைக்கு விண்ணப்பம் போடும் மனுக்களுடன் தங்களுடைய போட்டோவையும் வைத்து அனுப்பவேண்டுமெனக் கோரும் மன்னர்களுமுண்டு. குழந்தைகள் விவாகத்தைத் தடுக்கும் மன்னர்களுமுண்டு, குழந்தைகளையே காதலிக்கும் மன்னர்களுமுண்டு. தன்னுடைய முன்னிலையில் தனது சகோதரனுடன் இன்பந் நுகராமையினால் பணிவியைக் கொன்ற மன்னனுமிருக்கிறான். ஏகதாரத்துடனிருக்கிற மன்னர்களுமிருக்கிறார்கள், பலதாரமிருந்தும், வேசியின் பின்னே திரியும் மன்னர்களுமிருக்கிறார்கள். தாயைக் காதலித்த மன்னனுமுண்டு. தனது 30 மாற்றாந்தாய்களை ரூபா 30-க்கும், கொஞ்சம்

நிலத்திற்கும் விற்ற மன்னனுமுண்டு. சினிமா நட்சத்திரங்களைக் காதலிக்கும் மன்னர்களிருக்கின்றார்கள். இவ்விதமான லீலைகளில் உழலும் மன்னர்களுக்கு மேக வைத்திய நிபுணரும், தங்க பஸ்பமும் அவசியமாக வேண்டியிருப்பதால் பல ஆயிரம் ரூபாய்களை வாரி இறைக்கின்றார்கள்.

ஒரு சமஸ்தானத்தின் நிர்வாகம் வெகு விமரிசையாக நடைபெற்றதாக அறிவிக்கின்றார்கள் உத்தியோகஸ்தர்கள். அன்று எல்லாப் பள்ளிக்கூடங்களும், நியாயஸ்தலமும் மூடப்பட்டன. வரும் விருந்தாளிகளுக்காக வீடுகளையும், காரியாலயங்களையும் காலியாக்கப்பட்டன. பிரபல உத்தியோகஸ்தர்களெல்லாம் அழைப்புக் கடிதங்களை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். பிரபல மைனர்களும், ராஜாக்களும் வந்து சேர்ந்தார்கள். மதுபான வகைகள் சுமார் 100 பீப்பாய்கள் வந்திருந்தன. புற்றிலிருந்து எறும்புகள் வரிசையாகப் புறப்படுவதுபோல நடன மாதுகளும், சங்கீத ரத்தினங்களும் கிளம்பின. கொக்கோக லீலைகள் நடைபெற்றன. ஒரே நாளில் அவ்வளவு பீப்பாய்களை காலி செய்து விட்டார்கள்.

மற்றொரு மன்னர் தனது ஊழியருக்கு கடிதம் எழுதியிருப்பதைப் பாருங்கள்.

அன்புள்ள ஸ்ரீமான்...................

தாங்கள் அனுப்பிய கடிதத்துடன் ரஜா மனுவும் கிடைக்கப்பெற்றேன். ரஜா அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் கூடிய சீக்கிரம் நீங்கள் வரவேண்டும். தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டபடி இரண்டையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும். அவர்கள் மிகவும் அழகா யிருக்கவேண்டும். என் மனதுக்கு திருப்திகரமா

யிருந்தால் நீங்கள் சமஸ்தானத்தின் அன்புக்குப் பாத்திரமான உத்தியோகஸ்தராக யிருப்பீர்கள்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்) ராஜா சர் கிப்.

இவ்விதமான காதல் கதைகள் பல உண்டு, இங்கு அவ்வளவையும் விவரிப்பதாயிருந்தால் இடம் காணுது. மகாராஜாவே ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறுர். "அந்த "நபர்" மந்திரியா யிருப்பதற்குக் காரணம் அவர் திறமையினுல் அல்ல; மன்னரின் மனதுக்குகந்த பெண்ணைக் கொண்டுவருவதால்" என்று எழுதி யிருக்கிருரென்றுல் வேறென்ன கூறவேண்டும்?

ஒரு மன்னர் சிம்லாவுக்குப் போய் நான்கு நாளே தங்கியிருந்தார், எதற்காகப் போனுர்? ஏன் போனுரென்பது சாக்ஷாத் கடவுளுக்குத்தான் தெரியும். போக வர ஏற்பட்ட செலவைப் பார்க்கும்பொழுது அந்த நாட்டு மக்களுக்கல்ல, எந்த நாட்டு மக்களுக்கும் கண்களில் இரத்தம்தான் வரும்.

23 மோட்டார்கள் சமஸ்தானத்திலிருந்து ரயில் மூலம் போக வர	ரூ.	8600
ரயில் செலுான் வண்டி	....	1050
உத்தியோகஸ்தர்களுக்கு ரயில் செலவு	....	1370
ரயில், மோட்டார் போக வர	....	720
ஓட்டல் செலவு	...	4500
சில்லரைச் செலவு	....	7000
மொத்தம்	ரூ	23,240

நான்கு நாள் உள்ளூர்ப் பிரயாணத்திற்கே, இவ்வளவு பெருந் தொகை செலவாகுமானுல், மேல்நாட்டு யாத்

திரைக்கு எவ்வளவு செலவாகுமென்பதைக் கணக்கிட நம்மால் முடியாது. யாத்திரைச் செலவைப்பற்றித் தெரிந்து கொண்டதுபோல (மன்னரின் மக்கள்) இளவரசர்களுக்கு கல்வி போதிக்கப்படும் தந்திரத்தை தெரிந்துக்கொள்வது நியாயமல்லவா?

மன்னர் கோரினாலும் கோராவிட்டாலும் இளவரசருக்கு வயது ஏழாகிவிட்டால், இந்திய ராஜீய இலாக்கா அதிகாரிகள் இளவரசனின் கல்விக்காக இங்கிலாந்திலிருந்து ஒரு வெள்ளையனை இறக்குமதி செய்து, அவனுக்குரிய சம்பளம் முதலிய சகல செலவையும் சமஸ்தானத்தின் தலையில் கட்டி வசூலித்து விடுவார்கள். கல்வி போதிப்பதை விட வெள்ளை சாம்ராஜ்ஜியத்தைப் பற்றியும், சூரியன் தங்கள் சாம்ராஜ்ஜியத்தில் அஸ்தமிப்பதில்லை யென்பதையும் வெகு அழுத்தம் திருத்தமாக சொல்லித் தருவார்கள். கிரிக்கெட், கால் பந்து, டென்னிஸ் முதலிய விளையாட்டுகளைக் கற்பித்துத் தருவார்கள். இந்தியாவில் வெள்ளைப் பட்டாளங்களில்லாவிடில் ரஷியாவும், ஜப்பானும் இந்தியாவைப் பங்கிட்டுக் கொள்ளுவார்களென்பதை பசுமரத்தாணியைப்போல இளவரசர் மனதில் பதிய வைப்பார்கள். இந்தியராகிய நாம், ராஜ்ஜியதிகாரத்திற்கு லாயக்கில்லை யென்பதற்கு பலவிதமான போலி ஆதாரங்களை உபாத்தியாயர்கள் போதிப்பார்கள். தங்கள் சுயநலத்திற்கும் தங்கள் நாட்டு நன்மைக்கும் தகுந்தவாறு கல்வி போதிப்பதுதான் வெள்ளை உபாத்தியாயர்களின் கடமையாக விளங்கும்.

திருவாங்கூர் சமஸ்தானம் தங்கள் நாட்டு மக்களின் கல்விக்காக மொத்த வருமானத்தில் 18 சதவீதம், செலவு செய்கின்றது. மற்ற சமஸ்தானங்களை விடக்கல்வியின் பொருட்டு அதிகமாகச் செலவு செய்வது திருவாங்கூர்தான். பரோடா சமஸ்தானம் 17 சத வீதமும் மைசூர் சமஸ்தானம் 16 சத வீதமும் செலவு செய்கின்றன; மேலும் மைசூர் திருவனந்தபுரம் சமஸ்தான

ங்களில் அரண்மனைச் செலவும் மற்றவைகளை விட குறைவே. மைசூர் சமஸ்தானம் 7 சத வீதமும், திருவனந்தபுரம் 5 சத வீதமுமே தங்கள் சொந்த செலவுக்காக எடுத்துக் கொள்கிறார்கள். அந்த நாட்டு மக்களின் வறுமைப்பிணியை எண்ணினால் இந்த தொகைக் கூட அதிகமென்றே கூறலாம். மேற்சொன்ன சத விகிதத்தை ரூபாயாக்கினால், மைசூர் மன்னரின் சொந்த செலவு ரூ 23,80,000ம், திருவனந்தபுர மன்னரின் சொந்த செலவு ரூ. 11,00,000 ஆகின்றது. இத்தாலி தேசத்து மன்னரின் சம்பளத்தைவிட 50 சத விகிதம் அதிகமாக சுதேச மன்னர்கள் செலவழிக்கின்றார்கள். இந்தியா சக்கரவர்த்தியும் ஜப்பான் சக்கரவர்த்தியுமாக இரண்டு சக்கிரவர்த்திகள் சேர்ந்துவாங்கும் தொகைக்கு சமமாக வாங்குகிறார் ஐதராபாத் நவாப். அதாவது வருஷத்திற்கு 50 லக்ஷ ரூபா. ஐதராபாத் சமஸ்தானமும், இத்தாலி தேசமும் விஸ்தீரணத்தில் ஏறக்குறைய சமமாக விருக்கும். ஐதராபாத் நவாபின் ஒரு வருஷ சொந்த செலவு தொகையை, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஒரு வைஸிராயிக்கும், அவருடைய நிர்வாக கவுன்ஸிலர்கள் 6 பேருக்கும் ஒரு வருஷத்திற்குச் சம்பளமாகக் கொடுக்கலாம். இந்தியாவில் வெள்ளையர்களுக்கும், சமஸ்தானங்களின் மன்னர்களுக்கும் கொடுபடும் தொகை பகற் கொள்ளையென்றே கூற வேண்டும்.

சேர, சோழன் காலத்தில் நாட்டு மக்களின் நன்மைக்காக செலவு செய்த பின்பே, ராஜாக்கள் தங்கள் செலவுக்கு பணம் எடுத்துக்கொள்வார்கள். மேனாட்டில் இவ்விதமாக யில்லா விட்டாலும், தேவைக்குச் சற்று அதிகமாக எடுத்துக்கொள்கிறார்கள். நாட்டு வருமானத்தில் 1600ல் ஒரு பங்கு இங்கிலாந்து அரசரும், 1000ல் ஒரு பங்கு பெல்ஜியத்து அரசரும், 500ல் ஒரு பங்கு இதாலி மன்னரும், 300ல் ஒரு பங்கு டென்மார்க் அரசரும், 400ல் ஒரு பங்கு ஜப்பான் மன்னரும், 70 ல்

ஒரு பங்கு நார்வே மன்னரும், 500ல் ஒரு பங்கு ஸ்பெயின் மன்னரும் எடுத்துக் கொள்கிறார்கள். 17ல் ஒரு பங்கு திருவாங்கூர் மன்னரும், 14ல் ஒரு பங்கு மைசூர் மன்னரும், 13ல் ஒரு பங்கு ஐதராபத் நவாபும், 5ல் ஒரு பங்கு வீதம் காஷ்மீர், பிகானீர், பரோடா மன்னர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். இதைப்போல வேறு எங்கும் காண முடியாது. இன்னும் சில சமஸ்தானங்கள் நாட்டு வருமானத்தில் 3ல் ஒரு பங்கு அல்லது 2ல் ஒரு பங்கை சொந்தச் செலவுக்காக எடுத்துக் கொள்கின்றன.

பட்லர் கமிட்டி அறிக்கை

பிரிட்டிஷ் இந்தியாவின் நிர்வாகத்தில் தவறு ஏற்பட்டால்; அதனைக் கண்டிக்க பத்திரிகைகள் பின் வாங்குவதில்லை. ஆனால் சமஸ்தானத்தில் எற்படும் தவறுகளைக் கண்டிக்க பத்திரிகைகள் அஞ்சுகின்றன. அதற்கு முக்கிய காரணங்கள் சில. சமஸ்தான ஊழல்கள் தெரிவதே மிகக்கஷ்டம். தெரிந்த பின் பத்திரிகைகளில் தாக்ஷண்ணியமின்றிக் கண்டித்தால், கண்டிக்கும் பத்திரிகைகளை சமஸ்தானத்திற்குள் வரவொட்டாமல் சமஸ்தான அதிகாரிகள் தடுத்து விடுவார்கள். அல்லது சமஸ்தான அதிகாரிகள், கண்டிக்கும் பத்திரிகாலயங்களுக்கு நேரிற் சென்று, பேசி விஷயத்தை மழுப்பி விடுவதற்குத் தக்க ஏற்பாடு செய்துவிடுவார்கள். பட்லர் கமிட்டி யதாஸ்தில் குறிப்பிட்டிருக்கிறதாவது. "புராதன நாகரிகப்படியே சமஸ்தானாதிபதிகள் நடந்து வருகிறார்களா வென்றால் அதுவுமில்லை. தற்கால நாகரிகம் அதையும் கொன்றுவிட்டது. பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெறும் நிர்வாகத்தை ஸ்பஷ்டமாகப் பின்பற்றி யிருந்தால் நன்று யிருந்திருக்கும். முதல்தர 108 சமஸ்தானங்களில் 30 சமஸ்தானங்கள் சட்டசபைகளை அமைத்திருக்கின்றன. அவைகளும் ஆலோசனை செய்யும் சபைகளாகவே யிருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள

ஐகோர்ட்டுக்கு ஏற்ப, ஏறக்குறைய சுமார் 40 சமஸ்தானங்களில் கோர்ட்டுகளிருக்கின்றன. 34 சமஸ்தானங்களில் தனியான கோர்ட்டுகளிருக்கின்றன. 46 சமஸ்தானங்களில் சிவில் உத்தியோகஸ்தர்கள் வரிசைக் கிரமப்படி யிருக்கிறார்கள். 54 சமஸ்தானங்களில் பென்ஷனும், பிராவிடண்ட் தொகையு முண்டு. பெயருக்கு இவைகளெல்லாமிருப்பதுபோல் தோன்றினாலும் சரியாக நடைபெறுவதில்லை. சென்ற இருபது வருஷ காலமாக சமஸ்தானங்கள் ஒன்றன்பின் ஒன்ருக விழித்துக் கொண்டே வருகின்றன."

மன்னர்கள், ரிபோர்ட்டையும் அசட்டை செய்துவிட்டார்கள். பட்லர் கமிட்டி ரிபோர்ட்டும் மேலெழுந்தவாரியாக குறிப்பிட்டிருக்கிறது. பல சமஸ்தான மன்னர்கள் ஜனநாயக நிர்வாகமென்று காகிதத்தில் எழுதிவைத் திருக்கிறார்களேயன்றி அனுபவத்தில் கொண்டுவரவில்லை. மொத்த முள்ள 562 சமஸ்தானங்களில் 532 சமஸ்தானங்கள் கடிதத்தில்கூட சட்ட சபையைப் பற்றி எழுதிவைக்கவில்லை. 520 சமஸ்தானங்களில் நியாயஸ்தலமே கிடையாது. 523 சமஸ்தான அதிகாரிகளே நிர்வாகத்தையும், நியாயத்தையும் வழங்கு கின்ருர்கள். 500 சமஸ்தான மன்னர்கள் சொந்த செலவுக்கே வருமானதை எடுத்துக் கொள்கிருர்கள். 500 சமஸ்தானங்கள் நியாயமான சட்ட ஒழுங்குப்படி நடப்பதேயில்லை. பட்லர் கமிட்டி எச்சரித்தும் 500 சமஸ்தானங்கள் அசட்டுத்தனமாகவே யிருக்கின்றன.

பாடு பலருக்கும், பதவி ஒருவருக்கும்

பொதுவாக சமஸ்தானதிபதிகளின் இந்திரபோகங்களைப் பற்றியும், காமக் கிழத்திகளின் இன்பரசத்தில் மூழ்கிக்கிடக்கும் மன்னர்களைப் பற்றியும், ஆடம்பரமான வாழ்க்கைகளைப்பற்றியும் கூறி வந்தோம் இதிலிருந்து மன்னர்களின் நிலைமையை வாசகர்கள் நன்கு அறிந்து கொள்ளலாம். மன்னர்கள் செலவு செய்யும்

தொகைகள் ஒவ்வொரு பைசாவாக ஏழைக் குடியானவ னிடமிருந்து வசூலித்த தொகை என்பதை நண்பர்கள் அறியவேண்டும். குடியானவர்களின் நன்மைக்காக செலவு செய்யும் தொகை வெகு வெகு சொற்பமென்ப தை முன்னமே நாம் எடுத்துக் கூறியுள்ளோம். இவ்வ ளவு விருதாந்தங்களையும் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது ராஜகோட்டை சமஸ்தானத்தை முன்னிட் டே. ஆகவே ராஜகோட்டை சமஸ்தானம் எங்கிருக் கிறது? அதன் பூர் வோத்திரம் என்ன வென்பதைச் சற்று ஆராய்வோம்.

சமஸ்தான எல்லை

சென்னைக்கு வட மேற்கிலும், பம்பாய் மாகாணத் திற்கு மேற்கிலும் குஜரத் என்று ஒரு நாடு இருக்கிறது. அங்குள்ள சமஸ்தானங்களுக் கெல்லாம் பொதுவாக கத்தியவார் சமஸ்தான மென்று பெயர். கத்தியவார் சமஸ்தானங்களி லொன்றுக்கு ராஜகோட்டை சமஸ்தா னமென்று பெயர். ராஜகோட் சமஸ்தானம் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தது. இந்தியா கவர்மெண்ட் ஆக்டில் இது 12 வது டிவிஷனாகும். சமஷ்டி அசெம்பளியில், 1 பான்கடா, 2 சாகின், 3 ஜாவர், 4 டாண்டா, 5 தாரோல், 6 லிம்டி, 7 வாத்வான், 8 ராஜகோட்டை ஆக எட்டு சமஸ் தானங்களுக்கும் ஒரு ஸ்தானம் ஒதுக்கப் பட்டுள்ளது, சமஷ்டி மேல் சபையில், தாரோல், லிம்டி, வாத்வான், ராஜகோட்டை, ஆக நான்கு சமஸ்தானங்களுக்கும் ஒரு ஸ்தானம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த இரண்டு ஸ்தானங்களைக் கைப்பற்றவேண்டு மென்பதற்காக ஜனங் கள் கிளர்ச்சி செய்யவில்லை. தங்கள் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைபெற வேண்டும் என்பதற்காகவும் அதன் மூலம் சமஷ்டியில் சரியான தேசபக்தர்கள் அங்கம் வகிக்கவேண்டு மென்பதற்காகவுமே கிளர்ச்சிகள் நடை பெறுகின்றன. சுதேசமன்னர்களை அப்புறப்படுத்திவிட வேண்டு மென்பதுமல்ல! சுதேசமன்னர்களின் மூலமே

பொறுப்பாட்சி நிலவ வேண்டுமென்பதே காங்கிரஸின் நோக்கமாகும். உண்மையான நோக்கத்தை சமஸ்தானாதிபதிகளும், அவர்களின் உத்தியோகஸ்தர்களும் திரித்துக் கூறுகிறார்கள். தங்கள் சுய நலம் சற்றுப் பாதிக்கப்படுமானால் வகுப்பு வாதத்தைக் கிளப்பி, அடக்குமுறைகளைக் கையாளுகிறார்கள்.

மேலதிகாரிகள்.

ராஜ்கோட்டை அஜி நதிக்கு மேற்குக் கரையோரத்திலிருக்கிறது. நதியில் ஜலக்கிரீடை ஆடுவதற்குத் தகுந்தபடி மதில்கள் எழுப்பப்பட்டுள. கதியவார் சமஸ்தானங்களின் ரெசிடெண்டுக்கு தலைமை ஆபீஸ் ராஜ்கோட்டை. ரெஸிடெண்டுக்குக் கீழ் இரண்டு உத்தியோகஸ்தர்களுண்டு." ஒருவர் "ஜுடிஷியல் கமிஷனர், மற்றவர் "பெர்சனல் அஸிஸ்டெண்ட்" என்று சொல்லுவார்கள். ராஜகோட்டைக்கு அருகாமையிலுள்ள ஹாலர் ஜில்லாவில் பட்டாளங்களும், கண்டோன்மென்ட்டும், அரண் காவலாளிகளுமிருக்கிறார்கள்.

ராஜகோட்டை உதயம்

ஜாம் சட்டர்ஜி என்பவனின் மூத்த மகனும், அஜோஜியின் கடைசி புத்திரனான குன்னவார் விபோஜி என்பவனுமாக சேர்ந்து ராஜகோட்டையை 1591-ம் வருஷம் கண்டு பிடித்தார்கள். அதாவது 348- வருஷங்களுக்கு முன்பு. அக்காலத்தில் இந்தியாவில் ஆங்கில ஆட்சி கிடையாது. நவநகர் ராஜபுதனர்களே ராஜகோட்டை மன்னர்கள். அக்காலத்தில் வடபாகத்தை முஸ்லீம் மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். குன்னவார் விபோஜி ராஜகோட்டையைக் கைப்பற்றியபொழுது அகமதாபாத்தில் ஷாஜஹான் அரசாண்டு வந்தான். குன்னவார் விபோஜி சில தினங்கள்கூட ராஜ்கோட்டை ஆளவில்லை. பட்டத்திற்கு வந்ததும், வராததுமாக உயிர் துறந்தான் குன்னவார் விபோஜி. இறந்த மன்னனுக்கு இரண்டு

பிள்ளைகளிருந்தார்கள். இருவரும் மைனர்களானபடியால் ஜாம் சட்டர்ஜி பட்டத்திற்கு வந்தான். முப்பத்திமூன்று வருஷம் ஆண்டு 1624-ல் இறந்து விட்டான். ஆகவே அஜாஜியின் பிள்ளை மேஜராகிவிட்டடியால் பட்டத்திற்கு வந்தான். அவன் பெயர் விபோஜி. 1664-ம் வருஷம் வரையில் ராஜகோட்டையை ஆண்டு வந்தான். விபோஜி காலமான பிறகு அவன் பிள்ளைகள் சாகிப்ஜீ, கம்போஜீ என இருவர். இவர்களிருவரும் அடிக்கடி சண்டை போட்டுக்கொள்ளுவார்கள். இவர்கள் சச்சரவை குத்துப்தின் சமரசப்படுத்தி அர்டோய், ரிப் என்கின்ற இரண்டு கிராமங்களை கம்போஜிக்குக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள கிராமங்களை சாகிப்ஜீயை எடுத்துக் கொள்ளும்படிச் சொன்னான். 1675 சாகிப்ஜீ இறந்துவிட்டான். மகன் பரமானியோஜீ பட்டத்திற்கு வந்தான். பரமானியோஜி, போரில் பிரியமுள்ளவன். பல சிற்றரசர்களுக்குப் போர்துணைப் புரிந்து பலகிராமங்களைப்பெற்றுத் தன் நாட்டைப்பெருக்கி வந்தான். இவனுக்குப் பிறகு 1694-ம் ஆண்டில் மேரமான்ஜி பட்டத்திற்கு வந்தான். 1707-ம் ஆண்டில் மகராஷ்டிரருக்கும், அவுரங்கசீபுக்கும் கலக மூண்டது. இக்கலகத்தின் பயனாக மாகம்கான் என்பவன் ராஜகோட்டையைக் கைப்பற்றினான். மேரமான்ஜியும் இச்சமயம் காலமானான். மாகம்கான் என்பவன், ஜாசடன், அனந்தபூர், படலா முதலிய கிராமங்களைப் பிடித்தான். இக்கிராமங்கள் 1720ம் வருஷம் ஷா என்னும் அரசனால் மாகம்கானுக்கு ஜாகிராகக் கொடுக்கப்பட்டன. 1722-ம் வருஷத்தில் மாகம்கானால் ராஜகோட்டையில் ஒரு கோட்டையைக் கட்டி அதற்கு மாகமாபாத் என்று பெயரிட்டான். மாகம்கானுக்கு ஷீஜடகான் என்று மற்றொரு பெயருமுண்டு. இவன் 1732-ம் ஆண்டுவரையில் ஆண்டு வந்தான். மாகம்கானுக்கு 7 குமாரர்களுண்டு. 1720-ல் இறந்துபோன மேரமான்ஜியின் பிள்ளைகள் தங்களிட மிருந்து கைப்பற்றின ராஜகோட்டையைத்

திருப்பிப்பெற முயற்சித்து 1732-ல் பளர் உதவியைக் கொண்டு ராஜகோட்டையைக் கைப்பற்றினார்கள். இச் சமயத்தில் மாகம்கான் இறந்து விட்டான். மேரமான்ஜி குமாரனான ரான்மால்ஜி பட்டத்திற்கு வந்து 1746 வரை ஆண்டு வந்தான். இவனுக்குப் பிறகு 1794-ம் வருடமுதல் லாகோஜி நாட்டை ஆண்டு வந்தான். இவன் ஆட்சி புரியும் காலத்தில் தான் வெள்ளையர்கள் இந்நாட்டை நோக்கினார்கள். இது வரையில் தனியரசர் களாயிருந்து வந்ததை 1808-ம் வருஷம் சின்னபின்னப் படுத்தி தனியரசை சமஸ்தானமாக்கி விட்டான் கர்னல் வாக்கர் என்னும் வெள்ளையன். 1808-ம் ஆண்டு முதல் சமஸ்தானமாயிற்று. 1825 முதல் 1844 வருஷம்வரையில் சுராஜியும், 1844-ம் ஆண்டுக்குப் பிறகு மேரமான்ஜியும் ராஜகோட்டை சமஸ்தானத்தை ஆண்டு வந்தார்கள். மேரமன்ஜிக்கு நான்கு மனைவிகளுண்டு.

ராஜகோட்டையின் வரலாறு

சமஸ்தான மன்னர்களுக்குக் கல்வி போதிப்பதற் காக ராஜகோட்டையில் ஒரு கலாசாலை கட்ட கர்னல் கீட்டிங்ஸ் என்பவன் ஆரம்பித்தான். இக்காலேஜைக் கட்டிய இன்ஜினீயர் பூத் என்பவன். 1870 ஆண்டு பம் பாய் கவர்னர் சர் செய்மூர் பிட்ஜ்கொரல்ட் என்பவன் திறந்தான். இவ்வைபவத்தில் பல மன்னர்கள் கலந்துக் கொண்டார்கள். கலாசாலை பிரின்ஸிபால் செஸ்டர் மாக்னக்தன் என்பவன். இக் கலாசாலையில் இளவரசர் கள்தான் படிக்கலாம். இந்தக் கலாசாலையில்தான் பாவோஜி தாகூர் சாகிப் படித்தார். இவர் பட்டத்திற்கு வந்ததும், ராஜகோட்டை மூன்று ரெவின்யூ டிவிஷன் களாக பிரிக்கப்பட்டன. இதற்கு சர்தார், குட்வா, ராஜகோட்டை என்று பெயர். 1881-ம் வருஷத்தில் மொத்த ஜனத் தொகை 11,979 பேர்கள். வருஷ வருமானம் 2 லக்ஷ ரூபாய். இம் மூன்று ரெவின்யூ, டிவிஷன்களிலும் 61 கிராமங்கள். இக் காலத்தில் முக்

கியமான வர்த்தகம் சாயம் போடுதலும், நெய் வர்த்தக முந்தான் விசேஷமாக நடைபெற்று வந்தன. ராஜகோட்டை மன்னருக்கு எட்டுமுறை விவாகம் நடைபெற்றது. மனைவி மார்களில் நால்வர் இறந்து விட்டனர். மற்ற நால்வர்களில் ஒருத்திக்கே இரு புத்திரர்களுண்டு. ராஜகோட்டையில் தர்மசாலை, முஸாபரி பங்களா, தந்தி தபால ஆபீஸ், ரோமன் கத்தோலிக் கோவில், சித்ர கலாசாலை, ஆஸ்பத்திரி, குஷ்டரோக ஆஸ்பத்திரி, ஜெயில்கள் முதலியவைகளிருக்கின்றன. ஜெயில்களை வெகு கேவலமாகக் கட்டியிருக்கிறார்கள். ஜெயிலிலிருந்து பலர் ஓடிவிட்டதால் இவ்விதமாகக் கட்டியிருக்கிறார்களாம்.

தாகூர்சாகிப் உதயம்

1856ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 30 தேதி சனிக்கிழமை பவோஜி தாகூர் சாகிப் பிறந்தார். 1862ம் வருஷம் நவம்பர் மீ 8-தேதி சனிக்கிழமை பவேஜிா தாகூர் சாகிப் பட்டத்துக்கு வந்தார். பட்டத்துக்கு வரும் பொழுது மன்னருக்கு வயது 6 ஆகவே இவரது பாட்டி நனிபா 1867-ம் ஆண்டுவரை ராஜீயத்தை நடத்திவந்தாள். பெயருக்கு பாட்டி ராஜீயத்தை நடத்திவருவதாகக்கூறின போதிலும், ராஜீயத்தை நடத்தி வந்தவன் கர்னல் கீடின்ஸ் என்பவனாகும், அக்காலத்தில் போதுமான அதிகாரம் கிடையாது. 1876ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி பூர்ண அதிகாரத்தை மன்னருக்கு கொடுத்து, இரண்டாந்தர சமஸ்தானமாக்கினார்கள் வெள்ளையர்கள். அப்பொழுது பவோஜி மன்னருக்கு வயது இருபது. இவரிடம்தான் மகாத்மா காந்தியின் தகப்பனார் திவானாக யிருந்தார்.

தற்காலம் ராஜகோட்டை சமஸ்தானாதிபதி ஸ்ரீ தர்மேந்தரசிங் தாகூர் சாகிப். ராஜகோட்டை, கதிவார். இவர் 1910வது வருஷம், மார்ச்சு மாதம் 3 தேதி பிறந்

தார். 1931-வது வருஷம் ஏப்ரல் மாதம் 21 தேதி, சிம் மாசனமேறினர். அப்பொழுது மன்னருக்கு வயது 21. 1884-வது வருஷமிருந்த ஜனத்தொகையும், வரு வாயும் 1938-வது வருஷத்தில் அதிகப்பட்டுவிட்டன. ராஜகோட்டையின் விஸ்தீரணம் 283 சதுரமைல். ஜனத்தொகை 75,540 பேர்கள். வருஷ வரும்படி 12,50,000 ரூபாய். மன்னருக்கு, 9 மரி யாதை குண்டுகளுண்டு. நிர்வாகம் செகிரேடரியட்முறை யில் நடைபெறுகின்றது. அசெம்பளியு மிருக்கிறது; முனிசிபாலிடியுமுண்டு. திவான் தர்பார் ஸ்ரீ வீரவாலா, (இவருக்கு முன்னிருந்த திவான் காடெல் ராஜிஞமா செய்து விட்டார்) இவருக்கு அடுத்தபடியுள்ள முக்கிய உத்தியோகஸ்தர்கள். பிரதம காரியதரிசி, நியாய காரிய தரிசி, மாரமத் இலாகா காரியதரிசி, ரெவின்யூ காரிய தரிசி, பொது காரியதரிசி, போலீஸ் சூப்பிரண்டெண்ட், மானேஜிங் இன்ஜினீயர், மெடிகல் ஆபீசர், பிரின்ஸி பால், கல்வி இன்ஸ்பெக்டர், ஸ்டேட் இன்ஜினீயர் முதலியவர்களிருக்கிறார்கள். 1927-ம் வருஷம் கத்திய வார் சமஸ்தானம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்றுக்கு மேற்கு கத்தியவார் ஏஜென்ஸி யென் றும், மற்றொன்றுக்கு கிழக்கு கத்தியவார் ஏஜென்ஸியென்றும் பெயர். 1924-ம் வருஷம் வரை எவ்விதமான சீர்திருத்தமும் கிடையாது. பிறகுள்ள சீர்திருத்தமும் பெயரளவில் இருக்கிறது. நடைமுறை யில் ஜனநாயக ஆட்சிக்கிடையாது. பிரிட்டிஷ் இந்தியா வில் ஜனநாயக ஆட்சி நடைபெறும்பொழுது, சமஸ் தான மக்களும் ஜனநாயக ஆட்சி வேண்டுமென்று பிர சாரம் செய்வது இயற்கையே. ஆகவே ஜனநாயக ஆட் சியை மக்களிடையே பிரசாரம் செய்ய "பிரஜா பரிஷித்" என்று ஒரு சங்கம் ஸ்தாபித்து காங்கிரஸ் கொள்கையைப் பின்பற்றி அஹிம்சா முறையில் பிரசா ரம் செய்ய ஆரம்பித்தார்கள் ராஜகோட்டையிலுள்ள தலைவர்கள்.

நாட்டுக் குடிகளின் க்ஷேமத்தில் அன்பு கொண்ட அரசனது அடியைப் பொருந்த உலகத்தார் நிற்பர்.



வைசிராயும், மன்னர் சபைத் தலைவரும்

" குடிதழீஇக் கோலோச்ச மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு " —குறள்.

மன்னர்கள் செய்யவேண்டியவைகளைச் செய்யாமற் போனாலும்,
செய்யத் தகாதவைகளைச் செய்தாலும் கெடுவர்.



சமஸ்தான மன்னர்கள்

" செய்தக்கவல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்" — குறள்

2-வது அத்தியாயம்

சட்டமறுப்புப் போர்

போராட்டம் ஆரம்பம்

1938-வது வருஷம், செப்டம்பர் மாதத்தில் "பிரஜாபரிஷித்" பிரசார வேலையை தொடங்கிற்று. பிரசாரமே செய்ய வொட்டாமற்படி அதிகாரவர்க்கம் அடக்கு முறையைக்கொண்டது. சென்ற சில மாதங்களாக ஜனநாயக ஆட்சியைக் கோரி ஜனங்கள் செய்யும் கிளர்ச்சியை அடக்கிவிடவோ அல்லது செல்வாக்கில்லாமல் செய்துவிடவோ சமஸ்தான அதிகாரிகள் பலவித சூழ்ச்சி செய்தனர். செப்டம்பர் 30-ந் தேதியன்று ராஜகோட்டை திவான் சர் பாட்ரிக்காடெல் ஒரு அறிக்கை விடுத்தார். "சமஸ்தான நிர்வாகம் சிக்கின முறையில் நடக்கவில்லையென்று சொல்வது தவறு. நிர்வாகம் வெகு திறமையாகவும், தனிப்பட்டவர்களின் மனுக்களை வெகு துரிதமாக கவனிக்கப்படுகிறது. ஏகபோக உரிமைக் கொடுத்தால் வர்த்தகம் அபிவிருத்தியடைவது தடைபடும். தீக்குச்சி தொழிலுக்கு ஏகபோக உரிமைக் கொடுத்திருப்பது உண்மையே! இதனால் பாதிக்கப்பட்டவர்கள் சர்க்காருக்கு மனுசெய்துக்கொண்டால் கவனிக்கப்படும். ஒவ்வொரு கிராமத்திற்கும் நிலவரி வெவ்வேறு விதமாக யிருந்தாலும், இந்த சமஸ்தானத்தில் மாத்திரம் மற்ற சமஸ்தானங்களைவிட நிலவரி மிகக் குறைவு. இருந்தாலும் இவ்வரி விகிதத்தைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்படும். இப்பொழுது சமஸ்தானதிபதி குடும்பத்திற்குக் கொடுக்கப்படும் சம்பாவனையை மாற்றுவதற்கும் ஏற்பாடு செய்யப்படும். பொதுப்பாட்சி

யென்பதற்கு இதைவிட வேறு வியாக்கியானம் சொல்லவேண்டியதில்லை. இப்பொழுதுள்ள சமஸ்தானாதிபதியையும், அவர் குடும்பத்தினரையும் நீக்கிவிட வேண்டுமென சில கிளர்ச்சிக்காரர் கூறுகிறார்கள். ஆதி கால முதற்கொண்டு இருந்துவருகின்ற முறையை அழிப்பதென்பது நியாயத்திற்கு முரணானது. சமஸ்தானாதிபதியின் செல்வாக்கையும், அதிகாரத்தையும் ஜன நன்மைக்காக உபயோகித்துக்கொள்ளவேண்டும். நல்ல நிர்வாகம் நடக்க ஜனக்கள் உதவவேண்டும். சமஸ்தான சட்ட சபையில் சில குறைகளிருப்பதை நான் அறிவேன். இதை நிவர்த்திக்க சர்க்கார் தயாராக யிருக்கிறார்கள்."

அழுகின்ற பிள்ளைக்கு வாழைப்பழம்

பாட்ரிக் காடெல் அறிக்கை மேற் சொன்ன பழமொழியைப் போலிருக்கின்றதே யொழிய வேறில்லை. ஜனங்கள் பொறுப்பாட்சி வேண்டுமென்று கிளர்ச்சி செய்து பலர் சிறைக்குச் சென்ற பின்பு புதியதிவான் மேற்கண்ட அறிக்கை விடுத்தாரேயொழிய வேறில்லை. இந்த அறிக்கையை நம்பி கிளர்ச்சியை விட்டுவிட்டால், திவானின் அறிக்கையைச் செல்லரித்துவிடும். ஆகவே ஜனங்கள் ஒரு பக்கம் கிளர்ச்சி செய்துக்கொண்டே மற்றொரு பக்கம் தங்கள் குறைகளை மனுக்கள் மூலம் தெரிவித்தார்கள். பலன் என்ன ?

தேனென்றால் இனிக்குமா ?

வாயினால் தேன் என்று சொன்னால் எப்படி இனிக்காதோ அப்படியே திவானின் அறிக்கை இனிக்கவில்லை. சமஸ்தானத்தில் அடக்குமுறை தாண்டவமாடியது. சாத்விகமாக மறியல் செய்யும் (சிறுபையன்கள்) தொண்டர்களின்மீது கொதிக்கும் வெந்நீரை போலீசார் ஊற்றினார்கள். பலரின் தேகம் வெந்துவிட்டது. இக்கொடுமையைக் கண்டு, ஜனங்கள் பிர

மித்து நின்றார்கள். இவர்களைக் கலைப்பதற்கு போலீசார் தடி கொண்டு தாக்கினார்கள். பெற்ற தாய் கிண்ணி பிச்சை எடுக்க பிள்ளை கோதானம் வழங்குவது போல, குடிகள் துயரமுற மன்னர் தாகூர் சாயபு தசரா ஊர்வலம் வந்தார். பவனி வருவதை முன்னிட்டு வேறு எவ்வித ஊர்வலமும் காலை 7-மணி முதல் இரவு 10-மணி வரையில் நடைபெறக்கூடாதென சமஸ்தான சர்க்கார் தடுத்து விட்டார்கள். பிரிட்டிஷ் இந்திய சர்க்காருக்கு உப்பு உற்பத்தி ஏகபோக உரிமையிருப்பது போல ராஜகோட்டை சமஸ்தானத்திற்கு தீப்பெட்டிகள் உற்பத்தி செய்வதில் ஏகபோக உரிமையுண்டு. இந்த உரிமையிலுள்ள குறைகளை திவான் நிவர்த்திப்பதாக கூறியதை முன்னால் கூறியுள்ளோம். ஏகபோக உரிமை சட்டத்தை மீறி சிலர் தீப்பெட்டியை விற்றனர். இக்குற்றத்திற்காக 6 பேர்களைக் கைது செய்தனர். இதுவரையில் சிறை சென்றவர் 39 பெயர்கள்.

மூன்றாவது சர்வாதிகாரி

ஸ்ரீ ஜேதலால் ஜோஷி மூன்றாவது சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவர் தலைமையின் கீழ் 500 சத்யாகிரகிகளும் 60 ஸ்திரீகளும் கொண்ட ஊர்வலம் வந்தது. போலீசாரும் கூடவே வந்தார்கள். பொதுக் கூட்டங்கள் போடக்கூடாதென்றும், பேசக்கூடாதென்றும் தடை உத்திரவை சர்க்கார் பிறப்பித்தார்கள். தடை உத்திரவை மீறியதால் பலர் சிறை சென்றார்கள். திக்குச்சி தொழிலாளர் பலரும் சிறை சென்றார்கள். மூன்றாவது சர்வாதிகாரி சிறை சென்றபின் நான்காவது சர்வாதிகாரி நியமிக்கப்பட்டு அவரும் சிறை சென்றார். சர்க்காரின் அடக்குமுறையைக் கண்டித்து ராஜகோட்டை வக்கீல் சங்கத்தாரும் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

தேளுக்குப் பெரிதனம்.

மக்களுக்கேற்பட்ட தேசீய உணர்ச்சியை யாரால் அடக்க முடியும்? பிரதி தினமும் பல மக்கள் பொறுப் பாட்சிக் கிளர்ச்சியில் ஈடுபடலானார்கள். இதைக் கண்ட திவான் கதி கலங்கி விட்டார். ஆகவே அடக்கு முறைச்சட்டங்களை பிரதி தினமும் ஒவ்வொன்றாக வீசலானார். திவான் பிறப்பிக்கும் உத்திரவு சட்ட ரீதியானதல்லவென்று கத்தியவார் வக்கீல் சங்கத்தினர் ஆக்ஷேபித்தனர். ஆக்ஷேபணையை உத்தேசித்து ராஜகோட்டை மன்னர் ஒரு அறிக்கை விடுத்தார். அதில் அவசரமான நிலைமையை சமாளிக்க 6 மாதம் வரையில் திவானுக்குச் சர்வாதிகார மளித்திருப்பதாக மன்னர் தெரிவித்தார். அதிகார மில்லாமலே செய்யும் சக்தி வாய்ந்த வெள்ளை திவானுக்கு அதிகாரம் கிடைத்த பின் சொல்லவா வேண்டும்? இதனால் சமஸ்தான ஜனங்கள் பலவிதமான இன்னல்களுக்கு ஆளானார்கள். பொறுப்பாட்சியைக்கோரி நிற்கும் மகா ஜனங்கள் கொடுமைகளைப் பொருட்படுத்ாது மென்மேலும் தியாகஞ் செய்தார்கள். சர்க்கார் கையாளும் அடக்கு முறைகளைக் கண்டிப்பதற்காக சமஸ்தான அசெம்பிளி அங்கத்தினர்களெல்லாம் தங்களுக்குள்ள எல்லா பொது ஸ்தானங்களிலுள்ள பதவிகளை ராஜினாமா செய்து விட்டார்கள்.

வாய் வாழைப்பழம்.

கை கருணைக் கிழங்கு என்பது போல சமஸ்தான அதிகாரிகள் தங்கள் கை வரிசைகளைக் காண்பிக்க ஆரம்பித்தார்கள். அக்டோபர் 10-ந்தேதி நில குத்தகைகள் தர்பார் மண்டபத்திற்கு முன் ஏலம் போடப்படுமென தண்டோரா மூலம் சமஸ்தான அதிகாரிகள் அறிவித்தார்கள். எதிர்பார்த்தபடி ஏலம் கேட்க ஜனங்கள் செல்ல வில்லை. தப்பித்தவறி போனவர்களை ஏலம் கேட்க்க வொட்டாதபடி தேசீயவாதிகள் மறியல்

செய்தனர். மறியலைக் காண ஏராளமான ஜனங்கள் கூடி விட்டனர். சமஸ்தான தர்பார் மண்டபத்திற்கு முன் கூடியிருந்த ஜனங்களைக் கலைந்து போகுமாறு மாஜிஸ்டிரேட் உத்திரவு பிறப்பித்தார். பதினைந்து நிமிஷத்திற்குள் உத்திரவுக்குக் கீழ்ப்படியாவிடில் பலாத்காரமாகக் கூட்டத்தைக் கலைக்கப்படுமென போலீஸார் தெரிவித்தனர். ஜனங்கள் போக மறுக்கவே போலீஸார் தடியால் ஜனங்களை அடித்தனர். ஏராளமான ஜனங்களுக்குக் காயமேற்பட்டது சுமார் 70 பேர்கள் கைதியாயினர்.

சமஸ்தான விவசாயிகளுக்கு நிவாரணமளிப்பதாக நிலவரியில் 25% முதல் 33% வரை வஜா செய்வதாக தாகூர் சாகிப் அறிவித்தார். இந்த வரி வஜா, கிணறுகளால் நீர்ப்பாசனம் செய்து கோதுமை பயிராகும் நிலங்களுக்கு மாத்திரம் தான் அளிக்கப்படுமாம். குழாய்கள் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படும் நிலங்களுக்குக் கிடையாதாம். இந்த நிவாரணம் இப்பொழுது சமஸ்தானத்தில் நடைபெறும் கிளர்ச்சியில் கலந்துக் கொள்ளாமல் மூன்று வருஷம் வரையில் இருக்கும் விவசாயிகளுக்கு மாத்திரம் தான் அளிக்கப்படுமென உத்திரவில் கண்டிருந்தது. உண்மையில் ஜனங்களுக்குப் பொறுப்பாட்சிக் கொடுக்க வேண்டுமென்கிற எண்ணம் சமஸ்தான அதிகாரிகளுக்கு இருக்குமானால் இவ்விதமான உத்திரவை தாகூர் சாகிப் பிறப்பிக்க வேண்டிய அவசியமே யில்லை.

ராஜகோட்டை தினம்

அநேகமாக எல்லா சமஸ்தானங்களிலும், சமஸ்தான ஜனங்களிடையே தேசீய உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை கத்தியவார் அரசியல் மகா நாட்டுத் தலைவர் உணர்ந்து, காரியதரிசி மூலம், அக்டோபர் மாதம் 15-ந்தேதி சமஸ்தான மெங்கும் “ ராஜகோட்டை தினம் ”

கொண்டாடும் படி அறிக்கை விடுத்தார். இவ்வேண்டு கோளுக்கிணங்கி பல சமஸ்தானங்களில் ராஜகோட்டை தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டத்தினால் சமஸ்தான ஜனங்கள் நன்ருக விழித்துக் கொண்டார்கள்.

சர்தார் படடேலின் எச்சரிக்கை

"ராஜ்கோட்டில் நிகழ்ந்த சம்பவங்கள் மிகவும் ரஸமானதாக விருக்கின்றன. புது திவான் சர். பாட்ரிக் காடெல்கூட சமஸ்தானத்தை எதிர்த்து சட்டமறுப்பு ஆரம்பித்தார். ராஜ்கோட்டை தாகூர்சாஹிப், ஸர். காடெலே, திவான் பதவியிலிருந்து நீக்குவதாக எழுத்து மூலமாக ஸர். காடெலுக்கு உத்திரவு பிறப்பித்தார். ஆனல் புது திவான் அந்த உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுத்து விட்டார். அதன்பேரில் தாகூர் சாஹிப் அவரை திவானுக அங்கீகரிக்க மறுத்து விட்டார்.

சர் பாட்ரிக் காடெல், ராஜ்கோட்டை பிரஜா பரிக்ஷித் தலைவர் ஸ்ரீ. தேபர்பாய்க்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தார். இச் சமஸ்தானத்தில் அதிக எதிர்ப்புக்குக் காரணமாக விருக்கும் தீப்பெட்டி விற்பனை ஏகபோக உரிமையை வாபஸ் செய்து தாம் ஏற்கனவேயே உத்தரவு பிறப்பித்து விட்டதாகவும், ஆனல் தாகூர்சாஹிப் அந்த உத்தரவில் கையொப்பமிட மறுத்துவிட்டதாக வும் புது திவான் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிருர். பழைய திவான் ஸ்ரீ. வீரவாலாவுக்கு, போலீஸ் சூப்ப ரின்டெண்டு பந்து. புது திவான் சர் பாட்ரிக் காடெ லின் உத்தரவில்லாமல் அந்த சூப்பரின்டெண்டு நிரபரா திகளான ஜனங்களைத் தடியால் அடித்தார். ஆனல் புது திவான் தடியடிபட்ட ஜனங்களிடம் வருத்தம் தெரி வித்தார்.

தாகூர் சாஹிப்பின் மன சாட்சியே பழைய திவான் ஸ்ரீ. வீரவாலா வசமுள்ளதென்பதும், வீரவாலா யோசனை இன்றி தாகூர் சாஹிப் ஓர் அங்குலமும் அசையமாட்டாரென்பது பகிரங்க ரகசியமாகும். புது திவான் சர் பட்ரிக் அடக்கு முறையை கையாள மறுத்துவிட்டதால் அவர் திவானாகவே இருக்கக் கூடாதென்று ஸ்ரீ. வீரவாலா இப்பொழுது விரும்புகிறார். ராஜகோட்டையினுள்ளசூழ்ச்சியைப் பற்றி சர். பாட்ரிக் இந்திய சர்க்காருக்கு அவசரமனுவென்று அனுப்பியுள்ளாரென்றும் கூறப்பட்டது. ராஜகோட்டை சமஸ்தானத்தை யார் ஆளுகிறாரென்பது எவருக்கும் தெரியவில்லை. அதைப்பற்றி ஜனங்களைக்கேட்டால் அவர்கள் ஒரே குரலுடன் பிரஜாபரிஷித் தலைவர் ஸ்ரீ. திபார்பாயின் வார்த்தையே சட்ட மென்று கூறுவார்கள்.

சர். பாட்ரிக் காடெல் போன்ற அநுபவ முள்ள திவானை நியமத்த சிறிது கலத்திற்குள் தாகூர் சாஹிப் ஏன் டிஸ்மிஸ் செய்தாரென்பதைக் கூறுவது கஷ்டமாகவிருக்கிறது. ஐரோப்பிய சிவிலியனான திவானை இந்திய மன்னர் ஒருவர் துணிச்சலாக டிஸ்மிஸ் செய்தது இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி சரித்திரத்திலேயே இது முதல் சம்பவமாகும். தாகூர் சாஹிப் சுயபுத்தியுடன் நடந்திருக்கிறாரா அல்லது திரைமறைவிலிருந்து அவரை யாராகிலும் ஆட்டிவைக்கிறாரா? என்பது தெரியவில்லை.

பழைய திவானான ஸ்ரீ. வீரவாலாவும் அவரது மருமகனான போலீஸ் சூப்பரின்டெண்டும் 24 மணி நேரத்துக்குள் ராஜகோட்டையை விட்டு வெளியேற வேண்டுமென்று அவ்விருவருக்கும் இந்திய சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறதென்று செய்தி கிடைத்தது. சர் பாட்ரிக் காடெல் தற்போது டிஸ்மிஸ் உத்தரவு பெற்றும் அவ்வுத்தரவுக்கு கீழ்ப்படிய மறுத்து திவானாகவிருக்கிறார். தாகூர் சாஹிப்பின் அந்தரங்க காரியதரிசியான ஸ்ரீ வீரவாலாவும் போலீஸ் சூப்

பரின்டெண்டும் சமஸ்தானத்தைவிட்டு வெளியேற ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

7 வருஷ காலம் ஊழலான நிர்வாகம் நடத்தி வந்தவர்கள் இப்பொழுது வெளியேறுவது பற்றி ராஜகோட்டை மக்கள் 'சனியன் ஒழிந்தது' என்று மன ஆறுதல் அடைந்தார்கள். ஆனல் பாவம்! தாகூர் சாஹிப்பைபற்றி என்ன? அவர் ராஜகோட்டையிலேயே இருக்க அநுமதிக்கப்படுவாரா? யாரால் சொல்ல முடியும்? அவர் கதி என்ன வாகுமென்பதை எதிர் காலமேகூற முடியும்.

ராஜகோட்டை மக்கள் பொறுப்பாட்சி கோருவதில் ஆச்சரியமென்ன? அவ்வித கோரிக்கையை எதிர்ப்போர் சுத்த அயோக்கியர்கள். இஸ்டேட் ராஜாக்களான மன்னர்களுக்கு ஏழைகள் மீது பாரத்தைச் சுமத்திவிட்டு ஆடம்பரமானதும் துன்மார்க்கமானதுமான வாழ்க்கை நடத்துவது தவிர வேறு தெரியாது. இவர்களுக்கு உபதேசம் செய்யும் சுய நலக்காரர்களின் ஆட்சியால் விளையும் பலாபலன்களை அறியாதவர்களே பொறுப்பாட்சி கோரிக்கையை எதிர்ப்பார்கள்.

சமரச முயற்சி?

ராஜகோட்டையில் இப்பொழுது நடைபெற்று வரும் கிளர்ச்சியை நிறுத்துவதற்காக ராஜகோட்டை திவான் ஒரு திட்டம் தயாரித்திருப்பதாக "பம்பாய் கிரானிகள்" ராஜகோட்டை நிருபர் அக்டோபர் 22 தேதி தெரிவித்தார். அதாவது (1) எல்லா ராஜீய கைதிகளையும் நிபந்தனையின்றி விடுவித்தல், (2) ராஜாவின் சொந்த செலவிற்காக வருஷத்திற்கு 1 லக்ஷம் ரூபா எடுத்துக் கொள்வது (3) ஏகபோக உரிமைகள் வாபஸ் (4) சமஸ்தான குடியானவர்களின் குறைகளைக் கவனிக்க விசேஷ அதிகாரி நியமித்தல், (5) லாகாஜி ராஜாவால் ஸ்தாபிக்கப்பட்ட சமஸ்தான அசெம்பிளியில் சில மாறுதல், (6) மூன்று மந்திரிகள்

கொண்ட ஆலோசனைக் கவுன்சில் அமைப்பது, (7) (வெள்ளைத்திவான்) சர் பாட்ரிக் காடல் தலைவர், (8) பொறுப்பாட்சி சர்க்கார் சம்பந்தமாக பரீக்ஷத் இறுதியான யோசனைகளை சமர்பிக்குமாறு கேட்கப்படும்.

(சமஸ்தானங்களில் எவ்விதமான ஆட்சி நடைபெறுகின்றதென்பதை முன் அத்தியாயத்தில் கூறியுள்ளோம். அதை சர்தாரின் பிரசங்கம் உறுதிப்படுத்துகின்றது. வீரவல்லாவுக்கு நெருங்கிய பந்து போலீஸ் சூப்பிரண்டெண்டாக யிருப்பதும், வீரவல்லாவின் வாக்கையே மன்னர், வேதவாக்காகக் கருதுகிறார் என்பது பிரத்யக்ஷ ரூபமாக தெரிகின்றது) இவைகளைக் கவனிப்பதற்காக சர். காடல் இரு வார அவகாசம் கேட்டார். அதுவரையில் இரு சாராரும் சமாதானமாக யிருக்க வேண்டும் என்பது தான். இந்த அறிக்கையினால் ஜனங்கள் ஏமாறவில்லை. சமஸ்தான மன்னர்களின் பெயரை உபயோகித்து, வெள்ளை உத்தியோகஸ்தர்களோ அல்லது அந்நிய ஆட்சிக்கு அனுகூலமாக யிருக்கும் புல்லுருவிகளோ அறிக்கைவிடுவது வழக்கம். ஜனங்கள் அறிக்கையை நம்பி அஹிம்சா போரைக் கைவிட்டால் அறிக்கைகளும் வாபஸாகி விடுவது வழக்கம். ஆகவே போர் தொடர்ந்து நடந்துவந்தது. மறுபடியும் நவம்பர் மாதம் 1 தேதி ஒரு அறிக்கை வெளி வந்தது. அதில் ராஜகோட்டை சமஸ்தான நெருக்கடி, ரெஸிடெண்ட் ஸ்ரீ கிப்ஸனின் தலையீட்டால் சமரசமாகத் தீர்க்கப்பட்டதாகவும், தாகூர் சாகிப்பைத் தலைவராகவும், திவான் சர். காடலை உபத்தலைவராகவும், ஸ்ரீமான்கள் மணிக்கலால், ஜோபன்புத்ரா இவர்களை மெம்பர்களாகக் கொண்ட கவுன்சிலை நியமிக்க சம்மதித்து விட்டதாகவும் ஓர் "அவுட்" கிளம்பியது. பூனையை மடியில் கட்டிக்கொண்டு சகுனம் பார்ப்பதும் மேற்சொன்ன அங்கத்தினர்கள் கவுன்சிலிலிருப்பதும் மிகமிகப் பொருத்தமானது. ஆகவே இந்த கவுன்சிலால் சமஸ்தான ஜனங்கள்

பொறுப்பட்சிப் பெற்றுவிட்டார்களென்று சொல்வது நகைப்புக்கு இடமாகும்.

கண் துடைக்கும் வேலை

ஷெடி அறிக்கை வெளிவந்த உடன் சமஸ்தானத்தில் நெருக்கடி ஒரு அளவு குறைந்திருப்பதாக நினைத்து, அதிகாரிகள் மனப்பால் குடித்தனர்கள். இனி இந்த கவுன்சில் சர்க்காரின் நிர்வாகத்தை நடத்தும். தாகூர் சாகிப்பின் அதிகாரங்கள் பாதிக்கப்படவில்லை; ஆனால் அவர் தன்னுடைய நிர்வாக அதிகாரத்தை இந்த கவுன்சில் மூலம் செலுத்துவார். இரண்டு மாதங்களுக்கு முன் சர். பாட்ரிக்காடெல் திவானாக வந்ததிலிருந்து சமஸ்தானத்தில் இவ்விருவர்களின் போட்டி அதிகமாமே இருந்தது. சர். பாட்ரிக் காடெல் திவான் என்ற ஹோதாவில் நிர்வாகத்தின் பிரதம அதிகாரியாயிருந்து வருகையில், மாஜி திவான் வீரவல்லா தாகூர் சாகிப்பிக்கு ஆலோசனை கூறுபவராக யிருந்துவந்தார். இருவரின் போட்டி ஆட்சியில் நெருக்கடி ஏற்பட்டு வீரவல்லா ராஜினமா செய்துவிட்டார்.

பொறுப்பாட்சி கிளர்ச்சி அடங்கிவிட்டதாக அதிகாரிகள் கூறியபோதிலும், சமஸ்தான நிலைமை மாறுபடவேயில்லை. நாளுக்கு நாள் கிளர்ச்சி பலத்தது, நிலைமையைச் சமாளிக்க சர். பாட்ரிக் காடெலால் முடியவில்லை. ஆகவே கத்தியவார் சமஸ்தானங்களுக்கெல்லாம் வெள்ளை உத்தியோகஸ்தரான ரெஸிடெண்ட் ஸ்ரீ கிப்ஸன் தலையிட்டு தகராறை குறைக்க வழிதேடினார். இவர் உத்திரவின்பேரில்தான் கவுன்சில் நியமனமாயிற்று. இந்த நியமனத்தால் ஜனங்களுக்கு நன்மையேற்படுமென்பதை உணர்த்த, ஜனங்களின் பிரதிநிதிகளான 9 பேர்களுக்கு தாகூர் சாகிப் அழைப்பு அனுப்பித்தார். இந்த 9 பேர்களில் பிரஜா பரீஷத் தலைவர் ஸ்ரீ திபார்பாய், ஸ்ரீமான்கள் பாண்டியா,

வக்கீல், பரேக் மூவர்களையும் சேர்த்துக்கொண்டார். தாகூர் சாகிப்பின் அழைப்புக் கிணங்கி பிரஜா பரிஷத் தலைவர் ஸ்ரீ திபார்பாய் போகவில்லை. அழைப்பு வந்ததும் நேரே பம்பாயிக்குச் சென்று சர்தார் பட்டேலுடன் கலந்தாலோசித்துவிட்டு ஆகாய மார்க்கமாய் ராஜகோட்டைக்கு வந்து சேர்ந்தார். பரிஷத் தலைவரும், சர்தார் பட்டேலும் பேசிய விபரம் பூராவும் தெரியாவிட்டாலும், மறுநாள் 3-11-38 நடந்த பொதுக் கூட்டத்தில் பேசியதிலிருந்து சமஸ்தான மாய வலையில் சிக்கவேண்டாமென்று எச்சரித்து அனுப்பியிருக்கிறார்.

நண்டைச்சுட்டு நரியைக் காவல் வைப்பதா?

நேற்று ராஜகோட்டை அரண்மனையில் தாகூர் சாகிப் திவான் சர்பாட்ரிக்காடல் இருவரும் ஜனங்களின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினர். பொறுப்பாட்சியை படிப்படியாக அளிப்பதே தர்பாரின் நோக்கமென்று அறிவிக்கப்பட்டது. உடனே பொறுப்பாட்சி சாக்கார் வேண்டுமென்பதை ஜனங்களின் பிரதிநிதிகள் தெளிவாக்கிவிட்டனர்.

இந்த விசித்திர நிர்வாக கவுன்ஸில் கண்மூடித்தனமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த கவுன்ஸில் ஏகமனதாக ஜனங்களுடன் சமரசப் பேச்சை நடத்த முடியுமா வென்பதை இனி நடைபெறப்போகும் நிகழ்ச்சிகள் தான் நிரூபிக்க வேண்டும். ராஜகோட்டை ஜனங்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்த சமஸ்தான சூழ்ச்சிகளில் சிக்காமல், போராட்டத்தை தங்கு தடையற்ற உற்சாகத்துடன் தீவிரமாக நடத்துவதே சிறந்த வழி. அவர்களின் கோரிக்கையான பொறுப்பாக்ஷி சார்க்காரை ஸ்தாபிக்க யோக்யதையுள்ள அதிகாரி சம்மதிக்கும் வரை போராட்டம் நடைபெறவேண்டுமென்று ஜனங்கள் கருதினர்.

நிர்வாக கவுன்ஸிலில் உள்ள இரு மெம்பர்களும், பாஜி திவான் ஸ்ரீ. வீரவல்லாவின் கையாட்கள் ராஜகோட்டை சதுரங்க ஆட்டையில் ஒரு புதிய ஆட்டம் விளையாடப்படுகிறது. இந்த திவான் சர். பாட்ரிக் காடல் வேண்டியமேதயில்லையென்று சொன்ன தாகூர் சாகிப், பிறர் யோசனையின் பேரில் ஒரு உத்தரவில் கையெழுத்திட்டிருக்கிறார். இந்த உத்தரவுப்படி, சமஸ்தானத்தை நிர்வகிக்க ஒரு கவுன்ஸில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தானே தலைவராகயிருக்கவும், சர். பாட்ரிக் காடல் உப தலைவராக இருக்கவும் சம்மதித்திருக்கிறார். நண்டைச்சுட்டு நரியைக்காவல் வைப்பதற்கும் இவ்விருவர் தலைமை வகிப்பதற்கும் வித்தியாசமில்லை.

இந்த கவுன்சிலிலில் இன்னம் இரண்டு மெம்பர்கள் இருக்கிறார்கள். இவர்கள ஸ்ரீ. வீரவல்லாவின கையாட்கள். கவுன்ஸிலில இந்த இரண்டு மெம்பர்களையும் சேர்த்துக் கொண்டால் உத்தரவில் கையெழுத்திடுங்கள் என்று ஸ்ரீ. வீரவல்லா, தாகூர் சாகிப்புக்கு கூறியிருக்கிறார். என்வே, சர். பாட்ரிக்காடல் மைனாரிட்டியிலிருக்கிறார். எதற்காக இவர் இந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டு, இதைப்போல கௌரவக் குறைவான நிலைமையில் வேலை செய்யச் சம்மதித்தார் என்பதை சுலபமாக புரிந்துக் கொள்ள முடியவில்லை. இந்த ஏற்பாடு எவ்வளவு காலம் நிலைத்து நிற்கும் என்பதை யாராலும் சொல்ல முடியாது.

இந்திய சர்க்காரின் அரசியல், இலாகா தாகூர் சாகிப் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராயில்லையென்பது நன்கு தெரிகிறது. நடவடிக்கை எடுத்துக்கொண்டால், ஏதோ சமஸ்தானதிபதிகள் கலவரமடைந்து விடுவார்களேயென்று அரிசியல் இலாகா அதிகாரிகள் பயப்படலாம். ஒரு சமஸ்தானதிபதி அவருடைய திவானை அதாவது ஒரு பிரிட்டிஷாரை டிஸ்மிஸ் செய்வதை அனுமதிக்கத் தயாராயில்லை. சர்

பாட்ரிக் காடல் அவமானத்துடன் ராஜகோட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு அவருக்கு உதவி செய்யாமலிருக்க இந்தியசர்க்கார் விரும்பவில்லை. இந்த நெருக்கடியை முடிப்பதற்காக தாகூர் சாகிப்பையும், திவானையும் நிர்ப்பந்தப்படுத்தி, முரண்பட்டுள்ள நபர்களுக்கும், உரிமைகளுக்குமிடையே சமரசம் ஏற்பட முயற்சித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு பொறுப்பபாயுள்ளவர்களுககு கௌரவத்தை அளிக்கக்கூடியதாயில்லை.

துன் மந்திரிகள்

இந்த ஏற்பாடு அனுபவசாத்திய மில்லாத தன்மை வாய்ந்திருக்கிறது. சீர்கேடான நிர்வாகத்தால் சென்ற 7 வருஷ காலமாக கஷ்டப்பட்டுவரும், ராஜகோட்டை மக்களின் கோரிக்கையை மத்திய சர்க்கார் வேண்டுமென்றே கவனியாமலிருந்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு சம்பந்தமாக ஜனங்கள் கலந்து பேசபபடவில்லை. தன் மனதை தானே தெரிந்துகொள்ளாத ஆட்சியை எதிர்த்து ஜனங்கள் போரை நடத்தினார்கள். ஜனங்கள் அரசியல் இலாகாவின் மூலம் இந்திய சர்க்காரின் அரை குறையான ஆதரவைப்பெற்றுள்ள சர். பாட்ரிக் காடலை ஒரு பக்கத்திலும், மாஜி திவான் ஸ்ரீ வீரவல்லா சொல்படி ஆடும் தாகூர் சாகிப், வீரவல்லாவின் கையாட்களாகிய இரு மெம்பர்கள் இந்த மூவரை இன்னொரு பக்கத்திலும் எதிர்க்க வேண்டி யிருக்கிறது. இந்த விதத்தில் இந்திய சார்க்கார் புண்படுத்தத் தயாரா யிருக்கிறதே யொழிய ஒரே போடாகப் போடத்தயாராயில்லை. எனவே இந்த தாகூர் எவ்வளவு திட மனதுடனிருந்தபோதிலும், தன் இஷ்டப்படி எதையும் செய்யாமலிருக்க, அவர் விரும்பாத சர். பாட்ரிக்கைப்போல சக்தி வாய்ந்த திவான் சுமத்தப்பட்டிருக்கிறார். சர். பாட்ரிக்காடல் கவுன்சிலில் மைனாரிடியிலிருப்பதால் அவருடைய பலம் குறைக்கப்படுகிறது. இந்தவிதத்தில் இருவரில் யாரேனும் ஒருவர்கூட ஜனங்களின் கோரிக்கை

களை திருபதிகரமானபடி சமாளிக்கமுடியாத ஸ்திதியில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் சர்க்கார் பாசாங்கு

நடுநிலைமை வகிப்பதாக பாசாங்கு செய்யும் பிரிட்டிஷ் சர்க்கார், தன்னுடைய அரை குறையான தலையீட்டால் சமஸ்தான சர்க்காரையும், சமஸ்தான மக்களையும் இப்பொழுதுள்ள துரதிருஷ்டமான நிலைமையில் வைத்திருக்கிறது. அரசியல் இலாகாவின் முயற்சியினால் இந்த நிர்வாக கவுன்சில் அமைக்கப்படுமுன் தாகூரும், சர். பாட்ரிக் காடலும் தனித்தனியாக ஜனங்களுடன் சமரசப் பேச்சு நடத்தி வந்தனர். இரு கட்சியினருக்கும், ஜனங்களின் கோரிக்கைகளுக்கு சம்மதிக்க யோக்யதை யில்லாததால், இந்த சர்க்கார் சூழ்ச்சிகளில சிக்கிக்கொள்ள வேண்டாமென பிரஜா பரிஷத் தலைவர்களுக்கு அதிருஷ்ட வசமாக நல்ல யோசனை தரப்பட்டிருந்தது.

புதிய நிர்வாக கௌன்ஸிலின் முதல் கூட்டம் நடைபெறப் போகிறதாக, சுமார் 12 பேர்கள் தாகூர் சாகிபையும், இதர கௌன்சில் மெம்பர்களையும் சந்திக்குமாறு அழைக்கப்பட்டார்கள். சிம்மாசனத்தில் ஏறியதிலிருந்து சமஸ்தான நிர்வாகத்தில் கொஞ்சம் மேனும் கலந்து கொள்ளாத தாகூர், உத்யோகமுறையில் இது வரை ஜனங்களை சந்திக்காத தாகூர், கவுன்ஸில் கூட்டத்தில் பிரசன்னமாயிருக்குமாறு அழைக்கப்பட்டிருக்கும் பிரமுகர்களிடமிருந்து சில உண்மைகளை முதல் முதலாக தெரிந்துக் கொள்வார். அவர் வாழ்நாளிலேயே இது ஒரு புதிய அனுபவமாயிருக்கப் போகிறதென்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது.

பேச்சு முறிந்தது

ராஜகோட்டை தர்பாருக்கும் பிரஜா பரிஷத் தலைவர்களுக்கும் நடைபெற்று வந்த சமரசப் பேச்சு

கள் முறிந்துவிட்டதால் செக்ஷன் 144 பிறப்பிக்கப் பட்டது.

சத்தியாகிரஹம் செய்வதற்காக 3000 ஜனங்கள் சவுக்கில் கூடி, தடையுத்தரவை மீறி ஊர்வலமாகச் சென்றனர். பலமுறை தடியடிப் பிரயோகம் செய்யப் பட்டது. பிரஜா பரீஷத்தின் தலைவரும், முதல் சர்வாதிகாரியுமாகிய ஸ்ரீ திபாரும், அவருக்குப் பின் 3 சர்வாதிகாரிகளும் காலை 10-மணிக்குள் கைது செய்யப் பட்டனர்.

(1) பூர்ண பொறுப்பாட்சி சர்க்காரை ஸ்தாபிப் பதே தனது லக்ஷியம் என்று தர்பார் ஸ்பஷ்டமாக ஒரு அறிக்கை வெளியிட்டு, விவரங்களைப்பற்றி விவாதிப்பதற்காக சர்தார் பட்டேலை அழைக்க வேண்டும்;

(2) சில அதிகாரிகள் பதவியில் இருக்க லாயக் கில்லை என்பதற்கு பரீஷத்திடம் போதிய சாக்ஷிய மிருப்பதால் அவர்களை டிஸ்மிஸ் செய்துவிட வேண்டும்;

(3) மாஜி திவான் ஸ்ரீ வீரவல்லா செய்த அக்ர மங்களை விசாரிக்க ஒரு பக்ஷபாதமற்ற கமிட்டியை நியமிக்கவேண்டும்;

(4) போலீஸ் அதிகாரிகள், தாங்கள் கேவல மான முறையில் நடந்துகொண்டதற்காக நிபந்தனை யின்றி மன்னிப்புக் கேட்கவேண்டும்.

பிரஜா பரீஷத் மேற் சொன்ன நான்கு கோரிக்கை களுக்கு தர்பார் இணங்க மறுத்ததாலேயே சமரசப் பேச்சு முறிந்தது.

பிரஜா பரீஷத்தின் தலைவர்கள் நேற்றுக்கூடி தாகூர் சாகிப் பிரசன்னமாயில்லாதபோது அரண்மனை சம்பாஷணைகளில் கலந்துகொள்வதில்லை யென்று இறுதியாக முடிவு செய்தனர். பிரஜா பரீஷத்

தின் நான்கு கோரிக்கைகளுக்கு தர்பார் சம்மதிக்காததே சமரசப் பேச்சு முறிந்ததற்கு முக்கிய காரணம். புதிய நிர்வாக கவுன்சிலை பகிஷ்கரிப்பது, போலீஸ், ரெவின்யூ இலாகாக்களையும், தர்பார் மண்டபத்தையும் இன்று முதல் மறியல் செய்வதென்று பிரஜா பரிஷத்தின் யுத்த சபை முடிவு செய்தது.

ஸ்ரீ திபார்பாய் கைது

இந்த முடிவின் விளைவாகத் தான் பொதுகூட்டங்கள், ஊர்வலங்கள் நடக்கக்கூடாதென்று செக்ஷன் 144-ன் கீழ் தர்பார் தடை யுத்தரவு பிறப்பித்தது.

பிரஜா பரிஷத்தின் தலைவரும் முதல் சர்வாதிகாரியுமாகிய ஸ்ரீ திபார்பாய் செக்ஷன் 108-ன் கீழ் (ஜாமீன் நடவடிக்கை) கைது செய்யப்பட்டார்.

முதலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி ஒரு சர்வாதிகாரி கைதியானவுடன் இன்னொரு சர்வாதிகாரி நியமிக்கப்பட்டார். காலை 10-மணிக்குள் 4 சர்வாதிகாரிகள் கைதியானார்கள். யுத்தசபை முன் தீர்மானித்தபடி பிரஜா பரிஷத் தொண்டர்கள் தர்பார் மண்டபத்தின் முன் மறியல் செய்ய ஆரம்பித்தனர்.

சத்தியாக்கிரகம் செய்வதற்காக 3000 ஜனங்கள் சவுக்கில் கூடி, 144-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தடை யுத்தரவை மீறி ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தைப் போலீசார் நிறுத்தி, கலையுமாறு உத்திரவிட்டார்கள். கும்பல் கலைய மறுத்துவிட்டது. ரோடில் உட்கார்ந்து சத்தியாக்கிரஹம் செய்தனர்.

போலீஸார் பல முறை தடியடிப் பிரயோகம் செய்தனர். இதனால் 50 பேர்களுக்குக் காயம். நிலைமை நெருக்கடியாகிவிட்டது.

போலீஸார் தடியடிப் பிரயோகங்கள் செய்ததை கண்டிப்பதற்காக ராஜகோட்டையில் பரிபூர்ண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நிர்வாக அதிகாரங்களை பிரித்துக் கொடுப்ப தற்காக, சமஸ்தானத்தின் நிர்வாகம் இனி 3 மெம்பர் கள் கொண்ட ஒரு கவுன்ஸிலால் நடத்தப்படு மென்று 1938 நவம்பர் மாதம் தாகூர் சாகிப் ஒரு உத்தரவு பிறப்பித்தார்.

கவுன்ஸிலின் முதல் மெம்பர் சர் பாட்ரிக் காடல். இவருடைய இலாகாக்கள்: சட்டம், நீதி, அரசியல், நிதி, போலீஸ், பிரஜாபிரதிநிதி சபை, முனிசிபாலிட்டி. ராவ் சாகிப் மணிக்கேல் வி. பட்டேல் இரண்டாவது மெம்பர். இருவடைய இலாகாக்கள்: ரெவின்யூ, கைத் தொழில், மரமத்திலாகா.

ஸ்ரீ. ஜயந்திலால் ஜோபன்புத்ரா மூன்றுவது மெம்பர். இவருடைய இலாகாக்கள்: வைத்தியம், சிறை, கல்வி, லாயங்கள், இன்னம் குறிப்பிடப்படாத இலாகாக் கள்.

எல்லா முக்கிய பிரச்னைகளும் தாகூர் சாகிப்பின் அங்கீகாரத்துடன் கவுன்ஸிலால் முடிவு செய்யப் படும்.

விதிகள், அமுலுக்குக் கொண்டுவரும் முறைகள், இன்னம் விவரமான உத்தரவுகள் இனிமேல் பிறப் பிக்கப்படும்.

ஸ்ரீ. வீரவல்லாவுக்கு தேக நிலையை யுத்தேசித்து மூன்று மதா ரஜா அளிக்கப்பட்டிருக்கிறது. ரஜா காலம் முடிந்ததும் ரிடையராவார்.

குஜராத் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சர்தார் வல்லபாய் பட்டேல், ராஜகோட்டையில் நடை பெற்ற சம்பவங்களைப்பற்றி 9-11-38ல் கீழ்கண்ட அறிக்கையை வெளியிட்டார்:

திவானின் பாசாங்கு

“திவான் சர். பாட்ரிக் காடல் ‘மதில்மேல் பூனை’ யாக யிருந்ததால் இரு வாரங்களுக்கு ராஜகோட்டையில் போராட்டம் நடைபெறுமலிருந்தது. 7ம் தேதி விடியத்

காலையிலிருந்து பொறுப்பாட்சி சார்க்காரின் உண்மை பாடங்களை ராஜகோட்டை மக்கள், திவானிடமிருந்து கற்று வருகிறார்கள். தலைவர் ஸ்ரீ. திபார்பாய் இன்று காலை சுமார் 5 மணிக்கு செக்ஷன் 108ன் கீழ் கைது செய்யப்பட்டார்."

"திவான், ஸ்ரீ. திபாருடனும் இதர தலைவர்களுடனும் சமரசப்பேச்சு நடத்துவதாக நேற்றுவரை பாசாங்கு செய்து வந்தார். ஏதோ வெளிப்பகட்டுக்குப் பேசினாரே யொழிய, மனப்பூர்வமாக எதையும் சொல்லவில்லை. அவரோ, அல்லது தாகூர் சாகிபோ அல்லது பழைய திவானின் கையாட்களும், தாகூர் சாகிப்பை ஆதரிப்பவர்களுமான இரு நிர்வாக கவுன்சில் மெம்பர்களோ ஜனங்களுக்குப் பொறுப்பாட்சியளிக்கக் கூடிய நிலைமையில் இல்லை யென்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது."

திவானின் பல்டி

"நேற்று மாலை ஸ்ரீ. திபார்பாயிக்கு வந்த திவானின் கடிதத்தில், திவான் மனோபாவத்தில் மாறுதலேற்பட்டிருப்பதென்னவென்றால், அதாவது அடக்குமுறை கொள்கைக்கு அவரும் தாளம் போடத் தயாரென்பது நன்கு தெரிகிறது. நிர்வாக கவுன்ஸில் அமைப்பு உத்தியோக தோரணையில் அறிவிக்கப்பட்டிருப்பதிலிருந்தும், எந்தெந்த இலாகா யார் யார் பொறுப்பில் இருக்கும் என்று தாகூர் சாகிப்—திவான் அபிப்ராய பேதங்கள் தீர்ந்து விட்டன. இயக்கத்தை கடுமையான அடக்குமுறையால் ஒடுக்கிவிட வேண்டுமென்று இருவரும் முடிவு செய்துள்ளனர் என்பதை புரிந்துக் கொள்ளாம்.

ஸ்ரீ. திபார்பாய் கைது செய்யப்பட்ட சமயத்திலேயே பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், மறியல்கள் நடத்தக்கூடாதென்று செக்ஷன் 144-ன் கீழ் தடை

புத்திரவு பிறப்பிக்கப்பட்டது. ஜனங்களும் தங்கு தடையின்றி சவாலை ஏற்றுக்கொண்டனர். காலை 6-மணியிலிருந்து ஜனங்கள் அஸாத் மைதானத்தில் திரள ஆரம்பித்தனர். தர்பார் மண்டபத்திற்கு அருகில் மறியலும் ஆரம்பமாயிற்று.

பிரமுகர்கள் கைது

மிருகத்தனமாக போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்து, இந்த வேலையை தொடர்ந்து நடத்தினர். நடுவில் கொஞ்ச நேரம் மாத்திரம் பிரம்புகள் பிய்ந்துபோனபோதோ, தடிகள் ஒடிந்தபோதோ, அல்லது பல மண்டைகள் பிளக்கப்பட்டபோதோ மறியல் நிறுத்தி வைக்கப்பட்டது.

100 பேர்களுக்குமேல் பலத்த காயமடைந்தார்கள். ஸ்திரீகளும் தடிகளால் தாக்கப்பட்டனர். அவர்களில் பலருக்கு காயம். காயமடைந்தவர்களில் காந்திஜியின் காரியதரிசி ஸ்ரீ. சகன்லால் ஜோஷியின் மனைவியும் ஒருவர். அவருக்கு மண்டையில் காயம். ரத்தம் பீறிட்டு வந்தது. இயக்கம் ஆரம்பமானதிலிருந்து சிறையில் தண்டனை அனுபவித்துவரும் இரண்டாவது சர்வாதிகாரி ஸ்ரீ. வாஜிபாய் சுக்லாவின் புத்திரிக்கும் தடியடியால் காயம்.

இன்று சுமார் 8 சர்வாதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் மூவர் பிரபல வக்கீல்கள், ஒருவர் பிரபல டாக்டர். ரொம்ப செல்வாக்குள்ள பாரிஸ்டர் ஸ்ரீ. சுத்காரும் கைது செய்யப்பட்ட சர்வாதிகாரிகளில் ஒருவர். பல ஸ்திரீகள் உள்பட 50 பேர்களுக்கு மேலாக கைதியாயிருக்கிறார்கள்.

மாலையில் சர். பாட்ரிக் காடல் அஸாத் மைதானத்திற்கு வந்து போலீஸை வாபஸாகுமாறு உத்தரவிட்டார்.

மூவர் பிரக்ஞை யிழந்தனர்

போலீஸார் வாபஸான பின் 10,000 ஜனங்கள் கொண்ட ஒரு ஊர்வலம் புறப்பட்டது. இரவு 8மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடந்துக்கொண்டிருக்கையில், எதிர்பாராத விதத்தில் போலீசார் ஸ்தலத்திற்கு வந்து கும்பலைத் தடிகளால் தாக்கினர். இதனால் 50 பேர்களுக்குக் காயம். மூவர் பிரக்ஞையிழந்து விட்டனர்.

இந்த கடுமையான அடக்குமுறையை, சமீபத்தில் லண்டன் 'டைம்ஸி'ல் வெளியானபடி பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாறுதலைக் காண்பிக்கிறதா, இல்லையா என்பதை இனி நடைபெறப் போகும் சம்பவங்களிலிருந்து தெரிந்துக்கொள்ள வேண்டும்.

பட்லர் கமிட்டியின் ரிப்போர்ட்டில், எந்த சமஸ்தான ஜனங்களாவது பொறுப்பாட்சி சர்க்கார் கேட்டால், அந்த கோரிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் ஆதரிக்கும். என்றிருக்கிறது. இந்த அடக்கு முறை அந்த ரிப்போர்ட்டுக்கு மாறாக யிருக்கிறதென்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது.

பொறுப்பாட்சி சர்க்கார் வேண்டுமென்று ஜனங்கள் கேட்கும் நியாயமான கோரிக்கையை ஒடுக்க இதைப்போல காட்டுமிராண்டித்தனமான மனிதத் தன்மையற்ற முறைகளைக் கையாளுவதற்காக ஒரு கிழட்டு மாஜி. ஐ. ஸி. எஸ்.காரர் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருப்பது ஆச்சர்யமா யிருக்கிறது.

ஜனங்களைப் பிரிக்க, திவான் எவ்வளவோ முயற்சிகள் செய்துப்பார்த்தும், அவர் கக்ஷிக்கு ஒரு ஆளைக்கூட கண்டு பிடிக்கமுடியவில்லை. ராஜகோட்டை மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் பரிஷத்தை ஒரு முகமாக ஆதரித்து வந்தார்கள்.

திவானின் மானங்கெட்ட கொள்கை

ராஜகோட்டை ஆண்களும், ஸ்திரீகளும் அவர்களுடைய சுதந்திரத்திற்காக மட்டுமல்லாமல், இந்திய சமஸ்தானங்களிலுள்ள 8 கோடி மக்களின் சுதந்திரத்திற்காகவும், குறிப்பாக கத்தியவார் சமஸ்தானங்களின் ஜனங்களுக்காகவும், உன்னத வீரம் வாய்ந்த யுத்தத்தில் போராடினார்கள். உறுதியுடன் உள்ள இந்த ஜனங்களின் ஆவேசத்தை எப்பேர்ப்பட்ட அடக்கு முறையாலும் ஒடுக்க முடியாது. சுதந்திரத்தை பெறுவதென்று சங்கற்பம் செய்துகொண்டுள்ள அவர்களை யார் தடை செய்ய முடியும்?

சர் பாட்ரிக் காடல்! ஜாஸ்தியாயிருந்தால் இன்னம் ஒரு மாதகாலமிருக்கலாம் பிறகு ராஜகோட்டையை விட்டு ஓட வேண்டியவர். இந்தப் பேர்வழியின் மிருகத்தனக் கொள்கையாலும், புதிய சகாப்தத்தை சிருஷ்டிக்கப்போகும் இந்த போராட்டத்தில் இவர் மானங்கெட்ட வழியில் நடந்து கொள்வதினாலும், இவரை ராஜகோட்டை மக்கள் எக்காலத்திலும் மறக்க மாட்டார்கள். இந்த திவான் ராஜகோட்டை ஜனங்களுக்கும் தாகூர் சாகிப்புக்குமிடையே மனக்கசப்பை யுண்டுபண்ணி விட்டுப்போவார்.

ராஜகோட்டை ஜனங்கள் ஆண்மைத்தனமான முறையில் நடந்து கொண்டதையும், தியாகம் செய்ததையும், கஷ்டங்களை அனுபவித்ததையும் பாராட்டுகின்றோம். அவர்கள் அஹிம்ஸா கொள்கையை அப்படியே பின் பற்றி வருவதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறோம். எப்படி ஆத்திரமூட்டப்பட்டிருக்கிறார்கள்! ஸ்திரீகள் கூட தாக்கப்பட்டனர்! அப்படியிருந்தும் கூட அவர்கள் சாத்வீகமாகவே நடந்துகொண்டுவந்தார்கள்.

நவம்பர் 9உ யன்று 11 சர்வதிகாரிகளும், 9 ஸ்திரீகளும் உள்பட சுமார் 50 பேர்களுக்கு மேலாக கைது செய்யப்பட்டார்கள் 30 ஸ்திரீகளை வெகு தூரத்திற்

கப்பால் கொண்டு போகப்பட்டு, அங்கு விடுதலை செய்யப்பட்டனர்.

'ஜன்மபூமி' (பம்பாய்), 'சந்தேஷ்', 'பிரஜா பந்து', (அமதாபாத்), 'பூலசாத்', 'குஜாராத் சமாசார்' (ஆமாதாபாத்) உள்பட 6 பிரிட்டிஷ் இந்திய குஜராத்தி பத்திரிகைகள் மீது ஒரு மாதத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த உத்தரவை மீறி யாரேனும் இதில் எதாவது ஒரு பத்திரிகையின் இதழை வைத்திருந்தால்கூட அவருக்கு ரூ. 200 அபராதம் விதிக்கப்படுமாம். பொறுப்பாட்சியைக் கோரி பிரசாரம் செய் பத்திரிகைகளை சமஸ்தான அதிகாரிகள் தடை செய்தும் விடுவார்களென்று முதல் அத்தியாயத்தில் கூறியதை வாசகர்கள் இங்கு கவனிக்க வேண்டும்.

தர்பார் மண்டபத்திற்கு முன் கூடியிருந்த ஜனங்கள் மீது மீண்டும் ஒரு முறை தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் 40 பேர்களுக்குக் காயம். அதில் 3 பேர்களுக்கு பலத்த காயம். சுமார் 150 பேர்களுக்கு சாதாரண காயம். நகரத்தின் மத்தியில் பரீஷத் ஒரு ஆஸ்பத்திரியை திறந்தது.

திவான் சர் பாட்ரிக் காடல் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில், மேற்கண்ட சம்பவங்களுக்கும், சமரசப் பேச்சு முறிந்ததற்கும் ஸ்ரீ. திபார்பாய் தான் ஜவாப்தாரியென்று கூறி, 'வெளியார்' தலையிடுவதாக புகார் செய்தார்.

கைதியான ஸ்திரீகள் எங்கே?

டாக்டர் கஜ்ஜார் 12வது சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டார். ஊர்வலத்தினர் வெய்யலில் உட்கார்ந்திருந்தார்கள். பலமுறை தடியடிப்பிரயோகங்கள் செய்யப்பட்டன. 50 ஸ்திரிகள் கைது செய்யப்பட்டு, லாரிகளில் கொண்டுபோகப்பட்டனர். நிலைமை நெருக்கடியாகிவிட்டது. எண்ணற்ற சத்யாக்கிரஹிகள் வந்த

வண்ணமாயிருந்தனர். கைது செய்யப்பட்ட 50 ஸ்திரீ கள் எங்கு கொண்டு போகப்பட்டார்களென்று அச்சம யம் தெரியவில்லை.

ராஜகோட்டை தாகூர் சாகிப் பின்கண்ட அறிக் கையை நவம்பர்மீ 10உ வெளியிட்டார்.

"ராஜகோட்டை சமஸ்தானத்தில் நடைபெறும் கிளர்ச்சியை சமாளிக்க நாங்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டோம் என்பதை எங்கள் பிரஜைகளுக் கும், பொதுஜனங்களுக்கும், தெரிவிக்க விரும்புகிறோம். நான்கு குறைகள் கூறப்பட்டன. அதை நாங்கள் கவனித்தோம். ஏகபோக உரிமைகள் ரத்து செய்யப் பட்டன; ராஜாவின் சொந்தச் செலவு நிர்ணயிக்கப் படுமென்று வாக்குறுதியளிக்கப்பட்டது; குடியானவர் கள் கொடுக்க வேண்டிய வரிகள் குறிப்பிடத்தக்க அள வுக்கு குறைக்கப்பட்டு, பட்ஜெட் தயாரிக்கப்பட்டது; நிலவரி நிர்ணயிப்பதை பரிசீலனை செய்வதற்காக சமஸ் தானத்திற்கு வெளியிலிருந்து ஒரு விசேஷ அதிகாரீ நியமிக்கப்பட்டார். எனவே, பொறுப்பாட்சி சர்க்கார் கோரிக்கைதான் பாக்கி யிருக்கிறது."

"நகர பிரமுகர்கள் அடங்கிய ஒரு கூட்டம் திவான் தலைமையில் நடைபெற்றது. அங்கு கூடி யிருந்தவர்கள் 'பொறுப்பாட்சி' என்ற வார்த்தையை சர்க்காரின் அறிக்கையில் உபயோகிக்க வேண்டிய தில்லையென்று ஒப்புக்கொண்டனர். நாங்கள் மந்திரி கள், ஜனங்களின் பிரதிநிதிகள் சொல்படி கேட்கவேண் டும், என்று அந்த பிரமுகர்கள் வற்புறுத்தினர். அப்படியே செய்யத் தயாரென்று நாங்கள் பதிலளித் தோமென்பதை இந்த சமயத்தில் குறிப்பிட விரும்புகி றோம். சில இலாகாக்களை உடனே மாற்றி விடுகிறோம். அந்த இலாக்காக்களின் மந்திரிகள் ஜனப் பிரதிநிதி சபை யின் விருப்பப்படி நடப்பார்கள் என்று கூறினோம். எல்லா விவரங்களையும் தயாரிக்க ஒரு கமிட்டியையும் நியமிக்க சம்மதித்தோம்."

இதுவரையில் சமஸ்தானத்தில் எதேச்சதிகாரம் நடைபெற்று வந்ததென்பதற்கு மேற்கண்ட அறிக்கை யேபோதும். இந்த அறிக்கையைக் கண்டு ஜனங்கள் மயங்கிவிடவில்லை. இருப்பினும் சர்தார் அங்கீகாரம் செய்தாலன்றி பிரயோஜனமில்லை யென்று அறிவித்து விட்டார்கள் ஜனங்கள். ஆகவே பட்டேல் அங்கீகாரம் அவசியம்.

"அந்த 9 பிரதிநிதிகளும் இந்த பேச்சுகளை வெளியார் ஒருவருக்கு (சர்தார் பட்டேல்) தெரிவித்து அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றபின்புதான் எந்த சமரசமும் ஏற்பட முடியுமென்றனர். இந்த சமஸ்தானத்தின் நலன்கள், எதிர்கால நிர்வாகம், இவைகள் வெளியார் சொல்படி இல்லாமல், எங்களாலும் எங்கள் ஜனங்களாலும் நிர்ணயிக்கப்பட வேண்டு மென்று சமஸ்தான அதிகாரிகள் அபிப்பிராயப்படு கிறோம் என்றார்கள்."

வீண் ஜம்பம்

இதற்குள்ளாக கிளர்ச்சிக் காரர்கள் சமஸ்தானத் தின் நிதி நிலைமையைக் குலைக்க அவர்களால் முடிந்த வற்றை யெல்லாம் செய்து விட்டனர். அவர்கள் பகிஷ்காரம் செய்ததின்மூலம் சர்க்கார் மில்லை மூடுவ தில் வெற்றி பெற்றுவிட்டனர். அவர்கள் தூண்டுத லின் பேரில் சர்க்கார் பாங்கியில் பணம் போட்டிருந்த வர்கள் பணத்தை வாபஸ் செய்து விட்டனர். ராஜ கோட்டை மார்க்கெட்டுக்கு தானியங்கள் வருவதைத் தடுத்து விட்டார்கள். இதன் மூலம் வியாபாரம் வேறு ஸ்தலங்களுக்கு திரும்பி விட்டது. இதைத் திரும்பப் பெறுவது ரொம்பவும் கஷ்டமான காரியமென்பது அதிகாரிகளுக்குத் தெரியும். இருப்பினும் வரட்டு ஜம்பம் அதிகாரிகளை விட்டு விலகவில்லை.

சமஸ்தானத்திலுள்ள ஜனங்களில் பெரும்பா லோர் விஸ்வாஸ முள்ளவர்கள் சட்டத்திற்குட்பட்டவர்

கள் என்பதைப்பற்றி எங்களுக்கு சந்தேகமே இடையாது. நாங்கள் அளித்துள்ள சீர்திருத்தத்தைக் கொண்டு அவர்கள் திருப்தியடைந்துவிடுவார்களென்ற பொய்பிரசாரத்தை ஆரம்பித்தார்கள் அதிகாரிகள்.

தலைவர்கள் பதில்

அரண்மனை மகாநாட்டுக்கு அழைக்கப்பட்ட தலைவர்களில் 6 பேர்கள் ராஜாவின் அறிக்கைக்கு பின் கண்ட பதில் விடுத்திருக்கிறார்கள்:

"திவான் வீட்டில் நடந்த கூட்டம்பற்றி ராஜாவின் அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சர் பாட்ரிக் காடலுக்கு 'பொறுப்பாட்சி சர்க்கார்' என்ற வார்த்தை விளக்கெண்ணெயாகயிருந்தது. அந்த வார்த்தை இருக்க வேண்டுமென்பது அவசியமல்ல! ஆனால் வார்த்தை எதை குறிப்பிடுகிறதோ அதுதான் தேவை! என்று அங்கு கூடியிருந்த அனைவரும் கூறினோம். அசெம்பளியிலுள்ள ஜனங்கள் பிரதிநிதிகளின் விருப்பப்படியே இலாகாக்களின் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் நடந்துக்கொள்ள வேண்டுமென்றோம். இதற்கு திவான் ஒப்புக் கொண்டு, இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு தாகூருக்கு யோசனை கூறுவதாய் வாக்களித்தார்."

"நவம்பர் 3ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் சர்க்கார் தயாரித்திருந்த ஒரு திட்டத்தை திவான் படித்தார். அதில், நிர்வாகத்தில் ஜனங்களுக்கு அதிக பங்களிக்கப்படுமென சொல்வது உண்மையென்பதற்காக முனிசிபல் நிர்வாகம் பூராவும் ஜனங்களின் நிர்வாகத்தின் கீழ்வரும் என்று இருந்தது. இது போதாது என்று பதிலளித்து, திட்டத்தை நிராகரித்தோம்."

முனிசிபாலிடியில், சமஸ்தான அதிகாரிகளின் கையாட்களேயிருப்பார்களென்று நாம் முன்னால் கூறியது இங்கு நிருபணமானதை கவனிக்கவேண்டும்.

"நவம்பர் 4உ இன்னொரு திட்டத்தை எங்களிடம் சமர்ப்பித்தார். அதில், மாற்றப்பட்ட இலாகாக்களின் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் மாத்திரம்தான் ஜனங்கள் பிரதிநிதிகளின் விருப்பப்படி நடப்பார்கள் என்றிருந்தது.

"விவரங்களைத் தீர்க்க சர்தார் வல்லபாய் பட்டேல் ஒருவரைத்தான் அழைக்க வேண்டும் என்று ஸ்ரீ திபார் பாய் கூறினார். இதற்கு திவான் மறுத்து விட்டார். நவம்பர்மீ 5உ இதைப்பற்றி சர்தார் பட்டேலுடன் டிரங்க் டெலிபோனில் பேசினோம். எங்கள் கோரிக்கைகளை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அதை எந்த முறையில் அமுலுக்குக் கொண்டு வரலாம் என்பதைக் கண்டுபிடிக்க முயற்சித்துவந்தோம்."

"கூட்டத்தில் நடந்தவைகளெல்லாம் ரகசியமாகவே யிருக்கட்டும் என்று சர் பாட்ரிக் காடல் எங்களை 3உ கேட்டுக் கொண்டார் நாங்கள் அனைவரும் கொடுத்த வாக்குறுதியை மீறாமல் 'கப்சிப்' என்று இருந்தோம். ஒரு முடிவுக்கும் வராத விவாதங்களை சர்க்கார் பிரசுரித்ததைக் கண்டு ஆச்சர்யப்படுகிறோம்." என்று தலைவர்கள் கூறினார்கள்.

50 பேர்களுக்குக் காயம்

தர்பார் மண்டபம் முன் நவம்பர்மீ 10உ காலை கடுமையான மறியல் நடந்தது. போலீஸார் மூன்று முறை தடியடிப் பிரயோகம் செய்தனர். இதனால் 50 பேர்களுக்குக் காயம்.

தடியடிப் பிரயோகங்களை கண்டிப்பதற்காக நகரில் அன்று ஹர்த்தால் அநுஷ்டிக்கப்பட்டது.

கிரிமினல் திருத்தச் சட்டத்தின் 8-வது, 9-வது பிரிவுகள் அன்று காலை அமுலுக்கு கொண்வரப்பட்டது.

ஸிவில் ஸ்டேஷன் அடிஷனல் ஜில்லா மாஜிஸ்திரேட் ஸ்ரீ. பியர்ஸன் ராஜகோட்டை சர்க்காருக்கு

எதிராக நடைபெறும் " ரகசிய வேலைகளை " தடுப்பதற்காக நவம்பர் மாதம் செக்ஷன் 144 ஐ பிறப்பித்தார். தடை யுத்தரவு 2 மாதம்வரை அமுலிலிருந்தது. ராஜகோட்டை நிர்வாகத்தை கண்டிக்க ஸிவில் ஸ்டேஷன் பிரதேசத்தில் பொதுக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்று சில நபர்கள் யோசித்து வருவதால்தான் இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாக சொல்லப்பட்டது.

அன்று மாலை ஆஸாத் சவுக்கில் நடைபெற்ற ஒரு பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில், அன்று ஆகாய விமானத்தில் ராஜகோட்டை வந்து சேர்ந்த சர்தார் வல்லபாய் பட்டேலின் புத்திரி மிஸ். மணிபென் பட்டேல் பிரசங்கம் செய்தார்.

கூட்டம் நடந்துகொண்டிருக்கையில், ராஜகோட்டை தர்பாரால் அடிஷனல் ஜில்லா மாஜிஸ்டிரேட் அதிகாரம் அளிக்கப்பட்ட ஸ்ரீ. சோபாக்சந்த்தோஷி, ஒரு போலீஸ் படையுடன் ஸ்தலத்திற்கு வந்தார். கூட்டத்தின்மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. சுமார் 50 பேர்களுக்குக் காயம். அவர்களில் 3 வயது பையன் உள்பட நால்வருக்கு பலத்த காயம்.

சர்வாதிகாரி டாக்டர் குஜ்ஜாரும் இன்னம் 30 பேர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

வழக்கம்போல தர்பார் மண்டபத்தின் முன்பு மறியல் செய்யப்பட்டது. தடியடிப் பிரயோகங்கள் செய்யப்பட்டன. 157 பேர்கள் கைதியானார்கள்.

ராஜகோட்டை சமஸ்தானத்தின் ஒழுங்கீன நிர்வாகத்தைப்பற்றி ரெஸிடெண்ட் கிப்ஸன் இந்திய சர்க்காருக்கு தெரிவிக்காமலே யிருந்ததால், அவர் கர்னல் தலே யிடம் தன்பதவியை ஒப்புவித்து விடுமாறு மத்திய சர்க்காரால் கேட்கப்பட்டிருக்கிறார் என்ற வதந்தி உலாவி வந்தது. திவான் சர். பி. காடல் தானுக

அனுப்பிய ரிபோர்ட்டிலிருந்தே உண்மை நிலைமை மத்திய சர்க்காருக்கு தெரிந்ததென்று சொல்லப் பட்டது.

மேற்கு இந்திய சமஸ்தானங்களின் ரெஸி டெண்ட் ஸ்ரீ. கிப்ஸன் 24-மணி நேர நோட்டீஸில் மாற்றப்பட்டிருக்கிறதாக கேள்விப்பட்டு, அவருடைய காரியதரிசி பிளெச்சர் ஒரு ஸ்பெஷல் ஆகாய விமானத் தில் சிம்லாவுக்குச் சென்றார்.

வைசிராய்க்குத் தந்தி

கத்தியவார் வக்கீல் சங்கம், கத்தியவார் வர்த்தக சங்கம், இன்னம் பல முக்கிய சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து வைசிராய்க்கு ஒரு நீண்ட தந்தி யனுப்பினார்கள். அதில் ராஜகோட்டையில் நிலைமை யை விளக்கப்பட்டிருந்தது. விவகாரங்களை விசாரிக்க உத்திரவிடுமாறும், சர்தார் வல்லபாய் பட்டேல், திபார் பாய், இருவருடனும் சமரசப் பேச்சை ஆரம்பித்து தகராறைத் தீர்த்துக் கொள்ளுமாறு திவானுக்கும், தர்பாருக்கும் புத்திமதி கூறுமாறும் கேட்டுக்கொண் டார்கள்.

சுமார் நூறு ஸ்திரீகள் மாஜிஸ்திரேட் ஸ்ரீ சோபாக் சந்த்தோஷி வீட்டிற்கு ஊர்வலமாகச் சென்று, ராஜீநாமாச் செய்யுமாறு அவரைக் கேட்டனர்.

ஸ்திரீகள் கூட்டம்

நவம்பர் மாதம், 12 தேதி அலாத் மைதானத்தில் நடைபெற்ற ஸ்திரீகள் கூட்டத்தில் மிஸ். மணிபென் பட்டேல், சமஸ்தானத்தில் நடைபெறும் போராட்டத் தின் முக்யத்துவத்தை விளக்கினார். குடிப் பழக்கத்தி லிருந்து ஆண்களை மீட்பது ஸ்திரீகள் கடமையாத லால், கள்ளுக் கடைகளை மறியல் செய்ய ஏராளமான ஸ்திரீ தொண்டர்கள் பதிவு செய்துக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்தினார்.

12-11-38 மாலை நடைபெற்ற பொதுக் கூட்டம், தடியடிப் பிரயோகத்தால் கலைக்கப்பட்டது. கூட்டத்தில் ஒருவர் பின் ஒருவராக பிரசங்கம் செய்ய முயற்சித்த 32 ஆண்களும், ஸ்திரிகளும் கைது செய்யப்பட்டனர்.

டாக்டர் கஜ்ஜார் தலைமையில் சென்ற தொண்டர் கோஷ்டி தர்பார் மண்டபத்தை மறியல் செய்தது. ஏராளமான ஜனங்கள் கூடிவிட்டனர். கலையுமாறு போலீஸார் சொன்னதைக் கேட்க மறுத்துவிட்டார்கள், சர்தார் வல்லபாய் பட்டேலின் புத்திரி மிஸ். மணிபென் பட்டேல் மறியலில் கலந்துகொண்டார். மாலையிலும் மறியல் நடந்தது.

தடைசெய்யப்பட்ட பத்திரிகைகளின் பிரதிகளை தொண்டர்கள் விநியோகம் செய்தனர். யாரும் கைது செய்யப்படவில்லை.

மாலையில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ததால் பலர் காயமடைந்தார்கள்.

திவான் அறிக்கை

நவம்பர் 8-தேதியிலிருந்து போலீஸார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி, பத்திரிகைகளில் வெளி வந்துள்ள செய்திகள் சம்பந்தமாக திவான் சர். காடல் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டார்:

"9-ந் தேதியன்று ஒரே ஒரு கடுமையான தடியடிப் பிரயோகம்தான் நடந்தது. அதற்குப் பின் கடுமையான தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் எழவில்லை. தடியடிப் பிரயோகத்தின்போது எந்த ஸ்திரீ மேலும் அடி விழவில்லை. குதிரைமேலிருந்த ஒரு போலீஸ்காரனிடமிருந்த லகானை நான்கு ஸ்திரீகள் பிடுங்கிவிட்டனர். பாக்கியிருந்த ஸ்திரீகள் குதிரையைச் சூழ்ந்து கொண்டதால் குதிரை கலவரப்பட்டு

3, 4 ஸ்திரீகளைக் கீழே தள்ளிவிட்டது. ஆனால் யாருக்கும் பலத்த காயமில்லை."

"போலீசார் எச்சரிக்கைச் செய்யப்பட்ட பின்பும், மறியல் செய்ததற்காக சில ஸ்திரீகளைக் கைதுசெய்ய வேண்டியதாயிற்று. அவர்கள் வெகுதூரத்திற்கப் பாலோ அல்லது தெரியாத இடத்திற்கோ கொண்டு போகப்பட்டார்களென்பது உண்மையல்ல. போலீஸ் தலைமை ஆபீசுக்குக் கொண்டுபோகப்பட்டனர். அஸ்தமனமானவுடன் சில பேர்களைத்தவிர பாக்கி பேர்கள் விடுதலை செய்யப்பட்டனர். 5 பேர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. பாக்கிப் பேர்கள் வீட்டிக்குச் செல்லலாமென்று கூறப்பட்டது. இவர்கள் தங்களை மோட்டாரில் கொண்டுபோய் வீட்டில்விடவேண்டு மென்று கேட்டனர். மோட்டார் வசதியளிக்க முடியவில்லை. போலீஸ் தலைமை ஆபீஸிலேயே இரவைக் கழிப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. அடுத்த நாள் காலையில் அந்த 5 பேர்களை தவிர பாக்கிப் பேர்கள் அவரவர்கள் வீட்டிற்குச் சென்றனர்."

"கும்பல்களின் பின்புறங்களி லிருந்து கற்கள் வீசப்பட்டிருக்கின்றன. 9 கற்கள் குதிரை மீதிருந்த 4 போலீஸ்காரர்கள்மீது விழுந்தன. இதில் ஒருவருக்கு பலத்த காயம். அவர் காதில் ஒரு கல் தாக்கியது. இப்படி ஆத்திரமூட்டப்பட்டப் போதிலும், போலீசார் எவ்விதத்திலும் திருப்பித் தாக்கவில்லை."

ஆசீர்வாதம்

பொறுப்பாட்சி இயக்கத்தில் கலந்துக் கொள்வதற்காக ஸ்ரீ பி. பனசந்த் ஷாவின் தலைமையில் ராஜகோட்டைக்குப் புறப்படும் முதல் பம்பாய் தொண்டர் படையை வழி யனுப்புவதற்காக 13-11-38-ல் ஒரு பொதுக் கூட்டம் பம்பாயில் நடைபெற்றது.

சர்தார் பட்டேல் தொண்டர் படையை ஆசீர்வதித்துப் பேசுகையில், "சமஸ்தான விவகாரங்களில்

தலையிடுவதில்லையென்று ஹரிபுரா காங்கிரஸில் நிறை வேற்றிய நிர்மானத்திற்கு முரணாக ராஜகோட்டை விஷயத்தில் காங்கிரஸ் நடந்துகொள்கிறது' என்று சில வட்டாரங்கள் முணுமுணுப்பதைப் பற்றி பிரஸ்தாபித்தார்.

"பல சமஸ்தான சர்க்கார்கள் ஏதோ தங்கள்மீது குற்றமில்லாமலிருக்கையில் தாங்கள் எதிர்க்கப்படுவதாக நினைத்துக் கொண்டு, ஹரிபுரா நிர்மானத்தை சுட்டிக்காட்டுகின்றன. சமஸ்தானங்களின் எல்லைகளுக்குள் எங்கள் உற்றார், உறவினர் அளவுக்கு மிஞ்சின அடக்குமுறைகளுக்கு உள்ளாகி இருக்கையில் நாங்கள் கப்சிப் என்று மௌனமாயிருக்கவேண்டுமா?" என்று கேட்டார்."

"இந்த தொண்டர் படை, ராஜகோட்டையில் நடந்த 5 நாள் பயங்கரத்திற்கு பம்பாய் அளிக்கும் பலியாகும். மேற்கு இந்தியா சமஸ்தானங்களின் ஏஜென்ஸி, ராஜகோட்டை தர்பாருக்கு ராணுவத்தை அனுப்பி உதவி வருகிறது. ராஜகோட்டை விவகாரத்தில் ரெஸிடெண்ட் தலையிட்டிருக்கிறார். இது, சமஸ்தானாதிபதி பொறுப்பாட்சியளிக்க சம்மதித்தால் சமஸ்தான ஜனங்களுக்கும், ராஜாவுக்கும் மத்தியில்தான் முட்டுக்கட்டையாக இருக்கப் போவதில்லை யென்று பிரிட்டிஷ் சர்க்கார் பகிரங்கமாக அறிவித்ததற்கு முரணாகயில்லையா? லார்டு விண்டர்டன் திருவாங்கூர் திவான் கூறியதை மறுத்து பார்லிமெண்டில் அளித்த வாக்குறுதி ராஜகோட்டை ஏஜென்சியின் நடத்தையால் மறுக்கப்படுகிறது."

"காங்கிரஸ், சமஸ்தானங்களுடனும் மன்னர்களுடனும் ஸ்நேகபாவத்தில்தான் இருக்கிறது; நல்லுறவை யுண்டாக்க விரும்புகிறது. பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்தே இப்பொழுது போராட்டம் நடக்கிறது."

"ராஜகோட்டை போலீஸ் அக்கிரமங்கள், அடக்கு முறைகளைப்பற்றி சர்தார் பிரஸ்தாபிக்கையில், "வரப்போகும் சமஷ்டியில் பிரிட்டிஷ் இந்தியா இந்த சமஸ்தானங்களுடன்தான் சரி சமமாக உட்காரவேண்டுமா?" என்று கேட்டார்.

சர்தார் வல்லபாய் படேல் வார்தாவுக்குச் சென்று ராஜகோட்டை சத்யாக்கிரஹம் சம்பந்தமாக முக்கிய பிரச்னைகளைப் பற்றி காந்திஜியுடன் கலந்து பேசிவிட்டு 19-தேதி காலை பம்பாய்க்குத் திரும்பினார்.

நவம்பர் 23 ராஜகோட்டை திவான் சர். பாட்ரிக் காடல் மாஜி திவான் ஸ்ரீ. வீரவல்லா இருவரும் நிலைமையைப்பற்றி பவநகர் திவான் ஸ்ரீ. அனந்த ராய் பட்டாணியுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர். இதுவரை நடந்த சம்பாஷணைக்கு பலன் கிடைத்ததாய்த் தெரியவில்லை.

பிரஜா பரிஷத் ஊழியர்கள் சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தமாக உபயோகித்த மூன்று சைக்கில்களும், ஒரு மோட்டாரும் போலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

கங்காட் கிராமத்தில் 5 தொண்டர்கள் கைது செய்யப்பட்டு, கிராமத்திற்கு அப்பால் மாடுகள் மேயுமிடத்தில் விடுவிக்கப்பட்டனர்.

கெர்தாயில், போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததால் 6 தொண்டர்கள் காயமடைந்ததாய்த் தெரிகிறது. இதில் இருவர் பையன்கள்.

தலைவர்களின் அறிக்கை

ஸ்ரீமான்கள். காளிதாஸ் பரேக். பாண்டியா, பாபட்லால், ஆனந்தா ஆகிய மூன்று வக்கீல்களும் சில கிராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தனர். சுற்றுப்பிரயாணம் பற்றி இவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையின் சாரம் :—

" கங்காட்டிலும் இதர கிராமங்களிலும் போலீஸார் தடியடிப் பிரயோகங்கள் செய்ததால் காய

மடைந்த பலரை சந்தித்தோம். பல நபர்களின் வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டோம். 'பிரஜா பரிஷத் தொண்டர்களுடன் பேசி, அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்ததற்காக என் குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர்கள் தாக்கப்பட்டாகள் என்று ஒரு கிழவி சொன்னாள்." வாக்குமூலங்களில் கையெழுத்திட்டுள்ளவர்களை காயமடைந்தவர்களை நேரில் கண்டிருக்கிறார்கள்.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளைக் கொண்டு நிர்வாகம் நடத்தும் எந்த சர்க்காரும் இந்த நடத்தைகளுக்கு ஜவாப்தாரிகளாகிய அதிகாரிகள் மீது உடனே நடவடிக்கை யெடுக்கும்.

ராஜகோட்டை சர்க்கார் பருத்தி ஆலைகளின் ஏஜெண்ட் ஸ்ரீ. தலாக்ஷி எம். தோஷி இரு தினங்களுக்கு முன் சிறையிலுள்ள பிரஜா பரிஷத் தலைவர் ஸ்ரீ. திபார்பாயையும், ஸ்ரீ. எம். ராம்ஜிபாய் தோஷியையும் சந்தித்து,திவான் சர். பாட்ரிக்காடல் ஸ்ரீ. தாம்ஜி பாய்க்கு அனுப்பியிருந்த கடிதத்தைக் கொடுத்தார்.

"பொறுப்பாட்சி சர்க்காரை ஸ்தாபிப்பதே சர்க்காரின் நோக்கம் என்பதை ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். நீங்கள் வார்தா சென்று சர்தார் வல்லபாய் பட்டேலைக் கலந்து கொண்டு வருவதற்காக உடனே உங்களை விடுதலை செய்யவும் தயராயிருக்கிறேன்" என்று கடிதத்திலிருந்தது.

சமரசத்திற்கு வர சர்தார் பட்டேல் ஒருவரால் தான் முடியுமாதலால், ராஜகோட்டைக்கு வருமாறு அவருக்கு சமஸ்தான சர்க்கார் அழைப்பு அனுப்ப வேண்டுமென்று ஸ்ரீ. தோஷி பதிலளித்தார். சர். பாட்ரிக் காடல், சர்தார் பட்டேலை அழைக்க மறுத்ததால் சமரச முயற்சி வெற்றி பெறவில்லை.

மேற்கு இந்திய சமஸ்தானங்கள் ரெஸிடெண்ட் ஸ்ரீ. கிப்ஸன், நவநகர் ஜாம்சாகிப், பவநகர் ராஜா இரு

வருடனும் நேற்று டில்லிக்குப் பிரயாணமானார்கள். இம் மூவரும் இந்திய அரசியல் இலாகாவுடன் மிகமுக்கிய அரசியல் பிரச்னைகளைப் பற்றி விவாதித்தார்கள்.

நவம்பர் 23 ந் தேதி அன்று தர்பார் மண்டபத்தை மறியல் செய்த 40 தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள். வக்கீல் ஸ்ரீ. கேசவலால் போதானி, ஜஸ்வந்தராயா, ராஜாபலிகானி மூவரும் கைதியானார்கள்.

மறியல்செய்தபோதுகைதியான 46 தொண்டர்களும் இங்கிருந்து சில மைல் தூரத்திற்கப்பால் கொண்டு போகப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டார்கள்.

சிறையில் உண்ணாவிரதம்

மாருதி கிராமத்தில் லாக்கப்பிலுள்ள 9 தொண்டர்கள் உண்ணா விரதம் ஆரம்பித்திருப்பதாய்த் தெரிந்தது. நேற்று மாருதியில் கைது செய்யப்பட்ட மூன்று தொண்டர்களுக்கு அன்ன ஆகாரம் கொடுக்கப்படாமலிருப்பதைக் கண்டிக்கவே இந்த 9 தொண்டர்களும் உண்ணாவிரதம் ஆரம்பித்ததாகச் சொல்லப்பட்டது.

பம்பாயிலிருந்து வந்துள்ள தொண்டர்களும், உள்ளூர் தொண்டர்களும் சேர்ந்து தர்பார் மண்டபத்தை மறியல் செய்தனர். மறியலைத் தடுக்க போலீசார் எதுவும் செய்யாததால் யாதொரு சம்பவமும் நடைபெறவில்லை. அசாத் சவுக்கில் நடந்த கூட்டத்திலும் போலீசார் தலையிடாததால் அதுவும் அமைதியாகவே நடைபெற்றது.

தடையுத்தரவை டவுனில் பலர்மீறி வந்தார்கள். தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் விற்கப்பட்ட ரயில்வே எல்லைக்குள்ளும் செக்ஷன் 144 பிரயோகிக்கப்பட் [illegible]; ஸ்டேஷனிலுள்ள போலீசார் தடை செய் [illegible]ட்ட. பத்திரிகைகள் டவுனுக்குள் நுழையாமல் பார்த்துக்கொண்டு வந்தார்கள்.

ஜாம்நகர் சத்யாக்ரஹிகள் கோஷ்டியொன்று மாலை இங்கு வந்து சேர்ந்தது.

உதவி போலீஸ் சூப்பிரண்டெண்டு குமார் மஹேந்திர சிங்ஜியும் ஒரு இன்ஸ்பெக்டரும் தங்கள் ராஜிநாமாக்களை சமர்ப்பித்து விட்டார்கள்.

நேற்று கைது செய்யப்பட்ட ஸ்ரீமான்கள் ராம்ஜி தோஷி, வீர்சந்த், பனசந்த் இன்னம் 7 தொண்டர்களுக்கும் தலா மூன்று மாத வெறுங் காவல் தண்டனையும், ரூபா 100 அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறினால் இன்னம் ஒரு மாத சிறை வாசம். இன்னம் 12 பம்பாய் தொண்டர்கள் அஸ்தமனமான பின் காளிப்பட் கிராமத்தில் விடுவிக்கப்பட்டனர்.

மாகுதி கிராமத்தில் போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ததில் கத்தியவார் ஊழியர் ஸ்ரீ. சம்பு சங்கர் திரிவேதியும் இன்னம் பலரும் காயமடைந்ததாய் சொல்லப்பட்டது

ஸ்ரீ திரிவேதி கூறுவதாவது:—

“அந்த கிராமத்தில் 3 தொண்டர்களும், 3 கிராமவாசிகளும் கைது செய்யப்பட்டதாக செய்தி கிடைத்தவுடன் நான் என் கோஷ்டியுடன் அங்கு சென்றேன். ஆனால் கிராமத்திற்குள் எங்களை அநுமதிக்க முடியாதென்று போலீசார் கூறினர். எங்களை ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் வாரண்டு இல்லாமல் லாக்காப்பில் வைத்தனர். லாக்காப்பில் தண்ணீர்கூட மறுக்கப்பட்டது. எங்களுடன் 12 வயதுப் பையன் கூட இருந்தான். பின்னர் நாங்கள் விடுவிக்கப்பட்டோம். மீண்டும் கிராமத்தில் நுழைவதென்று பிடிவாதமாயிருந்ததால் எங்களைப் போலீசார் தடிகளால் தாக்கினர். எனக்கு 12 தடியடிகளுக்கு குறைவின்றி கிடைத்தது.”

சத்யாக்ரஹம் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட 15 பம்பாய் தொண்டர்களில் 12 பேர்கள் நேற்றிரவு ராஜகோட்டைக் கப்பால் 7 மைல் தூரத்தில் விடுவிக்கப்

பட்டனர். இனி ராஜகோட்டையில் நுழையக் கூடாது என்ற நோட்டீஸ்கள் அவர்களுக்கு சாதரா செய்யப்பட்டது. 'நாங்கள் ராஜகோட்டைக்குத் திருப புவதென்று முடிவு செய்து விட்டோம்.' என்று தொண்டர்கள் பதிலளித்தார்கள்.

மணிலால் சேத், இரண்டாவது பம்பாய் படைக்குத் தலைமை வகித்த இருவர் ஆகிய மூவருக்கும் தலா 3 மாத சிறை தண்டனையும் ரூபா 300 அபராதமும் விதிக்கப்பட்டது, அபராதம் செலுத்தத் தவறினால் இன்னம் ஒரு மாத சிறைவாசம்.

பிரசாரம் செய்ய கிராமங்களுக்குச் சென்றிருந்த மிஸ். மணிபென் பட்டேல் உடனே டவுனுக்கு திரும்பினார்.

நவம்பர் 29, ராஜகோட்டை நெருக்கடியைத் தீர்க்க வழி கண்டு பிடிப்பதற்காக ராஜகோட்டை திவான் சர். பாட்ரிக் காடலும், சர்தார் வல்லபாய் பட்டேலும் இந்த வாரத்தில் பம்பாயில் கூடுவார்கள் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" எழுதியது.

மன்னர்கள், மந்திரிகள் மகாநாட்டில் ராஜகோட்டையின் சார்பாக கலந்துகொள்ள சர். காடல் பம்பாயிக்குப் போனார்.

மன்னர்கள், மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்ளும் முக்கிய நோக்கத்துடனே தான் சர். காடெல் பம்பாய் போயிருக்கிறரென்றும், ராஜகோட்டைக்குத் திரும்பு முன் இந்த விஜயத்தை பயன்படுத்தி சர்தார் பட்டேலைக் காணுவாரென அரசியல் வாதிகள் திடமாகக் கூறுகின்றனரென்றும் 'டைம்ஸ்' நிருபர் அறிவித்தார்.

இதைப் போல சந்திப்பு, எதிரும் புதிருமாய் நின்று போரிட்டவர்கள் ஒரே இடத்தில் கூடி சம்பாஷிக்கும் சந்தர்ப்பத்தை யளிக்கிறது. ஏனெனில், சர்தார் வல்லபாய் பட்டேல், சமஸ்தான நிர்வாகத்தை எதிர்த்துப்

பிரஜாபரீஷத் நடத்தி வரும் போராட்டத்திற்கு தளபதியாக யிருந்து ஒவ்வொரு நுணுக்கமான உத்திரவும் பிறப்பித்து வருகிறார் என்பது உலகமறிந்த விஷயம்.



சர்தார் வல்லபாய் பட்டேல்.

இதோடு, பிரஜா பரீஷத் அக்கிராசனரும், தலைவர்களும், சர்தார் பட்டேலின் அங்கிகாரம் பெற்ற ஒப்பந்தமே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை முன் கூட்டிய நிபந்தனையாக கருதிவிட்டார்கள்.

ராஜகோட்டை சர்க்காரின் எதிர் சக்ஷித் தலைவர் என்று அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட தலை

வரை, சர் பாட்ரிக் காடல் சந்திக்கப் போவதால், நேரில் ஒருவரை யொருவர் அறிந்து கொள்வது உபயோகமா யிருக்கும் என்ற அளவுக்கு சமரசப் பேச்சுகள் வந்திருக் கின்றன என்பது தெளிவாயிற்று.

சர்தார் பட்டேலின் சமாச நிபந்தனைகள், காந் திஜியே தயாரித்த திட்டத்தை ஆதாரமாகக் கொண் டவை என்று அதே நிருபர் கூறினர். இந்த திட்டத் தில் 'பொறுப்பாட்சி சர்க்கார்' தான் லட்சியம் என்ற வார்த்தையில்லை யென்றும், அதற்குப் பதிலாக காந்திஜி யின் சொந்த பேர்போன 'அதன் சாரம்' என்ற வார்த் தைகள் இருப்பதாயும் தெரிகிறது.

இதே சர். காடெல் சில தினங்களுக்கு முன் "வெளியார் சர்தார் பட்டேல் தலையிடுவதை சகிக்க மாட்டேன்" என்று வீராப்புப் பேசியதும், "கடல் கடந்துவந்த சர். காடல் வெளியாளா, நான் வெளி யாளா? நான் இல்லாமல் சமரசம் நடக்குமா?" என்று சர்தார் பட்டேல் சுடச் சுட பதில் கொடுத்து, சவால் விடுத்ததும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

மாணவர் ஸ்ட்ரைக்

நவம்பர் 30, அரசியல் கட்டுரைகள் அடங்கிய ஒரு வாரப் பத்திரிகையை லைப்ரரியில் வைத்ததற்காக ஏஜென்ஸி ஹைஸ்கூலில் இரு மாணவர்கள் தலைமை ஆசிரியரால் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர். இதை ஆக்ஷே பித்து இந்த பள்ளிக்கூட மாணவர்கள் அனைவரும் ஸ்ட்ரைக் செய்தனர். அந்த பத்திரிகையிலிருந்த சில கட்டுரைகளை அரசியல் காரணங்களுக்காக சில ஆசிரி யர்கள் ஆக்ஷேபித்ததற்காக தலைமை ஆசிரியர் அதை லைப்ரரியிலிருந்து அப்புறப்படுத்தி விட்டார். ஆனால் எப்படியோ அந்த பத்திரிகையின் பிரதியொன்று அடுத்த நாள் காலையில் லைப்ரரி மேஜையின் மேல் இருந் தது. இதில் சம்பந்தப்பட்டவர்களென கருதப்பட்ட

இரு மாணவர்களை தலைமை ஆசிரியர் டிஸ்மிஸ் செய்து விட்டார்.

சென்ற 6 தினங்களாக மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்து வருகிறார்கள். புதிய பள்ளிக்கூடம் ஆரம்பிக்க முயற்சி செய்யப்படுகிறது. இதற்காக பொது ஜனங்களிடமிருந்து ரூ. 3000 வசூலாயிற்று.

படேல் அறிக்கை

ராஜகோட்டை போராட்டத்தை ராஜகோட்டை ஜனங்களே நடத்துமாறு விட்டுவிடும்படி, சர்தார் வல்லபாய் பட்டேல் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளவர்களையும், இதர சமஸ்தான வாசிகளையும் கேட்டுக் கொண்டார்.

"ராஜகோட்டை பொறுப்பாட்சி போரில் சேர வேண்டுமென்று பல ஊர்களிலிருந்து ஏராளமான நபர்கள் அனுமதி கேட்டு வருகிறார்கள். அவர்களில் சிலர் அனுமதியின்றி கூட நேராக ராஜகோட்டைக்குச் சென்று விட்டனர். பவநகர் காலேஜ் மாணவர்கள் சிலர் படிப்பைவிட்டு ராஜகோட்டை போராட்டத்தில் இறங்கி விட்டது என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ராஜகோட்டை விஷயத்தில் தியாகம் செய்ய வேண்டாமென பவநகர் மாணவர்களையும் இதர ஊர்களிலுள்ள மாணவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். இது ராஜகோட்டை ஜனங்களின் இயக்கமாகும். ஆச்சரியப்படத் தக்க விதத்தில் அவர்கள் ஒன்றுபட்டு, தியாகம் செய்து சாத்விகமாயிருந்து, அநேகமாக யுத்தத்தில் வெற்றி பெற்று விட்டார்கள். ராஜகோட்டை ஜனங்கள் மாத்திரம் இதில் கலந்து கொண்டதால் தான் போராட்டம் வெற்றி யடைந்திருக்கிறது. வெளியிலிருந்து வருகிறவர்கள் ராஜகோட்டை ஜனங்களை தர்ம சங்கடமான நிலைமையில் வைக்கக்கூடும். பம்பாயிலும், ஆமதாபாத்திலும் உள்ள ராஜகோட்டை கத்தியவார் வாசிகள் அடங்கிய சில தொண்டர் படைகள் மாத்திரம், போராட்டத்

தில் அனுதாபம் காண்பிப்பதற்காக ராஜகோட்டைக்கு அனுமதிக்கப்பட்டன."

ராஜகோட்டை திவான் சர் பாட்ரிக் காடல் ராஜகோட்டை தர்பாருக்கும் பிரஜா பரிக்ஷத்திற்குமுள்ள தகராறை சமரசமாகத் தீர்த்துக்கொள்வதற்காக காலை குஜராத் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சர்தார் வல்லபாய் பட்டேலை பேட்டி கண்டு, ராஜகோட்டை நிலைமையைப் பற்றி விவாதித்தார்.

இந்த சம்பாஷணையின் விளைவாக, ராஜகோட்டை தர்பாருக்கும், பிரஜா பரிஷத்துக்கும் இப்பொழுதுள்ள தகராறு முடிந்து விடும்போலிருந்தது. காடல் பட்டேல் பேட்டி காலை 9-30 முதல் மாலை 2-30 வரை 5 மணி நேரம் நடைபெற்றது.

தர்பார் மண்டபம் மறியல் செய்யப்பட்டபோது யாதொரு சம்பவமும் நடைபெறவில்லை. யாரும் கைது செய்யப்படவில்லை. ஸ்ரீமதி, மணிபென் பட்டேலும் மற்றும் சிலரும் பிரசங்கம் செய்த பொதுக் கூட்டத்திலும் யாரும் கைதியாகவில்லை. கூட்டம் முடியும் தருவாயில்தான் போலீஸார் ஸ்தலத்திற்கு வந்தனர்.

பிரஜா பரிஷத், தர்பார் மண்டபத்திலுள்ள கோர்ட்டுகளுக்குச் செல்லும் பொது ஜனங்களுக்கு 'அனுமதிச் சீட்டுகள்' கொடுக்க ஏற்பாடு செய்து வந்தது.

பல டிவிஷன்களில் வசிக்கும் வியாபாரிகள் இன்று கூடி, காலிகளின் அட்டூழியங்களும், திருட்டும் நடைபெறுவதை தடுப்பதற்காக இரவில் கோஷ்டி கோஷ்டிகளாக பாராக்காரர்களை நிறுத்த ஏற்பாடு செய்தனர்.

தடை செய்யப்பட்ட பத்திரிகைகளை பகிரங்கமாக ஏலம் மூலம் விற்கப்பட்டன.

மகாத்மாவின் உபதேசம்

டிசம்பர் 3, 'ஹரிஜன்' பத்திரிகையில், மகாத்மா காந்தி, பின் வருமாறு எழுதி யிருந்தார்.

(அநேகமாக ஒரே சமயத்தில், பல சமஸ்தானங்களிலும் சேர்ந்தாற்போல் விழிப்பேற்பட்டிருப்பது, தேசிய விடுதலை போராட்டத்தில் முக்கியமான ஒரு அம்சம். இந்த விழிப்பு ஒரு தனிப்பட்ட நபர், அல்லது சிலர், அல்லது ஸ்தாபனத்தின் தூண்டுதலா லேற்பட்டது என்று நினைப்பது தவறாகும். ஒருக்கால் ஹரிபுரம் காங்கிரஸ் தீர்மானம் சமஸ்தான ஜனங்களுக்கு ஒரு ரோஷத்தை உண்டு பண்ணி யிருக்கலாம். தங்களுடைய வேலைகளின் மூலம் தான், தங்களுக்கு விமோசனம் என்பதை அந்தத் தீர்மானத்தின் மூலம் அவர்கள் உணர்ந்திருக்கலாம். ஆனால், எல்லாவற்றையும் விட மேலாக, காலச் சக்கரத்தின் வேகம் தான் இந்த விழிப்பை உண்டு பண்ணியிருக்கிறது. சமஸ்தானாதிபதிகளும், அவர்களுக்கு ஆலோசனை கூறுபவர்களும், இதை உணர்ந்து ஜனங்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வார்களென்று நம்புவோமாக.

இரண்டு வழிகள்

ஒன்று சமஸ்தானங்கள் அடியோடி மறைந்துவிட வேண்டும்; அல்லது சமஸ்தானாதிபதிகள் நிர்வாகத்தில் ஜனங்களுக்கும் பொறுப்பு கொடுத்து, தாங்கள் டிரஸ்டிகள்போல் இருந்துகொண்டு, தாங்கள் செய்யும் வேலைக்குத் தகுந்த பணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சமஸ்தானாதிபதிகள் தங்கள் பிரஜைகளுக்குப் பொறுப்பாட்சிக் கொடுப்பது சம்பந்தமாக லார்ட் வின்டர்டன் சமீபத்தில் ஒரு கொள்கையைத் தெளிவாக்கினார்.

(பிப்ரவரி 22வ பார்லிமெண்டில் காப்டன் ஹீல்சர்ஸ் பின்வருமாறு ஒரு கேள்வி கேட்டார்.

"ஒரு இந்திய சமஸ்தானம் தன் பிரஜைகளுக்குப் பொறுப்பாட்சி யளிக்க வேண்டுமானால், மன்னர் சர்க்

காரின் சம்மதத்தைப் பெற வேண்டுமென்று, திரு வாங்கூர் திவான் பகிரங்கமாகப் பேசியிருப்பது இந்திய மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? இதுபற்றி மன்னர் சர்க்காரின் கொள்கை என்ன ?

லார்ட் விண்டர்டன்:—அந்தச் செய்தியை நான் பார்த்தேன். பூர்ண அதிகாரங்களுள்ள சமஸ்தானங்களின் உள்நாட்டு நிர்வாகங்களில் சாதாரண சந்தர்ப்பங்களில் மன்னர் சர்க்கார் தலையிடுவது வழக்கமில்லை. சமஸ்தானாதிபதிகள் அரசியல் சீர்திருத்தங்கள் செய்ய விரும்பினால், மன்னர் சர்க்கார் நிச்சயம் அதற்கு குறுக்கே நிற்கமாட்டார்களென்று உறுதி கூறுகிறேன். சீர்திருத்த யோசனைகளை சமஸ்தானாதிபதிகள் அங்கீகரிக்கு முன்னர், மன்னர் சர்க்காரின் சம்மதம் கேட்க வேண்டியதில்லை. எனக்குத் தெரிந்த வரையில் இது வரை இம்மாதிரி விஷயங்களில் சம்மதம் கேட்கப் பட்டதுமில்லை. சாதாரண சந்தர்ப்பங்களில் ஆலோசனை கேட்கப்பட்டால், ஆலோசனை கூறுவதோடு மன்னர் சர்க்கார் நிறுத்திக்கொள்ளும்)

பிரிட்டனுக்கு எச்சரிக்கை

சில சமஸ்தானாதிபதிகளுடைய வேண்டுகோளின் மீதோ, அவர்களுடைய திவான்களின் வேண்டுகோள் மீதோ, பிரிட்டிஷ் சர்க்கார் இந்த கொள்கையை மாற்றிக்கொள்ளப்போகிறார்களென்ற வதந்தி உண்மையல்லவென்றே நம்புகிறேன். அப்படி யாராவது கேட்டிருந்தால், அவர்கள் தங்களுக்கே தீங்கிழைத்துக் கொண்டவர்களாகிறார்கள்.

இந்த தகாத வேண்டுகோளுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கினால், அதன் மூலம் ஒரு நெருக்கடியை உண்டு பண்ணியவர்க ளாவார். அந்த நெருக்கடி எவ்வளவு பெரியதாயிருக்கும் என்று ஜோஸ்யம்

சொல்லுவது கஷ்டம். பிரிட்டிஷ் சர்க்கார் இத்தகைய தவறைச் செய்வார்களென்று நான் நம்பத் தயாராயில்லை. அன்று லார்ட் வின்டர்டன் சொன்னது, ஏற்கனவே இருந்து வரும் வழக்கத்தை ஊர்ஜிதம் செய்தது தான். சமஸ்தானங்கள், தங்கள் பிரஜைகளுக்கு எவ்வளவு விரிவான அதிகாரங்கள் கொடுத்தாலும் இது வரையில் பிரிட்டிஷ் சர்க்கார் அதில் தலையிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

பிரிட்டனின் கடமை

நான் இன்னும் ஒரு படி மேலேகூடப் போகிறேன். ஆதிபத்திய சர்க்கார் என்ற ஹோதாவில், பிரிட்டிஷ் சர்க்கார் சமஸ்தானாதிபதிகளுக்கு வெளியிலிருந்தோ உள்ளேயே இருந்தோ, ஆபத்து வராமல் காப்பாற்ற கடமைப் பட்டிருப்பது போல், சமஸ்தானாதிபதிகள் நியாயமான ஆட்சி நடத்துகிறார்களா வென்று பார்க்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, எந்த சமஸ்தானத்திற்காவது போலீஸ் உதவியோ, ராணுவ உதவியோ கொடுத்தால், அதற்கு நியாயமான அவசர நிலைமை இருக்கிறதா வென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ராணுவமும போலீஸும் அடக்கத்துடன் உபயோகிக்கப்படுகிறதாவென்றும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த துருப்புகளின் நிழலின் கீழ், தென்கணலில் பேய்த்தனமானக் கொடுமைகள் இழைக்கப்படுவதாக எனக்குச் செய்திகள் வந்திருக்கின்றன.

மந்திரிகளின் கடமை

தங்கள் மாகாணங்களில் உள்ள, சமஸ்தானப் பிரஜைகள் விஷயத்தில், (பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின்) மந்திரிகளுக்கும் தர்ம நியாயப்படி ஒரு பொறுப்பு இருக்கிறது. அரசியலமைப்பு சட்டத்தின்

படி மந்திரிகளுக்கு அவர்கள் மீது ஒன்றும் அதிகாரம் கிடையாது. கவர்னர், வைஸ்ராயின் ஏஜெண்ட்; வைஸ்ராய், மன்னர் சர்க்காரின் பிரதிநிதி; ஆனால், சமஸ்தானங்களில் நடப்பவைகளைப் பற்றி மந்திரிகளுக்கு நிச்சயம் பொறுப்பிருக்கிறது.

சமஸ்தானங்களும், பிரஜைகளும், திருப்தியாக வாழ்ந்துக் கொண்டிருக்கும் வரையில் மந்திரிகளுக்கு கவலையில்லை. ஆனால் சமஸ்தானங்களில் கடுமையான ஒரு தொத்துவியாதி பரவுவதாக வைத்துக் கொள்வோம். இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அடுத்த மாகாணத்திற்கும் அது பரவக்கூடும். தென்கணலில் இப்போதிருக்கும் நிலைமையில் மந்திரிகளுக்கு ஒன்றும் பொறுப்பில்லையா?

உதவி மறுக்க முடியுமா?

கஷ்டப்படுத்தப்படும் ஜனங்கள் பிரிட்டிஷ் ஒரிஸ்ஸாவில் தஞ்சம் புகுவதாக அறிகிறேன். மந்திரிகள் அவர்களுக்கு இடமில்லையென்று சொல்லமுடியுமா? அவர்களுக்கேற்படும் கஷ்டங்கள் மாகாணத்தையும் தான் பாதிக்கும். உள்நாட்டு சமாதானத்தை முன்னிட்டு மந்திரிகளுக்கு இதில் ஒரு பொறுப்பு இருக்கிறதென்றே நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

தென்கணலில் ஜனங்களை புழுதியைப்போல் மிதித்துத் தள்ளப்படுவதாகச் செய்திகள் வருகின்றன. பிரிட்டிஷ் சர்க்காரின் யதேச்சாதிகார சிருஷ்டிகளான சமஸ்தானங்களில் ஜனங்கள் இப்படிக் கஷ்டப்படுவதை மந்திரிகள் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

ஆலோசனை கூறுங்கள்

தங்கள் எல்லைக்குட்பட்ட நீதியற்ற ஆக்ஷியை மாகாண மந்திரிகள் கவனித்துத் தானாக வேண்டுமென்று நான் கருதுகிறேன். இது சம்பந்தமாக என்ன

செய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஆலோசனை கூறியாகவேண்டுமென்றும் கருதுகிறேன்.

பிரிட்டிஷ் சர்க்கார், மாகாண மந்திரிகளுடன் சிநேக உறவுகள் வைத்துக்கொள்ள விரும்பினால், இதற்கு, செவி சாய்த்துத் தானாகவேண்டும்.

மற்றொரு விஷயம்

சமஸ்தானங்கள், காங்கிரஸ் என்று சொன்னாலே முகத்தைத் திருப்பிக் கொள்ளுகின்றன.

காங்கிரஸ்காரர்கள் வெளியாட்கள் என்று கருதுகிறார்கள். சட்டம் அப்படி இருக்கலாம். ஆனால், மனிதனால் இயற்றப்பட்ட சட்டம், இயற்கை சட்டங்களுக்கு விரோதமாயிருந்தால், மனிதன் இயற்றிய சட்டம் அதன் முன் என்ன செய்ய முடியும்?

தங்கள் நலன்களைப் பற்றிய எல்லா விஷயங்களுக்கும் ஜனங்கள் காங்கிரஸை எதிர் பார்க்கிறார்கள். அவர்களில் பலர் காங்கிரஸில் மெம்பர்களா யிருக்கிறார்கள். ஸ்ரீ. ஜம்னுலால்பஜாஜ் போன்ற சிலர் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் உயர்ந்த பதவிகள் வகிக்கிறார்கள். காங்கிரசுக்கு 'பிரிட்டிஷ் இந்திய' மெம்பர், சமஸ்தான மெம்பர் என்று வித்தியாசம் கிடையாது. காங்கிரஸோ, காங்கிரஸ்காரர்களோ, சிநேக பாவத்தில் உதவி செய்ய முன் வரும்போது, அதைப் புறக்கணிப்பது சமஸ்தானங்களுக்கு நல்லதல்ல. சமஸ்தான மக்கள் பல விஷயங்களில் காங்கிரஸ் ஆலோசனைப்படி நடக்கிறார்களென்பதை அவர்கள் உணர வேண்டும்.

கொள்கை மாறும்?

சமஸ்தான விவகாரங்களில் தலை யிடுவதில்லை யென்ற காங்கிரஸ் கொள்கைக்கு இதுவரையில் நான் தான் ஜவாப்தாரி என்பதை அவர்கள் அறிவார்கள்.

ஆனல், காங்கிரஸின் செல்வாக்கு வளர்ந்து கொண்டே வந்தால் அந்த கொள்கைக்கு நான் ஆதரவளிப்பது சாத்தியமில்லே.

நான் தலையிட்டால் பலனேற்படும் என்று காங்கிரஸ் கருதினுல், சமயம் வரும்போது காங்கிரஸ் அப்படிச் செய்துதான் தீரும்.

ஜனங்களின் நன்மை தான் தங்கள் நன்மையும் என்பதை சமஸ்தானதிபதிகள் நம்பினுல் அவர்கள் நன்றியுடன் காங்கிரஸ் ஆலோசனையையும், உதவியையும் நாடுவார்கள்.

நேசப்பான்மையான ஒப்பந்தத்தின் மூலமாகவே, பிரிட்டிஷ் சர்க்காருக்கு பதிலாக வெகு சீக்கிரத்தில் ஆட்சி செலுத்தப் போகிற ஒரு ஸ்தாபனத்துடன் (அதாவது காங்கிரஸுடன்) சிநேக உறவுகளை வளர்த்துக் கொள்வது நிச்சயம் அவர்களுக்கு நன்மை யளிக்கும். சுவற்றில் எழுதப்பட்டு பிரகாசிக்கும் அபாய எச்சரிக்கையை அவர்கள் கவனிக்க மாட்டார்களா ?)

ராஜகோட்டை பிரஜா பரீஷத் சட்ட விரோத ஸ்தாபனமென்று அறிவித்து, திவான் காடல் பிறப்பித்த உத்தரவு பற்றி சர்தார் வல்லபாய் பட்டேல் பின் கண்ட அறிக்கை டிசம்பர் 3 தேதி வெளியிட்டார்.

" சர் பாட்ரிக் காடல் என்னை பம்பாயில் பேட்டி கண்ட பிறகு இதைப் போல உத்தரவை பிறப்பிக்க யாதொன்றும் நடந்துவிடவில்லே. நாங்கள் சந்தித்த பின் பிரஜா பரீஷத் புதிய கொள்கையையோ, புதிய திட்டத்தையோ பின்பற்றப் போவதாக தெரிவிக்கவில்லே."

" உண்மை யென்னவெனில், சர். பாட்ரிக் காடல் திவானுக நியமிக்கப்பட்டதைக் கண்டு ஜனங்கள் ஆச்சர்யப்பட்டனர் ; திடுக்கிட்டுப் போயினர். அந்த நியமனம் சட்ட ரீதியா, சட்ட விரோதமா என்று தெரியவில்லே. ஆனல் ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம்

கேனக்குச் சந்தேகமே கிடையாது. சர். பாட்ரிக், தாகூர் சாகிப்பின் விருப்பத்திற்கு மாறுக திவாஞக இருந்து வருவது சட்ட விரோதமானது. எனவே பரீக்ஷத்தைப் பற்றி அவர் வெளியிட்டிருக்கும் உத்திரவும் சட்ட விரோதமானகையால் அதற்கு அர்த்தமே கிடையாது. ராஜகோட்டை சமஸ்தான மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும் ஸ்தாபனமாயுள்ள ராஜகோட்டை பிரஜா மண்டல் இந்த உத்தரவை அலட்சியம் செய்ய வேண்டியதைத் தவிர, வேறொன்றுமில்லை."

"இந்த உத்தரவு இந்திய சர்க்காரின் ஆதரவு பெற்ற, இன்னம் கொடூரமான புதிய அடக்கு முறைக் கொள்கையின் ஆரம்பம் என்ருலும், அதைப் பற்றி யாரும் ஆச்சர்யப் படவில்லை. ஆனல் எப்பேர்ப் பட்ட அடக்கு முறையும், பிரச்னையைத் தீர்த்து விடாது. சமஸ்தானத்தின் மீது விஸ்வாசத்தை உற்பத்தி செய்து விட முடியாது. ஜனங்களின் நியாயமான கோரிக்கையான பொறுப்பாட்சி சர்க்கார் அளிக்கப்பட்டால் தான் அவர்களை திருப்தி செய்ய முடியும். ராஜகோட்டை மக்கள் மிகக் கொடூரமான அடக்கு முறைகளிலும் மூழ்கி வரத்தயார். இறுதியில் வெற்றியடைந்தே தீருவார்கள்."

ஜனங்களின் கோரிக்கை ஏகமனதாகையால், அதை மறுக்கவோ, அல்லது அந்த கோரிக்கையை நசுக்க இப்பொழுதுள்ள கொள்கையை அனுஷ்டிக்கவோ சமஸ்தான சர்க்காருக்காவது அல்லது பிரிட்டிஷ் சர்க்காருக்காவது சட்ட பூர்வமான நியாயமோ, தர்மரீதியான நியாயமோ கிடையாது.

டிசம்பர் 5, ஒரு பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. சமஸ்தான அட்டூழியங்கள் பற்றி காந்திஜி சென்ற சனிக்கிழமை வெளியான 'ஹரிஜனி'ல் எழுதியிருந்த கட்டுரையை டாக்டர் கஜ்ஜார் கூட்டத்தில் படித்தார். அனைத்தையும் தியாகம் செய்ய ஜனங்

கள் தயாராயிருக்க வேண்டுமென டாக்டர் கேட்டுக் கொண்டார். மிஸ். மணி பென் பட்டேல் கிராமங் களுக்கு விஜயம் செய்தார். இதுவரை மொத் தம் 1385 சத்யாக்ரஹிகள் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். ராஜகோட்டை திவான் 'மாறு வேஷத்தில்' வரும் பத்திரிகைகள் மீதுத் தடை விதித்திருக்கிறார். ஏற்கெனவே தடை செய்யப்பட்ட பத்திரிகைகள் வேறு பெயர்களில் சமஸ்தான எல்லைக்குள் நுழைவதாக கரு தப்படுவதால்தான் இப்புதிய தடை யுத்தரவு பிறப்பிக் கப்பட்டிருக்கிறதாம்.

டிசம்பர் 6-ம் தேதி ஸ்ரீ. கஜ்ஜார், இரு ஸ்திரீகள், மற்றும் 63 பேர்கள் அன்று தர்பார் மண்ட பத்தின்முன் மறியல் செய்ததற்காக கைது செய்யப் பட்டனர். தொழில்களெல்லாம் தற்காலீகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. பள்ளிசகூடங்கள் அனைத் தும் மூடி யிருந்தன. தர்பார் மண்டபம் முன் ஏராளமான ஜனங்கள் கூடினார்கள். ஜனங்களுக்கு ஆத்திரம் பொங்கியது. ஸ்ரீமதி. மணிபென் 5 தேதி கோர்தி, ரபாலா, மேகர்வாத் கிராமங்களுக்கு விஜயம் செய்து, பிரம்மாண்டமான பொதுக் கூட்டங்களில் பிர சங்கம் செய்தார். ஒவ்வொரு கிராமத்திலும் அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

நேற்று தர்பார் மண்டபம் முன் மறியல் செய்யப் பட்டவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். நகரில் இரவில் பாரா கொடுக்க "சௌக்கிதால்" என்ற ஒரு சுயேச்சை ஸ்தாபனத்தை பொது ஜனங்கள் அமைத்து கொண்டார்கள். 12வது சர்வாதிகாரி டாக்டர் கஜ்ஜார் கைது செய்யப்பட்டார். உள்ளூர் லக்ஷாதிபதி ஸ்ரீ. சோட்டலால் ஹேமசந்த் பட்டாணி 13 வது சர் வாதிகாரியானார். ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காந்தி இங்கு சீக்கிரத்தில் வந்து சேருவாரென்று தெரிகிறது. இன்று ராஜகோட்டை அரைநாள் ஹர்த்தால் அனுஷ் டித்தது.

சட்டசபைத் தலைவர் கைது

ஸ்ரீமதி. மணிபென் பட்டேல் கைது செய்யப்பட்டபின் இன்னும் நிலைமை நெருக்கடியாகிவிட்டது. ராஜகோட்டை சட்ட சபைத் தலைவர் ஸ்ரீ. பாபட்லால் ஆனந்தா உள்பட மற்றும் 5 பேர்களும் பொதுக் கூட்டத்தில் பிரசங்கம் செய்கையில் கைது செய்யப்பட்டனர். ஸ்ரீ. பாபட்லால் ஆனந்தா பேசுகையில் "மிஸ். மணிபென் பட்டேல் கைதியான பின் நான் கைதியாகாமலிருந்தால் அது என் கோழைத்தனத்தையே காண்பிக்கும். நான் சட்ட சபையின் தலைவராகயிருக்கும் போது சர். பாட்ரிக் காடல் பிரஜா பரிஷத்தை சட்ட விரோத ஸ்தாபனம் என்று கூறியது எப்படி சட்ட ரீதியாகும்" என்று கேட்டார். காலத்தின் போக்கை உணருமாறும் சமஸ்தானதிபதிகளைக் கேட்டுக்கொண்டார்.

பின்னர் கூட்டத்தில் பிரசங்கம் செய்த ஒரிஸா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ. பானுசங்கர்ஜோஜியும் கைதுசெய்யப்பட்டார். மிஸ். மணி பென் பட்டேல் கைது செய்யப்பட்டதைக் கண்டிப்பதற்காக 7-12-39ல் ராஜகோர்ட்டில் கூட்டம் நடைபெற்றது. இதுவரை 1457 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ராஜகோட்டையில் ஹர்த்தால்

டிசம்பர் 7ம் தேதி, பிரஜா பரிஹத் சட்டவிரோத ஸ்தாபனம் என்று திவான் காடல் அறிவித்த பின் ராஜகோட்டையிலுள்ள நிலைமையை சர்தார் பட்டேலிடம் தெரிவித்து விட்டு ராஜகோட்டை பிரபல தலைவர் ஸ்ரீ. ராஷிக்லால் பரேக் சமஸ்தானத்திற்குத் திரும்பினார். ஏஜென்ஸியை இப்பொழுது ஒன்றும் செய்யவேண்டாமென்றும், ஆனால் ஏஜென்ஸி தலையிட்டால் இந்த போராட்டத்தை ஆதரித்து, இதை

ஒரு அகில இந்திய பிரச்னையாக்க காங்கிரஸ் தயாரா யிருக்குமென்றும் சர்தார் பட்டேல், ஸ்ரீ. பரேக்டம் கூறியதாகத் தெரிகிறது.

ஸ்ரீமதி. மணி பென் பட்டேலைத் தவிர நேற்று கைது செய்யப்பட்ட அனைவரும் (13வது சர்வாதிகாரி டாக்டர் கஜ்ஜார் உள்பட) விடுதலை செய்யப் பட்டனர். தர்பார் மண்டபம் முன் மறியல் செய்த சுமார் 50 பேர்கள் கைது செய்யப்பட்டு பின் னர் விடுவிக்கப்பட்டார்கள். அன்று மாலை 4 மணிக்கு 700 ஜனங்களுக்கு மேற்கொண்ட ஒரு ஊர்வலம் புறப் பட்டு முக்கிய தெருக்கள் வழியாகச் சென்றது. காந்தி சவுக்கில் நடந்த கூட்டத்திற்கு சுமார் 10,000 பேர்கள் வந்திருந்தனர். டாக்டர் கஜ்ஜார் கூட்டத்தில் பிரசங் கம் செய்தார். ஸ்ரீமதி, மணிபென் பட்டேல் நேற்று கைது செய்யப்பட்டதை கண்டிப்பதற்காக ராஜ கோட்டையில் பரிபூர்ண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது. ராஜகோட்டை சட்டசபைத் தலைவர் ஆனந்தா, நான்கு முனிசிபல் உத்தியோகப்பற்றில்லாத மெம்பர்களுடன் திவான் சர். காடலை பேட்டி கண்டனர். ஸ்ரீ. ஜம்னுதாஸ் காந்தியும் இன்னம் சில ரும் ஒரு பொதுக்கூட்டத்தில் பிரசங்கம் செய்தனர். பொறுப்பாட்சிப் போராட்டத்தில் ஸ்திரிகள் தீவிர பங் கெடுத்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண் டனர்.

லக்ஷப் பிரபுவின் புத்திரி புறப்பாடு.

லக்ஷப் பிரபு ஸ்ரீ. அம்பாலால் சாராபாயின் புத் திரி மிஸ். மிருதுல்லா பென், கைது செய்யப்பட்ட ஸ்ரீமதி மணிபென் பட்டேலின் ஸ்தானத்தை பூர்த்தி செய்ய டிசம்பர் 8ல ராஜகோட்டைக்குப் புறப்பட்டார். உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர்கள் ஆமதபாத் ஸ்டேஷ னுக்கு வந்து வழி அனுப்பினர்.

டிசம்பர் 8, தேதியன்று தர்பார் மண்டபம் முன் மறியல் செய்த 6 ஸ்திரீகள் உள்பட 38 தொண்டர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். ஸ்ரீமதி. மிருதுல்லா பென் ஆமதாபாத்திலிருந்து இங்கு வந்து சேர்ந்தார். இன்று நகரில் பல இடங்களுக்குச் சென்று, வீட்டு வரி கொடுக்க வேண்டாமென பிரசாரம் செய்தார். டாக்டர் கஜ்ஜாரும் மற்றும் சிலரும் ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் பிரசங்கம் செய்தனர். இப்பொழுது அமுலிலுள்ள செக்ஷன் 144 இன்னம் இரண்டு மாத காலத்திற்கு நீடிக்கப் படுவதாக திவான் காடல் கையெழுத்திட்ட உத்தரவு வெளியாயிருந்தது.

ராஜகோட்டை சமஸ்தான சர்க்கார் அறிக்கை கூறுவதாவது: "குடியானவர்களின் வரிகளைக் குறைத்த பின்பும், சர்க்காரின் அநேக ஏகபோக உரிமைகள் ரத்தான பின்பும், சமஸ்தானத்தில் கிளர்ச்சி நடந்துவருவதைக் குறித்து தாகூர் சாகிப் வருந்துகிறார். பிரஜைகளுக்கு சர்க்கார் நிர்வாகத்தில் அதிக பங்களிக்க விரும்புவதாக தாகூர் சாகிப் தெரிவிக்கிறார். சில மாறுதல்கள் செய்யுமாறும் உத்தரவிட்டிருக்கிறார். தேச அபிவிருத்தி இலாகா அசெம்பிளியால் நியமிக்கப்படும் ஒரு மந்திரியின் பொறுப்பில் விடப்படும். அசெம்பிளிக்கு ஜவாப்தாரி. இந்த அசெம்பிளி தன்னுடைய பூர்ண பிரதிநிதித்வ தன்மையை இழக்காதது, சீர்திருத்தமாகும். இந்த அசெம்பிளி ஆளுகிறவருடைய, ஆளப்படுகிறவர்களுடைய நலன்களுக்கும், க்ஷேம லாபங்களுக்கும் உகந்த வகையில் வேலை செய்யும்."

மன்னரின் மாய அறிக்கை

ராஜகோட்டை நிவாரண சர். பாட்ரிக் காடல் நவம்பர் 29ல் சர்தாரை பம்பாயில் சந்திக்கு முன், அவர் கீழ்காணும் அறிக்கையை வைத்திருந்தார்.

இது தாகூர் சாகிப் பாலாவது அல்லது அவர் சார்பிலாவது வெளியிட வேண்டிய அறிக்கை.

"என்னுடைய பிரஜைகள், தங்களுக்கு குற்ற மிழைக்கப் பட்டிருக்கிறது என்ற நம்பிக்கையின் பேரில், அந்த குறைகளை நிவர்த்தி செய்துக் கொள்வதற்காக சத்யாக்ரஹம் ஆரம்பித்து கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது, எனக்கு மிக்க வருத்தத்தை யளித்தது. நான் புறக்கணிக்க முடியாத அளவுக்கு இயக்கம் சரியாகவோ, தவறாகவோ பிரபலமடைந்து விட்டதை உணர்கிறேன்: இந்த போராட்டம் இந்தியா பூராவின், இங்கிலாந்தின் கவனத்தைக் கூட இழுத்து விட்டிருக்கிறதைப் பார்க்கிறேன். மிகவும் நியாய மானவை என்று பிரஜைகள் கருதி ஈடுபடும் வேலைகளுக்காக அவர்களை சர்க்கார் சிறையிலடைத்து கொண்டே யிருக்க முடியாது. எனவே, எல்லா சட்ட மறுப்புக் கைதிகளையும் உடனே விடுதலை செய்து, அபராதங்களை வாபஸ் செய்து, எல்லா அடக்கு முறைகளையும் ரத்து செய்து விடுவதென்று முடிவு செய்திருக்கிறேன். மேலும், திவான் சர், பாட்ரிக் காடலே தலைவராகக் கொண்ட கீழ்க் காணும் கமிட்டியை நான் நியமிக்கிறேன்."

"கமிட்டியில் பத்து மெம்பர்கள் இருப்பார்கள். இதில் ஏழு பேர்கள் சர்தார் வல்லபாய் பட்டேலால் பொறுக்கி யெடுக்கப்படுவார்கள். இந்த ஏழு பேர்களும் பிரஜா பரீஷத் மெம்பர்களா யிருக்க வேண்டும். கமிட்டித் தலைவர் இரு அதிகாரிகளை மெம்பர்களாக நியமனம் செய்வார். இந்தக் கமிட்டி, நான் (தாகூர் சாகிப்) பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செய்யவேண்டிய கடமைக்கும், சமஸ்தானதிபதி என்ற ஹோதாவில் எனக்கு இருக்கவேண்டிய அதிகாரத்திற்கும் முரணில்லாதவகையில் பிரஜைகளுக்கு எவ்வளவு அதிகமாக அதிகாரங்கள் கொடுக்க முடியுமோ அவ்வளவும் கொடுக்க ஒரு சீர்திருத்த திட்டத்தை தயாரிக்கும். மன்னர்கள் சபை

செய்துள்ள தீர்மானத்தின்படி என் சொந்தச் செலவை சமஸ்தான வருமானத்தின் பத்தில் ஒரு பங்குக்குக் குறைத்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த கமிட்டி சமர்ப்பிக்கும் திட்டம் பூராவையும் அப்படியே அமுலுக்குக் கொண்டு வருவேன் என்பதை ஜனங்களுக்கு மேலும் உறுதிகூற விரும்புகிறேன். இக்கமிட்டிக்கு தேவையான சாக்ஷியங்களை பதிவு செய்துக் கொள்ள அதிகாரமளிக்கிறேன். 1938ம் வருஷம் டிசம்பர் மாதம் 15ந் தேதிக்குள்ளாக கமிட்டி சீர்திருத்த திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிக்கையிலிருந்தது."

காடல் சந்தேகங்கள்

தாகூர் சாகிபும், சர். பாட்ரிக் காடலும் மேலேயுள்ள அறிக்கையை அங்கீகரித்துவிட்டனர் என்பதை நிரூபிக்க போதுமான சாக்ஷியமிருந்தது. ஆனால் சர். காடலுக்கு சில சந்தேகங்கள் இருந்தன. அதை எழுத்து மூலம் தெரிவித்தார். அதன் அசல் படேலிடம் இருந்தது. இவைகள் தான் அவர் எழுப்பிய பிரச்னைகள்.

(1) முகவுரையின் வாசகம், (2) சீர்திருத்தக் கமிட்டி வேலை செய்து கொண்டிருக்கையில் கிளர்ச்சி நிற்கவேண்டும் என்ற உறுதிமொழி (இது எழுத்து மூலம் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை) (3) சமஸ்தானத்தின் சேவகராகிய திவானைத் தவிர கமிட்டியிலுள்ள இதர மெம்பர்கள் ராஜகோட்டை சமஸ்தான பிரஜைகளாயிருக்க வேண்டும், (4) கமிட்டியின் சிபார்சுகள் அமுலுக்கு வர சாதாரணமாக, பேருக்காவது தாகூர் சாகிபின் சம்மதம் பெறவேண்டும். நாங்கள் கூடுமுன், தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை பூராவும் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், எங்கள் சந்திப்புக்கு அர்த்தமே கிடையாதென்று சர். பாட்ரிக் காடல் தெளிவாக்கினர்.

அவர் எழுப்பிய பிரச்னைகள் சம்பந்தமாக படேலை அவர் திருப்தி செய்யமுடியாவிட்டால், அவைகளைப் பற்றி பின்னர் கவனித்துக் கொள்ளத் தயாரென்றும் கூறினர். பம்பாயில் கூடியபோது, என்ன காரணத்தினலோ நிலைமை பூராவும் மாறியிருந்தது, ஆனல் ' சமஸ்தானதிபதி என்ற ஹோதாவில் தாகூர் சாகிப்புக்குள்ள அதிகாரம்' என்பதின் முழு அர்த்தத்தை விவாதிக்க வேண்டுமென்றார். நெருக்கடியைத் தீர்க்க தாகூர் சாகிப் வெளியிடவேண்டிய அறிக்கையில் பொறுப்பாட்சி அடங்கி யிருக்காது என்றும் கூறினர். பொறுப்பாட்சியும் அடங்கி யிருக்கவேண்டுமென்ற முக்கிய உத்தேசத்தை கொண்டே அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. எல்லா விவகாரங்களையும் கமிட்டியிடம் ஒப்படைத்துவிடவேண்டும் என்று முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஐ. ஸி. எஸ். அகம்பாவம்

ஸர். பாட்ரிக் காடல் சீர்திருத்தக் கமிட்டி தாகூர் சாகிபின் அதிகாரத்தைப் பறித்து விடுமென எதிர்பார்த்தார் போல் தோன்றியது. தலைவர்கள் சம்பாஷணைகள் பூர்த்தியாகவில்லை. அதற்கு படேல் ஜவாப்தாரியல்ல. ஆனல், ஐந்து மணி நேர சம்பாஷணைக்குப் பின், நாங்கள் சிநேகிதர்களாகவே செல்கிறோம்; பிரிகிறோம்; என்று கூறிய பின்னர் காடல் வெளியிட்டிருக்கும் சர்க்கார் அறிக்கை விரோத செயலாகவே கருதினர்கள். ஏதாவது நல்ல செய்தி வரும், அடக்கு முறை நின்று போகும், ராஜகோட்டையில் சுபிக்ஷம் நிலவ ஆரம்பிக்கும் என்று தினசரி நம்பிக்கொண்டே யிருந்தார்கள்.

" ஜனங்களின் விடுதலை உணர்ச்சியை அடக்குமுறை தகர்த்துவிடாதென, ஸர். பாட்ரிக் காடலுக்கு உறுதி கூறுகிறேன். அவர்களுடைய விருப்பத்திற்கு மீறி யாராலும் எதையும் இறுதியாகச் செய்ய முடியாது

காடலுக்கு அந்த ஜனங்களின் மனோபாவம் தெரியாது. என்ன விருந்தாலும் அவர் அந்நியர்தானே. எவ்வளவு தூரம்தான் போகமுடியும் என்பதையும் அவர் உணர வேண்டும். போராட்டத்தை முடிக்க ஆவலாயிருக்கும் (அப்படி யிருக்கிறார் என்று நம்ப காரணமிருக்கிறது), தாகூர் சாகிப்புக்கு பிரஜைகளுக்குள்ள உறவை அவர் கெடுக்காமலிருக்கட்டும். சர். பாட்ரிக், தான் ஒரு ஐ. ஸி. எஸ். காரன், ஆளுகிற தேசத்தின் பிரதிநிதி என்ற மமதையின் பேரில், தாகூர் சாகிப்பின் வேலையாள் என்பதை மறந்து, தாகூர் சாகிப் சொன்னதை நன்றியுடன் நிறைவேற்றி வைக்காமல் அவருடைய அதிகாரங்களையே சந்தடி யில்லாமல் பறித்துவிட்டார் போலிருக்கிறது."

டிஸம்பர் மாதம் 11 தேதி ஷஹீத் தினமாகையால், "பிரஜா பரீஷத் மெம்பர்கள் என்று அச்சிடப்பட்ட ஆயிரக் கணக்காக கொடிகள் தொண்டர்களால் டிஸம்பர் 10-ந் தேதி விற்கப்பட்டன.

தர்பார்மண்டபம் முன் தீவிர மறியல் நடைபெற்றது. அன்று போலீசார் சிறுபையன்களை கைது செய்து பின்னர் விடுதலை செய்தனர்.

செக்ஷன் 144-ஐ மீறி ஆஸாத் சவுக்கில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய ஸ்ரீமதி மிருதுலா பென்சாராபா பாயும் இன்னம் 15 பேர்களும் அன்று கைது செய்யப்பட்டனர். 15 பேர்கள் மாத்திரம் பின்னர் விடுதலையானார்கள்.

ராஜகோட்டை போராட்டத்திற்குத் தலைமை வகித்து நடத்திய ஸ்ரீமதி மணிபென் பட்டேல் பின் அவருடைய ஸ்தானத்தில் வேலை செய்ய ஸ்ரீமதி மிருதுல்லா பென் (லக்ஷாதிபதி ஸ்ரீ. அம்பாலால் சாராயின் புத்திரி) ஆமதாபாத்திலிருந்து ராஜகோட்டைக்கு வந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்.

அன்று தடையுத்தரவை மீறி நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் டாக்டர் ராவ்சாகிப் லலுபாய் ஷாஜம் பிரசங்கம் செய்தார்.

சிறைகளிலுள்ள ஸ்திரீ கைதிகளுக்கு விசேஷ இடவசதியளிக்குமாறு ஸ்ரீமதி மணிபென் பட்டேல் சமஸ்தான அதிகாரிகளை கேட்டிருப்பதாய்த் தெரிகிறது.

வரி கொடுக்க வேண்டாம்

ராஜகோட்டையில் வீடுகளுக்குச் சொந்தக்காரர்களா யுள்ளவர்கள் வீட்டு வரி கொடுக்கவேண்டாமென்று பிரஜா பரீஷத் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். வரி கொடுப்பதில்லை யென்று உறுதிமொழிப் பத்திரங்களில் வீட்டு சொந்தக்காரர்களில் 1000 பேர்களுக்கு மேலாக கையெழுத்திட்டார்கள்.

ராஜகோட்டை தினத்தை அனுஷ்டிப்பதற்காக டிசம்பர் 15-ந் தேதி ராஜகோட்டையில் விவசாயிகள் மகாநாடு நடந்தது. பல கிராமங்களிலிருந்து விவசாயிகள் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

ராஜகோட்டை திவான் சர். பாட்ரிக் காடல், ரகசியமென்று கருதப்பட்ட, அவர் அப்படியே நினைத்து நடந்துகொண்ட விவாதத்தின் விவரங்கள் பற்றி தர்க்கம் செய்யத் தயாரா யில்லை. இருந்தபோதிலும், சர்தார் வல்லபாய் பட்டேல் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில், அவரும் திவானும் கூடி பேசியதற்குப் பின் தாகூர் சாகிப் வெளியிட்ட ஒரு அறிக்கையின் மூலம் திவான் நம்பிக்கை துரோகம் செய்து விட்டார் என்று கூறி யிருப்பதால், நடந்ததென்னவென்பதைப் பற்றி திவான் ஒரு அறிக்கையை வெளியிட வேண்டிய அவசிய மேற்பட்டது.

திவானின் அறிக்கை

ராஜகோட்டை திவான் சர். பாட்ரிக் காடல், சமீபத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலாக கீழ்கண்ட அறிக்கை வெளியிட்டார்.

“பக்கத்து சமஸ்தானத்தின் திவான் (பவநகர் திவான் ஸ்ரீ. பட்டாணி) சர். பாட்ரிக் காடலுக்குத் தெரியாமல், அவரைக் கலந்துகொள்ளாமல், ஆனால் ராஜகோட்டையில் சமரசம் ஏற்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் தாகூர் சாகிப்பிட மிருந்து ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு வார்தாவுக்கும் (காந்திஜியைக் காண) ஆமதாபாத்துக்கும் (சர்தாரைக் காண) சென்றார். திரும்பி வருகையில் ஆமதாபாத்தி லிருந்து, (சர்தார் தயாரித்த) சமரச திட்டத்தைக் கொண்டு வந்தார். இந்த திட்டம் சர். காடலிடம் விடப்பட வில்லை. ஆனால், சர். காடல் இதிலிருந்ததை ஒரு பென்சிலால் குறித்துக்கொண்டார். ராஜகோட்டை சர்க்கார் கடைசியில் ஏற்றுக்கொள்ள முடியாத சில விஷயங்களையும் குறித்துக்கொண்டார்.

சர்தார் சொன்னதென்ன ?

சர். காடல், சர்தார் வல்லபாய் பட்டேலை பம்பாயில் சந்தித்தபோது, தயாரிக்கப்பட்ட சமரச திட்டம் தர்பார் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று சர். காடலிடம் கூறப்படவில்லை. சர். காடல் குறித்து வைத்திருந்த பிரச்னைகளுக்கு சர்தார் பட்டேல் ஆக்ஷேபம் கிளப்பினால் அந்த பிரச்னைகளை பின்னர் கவனித்துக் கொள்ளலாம் என்றும் கூறப்படவில்லை. விவாதம் நடக்கையில் சர்தார் பட்டேல் அதைப் போல ஒன்றும் சொல்லவில்லை. சர். காடல் குறித்து வைத்திருந்த பிரச்னைகளும், சர்தார் பட்டேல் விரும்பிய அறிக்கையில் அவர் கூறியுள்ள நிபந்தனைகளும் விவாதிக்கப்பட வில்லை.

சர்தார் வல்லபாய் பட்டேல் தயாரித்த திட்டப் படி கமிட்டி நியமிக்கப்பட்டால், அக்கமிட்டி ரிப் போர்ட் செய்தபின் ராஜாவுக்கு என்ன அதிகாரம் இருக்கும்? என்று சர். காடல் கேட்டார். ராஜாவின் அந்தஸ்து 10% ஜமீன்தாராக யிருக்கவேண்டும். அதா வது வருமானத்தில் 10% ஐப் பெறும் ஜமீன்தாராக யிருக்க வேண்டும். பரம்பரை பரம்பரையாக ராஜா வாகவர மன்னருக்கு இருக்கும் உரிமையைத் தவிர வேறு யாதொரு அதிகாரமும் அவருக்கு இருக்காது என்று சர்தார் பட்டேல் பதிலளித்தார்.

இந்த நிலைமையைத்தான் தாகூர் சாகிப்பும், காடலும் ஒப்புக்கொண்டே தீரவேண்டுமென்று அப் பொழுது சர்தார் பட்டேல் கூறினார். விவாதம் முடி யும்போது, தயாரிக்கப்பட்ட திட்டப்படி சமரசம் ஏற் படுவது சாத்தியமில்லையென்று தெளிவாக்கப்பட்டது.

பம்பாய் சம்பாஷணைக்கு ஒரு வாரத்திற்குப் பின் தாகூர் சாகிப் வெளியிட்ட அறிக்கையில், சில மாறுதல்களையும், சீர்திருத்தங்களையும் அமுலுக்குக் கொண்டுவரும் உத்தேசமிருப்பதாக அவர் தெரிவித் திருந்தார். பட்டேலுடன் நடந்த சம்பாஷணை அதில் பிரஸ்தாபிக்கப்படவில்லை. சம்பாஷணைக்கும் ராஜாவின் அறிக்கைக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. சர்தார் பட்டேலுடன் திவான் சம்பாஷணை, நடத்திய தால், ராஜா தன்னுடைய பிரஜைகளுக்கு அறிக்கை விடக் கூடாதென்று சர்தார் சொல்லும் வாதமானது ஒப்புக்கொள்ள முடியாதாம்.

வல்லபாய் பட்டேல் புத்திரிக்கு தண்டனை

டிஸம்பர் மாதம், 13 தேதி சர்தார் வல்லபாய் பட்டேலின் புத்திரி ஸ்ரீமதி. மணிபென் பட்டேல், ஸ்ரீ. அம்பாலால் சாராபாய் புத்திரி ஸ்ரீமதி. மிருதுல்லா பென் இருவரும் தலா ஒரு மாத சிறை தண்டனையும்,

ரூ. 100 அபராதமும் செலுத்தத் தவறினால் மேலும் ஒரு மாத தண்டனையும் விதிக்கப்பட்டனர்.



ஸ்ரீமதி மணிபென் பட்டேல்.

அன்று தர்பார் மண்டபம் முன் மறியல் நடந்த போது யாரும் கைது செய்யப்படவில்லை. பொதுக் கூட்டத்தில் 14 பேர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால், அனைவரும் பின்னர் விடுதலையானார்கள். ராஜகோட்டையில் 1000 தொண்டர்களுக்கு மேலாக பதிவு செய்துக்கொள்ள வேண்டுமென்று சர்வாதிகாரி டாக்டர் கஜ்ஜார் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

சர்தார் கர்ஜனை

டிசம்பர் 15, தேதி வல்லபாய் பட்டேல், ராஜகோட்டை திவான் சர். பாட்ரிக் காடெலின் அறிக்கைக்குப் பதிலாக பின்கண்ட அறிக்கையை வெளியிட்டார்: "என்னுடைய அறிக்கைக்கு சர். பாட்ரிக் காடெல் அளித்த 'பதிலை கவனமாகப் படித்தேன். இரு உண்மைகள் தெளிவாக யிருக்கின்றன. தாகூர் சாகிப் வெளியிடுவதற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கையை அவர் (திவான்) பார்த்ததாக ஒப்புக் கொள்கிறார். அதற்கு நகல் அவர் எடுத்துக் கொள்ளாவிட்டால், அது அவருடைய பிசகாகும். ஆனால், அவர் குறிப்புகள் எழுதியதாகவும் என்னிடமிருந்து வியாக்கியானம் பெற விரும்பிய விஷயங்களையும் குறித்துக்

கொண்டதாகவும் ஒப்புக் கொள்கிறார். மகாத்மா காந்தி தயாரித்த (தாகூர் சாகிப் வெளியிட வேண்டிய) நான் அங்கீகரித்த அறிக்கையை தாகூர் சாகிப் ஏற்றுக் கொள்வது அவர் கடமையாகும் என்பதை காடெலின் பதிலே நிதர்சனமாக்குகிறது.''

''மகாத்மாவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை அவர் (காடெல்) பார்த்து குறிப்புகள் எழுதிக்கொண்டு விவாதிப்பதற்காக சில விஷயங்களை குறித்துக் கொண்டது எதற்காக? அந்த அறிக்கையை, அவர் குறித்துக்கொண்ட விஷயங்கள் வியாக்யானம் செய்யப்பட்டபின் ஒப்புக்கொள்வதாக அர்த்தமாகவில்லையா? தாகூர் சாகிப்பின் வார்த்தைக்கு மதிப்பே கிடையாதா? சர். பாட்ரிக் காடெல் திவான் என்ற ஹோதாவில் அவருடைய எஜமானனின் விருப்பங்களை அலட்சியம் செய்வதா? ஜனங்கள், தாகூர் சாகிப் சொன்னதை நிறைவேற்றி வைத்தால்தான் தங்கள் கௌரவத்தை காப்பாற்றிக் கொண்டதாகும் என்று உறுதிகொண்டால் சர். காடெலால் என்ன சொல்ல முடியும்? நான் பிரச்னைகளை எடுத்துக் காட்டியிராவிட்டால் இந்த விவாதங்களே எழுந்திருக்க தென்பதை நான் நிரூபிக்க வேண்டிய அவசியமேயில்லை. எனவே அவருடைய பதிலை ஆதாரமாகக் கொண்டே, 'சீர்திருத்தங்கள்' அளிக்கப்போவாத வெளியிட்ட அறிக்கையின் மூலம் தாகூர் சாகிப், திவான் காடெல் இருவரும் அவர்கள் கொடுத்த வரக்குறுதியை மீறி விட்டார்களென்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறேன்.''

திவானின் கெட்ட எண்ணம்

''தாகூர் சாகிப் 10% ஜமீன்தாராக யிருக்க வேண்டும் என்பதைக் குறித்து நான் கூறியதை, எனக்கும் தாகூர் சாகிப்புக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் தான் திவான் காடெல் பிரஸ்தாபித்திருக்கிறார். சமஸ்தானத்திற்கு

அதிபதி என்ற ஹோதாவில் தாகூர் சாகிப்பிடம் இறுதியான அதிகாரம் இருப்பது இனியும் இருக்கவேண்டுமென்பதை நானே வற்புறுத்தினேன் என்பதை அவர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நான் தாகூர் சாகிப்பைப்பற்றி சொன்னதற்கும், நம்பிக்கை துரோகம் செய்யப்பட்டதா இல்லையா என்று விவாதிக்கப்படும் பிரச்னைக்கும் சம்பந்தமில்லை. அவருடைய பதிலிலிருந்தே நம்பிக்கை துரோகம் செய்திருக்கிறார் என்ற உண்மை தெரிவதால், அந்தக் குற்றச் சாட்டிலிருந்து ஜனங்களின் கவனத்தை இழுக்கக்கூடாதென்ற விருப்பத்தின்பேரில், அவருடைய அறிக்கையிலுள்ள இன்னம் பல தவறுதல்களைப் பற்றி இப்பொழுது பிரஸ்தாபிக்காமலிருக்கிறேன் என்றார் பட்டேல்."

3-வது அத்தியாயம்.

சமரசம் ஏற்பட்டது

டிசம்பர் 26உ மாலை 3 மணிக்கு ஆகாய விமானத்தில் ராஜகோட்டைக்கு வந்து சேர்ந்த வல்லபாய் பட்டேல், மாலை சுமார் 6 மணிக்கு, தாகூர் சாகிப்பால் பேட்டிக்கு அழைக்கப்பட்டார். சுமார் 8 மணி நேரம் சமரசப் பேச்சுகள் நடைபெற்றன. நீண்ட நேர விவாதத்திற்குப் பின் இரவு 2 மணிக்கு ஒரு திருப்திகரமான சமரசம் ஏற்பட்டது.

பட்டேல் அறிவிப்பு

சர்தார் பட்டேல் ராஜகோட்டை வந்து, ராஜாவுடன் சமரசப் பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறார் என்ற செய்தியைக் கேட்ட ராஜகோட்டை மக்கள், அரண்மனை முன் ஏராளமாகக் கூடிவிட்டனர். இரவு

2 மணிக்கு சர்தார் பட்டேல் அரண்மனையிலிருந்து வெளி வந்ததும் ஜனங்கள் ஆரவாம் செய்தனர். "நான் தாகூர் சாகிப்புடன் நடத்திய சம்பாஷணையின் விளைவாக சமரசம் ஏற்பட்டுவிட்டது. ஒப்பந்த விவரங்கள் இன்று மாலை காந்தி சவுக்கில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்படும்" என்று சர்தார் பட்டேல் அரண்மனை முன் கூடியிருந்த மக்களுக்கு விஷயத்தை அறிவித்தார்.

சமரச விவரங்கள்: தாகூர் சாகிப், சமஸ்தான பிரஜைகளுக்கு பூர்ண பொறுப்பாட்சி யளிக்கவும், இதற்காக பிரஜா பரீஷத் பிரதிநிதிகள் மெஜாரிட்டியா யுள்ள ஒரு கமிட்டியை அமைக்கவும் ஒப்புக்கொண்டு விட்டதாகத் தெரிந்தது. இந்த கமிட்டி ராஜகோட்டை ஜனங்களுக்கு பொறுப்பாட்சி யளிக்கும் பிரச்னையை உடனே கவனித்து, கூடிய சீக்கிரத்தில் சிபார்சுகளைச் செய்யுமெனத் தெரிந்தது. தாகூர் சாகிப், அவருடைய சொந்தச் செலவை குறிப்பிடத் தக்க அளவுக்கு குறைத்துக் கொள்ள சம்மதித்திருந்தார். அடக்கு முறைகளெல்லாம் வாபஸாகும். விசாரணையிலுள்ள வழக்குகள் கை விடப்படும். எல்லா அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள். பிரஜா பரீஷத் சத்யாக்ரஹ இயக்கத்தை நிறுத்தி விடுமெனத் தெரிந்தது.

தாகூரே அழைத்தார்

வெளியார் யாரையுமே கூப்பிட்டு சமரசம் செய்து வைக்குமாறு கேட்கமாட்டேன் என்று வீரம் பேசிய தாகூா சாகிப் (ராஜகோட்டை ராஜா) சர்தார் வல்லபாய் பட்டேலிடம் ராஜகோட்டை பொறுப்பாட்சிப் போர் சம்பந்தமாக சமரசம் பேச விரும்பி, தந்தி மூலமும், ஆள் மூலமும் அழைப்பு அனுப்பியதற் கிணங்கி சர்தார் பட்டேல் நேற்று மாலை ஆகாய விமானத்தில் ராஜகோட்டைக்கு வந்தார். ராஜகோட்டை

போராட்டம் ஆரம்பமான பிறகு, முதல் முதலாக ராஜ கோட்டை தாகூர் சாகிப்-சர்தார் வல்லபபாய் பட்டேல் சந்திக்கப்போகிறார் என்ற விஷயத்தை ராஜகோட்டை மக்கள் கேட்டுப் பரமானந்த மடைந்தார்கள். பேட்டியின் போது, மகாத்மா காந்தியின் மரு மகன் ஸ்ரீ. சமல்தாஸ் காந்தி, ராஜாசாகிப் தரங்கதாரா ஸ்ரீ. சத்கார் இம்மூவரும் பிரசன்னமா யிருந்தனர். சம ரசப் பேச்சுகள் நேசப் பான்மையிலேயே நடைபெற்ற தாய் சொல்லப்பட்டது. நேற்று விடியற்காலை சர்தார் பட்டேலுக்கு தாகூர் சாகிபிடமிருந்தும்,ராஜகோட்டை மக்களிடமிருந்தும் அழைப்புகள் வந்ததற் கிணங்கியே, அவர் இந்திய ஆகாய சர்விஸின் ஸ்பெஷல் விமானத் தில் ராஜகோட்டைக்குப் புறப்பட்டார். 'ஜன்மபூமி' ஆசிரியர் ஸ்ரீ சமல்தாஸ் காந்தியும் ராஜகோட்டை பிர முகர்களில் ஒருவராகிய ஸ்ரீ பாண்டியாவும் சர்தாருடன் வந்தார்கள். எதிர்பாராதபடி இப்படி அழைப்பு அனுப்பப்பட்ட விஷயம் ரொம்ப ருசிகரமானது. தர் பார் கோபால்தாஸ், கோர்ட்டில் தான் விசாரிக்கப்படு கையில் கொடுத்த வாக்குமூலத்தின் பிரதி யொன்று தாகூர் சாகிப்புக்கு அனுப்பப்பட்ட தென்றும் அதைப் படித்த தாகூரின் மனம் இளகி விட்டதென்றும் தெரிந்தது.

தாகூர் சாஹிப் ஆவல்

தாகூர் சாஹிப், பவநகர் திவான் ஸ்ரீ. அனந்த ராய் பட்டாணி (காலஞ்சென்ற சர். பிரபா சங்கர் பட் டாணியின் புதல்வர்) க்கு அனுப்பியிருந்த செய்தியில், சர்தார் வல்லபாய் பட்டேலை சந்தித்துப் பேச தான் விரும்புவதாய் கூறியிருந்தார். ஸ்ரீ. அனந்தராய், இந்த விருப்பத்தை சர்தார் பட்டேலிடம் தெரிவித்தார். தாகூர் சாகிப், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சர் தாருக்கு தந்தி அனுப்பியதாகவும், அதில் சமரசம் ஏற் பட எல்லா வழிகளையும் கண்டு பிடிப்பதற்காக சர்தா

ருடன் தான் பேச விரும்புவதாயும் குறிப்பிட்டிருந்த தாகத் தெரிந்தது. சர்தார் பட்டேல், இந்த வேண்டு கோளுக் கிணங்கி, 25-ந்தேதி மாலையிலேயே ராஜ கோட்டைக்கு வந்தார்.

போராட்டம் வெற்றி பெற்றது

மகாத்மா காந்தியால் தயாரிக்கப்பட்டு, பம்பாயில் சர்தார் பட்டேலாலும், திவான் சர். 'பாட்ரிக் காடெ லாலும் சில தினங்கள் முன் விவாதிக்கப்பட்ட சமரசத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பூராவையும் தாகூர் சாகிப் ஒப்புக்கொண்டு விட்டதாகத் தெரிந்தது. போராட்டம் வெற்றிகரமாக முடிந்ததைக் குறித்து ராஜகோட்டை மக்கள் அளவிலா மகிழ்ச்சியுடனிருந் தார்கள்.

டிஸம்பர் 26-ந் தேதி மாலை சுமார் 50,000 ஜனங் கள் கொண்ட பொதுக்கூட்டத்தில் சர்தார் பட்டேல், தனக்கும் தாகூர் சாகிப்புக்கும் ஏற்பட்ட ஒப்பந்த விவ ரங்களை அறிவித்தார்.

இந்த ஒப்பந்தப்படி சீர்திருத்த திட்டத்தைத் தயா ரிக்க 10 மெம்பர்கள் அடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப் படும். அந்த கமிட்டியின் தலைவரை தாகூர் சாகிப் நியமிப்பார். இரு சர்க்கார் ஊழியர்களும் கமிட்டியில் மெம்பர்களாக யிருப்பார்கள். பாக்கி ஏழு மெம்பர் களையும் பிரஜா பரீஷித் நியமிக்கவேண்டும். ராஜீயக் கைதிகள் அனைவரும் விடுதலையாவார்கள். அபராதத் தொகைகளெல்லாம் வாபஸ் செய்யப்படும். நாளைய தினமாவது அல்லது அதற்கு அடுத்த தினமாவது கமிட்டி மெம்பர்களின் பெயர்கள் அறிவிக்கப்படும். குடியானவர்களின் குறைகளை தீர விசாரித்து, நிவர் திக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

சர்தார் பட்டேல் கிளர்ச்சி வெற்றிகரமாக முடியக் கூடிய அளவுக்கு உதவிபுரிந்த ராஜகோட்டை ஜனங் களையும், குறிப்பாக வர்த்தகர்களையும் பாராட்டினார்.

" இந்த ஒப்பந்தம் சில தினங்கள் முன் தயாரிக்கப் பட்டு ஆனால் சமரசப் பேச்சு முறிந்து போன திட்டத்தைக் காட்டிலும் சிறந்ததென அபிப்பிராயப் படுகிறேன் " என்றார்.

சமரசம் சாத்தியமாகும்படிச் செய்த தாகூர் சாகியையும், சர்தார் பட்டேல் பாராட்டினார்.

இந்த கூட்டம் ஆரம்பமாகு முன் சுமார் 50,000 ஜனங்கள் கொண்ட பிரும்மாண்டமான ஊர்வலம், விடுதலை செய்யப்பட்ட ராஜீயக் கைதிகளின் தலைமையில் ஆரவாரம் செய்துக்கொண்டு ராஜகோட்டை தெருக்கள் வழியாக சுமார் 2-மணி நேரம் சென்றது.

ஒப்பந்த நகல்

டிஸம்பர் 26-ந் தேதி தாகூர் சாகிப் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தம் பின்வருமாறு:— "சென்ற சில மாதங்களாக பொதுஜன அபிப்ராயம் வளர்ந்து வந்திருப்பதையும், நமது (மன்னர் என்றஹோதாவில் சொல்லுகிறார்) ஜனங்கள் துர்ப்பாக்கிய வசதியாக பட்ட கஷ்டங்களையும் பார்த்தபின், நிலைமை பூராவையும் நிர்வாக கவுன்ஸில் சர்தார் வல்லபபாய் பட்டேல் இருவருடனும் விவாதித்த பின் இப்பொழுதுள்ள போராட்டத்தையும், கஷ்டங்களையும் உடனே நிறுத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்."

" சர்க்கார் அதிகாரிகளும், சமஸ்தான பிரஜைகளுமாகியுள்ள 10 கனவான்கள் கொண்ட ஒரு கமிட்டியை நியமிப்பதென்று முடிவு செய்திருக்கிறோம். கமிட்டியில் மூன்று மெம்பர்கள் சமஸ்தான அதிகாரிகளாகவும், பாக்கி ஏழு மெம்பர்கள் சமஸ்தான பிரஜைகளாகவும் இருப்பார்கள். மெம்பர்களின் பெயர்கள் இனி அறிவிக்கப்படும். கமிட்டியின் தலைவர் நம்மால் நியமிக்கப்படுவார். கமிட்டி நன்கு ஆலோசனை செய்த பின், நாம் பிரிட்டிஷ் சர்காருக்குச் செய்ய வேண்டிய

கடமைக்கும், சமஸ்தானாதிபதி என்ற தோரணையில் நமக்கும் இருக்கவேண்டிய இறுதியான அதிகாரத்திற்கும் உகந்தவகையில் நமது பிரஜைகளுக்கு, எவ்வளவு அதிகாரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு அதிகாரத்தைக் கொடுக்க ஒரு சீர்திருத்த திட்டத்தைத் தயாரித்து குடிகளிடம் ஜனவரி கடைசிக்குள் சமர்ப்பிக்கும்."

"பிரஸ்தாப கமிட்டி தயாரிக்கும் திட்டத்தை கவனித்து அதை அமுலுக்குக் கொண்டு வருவோம் என்பதை ஜனங்களுக்கு மேலும் உறுதிகூற விரும்புகிறோம். எல்லா சட்ட விரோதமான கிளர்ச்சியும் உடனே நின்றுவிட வேண்டும்."

"சமாதானமும், நல்லுறவு மீண்டும் நிலவ வேண்டுமென்பதற்காக நாம் இதன் மூலம் எல்லா ராஜீயக் கைதிகளையும் விடுவிக்கிறோம் அபராதங்களை திருப்பிக் கொடுக்கிறோம். அடக்கு முறைகளை வாபஸ் செய்துகொள்கிறோம்."

"பிரிட்டிஷ் இந்தியாவில் பிரிட்டிஷ் இந்தியருக்கு என்ன யோக்யதாம்சம் உண்டோ அதைப் போலவே சமஸ்தானத்திலும் சமஸ்தான பிரஜைக்கு யோக்யதாம்சம் இருக்கும். இந்த அர்த்தத்தில்தான் கமிட்டி நியமனம் சம்பந்தமாகவே 'பிரஜை' என்ற வார்த்தை மேலே உபயோகிக்கப் பட்டிருக்கிறது."

"மேற்படி அறிக்கை உடனே சமஸ்தான கெஜட்டில் பிரசுரிக்கப்படும். அச் சமயத்தில் ஒப்பந்தமும் அமுலுக்குவரும். சமஸ்தானத்திலிருந்த தகராறு ஒரு வழியாக முடிவடைந்தது" என்றார்கள்.

"ராஜகோட்டை போராட்டம் ஜெயமடைந்தது ஜனங்களின் வெற்றி என்று மாத்திரம் சொல்வதற்கில்லை; இதில் ஜனங்கள் எவ்வளவு வெற்றி பெற்றார்களோ அவ்வளவு ராஜாவும் பெற்றிருக்கிறார். அதாவது, சமஸ்தான விவகாரங்களில் இனி யாரும் (பிரிட்டிஷ் சர்க்கார்) தர்பார் மீது குதிரை ஏறமுடியாது.

இதைப் போலவே இதர சமஸ்தானங்களின் பிரஜைகளும் வெற்றி பெற்றால், அது அந்த சமஸ்தானாதிபதிகளின் உண்மையான வெற்றியாகும். அவர்கள் வாஸ்தவமான கௌரவமும் மதிப்பும் உள்ள ஸ்தானத்தை அடைவார்கள்." என்று சர்தார் வல்லபாய் பட்டேல், ஆஸாத் மைதானத்தில் ஸ்ரீ. புலாபாய் தேசாய் தலைமையில் நடைபெற்ற ஒரு பிரும்மாண்டமான பொதுக் கூட்டத்தில் ராஜகோட்டை வெற்றியைப் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு 20,000 ஜனங்களுக்கு மேலாக வந்திருந்தனர்.

சர். காடெல் கப்பலேறுவார்

தாகூர் சாகிப்-பட்டேல் உடன் படிக்கைக்கும், திவான் சர். காடெலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்பதை விளக்கி சர்தார் பட்டேல் கூறியதாவது:—
" எங்கள் விஜயம் திவான் காடெலுக்கு தெரியாதவாறு அவ்வளவு ரகஸ்யமாக தாகூர் சாகிப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும், தாகூரும் சமரசப் பேச்சுகளை நடத்திக் கொண்டிருந்ததைக் கண்ட, சர் காடெல் சிடுசிடுவென்று கோபாக்னியாக இருந்தார். உடன் படிக்கை கையெழுத்தானபின், "உங்களுக்கு சந்தோஷமான கிறிஸ்மஸ் வருக" என்று ஆசி கூறுவதா ? அல்லது " சந்தோஷமான புது வருஷம் வருக " என்று ஆசி கூறுவதா " என்று சர். காடெலை நான் கேட்டேன். மனக் கசப்புடன், " கப்பலேறி வீட்டுக்குப் போ " என்று ஆசி கூறுங்கள். அதற்குத்தானே நீங்கள் வந்திருக்கிறீர்கள்" என்றார் சர். காடெல்."

4வது அத்தியாயம்

மீண்டும் போர் மூண்டது

ராஜகோட்டை பிரஜா பரீஷத் மீண்டும் சத்யாக்ரஹம் ஆரம்பிப்பதென்று செய்துள்ள முடிவை சர்தார் வல்லபபாய் பட்டேல் ஒரு நீண்ட அறிக்கையில் தெரிவித்தார். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் மாணவர்கள் சத்யாக்ரஹ இயக்கத்தில் கலந்து கொள்ளவோ, அல்லது ஸ்ட்ரைக் செய்யவோ கூடாதென்று சர்தார் பட்டேல் தெளிவாக்கினார். "இப்பொழுது சத்தியாக" கத்தியவார் சமஸ்தானங்களின் பிரஜைகள் மாத்திரம் சட்ட மறுப்பில் கலந்துக்கொள்வார்கள். தாகூர் சாஹெப்பும், சர்தார் பட்டேலும் செய்துகொண்ட உடன்படிக்கை தர்பாரால் மீறப்பட்டதாலேயே மறுபடியும் சத்யாக்ரஹம் ஆரம்பமாகும். உடன்படிக்கை ஏற்பட்ட தினத்தன்று தாகூர் சாஹெப் கீழ்க்காணும் குறிப்பை சர்தார் படேலிடம் தந்திருக்கிறார். சர்தார் பட்டேல் மேற்கண்ட குறிப்பை வெளியிட்டிருப்பதிலிருந்து தாகூர் சாஹெப், தான் எழுதிக்கொடுத்த வாக்குறுதியை மீறி யிருப்பது தெளிவாயிற்று.

காங்கிரஸ்மீது ரெஸிடெண்ட் சீற்றம்

சந்தோஷகரமாக முடிந்ததாய் தோன்றிய ராஜகோட்டை போராட்டம் மீண்டும் ஆரம்பமாகிறது என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. சமஸ்தானத்தின் கௌரவத்தையும், ராஜகோட்டை ஜனங்களின் சுயமரியாதையையும் நிலைநாட்டுவதற்காக போரை மீண்டும் ஆரம்பிக்கவேண்டியது கடமையாகிவிட்டது. சென்ற டிஸம்பர் மாதம் 26வ ராஜகோட்டை சமஸ்தான கெஜட்டில் பிரசுரிக்கப்பட்ட ஒப்பந்தம், தாகூர் சாஹெப்பும், சர். பாட்ரிக்

காடெல் ராவ்சாஹெப் மானக்லால் பட்டேல் ஸ்ரீ. ஜே. ஜோபன்புத்ரா ஆகிய மூன்று நிர்வாக கவுன்சில் மெம்பர்களும் கூடி விவாதித்ததின் விளைவாகவே ஏற்பட்டது. டிசம்பர் 25வ மாலை நடந்த விவாதம் (பட்டேலுடன் ராஜி பேசியது) சுமார் 7 மணி நேரம் வரை நடந்து, இரவு 1-42க்கு முடிந்திருக்கிறது. உடன்படிக்கை கையெழுத்தான தினத்தன்று தாகூர் சாஹெப் கீழ்க்காணும் குறிப்பை பட்டேலிடம் தந்தார்.

தாகூர் சாஹெப்பின் அழைப்பிற் கிணங்கியே பட்டேல் ராஜகோட்டை சென்றாரென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். உடன்படிக்கை ஏற்பட்டவுடன் சர். பாட்ரிக் காடெல் ரிட்டையராகிவிட்டார். தாகூர் சாஹெப்பின் பணத்தைச் சாப்பிட்டவர்களே அவருக்குக் கெட்ட யோசனைகள் கூறி வந்தார்கள் தர்பார் வீரவல்லா, சர். பாட்ரிக் காடெல் இருவரின் நடத்தையையும் சர்தார் பட்டேல் கண்டித்தார்.

சகுனி மாமா வீரவல்லா

"தர்பார் வீரவல்லா சமஸ்தானத்திலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டபோதிலும், பகாஸ்ராவிலிருந்து தன் வேலையைக் காட்டினார். அவர் மகன் போஜ வாலாவும், மருமகன் வாலரவல்லாவும் இன்னும் தாகூர் சாஹெப்புடன் தான் இருக்கிறார்கள். உத்தேசிக்கப் பட்ட உடன்படிக்கையை எதிர்ப்பதால் பிரயோசன மேற்படாதென்று உணர்ந்து, வீரவல்லா ஒரு சிநேகனைப் போல நடந்து கொண்டார். உடன்படிக்கை ஏற்பட உதவி செய்வதுபோல் நடித்தார். உடன்படிக்கை ஆனவுடன், சர். பாட்ரிக் காடெல் போகும் சமயத்தில் வீரவல்லா ராஜகோட்டைக்கு வந்து, கொஞ்சங்கூட தாமதியாமல் அவர் வேலைகளை ஆரம்பித்தார்

பட்டேல் கொடுத்த 7 பெயர்கள்

இயக்கத்தை நடத்தி வந்தவர்களுடன் கலந்து கொண்டு உடன்படிக்கையின் நிபந்தனைகள்படி சீர் திருத்தக் கமிட்டிக்கு ஏழு பெயர்களைப் பொறுக்கி யெடுக்க 4, 5 நாள்தான் பிடித்தது. ஜனவரி 4ந் தேதி கீழ்க் காணும் 7 பெயர்களை அனுப்பினார் பட்டேல். (1) ஸ்ரீ. பாபட்லால் தான்ஜிபாய் மாளவியா, (2) ஸ்ரீ. பாபட்லா புருஷோத்தம ஆனதா, (3) ஸ்ரீ முல்லாம் வாஜிஜி அப்துல்லா அலி, (4) டாக்டர் டி. ஜே. ஜப் பார், (5) ஸ்ரீ. ஜம்னாதாஸ் குஷல்சந்த் காந்தி, (6) ஸ்ரீ. விரிஜலால் மாயா சங்கர் சுக்லா, (7) ஸ்ரீ. உச்சங்கராய் மாவல் சங்கர் திபார். கமிட்டியின் நியமனம் உடனே நடந்திருக்க வேண்டியது. ஆனால் சில நாட்கள் வரை ஒன்றும் நடக்கவில்லை.

ரெஸிடெண்ட் விஷமம்

டிஸம்பர் மாதம் 28வ ரெஸிடெண்டும், தாகூர் சாஹெப் உள்பட நிர்வாக சபை மெம்பர்களும் கலந்து பேசினார்கள். நடந்த பேச்சின்போது ‘சில உயர்தர அதிகாரிகள்’ காங்கிரஸையும் பட்டேலைப்பற்றி கேவல மாகப் பேசினார்கள். உடன்படிக்கை நிபந்தனைகள் வெளிவந்த தர்பார் அறிக்கையையும், இப்பொழுது வெளிவந்துள்ள ஒருதலைப் பட்சமான தர்பார் அறிக் கையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியது அவசிய மாயிருக்கிறது. இரண்டாவது அறிக்கையில் பட் டேல் பொறுக்கி யெடுத்த 4 பெயர்களைத் தள்ளி விடு கிறது; உடன்படிக்கை நிபந்தனைகளையும் ரத்துச் செய் கிறது. முதல் அறிக்கை சந்தேகத்திற்கிடமின்றி யிருந் தது. ஆனால், இந்த அறிக்கை வழவழாவென்றிருக் கிறது. முதல் அறிக்கை இம்மாதம் 31-ந் தேதிக்குள் கமிட்டி தன் ரிப்போர்ட்டை சமர்ப்பித்துவிட வேண்டு மெனக் கூறுகிறது; ஆனால், இரண்டாவது அறிக்கை யில் ரிப்போர்ட் சமர்ப்பிக்க வேண்டிய காலவரை நிர்ண

பிக்கப்படவில்லை. தர்பாரின் இரண்டாவது அறிக்கை வெளிவரு முன் ராவ் சாஹெப் மானக்லாலிடமிருந்து பட்டேலுக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த கடிதம் பட்டேல் பொறுக்கி யெடுத்த 4 பேர்களை ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால் இரண்டாவது அறிக்கை யில் 3 பெயர்கள் தான் இருக்கின்றன.

வீரவல்லாவை சேர்க்கக் கூடாது

ஸ்ரீ. மானக்லாலின் கடிதத்திற்கு குஜாராத்தில் பதில் எழுதி அனுப்பினார் பட்டேல். தர்பார் வீர வல்லாவுக்கு தாகூர் சாகிப்பிடமுள்ள செல்வாக்கைப் பற்றியும், அவர் தலையீட்டைப்பற்றியும் எவ்வளவோ கேள்விப்பட்டிருப்பதால், எப்பேர்பட்ட சந்தர்ப்பத்தி லும் தர்பார் வீரவல்லாவை கமிட்டியில் சேர்த்துக் கொள்ள முடியாதென அந்த பதிலில் திட்டமாகக் கூறினார். சாக்கு போக்குகளுக்கு இடம் கொடுக்க தயாராயில்லை.

போரைத் தவிர வேறு வழியில்லை

உடன்படிக்கை மீறப்பட்டிருப்பதால் ராஜகோட் டை மக்கள் பின்பற்றக்கூடிய வழி ஒன்றே ஒன்றுதா னிருக்கிறது. பிரஜைகள் தங்கள் சுதந்திரத்தை நிலை நாட்டவும், ராஜகோட்டையும், தாகூர் சாஹெப்பும் நிர்மூலமாவதைத் தடுக்கவும், உடனே சத்தியாக்கிரகம் ஆரம்பிக்குமாறு ஜனங்களை அழைக்க வேண்டியது தான்.

மாணவருக்கு புத்திமதி

“எப்பேர்பட்ட சந்தர்ப்பத்திலும் மாணவர்கள் சட்டமறுப்பிலும்,ஸ்டிரைக்குகளிலும் கலந்துக்கொள்ள கூடாது. அவர்களால் நிர்மாண வேலைகள் செய்ய முடியும்; இந்த வேலையில் அவர்களுக்கு நம்பிக்கை யிருக்கும் பட்சத்தில் அதில் ஈடுபட வேண்டும். இந்த

போர் நடந்து கொண்டிருக்கையில் ஜனங்களுக்கு கஷ்டங்கள் ஏற்படும். அப்பொழுது மாணவர்கள் வீடு வீடாகச் சென்று கஷ்டத்தை குறைக்க நிவாரண வேலை செய்யலாம். மனோ, வாக்கு, காயம் மூன்றிலும் அஹிம்சா முறையை அனுஷ்டிக்க வேண்டும். சகபாடிகளுடனும், விரோதிகளுடனும், நடுநிலைமை வகிக்கிறவர்களுடனும், சிறையிலும், வெளியிலும் இந்த முறையை அனுஷ்டிக்க வேண்டும். நாம் எவ்வளவுக் கெவ்வளவு சாத்வீகமாகப் போரை நடத்துகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு வெற்றியும் கிடைக்கும்."

"தாகூர் சாகிப்பை ஜனங்கள் பக்கம் திருப்ப அஹிம்சா ஆயுதத்தால் முடியும் என்ற நம்பிக்கை நம்மிடத்திருக்க வேண்டும். இன்றைக்கு அவர் பெயரளவில் மாத்திரம் தான் ராஜா. ஜனங்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை இந்த சிறு வயதான சமஸ்தானுதிபதி மீறி விட்டாரென்று அவருடைய பிரஜை ஒவ்வொருவரின் மனமும் புண்பட்டுப் போயிருக்கவேண்டும்."

"தர்பார் வீரவல்லா பற்றி நான் கடுமையாகச் சொல்லி யிருப்பது போல் தோன்றும். ஆனால் சில சமயங்களில் உண்மையும் கசப்பாக, கடுமையாக இருக்க வேண்டி யிருக்கிறது. அவரைப்பற்றி கூறப்படுகிறவைகளில் நான் நம்பியதையே இதில் குறிப்பிட்டு இருக்கிறேன். அவர் தவருக நடந்து கொண்டிருக்கிற போதிலும் அவரிடம் நாம் அன்பாக யிருக்கவேண்டும். அந்த அன்பானது அவரையும், அவர் செல்வாக்குக்கும், உத்திரவுக்கும் உட்பட்டுள்ளவர்களேயும் மன மாற்றம் செய்யுமென எதிர்பார்க்கவேண்டும். என்னுடைய தலையீட்டையும், ராஜகோட்டை ஜனங்களின் கொள்கையையும் திட்டத்தையும் உருவகப்படுத்துவதில் காங்கிரஸ் தன் செல்வாக்கை உபயோகிப்பதையும் ரெஸிடெண்ட் வெறுப்பதைக் குறித்து வருந்துகிறேன்."

சமஸ்தானங்களும், காங்கிரசும்

“சமஸ்தான மக்கள் எப்பொழுதும் காங்கிரஸ் யோசனைப்படியே நடந்து வருகிறார்கள். காங்கிரஸின் கட்டளைக்கு அவர்கள் கீழ்ப்படுகிறார்கள். ஏன், ஆரம்ப காலங்களில் காங்கிரசின் உதவியை பெற சமஸ்தானாதிபதிகளும் முன் வந்தனர். காங்கிரஸ் நடு நிலைமை கொள்கையை அனுஷ்டிப்பதென முடிவு செய்தது. அதாவது, பிரஜைகள் சமஸ்தானாதிபதிகள் தகராறுகளில் ஏற்படும் பிரச்னைகளை பாதிக்கும் விவகாரங்களில் நேராக கலந்து கொள்வதில்லையென்று தீர்மானித்தது. காங்கிரஸ் தன் சக்திக்குத் தகுந்தவாறு எவ்வளவு தூரம் செய்யலாம் என்பதை உணர்ந்ததைத்தவிர வேறு எதையும் இது காண்பிக்கவில்லை. ஆனால் பிரஜைகள் தங்களுக்கு உள்ள சக்தியை உணர்ந்து, கஷ்டத்தை அனுபவிக்க தயராயிருக்கும் போது, காங்கிரஸ் தன்னாலியன்றவரை அவர்களுக்கு உதவி செய்யத் தவறினால் தன் வேலையை புறக்கணித்தது போலாகிவிடும்.”

பட்டேலும், ராஜகோட்டையும்

என்னைப் பொறுத்தவரை, நான் கத்தியவார் ராஜ்ஜிய பரிஷத்தின் தலைவரா யிருப்பதால், கத்தியவார் மக்களுக்கும், கத்தியவார் சமஸ்தானாதிபதிளுக்கும் உதவி புரியவேண்டியது என் கடமையாகும். அவர்களுக்கு அவசியமானபோது என் உதவியை மறுக்கமாட்டேன். ராஜகோட்டையில் முதலில் ஜனங்களும், பின்னர் சமஸ்தானாதிபதியும் என் உதவியை நாடினார்கள். யாதொரு ஆக்ஷேபணையுமின்றி உதவியும் செய்திருக்கிறேன். இதில் என்ன பிசகு இருக்கிறது, ஏகாதிபத்திய சர்க்காரின் ரெஸிடெண்ட் வெறுக்கக் கூடியது என்ன இருக்கிறது என்பது எனக்குப் புலனாகவில்லை. இந்த பிரச்னையை முடிவுசெய்ய வேண்டியதற்குக் காரணமாயுள்ள கௌரவம் தற்செயலாய் ராஜகோட்டையைச் சாருகிறது.”

இப்பொழுது கத்தியவார்கள் மாத்திரம் இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வார்கள். கத்திய வார் ஜனங்களுக்குள் நெருங்கிய உறவு யிருப்பதால், எப்பேர்ப்பட்ட வேலையிலும் ஒரு கத்தியவாரை விலக்கிவிடுவது சாத்தியமான காரியமல்ல'' என்று சர்தார் பட்டேல் பொதுக்கூட்டத்தில் பேசினார்.

ராஜகோட்டை உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக எழுந்துள்ள தகராறு தீர்க்கப்படாவிட்டால், மீண்டும் போராட்டம் ஆரம்ப மாவது நிச்சயம். சீர்த்திருத்தத்தை தயாரிக்கவேண் டிய கமிட்டியில் யார் யார் மெம்பர்களாயிருப்பது என்பதுபற்றி தகராறு எழுந்திருக்கிறது. தர்பாரே வெளியிட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகள்படி கமிட்டியில் 10 கனவான்கள் இருக்கவேண்டும். எல் லாரும் சமஸ்தான அதிகாரிகள் அல்லது பிரஜைகளாக யிருக்கவேண்டும், "அவர்களில் மூவர் சர்க்கார் அதி காரிகளாவும், பாக்கி ஏழு பேர்கள் நமது சமஸ்தான பிரஜைகளாகவும் இருப்பார்கள், இவர்களுடைய பெயர்கள் இனி அறிவிக்கப்படும். கமிட்டியின் தலைவர் தர்பாரால் நியமிக்கப்பட்டவராயிருப்பார்.'' என சர்தார் வல்லபாய் பட்டேல் பம்பாயில் ஒரு பொதுக் கூட்டத் தில் அறிவித்தபடி இந்த ஏழு மெம்பர்களும் அவரால் நியமிக்கப்படவேண்டும்.

தாகூர் மறுப்பு.

சர்தார் பட்டேல் கூறிய 7 பெயர்களை தாகூர் சாகிப் ஏற்றுக்கொள்ள மறுப்பதாலேயே இந்த நெருக் கடி ஏற்பட்டுவிட்டது. சர்தார் பட்டேல் அனுப்பிய பெயர்களில் ஒரு முஸ்லிம் பிரஜையில் இருக்கிறதென் றும், முஸ்லிம் லீக்கின் இரு பிரதிநிதிகள் கமிட்டியில் மெம்பர்களாக யிருக்கவேண்டுமென்றும், தாகூர் சாகிப் விரும்புவதாகத் தெரிந்தது. முஸ்லிம் லீகர்கள் மெம் பர்களாக நியமிக்கப்பட்டால், அவர்களும், சர்க்கார்

மெம்பர்களுமாக சேர்ந்து கமிட்டி மெம்பர்களில் பாதி பேர்களாய் விடுவார்களென்றும், பிற்போக்கு யோசனைகளை வற்புறுத்துவார்களென்றும் உள்ளூர் காங்கிரஸ் காரர்கள் அஞ்சினார்கள்.

தான் கொடுத்த ஏழு பெயர்களையும் ஏற்றுக் கொள்ளாவிட்டால் மீண்டும் சத்தியாக்கிரகம் ஆரம்ப மாகுமென்று சர்தார் வல்லபாய் பட்டேல், தாகூர் சாகிபுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

சமஸ்தானாதிபதியின் சஞ்சல புத்தி.

கத்தியவார் பிரஜா மண்டல் தலைவர் ஸ்ரீ சமல் தாஸ் காந்தி, சர்தார் பட்டேலின் யோசனைப்படி கீழ்க் காணும் கடிதப் போக்குவரத்துகளை வெளியிட்டார்,

தாகூர் சாகிபுக்கும், சர்தார் பட்டேலுக்கும் டிசம்பர் மாதம் 26 தேதி ஏற்பட்ட உடன்படிக்கை.

தர்பார் பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செய்யவேண் டிய கடமைகளுக்கு முரணில்லாதவாறு பிரஜைகளுக்கு எவ்வளவு அதிகாரங்கள் கொடுக்கமுடியுமோ அவ்வளவு அதிகாரங்கள் கொடுக்கும் ஒரு சீர்திருத்தத்தை தயா ரிக்க ஒரு கமிட்டி அமைப்பதாக தாகூர் சாகிப் ஒப்புக் கொண்டார். இதில் 10 மெம்பர்கள் இருப்பார்கள். இவர்களில் 7 பேர்களை சர்தார் பட்டேல் நியமிக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தாகூர் கடிதம்.

அமர்சிங் செக்ரிடிரியேட்,

ராஜகோட்டை, சமஸ்தானம், டிசம்பர் 1938.

அன்பார்ந்த சர்தார் வல்லபாய்க்கு,

உங்கள் குறிப்பு இப்பொழுதுதான் கிடைத்தது, வந்தனம். இன்று மாலை 5-மணிக்கு நீங்கள் இங்கு வந்து என்னுடன் டீ சாப்பிட்டால் பெரிதும் மகிழ்ச்சி

யடைவேன். அப்பொழுது, என்னுடைய கவுன்சில் மெம்பர்கள் முன்னிலையில் தற்கால நிலைமைப்பற்றி நாம் விவாதிக்கலாம்.

தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) தர்மேந்திர சிங்.

தாகூருக்கு, திவான் கடிதம்.

அமர்சிங் செக்ரிடரியேட்,
1-10-38.

ராஜா அவர்களுக்கு இரவு 8-மணிக்குள்ளாக நான் உங்களைப் பார்க்க அனுமதிக்குமாறு நேற்று உங்களைக் கேட்டிருந்தேன். எனக்கு அசௌகர்யமாயிருந்த போதிலும், தங்களுக்கு சௌகர்யமான நேரமாயிருக்க வேண்டுமென்றுதான் 8-மணி என்று சொன்னேன். 8-30-மணிக்குப் பார்ப்பதாக சொல்லியனுப்பினீர்கள். அந்த நேரத்திற்கு வந்தேன். நீங்கள் ஸ்னானம் செய்வதாக என்னிடம் கூறப்பட்டது. 9-மணி வரையில் காத்திருந்தேன், நீங்கள் வர இன்னம் கால் அல்லது அரைமணி யாகுமென்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் உடனே புறப்பட்டேன். இந்த படுமோசமான, மரியாதைக் குறைவான விதத்தில் நடத்தப்படுவதற்கு நான் இனியும் உள்ளாகத் தயாராயில்லை யென்பதை தெரிவிக்கவே இக்கடிதத்தை எழுதுகிறேன். உங்களுக்கு உதவி செய்ய நான் லண்டனை விட்டுப் புறப்படுகையில் உமது நடத்தை இப்படியிருக்குமென்று நான் நினைக்கவில்லை. இனியும் அதை அனுமதிக்க முடியாது.

இந்த நிலைமை இப்படியே இருக்கமுடியாதென்று நேற்று நான் உம்மிடம் சொல்ல விருந்தேன். சமஸ்தான விவகாரங்களின் நிலைமை நெருக்கடியா யிருக்கிறது. சர்க்கார் மீதுள்ள பல புகார்கள் உமது நடத்தையைப்பற்றியதா யிருக்கின்றன. சமஸ்தான வரு

மானத்தில் நீங்கள் ரொம்ப பெரியபங்கை செலவழிக்கிறீர்கள், உதவாக்கரை விஷயங்களிலேயே அந்த பணத்தில் பெரும்பாகத்தை விரயம் செய்கிறீர்கள், சமஸ்தான நிர்வாகத்தில் கொஞ்சம்கூட பங்கெடுத்துக்கொள்வது கிடையாது என்று நம்பப்படுகிறது, நிர்வாகத்தில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்வதில்லையென்பதும், உமது பிரஜைகளின் யோக க்ஷேமத்தில் அக்கரையே காண்பிக்கிறதில்லை யென்பதும் முற்றிலும் உண்மையான விஷயம். நீர் ஒன்றும் செய்வதேயில்லை.

அடக்கு முறையினால் வரும் அபகீர்த்தியை உமது அதிகாரிகள் மாத்திரம் பெறவேண்டுமா? இது எப்படி நியாயமாகும்? நீர் ஏதாவது பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்! கீழ்கண்டபடி நீர் நடந்துகொள்ள வேண்டுமெனக் கூறுகிறேன்.

(1) இன்று மாலை யக்ஞவைபவத்தில் நீங்கள் கலந்துக்கொள்ளப் போவதாக அறிகிறேன். அது முடிந்த பின் நீர் நகர தெருக்கள் வழியாக வண்டியில் செல்ல வேண்டும். நானும் பின்னேடு வர அனுமதிக்க வேண்டும். (2) திங்கட்கிழமையன்று மாலை 6 மணிக்குள்ளாக ஹஜூர் ஆபீசுக்கு வந்து, மனுக்களைச் சமர்ப்பித்திருக்கிறவர்களின் குறைகளை சுமார் ஒரு மணிநேரத்திற்கு கேட்பதாக நீர் சத்தியம் செய்யவேண்டும். (3) உம்மைப் பார்க்கவேண்டுமென்று எப்பொழுது நான் கேட்டுக் கொள்கிறேனே, அன்று மாலை 7-30குள்ளாக என்னைப் பார்க்க வேண்டும். கால் மணிக்குமேல் தாமதம் செய்ய மாட்டீரென சத்தியமாகக் கூறவேண்டும். இந்த யோசனைகளுக்கு நீர் இணங்காவிட்டால், இங்கே வேலை பார்க்க முடியாது, லண்டனுக்குப் போகவேண்டும் என்று நான் ரெஸிடெண்டிடம் சொல்லிவிடுவேன். அப்படிச் செய்யும்படி நேரிட்டால், உமக்கும் உமது சமஸ்தானத்திற்கும் ரொம்பவும் தீங்கு வந்துவிடும். இன்று மாலை 5-30க்குள் பதில் அனுப்புங்கள்.

(ஒப்பம்) பாட்ரிக் காடெல்.

தாகூர் பதில்.

ரகசியக் கடிதம்.

ராஜித் விலாஸ் அரண்மனை,
ராஜ்கோட்டை 2-10-38.

அன்பார்ந்த சர் பாட்ரிக்,

உமது கடிதத்தின் தொனி எனக்குப் பிடிக்கவில்லை. என் மேலுள்ள புகார்கள் உண்மைகளை ஆதாரமாகக் கொண்டவைகள் என்று நான் ஒப்புக்கொள்ள முடியாது. இப்பொழுது நடைபெறும் கிளர்ச்சி, பொறுப்பாட்சியை ஸ்தாபிக்க நடத்துமாறு காங்கிரஸால் கிளப்பப்பட்டிருக்கும் இயக்கமாகும். மைசூர். திருவாங்கூரை பொறுக்கி எடுத்ததைப்போல் அவர்கள் (காங்கிரஸ்) கத்தியவாரை பொறுக்கி யெடுத்திருக்கிறார்களென்று நம்புகிறேன். இயக்கத்தை ஒடுக்கவே உம்மை தருவித்தேன். உமது வேலையைச் சுலபமாக்க இன்னும் விரும்புகிறேன். தசராவுக்குப் பின் எனது சௌகர்யப்படி எந்த நாளாவது ஆபீசுக்கு வருவேன். நீர் போனால், எனக்கும், சமஸ்தானத்திற்கும் தீங்கு ஏற்பட்டு விடுமென்று நீர்மிரட்டுவதை பலமாக ஆட்சேபிக்கிறேன். நானே உம்மை, என்னுடைய திவானாக நியமித்தேனென்பதையும் ஏதாவது அபிப்ராயபேதம் எழுந்தால் நான் உம்மை டிஸ்மிஸ் செய்வேனென்பதையும் திட்டமாக அறிந்து கொள்ளுங்கள். ரெவிடெண்டோ, வைசிராயோ என்னை மனக்கசப்புடன் நடத்த யாதொரு காரணமுமில்லை. என்னைப்பற்றியோ உமக்குத் தெரிந்த தகவல்களெல்லாம் நீர் என் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருப்பதால்தான். என் அனுமதியின்றி என் சமஸ்தான தஸ்தாவேஜுகளை நீர் உபயோகிக்கக்கூடாதென்பதையும், மேலும் என் விருப்பத்திற்கு மாறாக தொடக் கூடாதென்பதையும் நான் சொல்லத் தேவையில்லை. ரெவிடெண்டுக்கு ஏதே

னும் தகவல் வேண்டியிருந்தால்கூட என் இஷ்டத்தின் பேரில் தான், என் திவான் மூலம் தெரிந்துக்கொள்ள முடியும், எனவே உமது முடிவை மாற்றி, என் கௌரவத்திற்கும், கொள்கைக்கும் உகந்தவாறு நடந்து கொள்ள சம்மதிக்கவும்.

தங்கள் உண்மையான,
(ஒப்பம்) தர்மேந்திர சிங்

திவானுக்கு, தாகூர் கடிதம்

16-10-38.

அன்பார்ந்த சர். பாட்ரிக்,

இப்பொழுதுள்ள நிலைமை உமக்குத் தெரியுமென்றே நம்புகிறேன். எந்த விதத்திலும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. நாளுக்கு நாள் மோசமாய்க் கொண்டே வருகிறது. இப்பொழுது உச்ச ஸ்தானத்துக்கு வந்து விட்டது. எனவே இந்த துரதிருஷ்டமான நிலைமை அடியோடு தளர வேண்டும். கூடிய சீக்கிரத்தில் ஜனங்களுக்கும் எனக்கும் ஏதேனும் ஒரு திட்டமான உடன்படிக்கை ஏற்படவேண்டும்.

நாம் அன்று ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். சில சலுகைகள் அளிப்பதாகக் கூறினோம். ஆனால் அதனால் நிலைமை தளரவில்லை. விரும்பிய பலன் கிடைக்கவில்லை. சரியான சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்காமையால் கட்டுக்கு மீறி விட்டது. என் கஷ்டங்களை பெரிதும் அதிகமாக்குகிறது. இயக்கமோ நாளுக்கு நாள் கடுமையாகி வருகிறது.

நீர் பிரிட்டிஷ் சர்க்காரால் அனுப்பப்பட்டிருக்கிறீர், இத்தனை நாளும் எனக்கிருந்த அந்தஸ்து தொலைந்து விட்டது என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். அப்படி நினைக்கும்படி விடப்பட்டிருக்கிறது. நீர் வருவதற்கு முன்னால் அவர்கள் என்னிடம் காண்பித்த அன்பையும் விஸ்வாஸத்தையும் இனியும் காண்பிக்க மறுக்கிறார்கள். இதோடு மாத்திரமா? ஆட்சிபுரி

கிறது நான் அல்ல, நீர் தான் என்று கூட நினைக்கிறார்கள். தீபாவளி விடுமுறை வருகிறது. 'கண்டிராக்டு' களை வழக்கம் போல கொடுத்துவிட வேண்டும். ஜனங்கள் அதை பகிஷ்கரித்து விட்டார்கள். தான்யங்கள், விற்பனையைக்கூட பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர். இந்த வருஷம் தானியங்கள் விற்பனையாகாது. எனவே, சமஸ்தான சர்க்கார் இன்ஸால்வெண்டாகிவிடும். இதனால் ஏற்படக்கூடிய நெருக்கடியை சொல்வதற்கு பதிலாக மனதில் நினைத்துக்கொள்வதே மேலானது. ஜனங்களும் திடமனதுடன் பிடிவாதமா யிருக்கிறார்கள்.

ஜனங்கள் நான் ஒருவன்தான் ஆட்சி புரிகிறவன் என்பதை அங்கீகரிக்காமலிருக்கும் வரை இது விஷயமாக என்னால் ஒன்றும் செய்யமுடியாதென நினைக்கிறேன். எனவே, பொதுஜனங்கள் என்னை உண்மையான, தர்மிஷ்டரான அதிபதி என்று கருதும் வகையில் நான் என்னுடைய அந்தஸ்தை மீண்டும் பெறவேண்டியது என்னுடைய கடமையாகும். சமரசத்தால்தான் அவர்களுடன் சமரசத்திற்கு வந்து, அவர்களுடைய அன்பையும், நம்பிக்கையையும் பெற முடியும்.

இதுவிஷயமாக உங்கள் அபிப்பிராயமென்னவென்று அறிந்து வருமாறு டி. எஸ். வீரவல்லாவை அனுப்பினேன். சமஸ்தானத்தின் நிதி அனுமதிக்கும் வரை சண்டை நடந்ததே தீரவேண்டும்; கடைசியில் நமக்கா, அல்லது அவர்களுக்கா ஜயம் கிடைக்கிறது என்பதை பார்த்துவிட வேண்டும் என்று நீர் அவரிடம் கூறியிருக்கிறீர்.

டிஸ்மிஸ்

இந்த கொந்தளிப்புக்கு நானே காரணமென்று அக்டோபர் மாதம் 1ந்தேதி எனக்கு எழுதிய கடிதத்தில் உமது அபிப்ராயத்தை தெரிவித்திருக்கிறீர். என் பதில்மூலம் இந்த குற்றச் சாட்டுகளை மறுத்திருக்கிறேன்.

உமது கடிதத்திலுள்ள குற்றச்சாட்டுகளையும் உமது மனோபாவத்தையும் கவனிக்கையில் நாம் இருவரும் சேர்ந்து வேலைசெய்ய முடியாதென முடிவுக்கு வந்துள்ளேன்.

என் சமஸ்தானத்தின் நலனையும், என் உரிமைகளையும், அந்தஸ்தையும் உத்தேசித்து, தீபாவளிக்குள்ளாக இந்த சமஸ்தான சச்சரவு தீர எனக்கும், பிரஜைகளுக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட வேண்டுமென விரும்புகிறேன். நாம் சீக்கிரத்தில் பிரிந்துபோனாலொழிய இது சாத்தியமில்லை. 6 மாத காலத்திற்கு உம்மை நியமித்தேன். எனவே, அந்தகாலத்திற்கு உமக்கு சம்பளம் கொடுக்குமாறு சமஸ்தான கஜான்ஜிக்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

வேலையிலிருந்து உம்மை விடுவிக்குமாறு ரெவின்யூ காரியதரிசி ஸ்ரீ பக்கிடம் கூறியிருக்கிறேன்.

தங்கள் உண்மையான,

(ஒப்) தர்மேந்திர சிங்.

ரகசியக் கடிதம். டி. ஓ. ஸி. 134-39.

ரெஸிடெண்ட் ஸ்ரீ. இ.ஸி. கிப்ஸன் 26-10-39ல் தாகூருக்கு எழுதிய கடிதம்.

எனது அன்பார்ந்த தாகூர் சாகிப், சர். பாட்ரிக் காடெலை டிஸ்மிஸ் செய்வதாகக் கூறினீர். உடனே நாமிருவரும் கூடினோம். டிஸ்மிஸ் செய்ய வேண்டாமென உம்மிடம் கூறினேன். அப்படிச் செய்தால் உமது சமஸ்தானத்திற்கும், உமக்கும் தீங்கு ஏற்படுவதை தவிர்க்க முடியாதென்று சொன்னேன். இது சம்பந்தமாக எனக்கு இதுவரை யாதொரு பதிலும் வராததால், அக்டோபர் 22ல் நான் உம்மைப் பார்த்தபின் என்ன செய்திருக்கிறீர் என்பதை கூடிய சீக்கிரத்தில் தெரிவிக்கவும்,

தங்கள் உண்மையான,

(ஒப்) இ. ஸி. கிப்ஸன்

தாகூர் சரணாகதி

29-10-38ல் தாகூர் சாஹேப், ரெஸிடெண்ட் கிப்ஸனுக்கு எழுதிய கடிதம்.

அன்பார்ந்த கிப்ஸன், தாங்கள் 26ந் தேதி எழுதிய ரகசியக் கடிதம் கிடைத்தது. மிக்க வந்தனம்.

வைசிராயின் விருப்பத்திற்கும் உமது மனப்பூர்வமான யோசனைக்கும், சிபார்சுக்கும் இணங்கி சர். பாட்ரிக் காடெலை, இனியும் திவானாக வைத்துக் கொள்வதென்று முடிவு செய்துள்ளேன். இருந்த போதிலும் டிஸ்மிஸ் விஷயமாக சட்டம் என் பக்க மிருக்கிறதென்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சர். காடெல் இன்னம் என் சமஸ்தானத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் கொண்ட ஒரு கமிட்டியை சமஸ்தான நிர்வாகத்தை கவனிக்க நியமித்திருக்கிறேன்.

இம்மாதம் 17-ந் தேதி பேசிக் கொண்டிருக்கையில் கவுன்ஸில் அமைப்பதை நீங்கள் அங்கீகரித்திருக்கிறீர்கள். அதன் பேரிலே இந்த கவுன்சில் நியமிக்கிறேன். இது விஷயமாக உங்களுக்குத் தொந்தரவு கொடுத்ததற்காக வருந்துகிறேன்.

தங்கள் உண்மையான,

(ஒப்பம்) தர்மேந்திர சிங்.

வீரவல்லாவுக்கு ரெஸிடெண்ட் எச்சரிக்கை

ராஜகோட்டை, 25-1-38.

அன்பார்ந்த வீரவல்லா,

உமது கடிதம் வந்து சேர்ந்தது. ராஜகோட்டைக்கு இன்று காலை நான் திரும்பியதும் நீர் இங்கு வந்திருந்ததாக கேள்விப்பட்டேன். இது மிகவும் ஆச்சர்யமாக யிருந்தது.

அனந்தராய் பட்டாணி (பவநகர் திவான்) உம்மை பார்க்க விரும்பினால், அவர் உம்மை பவ நகருக்கு வரச்

சொல்லியிருக்கலாம்; அல்லது அவரே நட்வார் நகருக்கு வந்திருக்கலாம். நட்வார் நகர், ராஜகோட்டைக் காட்டிலும் பவநகருக்கு சமீபத்திலிருக்கிறதே அவர் ஏன் இப்படி அசாதாரணமாக உம்மை கேட்டுக் கொண்டாரென்பதும் நான் கொடுத்த யோசனைக்குப் பிறகும் நீர் ஏன் அந்த வேண்டுகோளுக்கு இணங்கினீர் என்பதும் எனக்குப் புரியவில்லை. நீண்டநாள் நோய்வாய்ப்பட்டிருக்கிறீர் இவ்வளவு தூரம் பிரயாணம் உமது உடல் நலத்திற்கு ஏற்றதல்ல.



கத்தியவார் சமஸ்தானங்களின் ரெஸிடெண்ட் ஸ்ரீ கிப்ஸன்.

தங்கள் உண்மையான,
(ஒப்பம்) இ. ஸி. கிப்ஸன்.

வீரவல்லாவுக்கு அரசியல் ஏஜெண்ட் கடிதம்

ராஜகோட்டை, 29-1-38.

அன்பார்ந்த வீரவல்லா,

நேற்று நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. நான் ரெஸிடெண்டுக்கு எழுதிய கடிதத்திற்கு பதில் வரும் வரை ராஜகோட்டையில் யாரையும் பார்ப்பதில்லையென நீர் என்னிடம் உறுதிகூறிய பின், அரண்மனைக்கு நீர்

சென்ற தகவலைக் கேட்டு ஆச்சர்யப்பட்டேன். உங்கள் நலத்தை யுத்தேசித்தே இது புத்திசாலித்தனமல்ல வென்பதை நீர் உணர்ந்திருக்கிறீர்க ளென்று எண்ண வேண்டி யிருக்கிறது. உள்ளூர் விவகாரங்களில் தலை யிடாதீர். யாரையும் சந்திக்காதீர்.

தங்கள் உண்மையான,

(ஒப்பம்) வி. கே. டாவி.

தாகூருக்கு சரமாரி கேள்விகள்

டிஸம்பர் மாதம் 28௳ ரெஸிடன்ஸி ஆபீஸில் நடந்த பேச்சுகள் எழுதப்பட்ட குறிப்புகளின் சாரம் கீழே தரப்பட்டுகிறது. அங்கு பிரசன்னமாக யிருந்த வர்கள்: கிப்ஸன், தாகூர் சாஹெப், சர். காடெல், ராவ் சாகிப் எம். வி. பட்டேல், ஜயந்தி லால், ஜோபன்புத்ரா (கடைசி மூவரும் நிர்வாக கவுன்ஸில் மெம்பர்கள்.)

தாகூர் சாஹெப்பால் செய்துக் கொண்ட உடன் படிக்கை எல்லா சமஸ்தானதிபதிகுட்பட்ட உடன் படிக்கை, எல்லா சமஸ்தானதிபதிகளையும் கதி கலக்கச் செய்து விட்டது என்று ஸ்ரீ. கிப்ஸன் பேச்சை ஆரம் பித்தார். சர்தார் வல்லப பாய் பட்டேல் எப்படி ராஜ கோட்டைக்கு வந்தாரென்பதையும், தாகூர் அவரை அழைத்தாரா வென்பதையும் கூறுமாறு ரெஸிடெண்ட் கேட்டார்.

தாகூர் சாஹெப்: "அவராக வந்தார் என்னை சந்திக்க வேண்டுமென்றார். நான் அவரை தேநீருக்கு அழைத்தேன்."

ஸ்ரீ. கிப்ஸன்.—"சரி, அவர் ரொம்ப நம்பக் கூடாத பேர்வழி. வெளியார் தலையீட்டை அநுமதிக் கக்கூடாதென்பது இந்திய சர்க்காரின் விருப்பமென் பது உமக்கு நன்றாகத் தெரியும். அவருடன் நீர் ஒப் பந்தம் செய்து கொண்டதால் உமது சகபாடிகளான சமஸ்தானதிபதிகளின் அநுதாபத்தையும் நீர் இழந்து

விட்டீர். நீர் செய்வதைப்பற்றி இந்திய சர்க்கார் லட்சியம் செய்யாதபோதிலும், சர்தார் பட்டேல் மூலம் சமரசம் செய்துகொண்டதில் நீர் பிசகு செய்துவிட்டீர். " இருந்தபோதிலும் உங்கள் சர்க்கார் அறிக்கையிலுள்ள உடன்படிக்கையின் வார்த்தைகள் ரொம்பவும் மோசமானதாகயில்லை 'சாத்தியமான எல்லா அதிகாரமும்' என்ற வார்த்தை ஒன்றுதான் தொந்தரவு கொடுக்கிறது. அந்த வார்த்தைக்கு எப்படி வேண்டுமானாலும் வியாக்யானம் செய்யலாம். அது உம்மை பொம்மை ராஜாவாக ஆக்கிவிடும். இந்த வார்த்தைகளை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பத்திலேயே அவர்கள் பூர்ண பொறுப்பாட்சி சர்க்கார் கோருவார்கள். ரொம்ப ஆபாஸமான நிலைமையில் நீர் இருப்பீர்.

தாகூர் சாஹெப் : " இல்லை, நான் ஒரு கமிட்டியைத் தான் நியமித்தேன்."

ஸ்ரீ.கிப்ஸன் : ஆமாம் ஆனல் கமிட்டியின் மெம்பர்களை யார் நியமிப்பார்கள்? அதன் ரிப்போர்ட்டை அப்படியே அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமா."

தாகூர்சாகிப் : " சரி. சாதார் வல்லபாய் பட்டேல் பெயர்களைக் கூறுவார்."

ஸ்ரீ. கிப்ஸன் : " ஆம், அப்படித் தான். அதாவது 'சாத்தியமான எல்லா அதிகாரங்களும்' என்ற வார்த்தைகளை உத்தேசித்து பூர்ண பொறுப்பாட்சி கேட்க்கும் காங்கிரஸ்காரர்கள்.'

சர். பாட்ரிக் : " பட்டேல் எப்படி பெயர்களைக் கொடுப்பார்? நாம் அவருக்கு எழுதவேண்டுமா?

தாகூர் : இல்லை. அவரே பெயர்களை எழுதியனுப்புவார்.

ஸ்ரீ. கிப்ஸன் : கமிட்டியின் ரிப்போர்ட்டை அப்படியே அமுலுக்குக் கொண்டுவருவதாக ஒரு ஷரத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறீர். அது ரொம்ப மோசமானது. உமது வாக்கை கொடுத்துவிட்டீரே.' '

கமிட்டியின் தலைவர் யாராக யிருப்பாரென்று ஸ்ரீ கிப்ஸன் தாகூரைக் கேட்டார்.

தாகூர்:—தர்பார் வீரவல்லா.

கிப்ஸன்:—"கிடையாது. அவர் வரவே கூடாது."

தாகூர்:—"ஏன் ? அவர் ரஜா காலம் முடிந்தபின் அவர் வருவார்."

ஸ்ரீ. கிப்ஸன் :—கிடையாது. அவர் ஒரு தாலுக் தார். அவர் வர முடியாது. இப்பொழுது வர அவரை நான் அனுமதிக்கமாட்டேன்.

தாகூர் :—"கிடையாது. சர். பாட்ரிக் போன பின் அவர் வரலாம்."

கிப்ஸன் :—சர். பாடிரிக் போன பிறகு அதைப் பார்த்துக் கொள்ளலாம்."

27-12-38ல் தாகூர் சாகிப் சர்தார் பட்டேலுக்கு எழுதியுள்ள கடிதத்தில் திவான் சாஹெப் வீரவல்லா வின் மீது ஜனங்களுக்குள்ள அதிருப்தியை அகற்று மாறு வேண்டிக்கொண்டிருக்கிறார். உடன்படிக்கை ஏற்பட உதவி புரிந்ததற்கு பட்டேலுக்கு தமது நன்றி யைச் செலுத்தி யிருக்கிறார்.

சர்தார் பட்டேலுக்கு இதற்குப் பின் நிர்வாக கவுன்ஸில் மெம்பர் மானதல்லால் பட்டேல் எழுதிய கடிதத்தில் சர்தார் கூறிய 7 பெயர்களை கமிட்டியில் நியமிக்க தாகூர் மறுப்பது அறிவிக்கப்பட்டது. இதற்குப் பின் சர்தார் பட்டேல் மேற்கண்ட கடிதப் போக்குவரத்துகளை பிரசுரிப்பதாக தாகூருக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார், இதற்குப்பலனில்லாமற் போகவே ஷை கடிதப் போக்குவரத்துகள் வெளி வந் திருக்கிறது.

பழைய பாடம்

ராஜகோட்டையில் சத்யாக்ரகம் செய்தவர்களில் ஐவராகிய ஸ்ரீமான்கள். திபார்பாய், பீச்சர்வாலா,

வாதர் கோவிந்தராம், சங்கர்ஜி, வித்தல் தாஸ் போதானி ஆகியோருக்கு தலா இரு வருஷ கடுங்காவலும், ரூ. 1000 அபராதமும், செலுத்தத்தறறிஞல் இன்னம் ஒரு மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. ஸ்ரீமான்கள். ஒதாவ்ஜி அஹ்ஜா, சௌபாக்யசந்த் மோடி இருவருக்கும் தலா ஒரு வருஷ கடுங்காவலும் ரூ. 500 அபராதமும், செலுத்தத்தவறினல் இன்னம் ஒரு மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. ஸ்ரீமான்கள் பாலுபாய், ஹரிராம், ஜயசுக்லால், கிரான்ஷன்ஜி, ரதிலால் தன்னு, ரதிலால் ரவால், ரப்ஸிதிடா, பால் சந்தரானு ஆசியோருக்கு தலா 6 மாத கடுங்காவல் தண்டனையும் ரூ. 200 அபராதமும் செலுத்தத்தவறினல் இன்னம் ஒரு மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. தீசர்லால் கே. ஜஸாணிக்கு 6 மாத வெறுங்காவல் தண்டனையும் ரூ. 500 அபராதமும் விதிக்கப்பட்டது.

லண்டனில் காந்திஜிக்கு விருந்தளிப்பவராகயிருந்த மிஸ் மூரியல் லெஸ்டர் ராஜகோட்டையில் தங்கியிருந்தபோது, ஜனங்கள் நடத்திவரும் சத்யாக்ரஹ இயக்கத்தைக் கண்டார். 24 மணி நேரத்திற்குள் 18-வது சர்வதிகாரி ஸ்ரீ. ஜீதாலால் ஜோஷி உள்பட 13 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தாகூர் சாஹெப் அறிக்கை

ஜன. 29-ம் தேதி ராஜகோட்டையில் தாகூர் சாஹெப் அவருடைய பிரஜைகளுக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில், 'வெளியார்களின் கை ஆயுதமாக நீங்கள் இருக்கக்கூடாது' என்று கேட்டுக்கொண்டார்.

மேலும் கூறியதாவது "வெளியார்கள் சொல்கிறபடி கேட்கும் பிரஜாமண்டல் எப்படியாவது சண்டைபோட விரும்புவது இப்பொழுது நன்றாகத் தெரிகிறது. சட்டத்தையும், மீறுமாறு ஜனங்களைத் தப்பான வழியில் கொண்டுபோய்க் கொண்டிருக்கிறது. ராஜகோட்

டையில் ஒரு சோதனை போராட்டத்தை நடத்துவதே வெளி ஊழியர்களின் பகிரங்கமான நோக்கமெனத் தெரிகிறது. இந்தியாவிலுள்ள எல்லா சமஸ்தான மக்கள் சார்பாகவும் போராட்டம் நடக்கிறது என்ற பெயரில் நமது அருமைப் பிரஜைகள் சொல்லொணுக் கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறுர்கள்." என நீலிக்கண்ணீர் வடித்தார்.

டில்லி தெய்வங்களின் ஆக்ஞை

இந்திய சர்க்கார் பிப். 1-ல் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள்.

ராஜகோட்டை, ஜயப்பூர் சமஸ்தானங்களில் சமீபத்தில் நடந்தவைகளைப்பற்றி காந்திஜி வெளியிட்டுள்ள அறிக்கை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ராஜகோட்டை விஷயத்தில் காந்திஜி, "தாகூர் சாஹெப்பைத் தலைவராகக் கொண்ட நிர்வாக கவுன்சிலுக்கும், ஜனங்களின் பிரதிநிதியான சர்தார் வல்லபாய் பட்டேலுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் ரெஸிடெண்டால் தகர்க்கப்பட்டது" என்றும், "உடன்படிக்கை அமுலுக்கு வரும்படி செய்யுமாறு ரெஸிடெண்டுக்கு உத்தரவிடவேண்டியது வைசிராயின் கடமை" என்றும் குறிப்பிட்டிருக்கிறுர். உண்மையில் நடந்தது இது தான். அரசியல் சீர்திருத்த திட்டத்தைத் தயாரித்து சர்க்காருக்கு சிபார்சு செய்வதற்காக ஒரு கமிட்டியை அமைக்க வேண்டுமென்று தாகூர் சாஹெப்பை தலைவராகக் கொண்ட நிர்வாகக் கவுன்ஸிலுக்கும், சர்தார் பட்டேலுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்த விவரங்கள் சென்ற டிசம்பர் மாதம் 26ந் தேதி சமஸ்தான கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது. கமிட்டியில் சர்க்கார் அதிகாரிகள் எவ்வளவு பேர் இருக்க வேண்டும், உத்யோகப் பற்றில்லாதவர்கள் எவ்வளவு

பேர் இருக்க வேண்டும் என்பதும் அந்த அறிக்கையில் வெளிவந்தது. இதைத் தவிர கமிட்டியின் அமைப் பைப்பற்றியோ, எந்த முறைப்படி மெம்பர்களைப் பொறுக்கி யெடுக்க வேண்டும் என்பதைப்பற்றியோ ஒன்றும் கூறப்படவில்லை. இதே சமயத்தில் தாகூர் சாஹெப்புக்கும், சர்தார் பட்டேலுக்கும் கடிதப் போக்கு வரத்து நடந்து வந்தது. இந்த கடிதங்கள் பிரசுரிக்கப்படவில்லை. தாகூர் சாஹெப் பட்டேலுக்கு பின்கண்ட கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்.

ராஜகோட்டை 'அமர்சிங் செக்ரிட்டேரியட்,'

சமஸ்தானம்,

26-12-38.

"இன்றைய தேதியில் வெளிவந்த சர்க்கார் அறிக் கையில் 2-வது ஷரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கமிட்டிக்கு ஏழு மெம்பர்களை சர்தார் வல்லபாய் பட்டேல் சிபார்சு செய்ய வேண்டுமென்றும் அவர்கள் நம்மால் அந்த கமிட்டியில் நியமிக்கப் படுவார்களென் றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்) தர்மேந்திர சிங்,

தாகூர் சாஹெப்.

தாகூர் வியாக்யானம்

சர்தார் பட்டேல் சிபார்சு செய்யும் நபர்களை ஏற் றுக்கொள்ளவோ, மறுக்கவோ இந்த கடிதம் தனக்கு உரிமையளிப்பதாக தாகூர் சாஹெப் கூறுகிறார். எந்த பெயர்களை சிபார்சு செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ளுமாறு தாகூர் சாஹெப்பை கட்டுப்படுத்துவதே கடிதத்தின் நோக்கமென பட்டேல் கூறுகிறார்.

சர்தார் பட்டேல் சிபார்சு செய்த பெயர்களில் 3 பெயர்களை தாகூர் சாஹெப் ஏற்றுக்கொண்டார். சமஸ் தானத்திலுள்ள முஸ்லிம்களுக்கும், பய்யாக்களுக்கும்

போதிய பிரதிநிதித்வம் அளிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு. பாக்கி 4 பெயர்களையும் ஏற்க மறுத்து விட்டாராம். முஸ்லிம்களும் பய்யாக்களும் தங்களுக்கும் கமிட்டியில் பிரதிநிதித்துவம் வேண்டுமென சர்க்காருக்கு மனுச் செய்திருந்தார்களாம். தாகூரின் உத்தரவுப்படி அவருடைய மந்திரி இச்செய்தியை சர்தார் பட்டேலுக்கு தெரிவித்தார். சர்தார் பட்டேல் தாகூர் சாஹேப்பின் யோசனையை கவனிக்கக்கூட மறுத்து பதில் எழுதியிருந்தார். தான் கொடுத்த அத்தனை பெயர்களையும் ஏற்கத்தான் வேண்டும் ; அதற்குக் குறைவான எதற்கும் சம்மதிக்க முடியாது என்று திட்டமாக அறிவித்து விட்டார்.

தாகூர் சாஹேப், அவர் இஷ்டப்படியே பின்னர் ஒரு முடிவுக்கு வந்தார். (ஒப்பந்தத்தை மீறியது). நடைபெற்ற கடிதப்போக்கு வரத்துபற்றி ரெஸிடெண்டுக்கு ஒன்றுமே தெரியாது. நடந்தது இதுவாக இருக்க வேறு ஏதோ நடந்திருப்பதாக தாகூர் சாஹேப் ஒப்புக்கொள்ள வேண்டுமென காந்திஜி தன் கடிதத்தில் யோசனை கூறுகிறார். இதை ஒப்புக்கொள்ளுமாறு தாகூர் சாகிப்பை நிர்ப்பந்திப்பது நியாயமாகாது. "கட்டுப்பாடான காலித்தன"த்தில் ரெஸிடெண்ட் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது என்று காந்திஜி சொல்லுகிறார். இந்த தகவல் எங்கிருந்து வந்தது என்பதை காந்திஜி தெரிவிக்கவில்லை. இந்த தகவல் ஆதாரமற்றது. ஜயப்பூரைப் பொறுத்தவரை, காந்திஜியின் அறிக்கைக்கு என்ன தக்கபதில் கொடுக்க வேண்டுமோ அதை ஜயப்பூர் சர்க்கார் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று அதிகாரிகள் மழுப்பி விட்டார்கள்."

தலைவர்கள் கைது

பிப்ரவரி 1 தேதி ஈத் பண்டிகை யாதலால் பிரஜா பரிஷத் இன்று கூட்டங்களையோ, ஊர்வலங்களையோ

நடத்தவில்லை. ஆனால் போலீஸ் கோஷ்டியினர் அவரவர்கள் ஸ்தானத்தில் நின்றுகொண்டிருந்தனர். ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி, மணி பென் பட்டேல், மிஸ். மிருதுலாபென் சாராபாய் மூவரும் இந்த வாரத்தில் இங்கு வந்து சேருவார்களெனத் தெரிந்தது. காந்திஜியின் காரியதரிசியாகயிருந்த ஸ்ரீ. சகன்லால் ஜோஷி, சமஸ்தான அசெம்ப்ளித் தலைவர் ஸ்ரீ. பாபட்லால் ஆனந்தா, பிரபல வக்கீல் ஸ்ரீ. ஹரிகிருஷ்ணலால் பாண்டியா, சீர்திருத்தக் கமிட்டியிலிருந்து ராஜிநாமாச் செய்த ஸ்ரீ. பாபட்லால் மாளவ்யா ஆகிய நால்வரும் இன்று சமஸ்தான போலீஸால் கைது செய்யப் பட்டனர்.

ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் புறப்பட்டார்

பிப்ரவரி, 1 தேதி ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காந்தியும், மிஸ். மணிபென் பட்டேலும் ராஜகோட்டை சத்யாக்ரஹ இயக்கத்தில் கலந்து கொள்வதற்காக ராஜகோட்டைக்கு பிரயாணமானார்கள். ராஜகோட்டையில் இப்பொழுது நடைபெறும் இயக்கத்தில் தான் கலந்து கொள்ள வேண்டுமென்று ஸ்ரீமதி கஸ்தூரிபாய் பிடிவாதமாயிருந்தார். சென்ற இயக்கத்தின்போது மணி பென் கைது செய்யப்பட்ட தகவலைக் கேட்டவுடன் ஸ்ரீமதி. காந்தி ராஜகோட்டை செல்லவேண்டுமென்று கூறினார். அவர் ராஜகோட்டை வாசி. தங்களால் முடிந்த எல்லாவித பயங்கரச் செயல்களாலும் ஜனங்களை ஒடுக்கி விடுவதென்று சமஸ்தான சர்க்காரும், பிரிட்டிஷ் ஏஜென்ஸி அதிகாரிகளும் உறுதி கொண்டிருப்பதால், போராட்டம் இன்னும் தீவிரமாக ஆய் விட்டது. மகாத்மா காந்தி ராஜகோட்டை சத்யாக்ரஹத்திற்கு தலைமை வகிப்பதென்று முடிவு செய்துவிட்டார் என்று பர்தோலியிலிருந்து வந்துள்ள ஒரு செய்தி கூறியது. காந்திஜி கத்தியவாரிலுள்ள போரா பந்தர் சமஸ்தான பிரஜையாகையால், கத்தியவாரி என்ற

ஹோதாவில் ராஜகோட்டைக்குச் சென்று அடக்கு முறை ஆட்சியை எதிர்த்து சத்யாக்ரஹம் செய்ய அவருக்கு பூர்ண உரிமையுண்டு என்று 'பம்பாய் கிரானிகளின்' ஆமதாபாத் நிருபர் எழுதினர்.

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி, மிஸ். மணிபென் இருவரும் 3ந் மாலை 3-40க்கு ராஜகோட்டைக்கு வந்தவுடன் ராஜகோட்டை சமஸ்தான போலீஸாரால் கைது செய்யப்பட்டு மோட்டாரில் ஏதோ ஒரு இடத்திற்குக் கொண்டு போகப்பட்டனர். ஸ்ரீமதி. காந்தியை தரிசிக்க சுமார் 30,000 ஜனங்கள் ஸ்டேஷனுக்குள் நுழைந்ததைத் தடுக்க பெரிய போலீஸ் படையும், ராணுவப் படையும் நிறுத்தப்பட்டிருந்தன. ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காந்தியும், மிஸ். மணிபென் பட்டேலும் வண்டியிலிருந்து இறங்கியவுடன் போலீஸ் கமிஷனர் பட்டே மகம்மது கான், இருவரையும் கைது செய்து வெளியில் காத்திருந்த சர்க்கார் மோட்டாருக்கு அழைத்துச் சென்றார். வெளியில் காத்திருந்த ஜனங்கள் "மகாத்மா காந்திக்கு ஜே" என்று கோஷமிட்டனர். மோட்டார், வாத்வானை நோக்கிச் சென்றது. மோட்டாருக்குப்பின் போலீஸ் குதிரைப்படை யொன்றும் சென்றது. ஸ்டேஷனுக்கு வெளியில் கூடியிருந்த ஏராளமான ஜனங்கள் ஆஸாத் காந்தி, சவுக்குகள் பக்கமாகச் சென்றனர். இரு இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடத்த முயற்சிக்கப்பட்டது. இதன் விளைவாக 20 வது சர்வாதிகாரி உள்பட 26 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பங்களாவில் வைக்கப்பட்டனர்

பிப்ரவரி 4ந் தேதி, ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காந்தியும், மிஸ். மணிபென் பட்டேலும் இருபத்தைந்து மைல் தூரத்தில் ராஜகோட்டை வங்காளர் சமஸ்தானங்கள் எல்லையிலுள்ள ஒரு பங்களாவில் வைக்கப்பட்டிருந்தனர். பங்களாவை ஒரு சிறிய போலீஸ் கோஷ்டி காவல் புரிந்து வந்தது.

மகாத்மாவின் பதில்

மகாத்மா காந்தி, ராஜகோட்டை உடன்படிக்கை பற்றி இந்திய சர்க்கார் வெளியிட்ட அறிக்கைக்கு பதில் விடுத்தார். "பிரச்னையை தெளிவாகக் கூறிவிடுகிறேன். சமஸ்தான விவகாரங்களில் நான் தலையிட விரும்பவில்லை. ராஜகோட்டையிலுள்ள ரெஸிடென்ட்டும் தலையிடக்கூடாதென கோருகிறேன். சமஸ்தான சர்க்காருக்கும் பிரஜைகளுக்கும் ஏற்பட்டுள்ள தகராருக்கு ரெஸிடெண்டே ஜவாப்தாரி. செய்துக்கொள்ளப் பட்ட உடன்படிக்கை அப்படியே நிறைவேறுமாறு பார்த்துக்கொள்வது பிரிட்டிஷ் சர்க்காரின் கடமையாகும். முஸ்லிம், பய்பாட் வகுப்புகளுக்கு பிரதிநிதித்வம் அளிக்கப்படவில்லையென்ற ஆட்சேபணை உண்மையானதாக யிருக்கும்பட்சத்தில், அதற்கு பரிகாரம் தேடிவிடலாம். இந்த பிரச்னையை இப்பொழுது கவனித்திருப்பதை விட ஆழ்ந்து கவனிக்குமாறு வைசிராயை மீண்டு மொருமுறை கேட்டுக்கொள்கிறேன். "நடந்ததை மறைப்பதற்காக டில்லி செக்ரிட்டேரியட்டிலிருந்து அறிக்கைகள்வெளிவருகையில் ஒரு பெரிய போராட்டம் ஆரம்பமாகாம லிருக்கட்டும். இது வார்த்தைப் போரல்ல; இதற்கு முன்னல் சிறை செல்லாத தடியடிகளால் கஷ்டப்படாத ஜனங்கள், தங்கள் சொத்து உயிர் அனைத்தையும் இழக்கவும் தயாராக முன்வந்துள்ள போராகும்."

"காந்திஜியின் அறிக்கை மேலும் கூறுவதாவது: ராஜகோட்டை, ஜெயப்பூர்பற்றி நான்விடுத்த அறிக்கைகளுக்கு இந்திய சர்க்கார் விடுத்திருக்கும் அறிக்கைகளில் பல விஷயங்களைப்பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை. உண்மையும் மறைக்கப்பட்டிருக்கிறது. "கமிட்டியின் அமைப்பைப்பற்றி தாகூர் சாஹெப் எழுதியுள்ள கடிதத்தை பிரசுரிக்க வேண்டியது சர்தார் பட்டேலின் கடமையல்ல. தாகூர் சாஹெப்பின் சௌகரி

யத்திற்காகத்தான் கமிட்டியின் அமைப்பைப்பற்றிய ஒரு நிபந்தனை ஒரு தனிக்கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நட்பமான சமரசப் பேச்சுகளில் இந்த முறை அனுஷ்டிக்கப்படுவது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. தாகூர் சாஹெப்பின் குறிப்பு இருவித வியாக்யானங்கள் செய்யக்கூடியதாக யில்லாமலிருக்கும் போது எந்த அர்த்தத்தில் தாகூர்சாஹெப் அந்த குறிப்பை எழுதினார் என்று சொல்ல வருவது அதிகப் பிரசங்கித் தனமாக யிருக்கிறது.''

ரெஸிடெண்டை திருப்தி செய்ய

"ரெஸிடெண்டை திருப்தி செய்வதற்காகவே தாகூர் சாஹெப் தன் குறிப்புக்கு இந்த அர்த்தம் கொடுப்பதென்று பின்னர் முடிவு செய்திருக்கிறா ரென்று திட்டமாகக் கூறுவேன். ஏனெனில், ஒரு காங்கிரஸ்காரரோடு தாகூர் சாஹெப் சமரசப் பேச்சை நடத்தி, அவரிடம் தன்னுடைய யோசனையையும் கேட்காமல் ஒரு குறிப்பையும் கொடுக்காததைப்பற்றி ரெஸிடெண்ட் ஆத்திரமடைந்திருந்தார். ரெஸி டெண்டுகளின் காரியதரிசிகளின், பியூன்களைக் கண்டால்கூட சமஸ்தானாதிபதிகளுக்கு எவ்வளவு நடுக்கம் என்பது ரெஸிடெண்டுகளையும், சமஸ்தானங்களையும் பற்றி ஏதேனும் தெரிந்துள்ளவர்களுக்கு நன்கு தெரியும். எனக்குத் தெரிந்ததிலிருந்தே இதை நான் எழுதுகிறேன்.''

"பட்டேல் வெளியிட்ட கடிதப் போக்குவரத்துகளிலிருந்து ரெசிடெண்டின் விஷமத்தனத்தாலேயே தகராறு ஏற்பட்டதென்பதை அறிந்துக்கொள்ளலாம். கமிட்டி மெம்பர்களின் பெயர்களை மாற்ற முடியாதென சர்தார் பட்டேல் கூறினார். அதற்கு யாதொரு காரணமும் சொல்லப்படவில்லை என்று கூறுவது சுத்தத் தவறு. காரணங்களைக் கூறி சர்தார் பட்டேல் எழுதிய

கடிதமும், அந்த கடிதப் போக்குவரத்துகளில் இருக்கிறது."

தூண்டப்பட்ட ஆக்ஷேபணை

"சர்தார் சிபார்சு செய்கிறவர்களை கமிட்டியில் நியமிப்பதாக தாகூர் சாகிப் ஒப்புக்கொண்டபோது முஸ்லிம்கள், பய்யாட்களை அவர் மறந்துவிடவில்லை. ஆனால் சீர்திருத்தத்தில் எல்லாருடைய உரிமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டியது எல்லாருடைய வேலையுமாகும். கமிட்டியின் முன் சாட்சியங்கள் கொடுப்பதே சரியான முறை."

இந்தியாவில் எங்கு பார்த்தாலும் நடப்பதைப் போல, கமிட்டி மெம்பர்கள் நியமனம்பற்றி முஸ்லிம்களும், பய்யாட்களும் கிளப்பிய ஆட்சேபணை சம்பவம் நடந்தபின் (உடன்படிக்கை மீறப்பட்டபின்) தூண்டப்படும் தகராறென்றே நினைக்கிறேன்."

"இதைச் செய், அதைச் செய் என்று தாகூர் சாகிப்பைக் கேட்கவேண்டுமென நான் கூறவில்லை. அவருடைய விருப்பம் ரெசிடெண்டிடம் அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது. ரெசிடெண்டின் விருப்பமென சந்தேகிக்கப்பட்டதற்கு மாறாக தாகூர் சாகிப் ஒரு முறை நடக்க துணிந்தார். சிம்மாசனத்தை இழந்துவிடும் தருணத்திலிருந்தார்."

"நான் கேட்டதெல்லாம் இதுதான். ரெசிடெண்ட், அந்த உடன்படிக்கைக்கு உயிர் கொடுத்து அதை கௌரவிக்கப்படுவதற்கு உதவி புரியவேண்டும். சில வகுப்பினருக்கு பிரதிநிதித்வம் அளிப்பதற்காகவே இந்த கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறதென்றால் நான் சர்தாரைக் கண்டு அதற்கு பரிகாரம் செய்யுமாறு கேட்டுக்கொள்வதாக உறுதி கூறுகிறேன். உடன்படிக்கையின் இதர பகுதிகள் பூர்ணமாக நிறைவேற்றப்படவேண்டுமென்ற நிபந்தனையிலேயே இந்த வாக்குறுதி அளிக்கிறேன்."

"கமிட்டி கவனிக்கவேண்டிய விஷயங்களைப் பற்றி உடன்படிக்கையிலுள்ள விதிகளும் மாற்றப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை இந்திய சர்க்கார் அறிக்கை வேண்டுமென்றே பிரஸ்தாபிக்காமலிருக்கிறது. இந்த உடன்படிக்கை தாகூர் சாகிப்பை தலைவராகக் கொண்ட நிர்வாகக் கவுன்சிலால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

"அந்த கவுன்சிலில் பிரிட்டிஷ் திவானும் (சர்காடேல்) ஒரு மெம்பர், ஒரு சமஸ்தானாதிபதியின் சார்பாக கையெழுத்திடபட்ட உடன்படிக்கை அயோக்கியத் தனமாக இப்படி மீறப்பட்டிருப்பதை நான் இது வரை கண்டதில்லை. ரெசிடெண்ட் தன்னுடைய பிராந்தியத்தில் உள்ள சமஸ்தானாதிபதிகளின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும். ஆனால் ராஜகோட்டை விஷயத்தில் ரெசிடெண்ட் தாகூர் சாஹெப்பின் பெயரை சந்திக்கு இழுத்துவிட்டார்."

ஏற்பாடான காலித்தனம்

'ஏற்பாடான காலித்தனம்' என்ற குற்றச்சாட்டை திரும்பவும் சொல்லுகிறேன். ஏஜென்சியின் போலீஸ் ராஜகோட்டையில் வேலைசெய்கிறது சத்யாக்ரஹிகள் வெகு தூரத்திற்கப்பால் கொண்டு போகப்பட்டு, தன்னந்தனியாக விடப்படுகிறார்களென்று சர்தார் பட்டேலுக்கு வந்துள்ள தந்திகளிலிருந்து தெரியவருகிறது. இந்த தடியடிப் பிரயோகத்தால் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கச்சென்ற செஞ்சிலுவை டாக்டர்களும், ஆம்புலன்ஸ் கோஷ்டிகளும் சிகிச்சை செய்யாதவாறு தடுக்கப்பட்டதாகத் தந்திகள் கூறுகின்றன. இதை ஏற்பாடான காலித்தனம் என்று நான் கூறுகிறேன். இந்த குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டால் பக்ஷபாதமற்ற விசாரணைக்கமிட்டி ஒன்றை நியமிக்க வேண்டும்.



தனது குடி உயரும் பொருட்டு

ஆரம்பித்த கருமத்தைக்

கைவிடேன் என்கின்ற வீரம்

படைத்த

சர்தார் வல்லபாய் பட்டேல்

" கருமஞ் செய வொருவன்
கைதூவேனென்னும்
பெருமையிற் பீடுடைய தில் "

குறள்

கற்புடைய மனையாளைப் பார்க்கிலும், உயர்வாகிய பொருள்களொன்று மில்லை.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்" —குறள்.



மகாத்மாவின் தர்மபத்தினி
கற்புக்கரசி
ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி

தாயைக்காணத் தனயன் சென்றார்

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியைப்பார்க்க விமான மார்க்கமாய் ராஜகோட்டை சென்ற அவருடைய புதல்வர் பிப்ரவரி 7-ம் தேதி பம்பாய் திரும்பினார் ஸ்ரீ. தேவதாஸ் காந்தி தனது ராஜகோட்டை விஜயம் பற்றியும், தமது தயாரின் தேகநிலை பற்றியும் கூறியதாவது:—

"ராஜகோட்டை விமான நிலயத்தில் போலீஸ் கமிஷனர் கான்பகதூர் பட்டே மகம்மதுகான் என்னை சந்தித்தார். முந்திய தினம் தனக்குக் கிடைத்த தகவலிலிருந்து என்னுடைய தாயார் தேக அசௌக்கியமாகயில்லையென்று தெரிவதாகவும், என் தாயரும், மணிபென் பட்டேலும் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இடத்திற்கு தானும் சமஸ்தான மெடிகல் ஆபீசரும் என்னை அழைத்துச் செல்லுவதாகவும் கமிஷனர் கூறினார். என்னை சந்திக்க வந்த எனது ஒன்றுவிட்ட சகோதரர் ஸ்ரீ. ஜம்னுதாஸ் காந்தியையும் அழைத்துச்செல்லலாமா? என்றேன். இதற்கு கான்பகதூர் சம்மதிக்காததைக் குறித்து ஆச்சர்யமடைந்தேன்."

நான் கேட்ட ஒரு கேள்விக்கு கான்பகதூர் பதிலளிக்கையில், என் தாயாரும், மிஸ். மணிபென்னும் சமஸ்தான உத்தரவு நெ. 62, பிரகாரம் ராஜாங்க கைதியாக காலவரையின்றி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

"10 மைல் தூரம் மோட்டாரில் சென்றோம். நாங்கள் சென்ற ரோடு பொது ரஸ்தாவல்ல, அது ராஜகோட்டையும் அடுத்த சமஸ்தானமாகிய வான்கனீரையும் இணைக்கிறது. எனது அன்னை இருக்குமிடத்திற்குச் செல்லுமிடத்திற்குச் செல்லு முன் ரோட்டிலிருந்து ஒரு நிலத்தின் வழியாக போகவேண்டியிருந்தது. கடைசியாக மாட்டுவண்டிப் பாதையொன்று சனோசாரா கிராமத்தில் எங்களைக் கொண்டு விட்டது. இது ரொம்ப சிறிய கிராமம். சுமார் 100 வீடுகள்தான் இருக்கும்.

இந்த கிராமத்தின் வாசல், ஆயுதந்தாங்கிய போலீசாரால் நன்கு பாதுகாக்கப்படுகிறது. கிராமத்திற்குள் இன்னொரு காம்பவுண்டு இருக்கிறது. அங்கேயும் கிராம வாசலில் இருந்ததைப்போல் ஒரு வாசல் இருந்தது. அதைப்போலவே பந்தோபஸ்துமிருந்தது.

வைத்திய வசதி இல்லை

"எந்தவித வைத்ய வசதியும் இல்லாததுதான் எல்லாவற்றையும்விட மோசமான அம்சமாக யிருந்தது. எனது தாயார் திடீரென தேக அசௌக்கியமானதால் இரவில் தூக்கமின்றி, பகலில் அலுப்பாகயிருந்தார். அவருக்கு சிகிச்சையளிக்க யாதொரு வசதியுமில்லை. சமஸ்தான சர்க்காரின் நலனை யுத்தேசித்தே இரு கைதிகளையும் ராஜகோட்டைக்கு அருகில் வைத்து தடையின்றி உறவினர்களைப் பார்க்க அனுமதிப்பது நல்லதென்று நான் கூறியதை கான் சாகிப்பும் ஏற்றுக் கொண்டார். இன்னம் ஹேதுவான ஒரு இடத்திற்குக் கைதிகளை உடனே மாற்றவேண்டிய அவசியத்தை மெடிகல் ஆபீஸரும், கான் சாகிப்பும் உணர்ந்தனர். என் தாயாரை பரீட்சிக்க, ஒரு லேடி டாக்டரை அனுப்புவதாக மெடிகல் ஆபீஸர் கூறினர்."

ராணுவ அமுல்

பொதுவாக ராஜகோட்டையிலுள்ள நிலைமைபற்றி ஸ்ரீ. தேவதாஸ் காந்தி பதிலளித்ததாவது:—

தொண்டர்களைப் போலீஸ் அதிகாரிகள் துன்புறுத்துவதாகவும், ராஜகோட்டை சமஸ்தான சிறையில் கைதிகள் நன்கு நடத்தப்படவில்லை யென்பதாகவும், கலக்கமுறச் செய்யும் செய்திகள் வந்துகொண்டிருப்பதை யுத்தேசித்து ஓரிரண்டு கைதிகளை சந்திக்க நான் விரும்புவதாகக் கூறினேன். இது மறுக்கப்பட்டது. போலீஸ் அட்டூழியங்கள் இருக்கிறதென்ற நம்

பிக்கை ஜனங்களிடையே பலமாகவும் பரவியும் இருப்ப தால், நான் நேரில் கண்டு உண்மையை தெரிந்துக் கொண்டால் எல்லா வகையிலும் உபயோகமா யிருக்கு மெனக் காரணம் கூறினேன். ஆனால், கான் சாகிப் நான் யாரையும் விசாரிப்பதை விரும்பவில்லை. சமஸ் தானத்திலிருந்து நான் புறப்படும் வரை எனக்கு பலத்த கண்காணிப்பு இருந்தது. ஆனால் ராஜகோட் டை நான் பார்த்த அளவிலிருந்தே, ராணுவ அமுல் ஏஜென்ஸியின் தீவிர உதவியினால் நிலைநாட்டப்பட்டு வருகிறபோதிலும், ஜனங்கள் உற்சாகத்துடன் இருப் பதை அறிந்துக்கொண்டேன்.

ஓத்தைக் கொட்டடி

"இந்த காம்பவுண்டில் எனது அன்னையும், மிஸ் மணிபெண் பட்டேலையும் கண்டேன். அவர் இருக்கு மிடத்திற்கும், ஒத்தைக் கொட்டடிக்கும் வித்தியாச மொன்றுமிருக்காது. "அரண்மனை" "பங்களா" என்று இந்த இடங்கள் வர்ணிக்கப்படுகின்றன. இந்த பதங்கள் இதற்கு சற்றும் பொருத்தமாயில்லை. இரு கைதிகளின் தேவைகளைக் கவனித்துக் கொள்ள அனுப் பப்பட்ட இரு சிப்பந்திகளைத் தவிர ராஜகோட்டையிலி ருந்து வேறு யாரும் வந்து இருவரையும் கண்ட தாகத் தெரியவில்லை. கான்சாகிப் கூட அவர்களை இந்த இடத்தில் முதல் முதலாக இப்பொழுதுதான் பார்த்தார். அந்த சிறிய காம்பவுண்டை விட்டு வெளியே நகர அவர்கள் அனுமதிக்கப்படவில்லை; கொஞ்ச தூரம் நட ந்து வரக்கூட முடியாது. பலயீனமாயுள்ள ஒரு கைதி யை-சமஸ்தானத்தின் விருந்தினர் என்று சொல்வது ஒருபுரமிருக்கட்டும்-வைக்கவேண்டிய இடம் இதுவல்ல வென்பது எனக்கும், என்-கான்சாஹிபுக்கும் தெரிந் தது. இந்த கிராமம் துரதிருஷ்டவசமாக சுகாதாரக் குறைவாக யிருந்தது. தண்ணீரே மட்ட ரகமானது. அதுவும் ரொம்ப தூரத்திலிருந்து கொண்டுவரப் படு

கிறது. போதிய அளவுக்குக் கிடைப்பதில்லை. அங்கு ஒரு கிராம முன்சீப் இருந்தார். அவர் பகீரதப் பிரயத்தனம் செய்தபோதிலும் கறி, காய்களோ, பழங்களோ கொண்டுவர முடியவில்லை. இது அவருடைய சக்திக்கு மீறிய வேலையாய் விட்டது. எனவே, அவரால் இயன்றதெல்லாம் இதுதான்; இடத்தை நன்றாக பாதுகாக்க ஏற்பாடு செய்தார், கைதிகளைப் பார்க்க கிராம வாசிகள் கூட அணுகாதபடி பார்த்துக்கொண்டார். இதைத் தவிர கைதிகள் தங்குவதற்கும் படுப்பதற்கும் வசதி செய்திருந்தார், இவ்வளவுதான். அவசியமான சாமான்களெல்லாம் ராஜகோட்டையிலிருந்து தாமதமாகவே வந்துகொண்டிருந்தன. ரோடு பொது ரஸ்தாவாக இல்லாததால் உறவினர்கள் கூட கிராமத்திற்கு சுலபமாக வரமுடியாது" என்றார்.

அசெம்பளி தலைவருக்குத் தண்டனை

ராஜகோட்டை சத்தியாக்ரஹம் சம்பந்தமாக பிப்ரவரி 7வ‍ கைது செய்யப்பட்ட சமஸ்தான அசெம்பிளித் தலைவர் ஸ்ரீ. பாபட்லால் ஆனந்துக்கு 6 மாத வெறுங்காவல் தண்டனையும், ரூ. 500 அபராதமும் விதிக்கப்பட்டது. அட்வகேட் ஸ்ரீ. சோட்டாலால் ஷாவுக்கு 2 வருஷ கடுங்காவல் தண்டனையும், ரூ. 500 அபராதமும், இன்னொரு அட்வகேட் ஸ்ரீ. ஆர். காந்திலால்ஹத்திக்கு ஒரு வருஷ கடுங்காவல் தண்டனையும், ரூ. 200 அபராதமும் விதிக்கப்பட்டது.

சர்தார் வல்லபாய் பட்டேலின் புத்திரி மிஸ். மணிபென்பட்டேல், தன்னை ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியிடமிருந்து பிரித்து விட்டதை கண்டிப்பதற்காக உண்ணுவிரதம் ஆரம்பித்தார். மிஸ். மணிபென் இப்பொழுது ராஜகோட்டை நகர சிறையிலிருக்கிறார்.

நகரில் பல இடங்களிலிருந்து 125 தொண்டர்கள் போலீஸால் கைது செய்யப்பட்டனர். ஒரு பத்திரிகை ஏஜெண்டு ஸ்ரீ. காந்திலால் வோராவும் கைதியானவர்க

ளில் ஒருவர். தர்பார் மண்டபம் முன் மறியல் செய்த 28வது சர்வாதிகாரியும், இன்னம் 24 தொண்டர்களும் கைதியாயினர். தடிகள் தாங்கிய போலீசார் தெருவில் போக்கு வரத்தைக் கவனித்து வந்தார்கள். ஆனால் இவர்களுக்கு அஞ்சாமல் ஸ்திரீ தொண்டர்கள் அவரவர்களின் ஸ்தானத்திலேயே இருந்தார்கள்.



ராஜா சங்கர பிரதாப சிங் தேவ் மஹிந்திர பகதூர், தென்கனல் ராஜா. இவரைத்தான் ஒரு வருஷம் ஐரோப்பிய யாத்திரை போய்வரும்படி இந்திய சர்க்காரின் ராஜீய இலாகா உத்திரவிட்டிருக்கிறது. ஐரோப்பிய யாத்திரை என்றால், ராஜ்யத்திலிருந்து கல்தா என்பதுதான் அர்த்தம்.

ஸ்ரீமதி. கஸ்தூரி பாயிடமிருந்து தன்னை பிரித்ததைக் கண்டிப்பதற்காக உண்ணாவிரத மிருந்து வந்த மிஸ். மணி பென் பட்டேல், தனது கோரிக்கைக்கு சர்க்கார் இணங்கியபின் உண்ணாவிரதத்தை நிறுத்தி விட்டார்.

ஸ்ரீமதி. கஸ்தூரி பாய் காந்தி, மிஸ். மணி பென் பட்டேல், மிஸ். மிருதுல்லா பென் மூவரும் ராஜகோட்டைடவுனுக்கு மூன்றுமைமயில் தூரத்திலுள்ள திரும்பா கிராமத்தில் பகிச்சா அரண்மனையில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மெடிகல் ஆபீசர், அன்னை கஸ்தூரிபாயை இன்று பரீட்சித்தார். இவருக்கு சிச்ருஷை செய்ய ஒரு நரஸ்ம் அனுப்பப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீ. வீரவல்லா, ஸ்ரீ. வலேரவல்லா, இன்னம் ஸ்ரீமதி. கஸ்தூரிபாயின் சில உறவினர்கள் பிப்ரவரி 11-ம் தேதி பேட்டி கண்டார்கள். ஸ்ரீமதி கஸ்தூரி பாய் குணமடைந்து வருவதாக தெரிந்தது.

கடன்வேண்டுமாம்

பிப்ரவரி 21-ம் தேதி ராஜகோட்டை சமஸ்தான சர்க்கார், ரூ. 10 லக்ஷம் கடன் தருமாறு ஜாம்நகர் சமஸ்தான சர்க்காரைக் கேட்டிருந்தது. கடன் கொடுக்க முடியாதென பதிலளித்து விட்டது.

அசெம்பிளி தலைவர் சன்னத்து ரத்து

ராஜகோட்டை சத்யாகிரகத்தில் ஈடுபட்டு இப்பொழுது சிறையிலுள்ள சமஸ்தான அசெம்பிளித்தலைவர் ஸ்ரீ. ஆனதாசின் சன்னத்தை தர்பார் ரத்து செய்து விட்டது. இவருக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை வசூல் செய்ய பிறப்பிக்கப்பட்ட ஜப்தி வாரண்டு நிறைவேற்றப்பட்டது. ஸ்ரீ. ஹரிசங்கர் பாண்டியா, ஸ்ரீ. பாபட்லால் சுந்தர்ஜி இருவர்மீதும் பிறப்பிக்கப்பட்ட வாரண்டுகள் நிறைவேற்றப்பட்டன. பொதுக்கூட்டத்தில் 50-வது சர்வதிகாரி உள்பட 7 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதிகள் உண்ணு விரதம்

அரசியல் கைதிகள் சரியாக நடத்தப்படாததைக் கண்டிப்பதற்காக நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

கத்தியவார் வக்கீல்கள் சங்கத் தலைவர் ஸ்ரீ. ராம்ஜி பாய் தோஷி, ராஜகோட்டை போலீஸ் கமிஷனர் ஸ்ரீ. பட்டே மகமதுகானுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்

தில் சர்தார் சிறையிலுள்ள ராஜீயக் கைதிகள் துன்புறுத் தப்படுவதாகவும், இதனால் அவர்கள் சென்ற வெள்ளிக் கிழமை முதல் உண்ணுவிரதமிருந்து வருவதாகவும் நகரில் பலத்த வதந்தி இருப்பதாக குறிப்பிட்டார்.

கைதிகள் ஈரமான, இருட்டான, தாழ்ந்த கூரை யுள்ள அறைகளில் வைக்கப்பட்டு, குடிக்க முடியாத, தண்ணீர், உணவு கொடுக்கப்படுவதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. இவர்கள் உண்ணுவிரத ஆரம்பித்த வுடன் கடுமையாக தாக்கப்பட்டதாகவும், சிலர் சாகும் வரை உண்ணுவிரதமிருப்பதென முடிவு செய்திருப்ப தாயும் சொல்லப்பட்டது.

இச்செய்திகளெல்லாம் சர்க்காரால் இன்னும் மறுக் கப்படாதிருப்பதை ஸ்ரீ. தோஷி சுட்டிக் காட்டினுர். தன்னையாவது அல்லது தன்னுடைய சகபாடிகளையா வது சமஸ்தான சட்ட ஆலோசனைக்காரர் ஸ்ரீ. சினுயு டன் பேச அனுமதித்து பீதிகளைப் போக்க பொது ஜனங்களுக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டுமென ஸ்ரீ. தோஷி யோசனைக் கூறினுர்.

புத்திரியை பேட்டி காண மறுப்பு

ஸ்ரீ அம்பாலால் சாராபாய் சிறையிலுள்ள தன் னுடைய புத்திரி மிஸ். மிருதுலா பென்னை பேட்டி காண வந்தார். ஆனுல் அதிகாரிகள் பேட்டிக்கு அனு மதிக்க மறுத்துவிட்டனர்.

ஸ்திரீகள் உள்பட இன்னம் பல சத்தியாக்கிரஹக் கைதிகள் சமஸ்தான் சிறையிலிருந்து பிரிட்டிஷ் ஏஜென்சி சிறைக்கு மாற்றப்பட்டார்கள்.

மகாத்மா காந்தி வார்தாவிலிருந்து பிப்ரவரி மாதம் 23-ந் தேதி பின்கண்ட அறிக்கையை வெளியிட்டார். "ராஜகோட்டையில் சிறையில் கைதிகள் மனிதத்தன்மை யற்ற விதத்தில் நடத்தப்படுவதைக் கண்டித்தும், வெளி யில் கிராம வாசிகள் துன்புறுத்தப்படுவதைக் கண்டித்

தம் உண்ணாவிரதங்கள் நடந்துவருவதைப்பற்றி எனக்கு இன்னம் தினசரி தந்திகள் வந்துக்கொண்டேயிருக்கின்றன. ராஜகோட்டை சமஸ்தானாதிபதி உடன்படிக்கையை மீறியதால் இரண்டாம் முறை போராட்டம் ஆரம்பமாயிருப்பதால் ராஜகோட்டை விஷயம் நாளுக்கு நாள் கடுமையாகிக் கொண்டு வருகிறது."

"மிக்க கவலையுடன் விசாரிக்கும் நபர்கள், நான் தினசரி சமஸ்தான அதிகாரிகளுடன் தந்திப் போக்குவரத்து நடத்திவருகிறேனென்பதை தெரிந்துக்கொள்ள வேண்டும். சீக்கிரத்தில் அதிகாரிகளை என்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் செய்ய முடியுமென நம்புகிறேன். இதற்குள்ளாக, சத்தியாக்கிரஹிகள் காலவரையின்றி, மகிழ்ச்சியுடன், மாச்சர்யம், கோபமின்றி கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளத் தங்களுக்குச் சக்தி உண்டு என்பதை தெரிவிப்பதையே முதல் கடமையாகக் கருத வேண்டும்."

5-வது அத்தியாயம்.

மகாத்மாவின் தபம்.

சர்தார் வல்லபாய் பட்டேலிடமிருந்து பிப்ரவரி மாதம் 26-ந் தேதி வந்த உத்திரவிற்கிணங்கி, ராஜகோட்டையில் சமீபத்தில் நடந்த சம்பவங்களைக் குறித்து ஆதியோடந்தமாய் விசாரிக்க மகாத்மாவுக்கு வசதியளிப்பதற்காக, ராஜகோட்டை பிரஜா மண்டல், சத்தியாக்கிரஹ இயக்கத்தை நிறுத்திவிட்டது.

பிப்ரவரி மாதம் 26-ந் தேதி செக்ரிட்டெரியட் முன் மறியல் செய்ததற்காக கைது செய்யப்பட்ட ஸ்திரீகள் நள்ளிரவுக்குப்பின் விடுவிக்கப்பட்டனர். மூன்று

ஸ்திரீ சத்தியாக்கிரகிகளுக்கு தலா இரண்டு மாத கடுங் காவலும், ரூபா 200 அபராதமும் விதிக்கப்பட்டது. இன்னம் 19 ஆண் சத்தியாக்கிரகிகளுக்கு 6 மாத முதல்



மகாத்மா காந்தி, ராஜ்கோட்டைக்கு பிரயாணமாகும் பொழுது வழியனுப்பிய காட்சி.

2 வருஷ வரையிலும், இதைத் தவிர ரூபா 500 முதல் 2000 வரைக்கும் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

சமஸ்தானத்திற்கு வெளியிலிருந்து வந்து இயக்கத்தில் கலந்து கொண்டதற்காக தண்டிக்கப்பட்ட 50

பேர்கள் பல சிறைகளிலிருந்து யாதொரு நிபந்தனையு மின்றிவிடுவிக்கப்பட்டனர்.

மகாத்மா காந்தி கத்தியவார் மெயிலில் பிப்ரவரி மாதம் 26-ந் தேதி இரவு ராஜகோட்டைக்குப் பிரயாண மானார். அவருடன், அவருடைய காரியதரிசி ஸ்ரீ. பியாரி லால், டாக்டர் சுசீலா நாயர், ஒரு 'டைப்பிஸ்ட்' மூவரும் சென்றார்கள். மாகாத்வாவுடன் ஏராளமான பத்திரிகைகாரர்களும் புறப்பட்டனர். சர்தார் வல்ல பாய் பட்டேலும், இன்னம் அனேக காங்கிரஸ்காரர் களும் ஸ்டேஷனுக்கு வந்து மகாத்மாவை வழியனுப்பி னார்கள். மகாத்மா காந்திக்கும், ராஜகோட்டை அதி காரிகளுக்கும் தொடர்ந்து (தந்தி, டிரங்க் டெலிபோன் மூலம்) நடந்த சமரசப் பேச்சுகளின் விளைவாக சமரசம் ஏற்படும்போல் தோன்றுகிறது என்று உள்ளூர் குஜ ராத்தி தினசரி "சந்தேஷ்" ஒரு செய்தியை பிரசுரித் தது. சீர்திருத்தக் கமிட்டி மெம்பர்களில் மாறுதலேற் படுவதை ஒப்புக்கொள்ளுமாறு சர்தார் வல்லபாய் பட் டேலைத் தான் கேட்கத் தயாரென்று மகாத்மா கூறுவ தாகவும், அவுண்டு சீர்திருத்தத்தைப் போன்ற ஒரு சீர்திருத்தத்தை அளிக்க சமஸ்தான அதிகாரிகள் சம்ம தித்திருப்பதாயும் தெரிந்தது.

50,000 ஜனங்களின் வரவேற்பு

மகாத்மா காந்தி, தமது காரியதரிசி, டாக்டர், டைப்பிஸ்ட்டு இவர்களுடன் 27-தேதி மாலை 3 மணிக்கு ராஜகோட்டைக்கு வந்துசேர்ந்தார். 50,000 ஜனங்கள் ஸ்டேஷனில் மகாத்மாவை உற்சாகமாக வரவேற்றனர். மகாத்மா சமஸ்தானத்தில் நுழைந்ததும், ராஜகோட்டை நிர்வாக கவுன்சில் முதல் மெம்பர் ஸ்ரீ. பத்தே முகம் மதுகான், தாகூர் சாகிப்பிட மிருந்து கொண்டு வந்த கடிதத்தை மகாத்மாவிடம் கொடுத்தார். அதில், தாகூர் சாகிப் மகாத்மாவை தன்னுடைய சர்க்கார் விரு

ந்தினராக இருக்குமாறு அழைத்திருந்தார். அவசிய மான வசதிகள் அளிப்பதாகவும் உறுதிகூறியிருந்தார்.

ஸ்ரீ. பத்தே முகம்மது கான், சர்க்கார் மோட்டார் ஒன்று தயாரா யிருப்பதாகவும், அதை இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாமென்றும் மகாத்மாவிடம் கூறினார். இதற்கு மகாத்மா, தான் முதலில் தன்னு டைய வீட்டுக்குச் சென்றுவிட்டு பிறகு அவசியமானால் தாகூர் சாகிப் உபசரிக்கிறபடி அவருடைய விருந்தின ராக வருவதாகவும் பதிலளித்தார்.

வேலை பூர்த்தியாகும் வரை இங்கிருப்பேன்

நிருபர்:—எவ்வளவு நாட்களுக்கு ராஜகோட்டை யில் தங்கி யிருப்பீர்கள்?

மகாத்மா: எவ்வளவு நாள் இருப்பேன் என்று எனக்கே தெரியாது. என் வேலை பூர்த்தியாகும் வரை நான் இங்கு இருக்கவேண்டும்.

கேள்வி: அப்படியானால், நீங்கள் திரிபுரி காங்கிர சுக்குப் போக முடியாதா?

பதில்: ராஜகோட்டையில் வேலையை கவனிக்க நான் தங்கவேண்டி யிருந்தால் திரிபுரிக்கு என்னால் போக முடியாது.

ராஜகோட்டைசமஸ்தானத்தில் சத்யாக்ரஹம் நிறுத் திவைக்கப்பட்டபோதிலும், அதிகாரிகள் இன்னும் கைது செய்துகொண்டிருக்கிறார்கள், அபராதத் தொகைகளை வசூல் செய்ய வீடுகளை ஏலம் போடுகிறார்கள் என்று மகாத்மாவிடம் கூறப்பட்டதும், "ரயிலில் இப்பொழுது தான் ஒரு நபர் இதைக் கூறியதை நானே கேட்டேன். அது உண்மை யானால், ரொம்பவும் துரதிருஷ்டமான துதான்" என்று அவர் பதிலளித்தார்.

மகாத்மா ராஜகோட்டைக்கு சென்றவுடன் நேராக தன் வாசஸ்தலத்திற்கு மோட்டாரில்சென்றார்.

மகாத்மாவிடம், தாகூர் சாகிப்பை பேட்டி காணு வாரென்றும், அநேகமாக ரெசிடெண்ட் கிப்சனை உடனே பேட்டி காணுவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மகாத்மா காந்தி, ராஜகோட்டையில் தனது சமாதானத் தொண்டை துரிதப்படுத்த தன்னுல் இயன்ற வரை முயற்சித்து வந்தார். 27-ந் தேதி இரவு தர்பார் வீரவல்லாவுடன் 10 மணி வரை பேசியபின், சிறையிலுள்ள ராஜகோட்டை சத்தியாக்கிரக இயக்கத் தலைவர் ஸ்ரீ. திபாரை பேட்டி காண அனுமதிக் கோரினுர். மகாத்மா சிரமப்படக் கூடாதென்பதற்காக, சமஸ்தான அதிகாரிகள் ஸ்ரீ. திபாரை மகாத்மா தங்கியுள்ள ராஷ்ட்ரீயசாலாவுக்கு இரவு 10-30-மணிக்கு அழைத்துவந்தார்கள். மகாத்மா, ஸ்ரீ. திபாருடன் நீண்ட நேரம் விவாதித்தார். சமஸ்தான அதிகாரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகள், ஒப்பந்த விவரங்கள் இவைகளைப் பற்றி பேச்சு நடந்தது.

நேற்று பேட்டிகள் கண்டபின், காந்திஜி, ராஜகோட்டையிலுள்ள ரெசிடெண்ட் ஸ்ரீ கிப்சனை பேட்டி காண விரும்பினுர். மகாத்மா அன்று காலை 10 மணிக்கு ரெசிடென்சி கட்டிடத்திலுள்ள ஸ்ரீ கிப்ஸெனின் ஆபீசுக்கு சென்றுர். காலை 11.15 ஸ்ரீ. கிப்சனுடன் பேசிக்கொண்டிருந்தார். மூன்று தினங்களுக்கு முன் வெளியிட்ட அறிக்கைப்படி, மகாத்மா ஒப்பந்த விவரங்களைப்பற்றி ரெசிடெண்டுடனும் விவாதித்தார்

முஸ்லிம்களுக்கு பேட்டி.

மகாத்மா அன்று ஸ்ரீ. கிப்சனை சந்திக்கு முன், உள்ளூர் முஸ்லிம்கள் தூது கோஷ்டிக்கு பேட்டியளித்து, சீர்திருத்தக் கமிட்டியில் முஸ்லிம்கள் பிரதிநிதித்வம்பற்றி தூது கோஷ்டியினர் அபிப்ராயத்தைக் கேட்டார்.

மகாத்மா அன்று மாலை நிலச்சுவான்தார்களின் தூது கோஷடிக்கு பேட்டியளித்துவிட்டு, சிறைகளுக்கும், கிராமங்களுக்கும் விஜயம் செய்தார்.

இதற்குப் பின், இன்றுவது தாகூர் சாகிப்பை பேட்டி காண்பாரென எதிர்பார்க்கப்பட்டது.

சமாதானப் பேச்சுகள்.

"எனக்கு எப்பொழுதும் எதிர்காலத்தில் திட்டமான நம்பிக்கையுண்டு. நான் ராஜகோட்டைக்கு வந்திருப்பதின் விளைவாக ஒரு கௌரவமான சமரசம் ஏற்படுமென்று நம்புகிறேன்," என்று மகாத்மா ராஜகோட்டை அதிகாரிகளான கான்சாகிப் பத்தே முகம்மது, தர்பார் வீரவல்லா இருவருடனும் பூர்வாங்க பேச்சுகளை முடித்தபின், நிருபருக்கு பேட்டியளிக்கையில் கூறினார். மகாத்மா மேலும் கூறியதாவது;- "கான்சாகிப் பத்தே முகம்மது, தர்பார் வீரவல்லா இருவருடனும் சிநேக பாவத்தில் சம்பாஷணை நடத்தினேன். பரஸ்பர அபிப்பிராயங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. சிறைகளுக்கு விஜயம் செய்து கைதிகளைப் பார்க்கவும் கிராமங்களுக்கு விஜயம் செய்யவும் எனக்கு எல்லா வசதிகளும் அளிப்பதாக இருவரும் கூறினார். முஸ்லிம்களும் நிலச்சுவான்தார்களும் என்னைபேட்டிக்காண எப்பொழுது எனக்கு சௌகர்யமா யிருக்குமென கேட்டிருக்கிறார்கள். அவர்களை நாளை சந்திக்கலாமென எதிர்பார்க்கிறேன்."

"சமரசப் பேச்சுகள் முடிய 5, 6, நாட்கள் ஆகலாம். திரிபுரி காங்கிரசுக்குப் போக வேண்டுமென நான் ஆவலாயிருக்கிற போதிலும், ராஜகோட்டை வேலையை கவனிக்க சில நாட்கள் பிடிக்குமென அஞ்சுகிறேன்" என்றார்.

மகாத்மா மாலை 3 மணிக்கு ராஜகோட்டையடைந்த உடனேயே "சமாதானத் தொண்டில்"

இறங்கி, "சமாதானப் பேச்சுகளை" ஆரம்பித்து விட்டார். இந்த பேச்சுகள் பூர்வாங்கமானவை. இதற்குப் பின் சரியான ரீதியில் சமரசப் பேச்சுகள் நடைபெற்றன.

மகாத்மா முதலில் ராஜகோட்டை நிர்வாக கவுன்சில் முதல் மெம்பரான கான் சாஹிப் பத்தே மகம்மதை சந்தித்து, அவருடன் 20 நிமிஷ நேரம் வரை பேசினார். இந்த பூர்வாங்கப் பேச்சில், கான் சாஹிப், ராஜகோட்டை அதிகாரிகள் மனப்பான்மையை எடுத்துரைத்து, விசாரணை நடத்த எல்லா வசதிகளையும் அளிக்க தாங்கள் தயாராகயிருப்பதாக மகாத்மாவிடம் கூறியதாகத் தெரிந்தது.

வீரவல்லாவுடன் பேச்சு

கான்சாஹிப்பின் பேட்டி முடிந்த சற்று நேரத்திற்கெல்லாம், தர்பார் வீரவல்லா மகாத்மாவை பேட்டி கண்டு, முதலில் $2\frac{1}{2}$ மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். பல விஷயங்களைப் பற்றி சம்பாஷணை நடந்தது. இரு சாராரும் தங்களுடைய அபிப்பிராயங்களை எடுத்துக் கூறினர். பிரார்த்தனைக்காக பேச்சு சற்று நேரம் ஒத்திவைக்கப்பட்டது. பிரார்த்தனைக்குப் பின் தர்பார் வீரவல்லா திரும்பி வந்து சம்பாஷணையை மீண்டும் ஆரம்பித்தார். இரவு 10 மணி வரை பேச்சு நடந்த பின், மேற் கொண்டு சம்பாஷணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

காந்திஜியின் அலுவல்கள்

மகாத்மா காந்தி முதலில் சிறைகளுக்கு விஜயம் செய்து கைதிகளை சந்தித்து, அவர்களுடைய சாக்ஷியங்களை பதிவு செய்துக் கொண்டார். அதற்குப் பின் கிராமங்களுக்குச் சென்று, சமஸ்தான அதிகாரிகள் மீதுள்ள குற்றச் சாட்டுகள் உண்மை தானுவென்பதை தெரிந்துக்கொண்டு சமரசத்திற்காக சமாதானப் பேச்சுகளை ஆரம்பித்தார்.

"சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாகுமுன், சர்க்கார் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்க மகாத்மாவுக்கு வசதியளிக்க வேண்டியது ரொம்பவும் நியாயமானதே" என்று, ஒரு பிரதான அதிகாரி கூறினர்.

சமரசம் ஏற்படும்?

மகாத்மாவின் "சமாதானத் தொண்டின்" விளைவாக சமரசம் ஏற்படுமென பூர்ண நம்பிக்கையிருக்கிறது என்று முக்ய சமஸ்தான அதிகாரிகள் கூறினர்.

டாக்டர் சுசிலா நாயர், ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியையும், மிஸ். மணிபென் பட்டேலையும் அவர்கள் இருக்கும் சிறையில் பேட்டிகண்டார்.

மகாத்மா பிப்ரவரி 28உ மாலை பூராவையும் சிறைகளுக்கு விஜயம் செய்வதிலேயே கழித்தார். அவருடன் ராஜகோட்டை அரசியல் ஏஜெண்ட் ஸ்ரீ. டாலி, லெப். கர்னல் ஆஸ்பினம், ராஜகோட்டை ஆலோசனை கவுன்சில் முதல் மெம்பர் கான் சாஹிப் பத்தே முகம்மது மூவரும் மகாத்மாவுடன் வந்தனர். மகாத்மா முதலில் ராஜகோட்டை சிறைக்கு விஜயம் செய்து, கைதிகள் துன்புறுத்தப்பட்ட விஷயமாகவும் இதர குறைகள் சம்பந்தமாகவும் ஒரு மணி நேரம் விவாதித்தார். கைதிகள் மகாத்மாவிடம் தங்கள் குறைகளை எடுத்துக் கூறினர்கள். இக்குறைகளைப் பற்றி சர்க்காரின் நிலைமையை பத்தே முகம்மது விளக்கினர்.

இந்த சிறையில் ஸ்திரீகள் உள்பட சுமார் 50 ராஜீயக் கைதிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மகாத்மா கொட்டடிகளையும், இதரவசதிகளையும் பார்வையிட்டார். ராஜகோட்டை சிறையிலிருந்து, ராஜகோட்டை படுக்கு 16 மைல் தூரத்திலுள்ள சார்தார் சிறைக்கு மகாத்மா மோட்டாரில் சென்றார். சார்தாரில் உண்மையான சிறையே கிடையாது. 80 வருஷங்களுக்கு முன்னால்

'அரண்மனை'யாக யிருந்தது தற்காலம் சிறையாக மாறி யிருக்கிறது. மகாத்மா இங்கு 90 நிமிஷ நேரம் கழித்தார். இங்கு சுமார் 70 கைதிகள் இருக்கிறார்கள். இந்த இடத்தில் கைதிகளுக்கு அதிக குறைகள் இருந்தன. இடம் போதவில்லை, வெளிச்சம், காற்று, தண்ணீர், சப்ளை போதாது. உணவு குறைவாகக் கொடுக்கப் பட்டது. பலாத்காரம் உபயோகிக்கப்பட்டது. உள்ளே துன்புறுத்தல்கள் இருப்பதாக இக்கைதிகள் புகார் செய்தனர்.

மகாத்மா, இக்கைதிகளுடைய குறைகளை யெல்லாம் கேட்டார். பத்தே முகம்மது, இது உண்மையில் சிறையே யல்லவென்பதையும், அவசரத்திற்காக சிறை யாக மாற்றியதாகவும், கைதிகளின் குறைகள் அதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்ட உடனேயே அவைகள் கவனிக்கப்பட்டதாகவும் கூறினார். பலாத்காரம் உபயோகிக்கப்பட்டது, 4 கைதிகள் அடிக்கப்பட்டார்கள், என்ற குற்றச்சாட்டுகளுக்கு பத்தே முகம்மது பதிலளிக்கையில் அஸ்தமனமானபின் அக்கைதிகள் அறைக்குச்செல்ல மறுத்து சத்யாக்ரஹம் செய்ததால் பலாத்காரம் உபயோகிக்கவேண்டிய அவசிய மேற்பட்டதென்றார். மகாத்மா இருசாரார் கூறியதையும் பொறுமையுடன் கேட்டபின், அறைகளுக்கும், தரை மட்டத்தின் கீழுள்ள கொட்டடிகளுக்கும் சென்று, ஜுரத்திலிருக்கும் ஒரு கைதியுடன் பேசினார்.

ஸ்ரீமதி. கஸ்தூரிபாயுடன் சம்பாஷணை

சார்தார் சிறையிலிருந்து மகாத்மாவும், கோஷ்டியும், ட்ரம்பாக்குக்கு மோட்டாரில் சென்றனர். மகாத்மா காந்தி கஸ்தூரிபாயை சந்தித்தது, மனதை உருக்கும் காட்சியாக யிருந்தது. எப்பொழுதும் போல, புன்சிரிப்புடன் மூன்று கைதிகளையும் சந்தித்தார். ஒருவரை யொருவர் யோக க்ஷேமம் விசாரித்த பின், மகாத்மாவுக்கு மாலை போஜனத்தை ஸ்ரீமதி. கஸ்தூரிபாய்

பரிமாறினர். இங்கு அரை மணி நேரம் தங்கியபின் மகாத்மா, தான் இறங்கியுள்ள இடத்திற்கு இரவு 8 மணிக்குத் திரும்பினர்.

சிறைகளுக்கு விஜபம் செய்யுமுன் மகாத்மா, பாயாட்கள் தூது கோஷ்டிக்கு பேட்டியளித்து, சீர் திருத்தக் கமிட்டியில் அவர்களுக்கு பிரதிநிதித்வம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையைப்பற்றி விவாதித்தார்.

கைதிகளின் குறைகள்

சார்தார் சிறையிலுள்ள கைதிகள் மகாத்மாவிடம் கூறிய குறைகள்: (1) 100 கைதிகளுக்கு மேலுள்ள இந்த சிறையில் 10 பானை தண்ணீர் தான் வைக்கப் பட்டிருக்கிறது. (2) 20 நாட்களாக கைதிகள் துணியை மாற்ற இரண்டாவது சட்டையும், நிஜாரும் கொடுக்கப் படவில்லை. நேற்று தான் க்ஷவரம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். (3) சமையலுக்கு போதிய விறகு கிடையாது. (4) 5 நாட்களுக்கு படுக்கையே தரப்படவில்லை (5) 120 கைதிகள் சாப்பிட 20 தட்டுகள் தான் தரப்பட்டன. (8) தரை மட்டத்திற்குக் கீழுள்ள கொட்டடிகளுக்குச் செல்ல மறுத்த 4 கைதிகள் அடிக் கப்பட்டனர்.

இக்குறைகளைக் கைதிகள் தெரிவிக்கையில், அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர். கான் சாஹிப் பத்தே முகம்மது, அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் குறைகளெல்லாம் உடனே நிவர்த்திக்கப் படுமென மகாத்மாவிடம் உறுதி கூறினர். மகாத்மா ராஜகோட்டைக்கு மாலையில் வெகுநேரம் கழித்து திரும்பியதால், அவரை தரிசிக்கவும், மாலை பிரார்த்தனையில் கலந்துகொள்ளவும் கத்தியவார் டவுன்களிலிருந்து வந்திருந்த ஏராளமான ஜனங்கள் ஏமாந்து போயினர்.

மன்னருடன் பேட்டி

மார்ச்சு மாதம் 1 தேதி, காலையிலிருந்து நள்ளிரவு வரை மகாத்மாவுக்கு அலுவல்கள் 'இருந்தன. சிறைகளுக்கு விஜயம் செய்து திரும்பியவுடனேயே, தாகூர் சாஹிப்பை அவருடைய அரண்மனையில் சந்தித்து, அவருடன் 90 நிமிஷ நேரம் பேசிக்கொண்டிருந்தார். இரவு 10-மணிக்கு வீடு திரும்பினர். அதற்குப் பின் பிரஜா மண்டல் ஊழியர்களுடன் நீண்டநேரம் வரை பேசிக்கொண்டிருந்தார்.

காந்திஜி இரவு 10-மணிக்கு பத்திரிகைக்காரர்களிடம் கூறியதாவது :—

" இன்று காலையில் முஸ்லிம் பிரதிநிதிகளை சந்தித்தேன். பரஸ்பர அபிப்பிராயங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அதற்குப்பின் ரெஸிடெண்டின் பங்களாவுக்குச் சென்றேன். இருவரும் ஸ்நேகபாவத்தில் சம்பாஷணை நடத்தினேம். மாலை 2 மணிக்கு நிலச்சுவான்தார் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்தேன். அவர்களுடனும் நேசப்பான்மையில் சம்பாஷணை நடந்தது. பிறகு சிறைகளுக்குச் சென்று கைதிகளை சந்தித்தேன். அப்பொழுது அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர், ராஜகோட்டை சிறையில் ஆண், ஸ்திரீ சத்யாக்ரஹக் கைதிகளைச் சந்தித்து ஒரு மணி நேரம் வரை பேசிக்கொண்டிருந்தேன். அங்கிருந்து சர்தார் சிறைக்குச் சென்று, அங்கு 90 நிமிஷ நேரம் தங்கினேன். இரு சிறைகளிலுமுள்ள கைதிகளுடன் பேசியதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று, நிருபர் மகாத்மாவைக் கேட்டார். மகாத்மா, கான் சாஹிப் பத்தே முகம்மது கானுடன் விவாதிக்கு முன், இது விஷயமாக ஒரு திட்டமான அபிப்பிராயத்தை கூற மறுத்து விட்டார். மகாத்மா மேலும் கூறியதாவது :—

"சமரசப் பேச்சுகள் வெற்றி பெறும் என்று நேற்று இருந்த நம்பிக்கையைக் காட்டிலும் இன்று அதிக நம்

பிக்கை இருக்கிறது. வெகு சீக்கிரத்தில் சமரசமேற்பட்டு விடுமென சம்பந்தப்பட்ட அனைவரும் நம்புவதாகத் தெரிகிறது, என்றார்.

ரெஸிடெண்டுடன் பேச்சு

காந்திஜியும், ராஜகோட்டை ரெஸிடெண்ட் ஸ்ரீ. கிப்ஸனும் தானும் சுமார், 90 நிமிஷங்கள் ஸ்நேகப் பான்மையில் பேசினார்கள். அப்பொழுது ஒவ்வொருவரும் அவரவருடைய அபிப்பிராயத்தை எடுத்துக் கூறி, பிறரின் அபிப்ராயத்தையும் புரிந்துக்கொள்ள முயற்சித்தார்கள். ஸ்ரீ. கிப்ஸன், இப்பொழுது எந்த நிலைமை இருக்கிறதென தான் நம்புவதைப்பற்றியும், குறிப்பாக சீர்திருத்தக்கமிட்டி கவனிக்க சர்க்கார் அனுப்பும் பிரச்னைகளையும் விளக்கிக் கூறினார்.

ராஜகோட்டை தர்பார் வெளியிட்ட இரண்டாவது அறிக்கையில், "சமஸ்தானாதிபதி பிரிட்டிஷ் சர்க்காருடன் செய்துக்கொண்டுள்ள உடன்படிக்கைகளுக்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செய்யவேண்டிய கடமைகளுக்கும், முரணில்லாத வகையில், ஜனங்களுக்கு எவ்வளவு அதிகாரம் கொடுக்க முடியுமோ அவ்வளவைக் கொடுக்கும் ஒரு சீர்திருத்தத்தை தயாரித்து சிபார்சு செய்வதே கமிட்டியின் வேலை" என்பது இல்லையென்று பரிஷத் கூறுவதை மகாத்மா சுட்டிக் காட்டியதாகத் தெரிந்தது. இரண்டாவது அறிக்கையில், மேற்கண்ட வாசகங்களுக்கு பதிலாக "சமஸ்தான நிர்வாகத்தில் ஜனங்களைக் கலந்துகொள்கிறது" என்று தான் இருக்கிறது.

ஸ்ரீ. கிப்ஸன், இரு அறிக்கைகளையும் சேர்த்தே படிக்கவேண்டுமென்றும், நிர்வாகத்தில் ஜனங்களைக் கலந்துகொள்வது, முதல் அறிக்கையில் உள்ளபடி அதிகாரத்தை ஜனங்களுக்கு மாற்றினாலொழிய முடியாதென்றும் கூறியதாகத் தெறிந்தது. எனவே, சீர்திருத்

தக் கமிட்டி தன்னுடைய வேலையை ஆரம்பிக்கும்படிச் செய்ய வேண்டுமென்பது தனது அபிப்ராயம் என்று சொன்னார்

மிருகத்தனம்

மகாதமா காந்தி காலை இரு டஜன் ஸ்திரீகள் உள்பட சுமார் 150 விவசாயிகளை, ராஜகோட்டை நிர்வாக கவுன்சில் முதல் மெம்பர் கான்சாகிப் பத்தே முகம்மத் முன்னிலையில் விசாரித்தார். சமஸ்தான போலீசாரின் "மிருகத்தன, பலாத்காரச்" செயல்களைப்பற்றி சுமார் ஒரு மணி நேரம்வரை விவசாயிகள், மகாத்மாவிடம் கூறினர். போலீசால் தாங்கள் தாக்கப்பட்டு, அடிக்கப்பட்டதாகவும், ஸ்திரீகள், குழந்தைகள் கூட தப்பவில்லை யென்றும் குற்றஞ் சாட்டினர்.

ம கா த் ம ா, சமஸ்தான போலீசார்மீது கடுமையான குற்றஞ்சாட்டும் பரிஷத்தின் ரிப்போர்ட் ஒன்றையும் கையில் வைத்திருந்தார். இந்த குற்றச் சாட்டுகள் உண்மையானவையா யென்பதைதானே நேரில் கண்டு தெரிந்து கொள்வதற்காகவே விவசாயிகளை விசாரித்தார். பரிஷத் தொண்டர்களை கிராமங்களில் நுழைய அனுமதித்து. அவர்களுக்கு உணவும், தங்க இடமும் கொடுத்த "குற்றங்களுக்காக"வும், சர்க்காருக்குச் சேர வேண்டிய பயிர்களை அப்புறப்படுத்த சர்க்காருக்கு உதவிசெய்ய மறுத்ததற்காகவும்தான் தாங்கள் போலீஸாரால் அடிக்கப்பட்டதாக கிராமவாசிகள் கூறினர்.

"போலீசாரிடமிருந்து ஆயுதங்களைப்பிடுங்க நீங்கள் முயற்சிக்க வில்லையா?" என்று பத்தே முகம்மத் விவசாயிகளைக் கேட்டார். "இல்லை" என்று விவசாயிகள் பதிலளித்தனர். கான்சாகிப் மீண்டும் "சர்க்காருக்குச் சேரவேண்டிய தான்யங்களை ஏன் தூக்கி வர மறுத்துவிட்டீர்கள்? இது வெகுகாலமாக இருந்துவரும் வழக்கமல்லவா? இப்பொழுது மாத்திரம் ஏன் தூக்க

மறுத்தீர்கள்? என்று கேட்டார். கிராமவாசிகள், இது வழக்கந் தானென்பதை ஒப்புக்கொண்டு, நிர்ப்பந்த ஊழியத்திற்கு இனி ஆளாவதில்லையென தாங்கள் முடிவுசெய்திருந்ததாயும், அதை அனுசரித்து சர்க்கார் ஸ்டோர்களுக்குப் பயிர்களை தூக்கிச் செல்ல மறுத்ததாகவும் பதிலளித்தனர், விவசாயிகள் கொடுக்கவேண்டிய மான்யங்கள், மூன்றில் ஒரு பாகத்திலிருந்து நான்கில் ஒரு பாகத்திற்குக் குறைக்கப்பட்டதாக சர்க்கார் அறிவித்தபோதிலும், உண்மையில் மூன்றில் ஒரு பாகமே கொடுக்குமாறு சமஸ்தான அதிகாரிகள் நிர்ப்பந்தித்ததாக கிராமவாசிகள் புகார் செய்தனர்.

ஸ்ரீ. பத்தே முஹம்மத், இது உண்மையானால், கணக்குப்படிப் போக பாக்கியுள்ள தான்யங்களை விவசாயிகளுக்கு சர்க்கார் திருப்பிக் கொடுத்து விடுமென்றார். விவசாயிகள் விசாரணை பூர்த்தியான பின், மகாத்மா, பத்தே முஹம்மதுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். சிறைகளுக்கும், கிராமங்களுக்கும் சென்று விசாரித்ததின் விளைவாக தான் செய்துள்ள முடிவைப்பற்றி பேசியிருக்கலாமெனத் தெரிந்தது.

காந்திஜி அறிக்கை

மகாத்மா காந்திக்கு மார்ச்சுமீ 1௳ பூராவும் ஓய்ச்சல் ஒழிவே கிடையாது. மாலையில் பிரார்த்தனை முடிந்ததும், இன்றைய வேலையைப் பற்றி பின்கண்ட அறிக்கை வெளியிட்டார் :—“ காலையில் ஹேலந்தாகேரி, ஹாட்தாலி, இன்னம் பல கிராமங்களைச் சேர்ந்த குடியானவர்களைக் கண்டேன். பயிர்களில் சர்க்காருக்குச் சேரவேண்டிய பங்கைக் கொண்டு கொடுப்பது, தடியடிப் பிரயோகம் முதலியவைகளைப் பற்றி புகார் செய்தனர். 20, 25 ஸ்திரீகள் உள்பட சுமார் 150 பேர்கள் வந்திருந்தார்கள். இன்று காலை அவர்களை சந்திக்கப் போகிறேனென்று எனக்கே தெரியாது.

எனவே நான் இதைப்பற்றி கான் சாஹிபிடம் ஒன்றும் சொல்லி வைக்கவில்லை. நான் குடியானவர்களுடன் பேச ஆரம்பித்ததும், நல்ல வேளையாக, கான் சாஹிபும் வந்து சேர்ந்தார். குடியானவர்கள் சொன்னதற்கு அவரும் செவிசாய்த்து சில கேள்விகளும் கேட்டார். அந்தக் குற்றச் சாட்டுகளின் விவரங்களை நான் இந்த சமயத்தில் சொல்ல விரும்பவில்லை."

"குடியானவர்களுடன் பேசியபின், வழக்கம் போல ஸ்நேகபாவத்தில் கான்சாஹிபுடன் நீண்டநேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். அக்ரமங்களைப்பற்றி என் அறிக்கைகளில் இருந்த குற்றச்சாட்டுகள் சம்பந்த மாக ஒரு அளவுக்கு முடிவுக்கு வந்தோம்."

பரிஷத் ஊழியர்களுடன் சம்பாஷணை

"மாலையில், சகா ஊழியர்களைச் சந்தித்து, பொது ஜனங்களிடையே கவலை யுண்டுபண்ணி வரும் பல பிரச்னைகளைப்பற்றி 1½ மணி நேரம் விவாதித்தேன். அந்த விவாதம் ரொம்ப ருசிகரமா யிருந்தது. சில ஆழ்ந்த கேள்விகளைக் கேட்டார்கள். உண்மையான சத்யாக்ரகிகள் எப்படி நடந்துக் கொள்ளவேண்டும், என்பதுபற்றி என்னுடைய அபிப்பிராயத்தைக் கூறி னேன். அவர்கள் பூர்ண பொறுப்பு உணர்ச்சியுடன் வேலை செய்கிருர்களென்றே நம்புகிறேன். சமரசப் பேச்சுகளை நடத்த சிறையிலிருந்த சில தலைவர்களு டைய உதவி எனக்குத் தேவையா யிருந்ததால், இந்த சம்பாஷணையில் கலந்து கொள்ள அந்தத் தலைவர்களை அதிகாரிகள் அநுமதித்தனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னுடன் அந்த கைதி கள் சில மணி நேரம் இருந்தனர். அதற்குப் பின் அவரவர்கள் சிறைக்கு சுமார் 6-30-க்கு (மாலை) திரும் பக்கொண்டு போகப்பட்டனர்."

அநியாய தண்டனை

ராஜகோட்டையில் மகாத்மா மார்ச்ஸ் 1உ சிறைக்கு விஜயம் செய்கையில், அங்கிருந்த ராஜ கோட்டை மாஜி திவான் ஸ்ரீ ஹரி சங்கர் பாண்டியா (வயது 70), சத்யாக்ரஹத் தலைவர் ஸ்ரீ. திபார், சமஸ்தான அசெம்பிளி சபாநாயகர் ஸ்ரீ. பாபட்லால் ஆனந்தா, உள்பட எல்லாகைதிகளையும் சந்தித்துப் பேசினர். ராஜகோட்டை அரசியல் ஏஜெண்ட் கர்னல் டாலியும், கர்னல் ஆஸ்பினலும் இன்னொரு கொட்டடியின் படிகளில் உட்கார்ந்துகொண்டு மகாத்மா கைதிகளுடன் சம்பாஷிப்பதை கவனித்தனர். கைதிகளின் குறைகளிலெல்லாம், ஸ்ரீ. ஹரிசங்கர் பாண்டியாவின் விஷயம் தான் மிகப் பரிதாபமாயிருந்தது. இவர் இப்பொழுதுள்ள தாகூர் சாஹிப்பின் தகப்பனருக்கு ஸ்நேகிதர், அவருக்கு ஆலோசனை கூறுபவராகவுமிருந்தார். அந்த தாகூர் 1924-ல் இங்கிலாந்து சென்ற போது ஸ்ரீ. பாண்டியா ரீஜெண்டாக தாகூரின் சார்பாக சமஸ்தான நிர்வாகத்தை கவனித்து வந்தார்.

ஸ்ரீ. பாண்டியா பிரஜா பரிஷத்தின் மெம்பரல்ல; சட்ட மறுப்பு வேலைகளில் கலந்துக் கொள்ளவுமில்லை இவர், ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காநதி விசாரணை யின்றி சிறையில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டிப்பதற்காக, சென்ற மாதம் நடந்த தாகூர் சாஹிப்பின் பிறந்த தினக் கொண்டாட்டத்திற்கு வர மறுத்து விட்டார். சட்ட மறுப்பில் கலந்து கொள்வதில்லை யென்று ஒரு ஜாமீன் பத்திரத்தில் கையெழுத்துப் போடவேண்டுமென இவருக்கு சமஸ்தான அதிகாரிகள் உத்திரவிட்டனர். ஸ்ரீ. பாண்டியா இதற்கு சம்மதிக்கவில்லை. இதற்காக அடுத்த நாளே கைது செய்யப்பட்டு, புது அவசரச் சட்டத்தின் செக்ஷன் கீழ் 6 மாத தண்டனையும், ரூபா. 2000 அபராதமும் விதிக்கப்பட்டார். அடுத்த நாள் இவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், இவர் புத்திரர்களும்,

பெண்களும் இவருடைய வீட்டை விட்டு வெளியேறு மாறு உத்தரவிடப்பட்டனர். வீடு சீல் போடப்பட்டு, ஏலத்திற்கு விடப்பட்டது.

கான்சாஹிப் மீது குற்றச் சாட்டு

ஸ்ரீ. பாண்டியா, தானே முதல் மெம்பரிடம் சென்று, இயக்கத்தில் சேரும் நோக்கம் தனக்கில்லை யென்றும், ஜாமீன் பத்திரத்தில் கையெழுத்துப்போடு மாறு உத்தரவு சாதரா செய்யவேண்டாமென்றும் கேட்டுக் கொண்டதாக, மகாத்மாவிடம் கூறினார். இது உண்மையல்லவென்று கான் சாஹிப் சொன்னவுடன் காரமான வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. மகாத்மா தலையிட்டு, ஏதோ தமாஷாகச் சென்னார். இதைக் கேட்டு, ஸ்ரீ. பாண்டியா, கான் சாஹிப் உள்பட அனைவரும் கொல்லென்று சிரித்தனர். இப்படியாக மகாத்மா சிறையில் அமைதியை நிலை நாட்டினார்.

அதிகாரிகளின் அளப்பு

மகாத்மா த்ரம்பாவுக்குச் சென்று ஸ்ரீமதி. கஸ்தூரிபாயைக் கண்டதும், மகாத்மா திடகாத்திரமாக யிருந்ததைப் பாாத்து ஸ்ரீமதி. காந்தி, பெரிதும் மகிழ்ச்சி யடைந்தார். மகாத்மாஜி தேக அசௌக்யமாக யிருக்கிறுரென்றும், வார்த்தாவுக்குப் போக இஷ்டப்பட்டால் தாராளமாகப் போகலாமென்றும் ஸ்ரீமதி. காந்தியிடம் அதிகாரிகள் 4, 5 தினங்களுக்கு முன் கூறியதாகத் தெரிந்தது. ஸ்ரீமதி காந்தி, பூரா தகவல்களையும் தெரிவிக்குமாறு பலமுறைக் கேட்டார். கணவர் அசௌக்கிய மாயிருக்கிறுரென்ற செய்தியைக் கேட்டு கவலையுற்றுர். ஆனல், விடுதலை செய்தால் கூட வார்தா போக முடியாதென்பதை அதிகாரிகளிடம் தெளிவாக்கி விட்டதாகக் கூறினர்.

மிஸ். மணிபென் பட்டேல், இச் செய்தி உண் மையாவென்பதை தெரிந்துக்கொள்ள தனது தகப்பனு

ருடனுவது, அல்லது மகாத்மாவை முந்திய நாள் சிவ கிராமத்தில் பரிக்ஷித்த டாக்டர் கில்டருடனுவது டிரங்க் டெலிபோனில் பேசித்தானுகவேண்டுமென பிடிவாத மாகக் கேட்டார். அதிகாரிகள், இருவரையும் ராஜ கோட்டையிலுள்ள டெலிபோன் ஆபீசுக்குக் கொண்டு போனுர்கள், மிஸ். மணிபென் அவருடைய தகப்பனு ருக்கு 'ரிங்' செய்தார். ஆனுல் சர்தார் வீட்டிலில்லே. உடனே டாக்டர் கில்டருக்கு போன் செய்தார். மகாத் மாஜி சௌக்யமாக யிருப்பதாக டாக்டர் கில்டரிமிருந்து பதில் வந்தது. கொப்பளங்களால் காலில் சற்று வீக்க மிருப்பதாயும், அது சீக்கிரமாக குறைந்து வருவதாக வும் தெரிவித்தார்.

மகாத்மாவிடம் நம்பிக்கை

ராஜகோட்டை நிர்வாக கவுன்ஸில் முதல் மெம் பர் கான்சாஹிப் பத்தே முகம்மத்கான் பின் வருமாறு கூறினுர்:—"அதிகாரிகள் மீது சாட்டப்பட்டிருக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என் பதை நிரூபிக்க, தர்பார் தன்னிடமுள்ள எல்லா தஸ்தா வேஜிகளேயும் பார்வையிடுமாறு மகாத்மாவை கேட்டுக் கொள்வதென தீர்மானித்திருக்கிறது. இங்கிருக்கிறவர் களெல்லாம் ஒரு தினுசு; மகாத்மாவோ வேறு தினு சான மனுஷர். அவர் கொடுக்கும் தீர்ப்புக்கு அப் பீலே கிடையாது. அவர் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ளப் போகிறேம். எங்கள் வழக்கு பட்ச பாத மற்ற அவரிடம் நிச்சயமாக நியாயம் பெறும். எல்லா கைதிகளேயும் அவரிடம் ஆஜர் செய்யத் தயாரா யிருக்கிறேம். அவர்கள் எங்களுடைய முன்னிலேயில் குற்றத்தை சாட்டட்டும்; அதற்கு நாங்கள் பதிலளிக் கிறேம்." என்றுர்.

உபவாசத்தை ஆரம்பித்தார்

மகாத்மாவுக்கு ராஜகோட்டை தா கூர் சாகிப் எழுதிய கடிதம் "என் அன்புள்ள மகாத்மா காந்திஜி,

உங்களுடைய கடிதம் நேற்று எனக்கு கிடைத்தது. டிசம்பர்மீ 26-ந் தேதி நான் பிரசுரித்த 50வது நெ. உத்தரவு இன்னும் அநுசரிக்கப் படலாமென்று தங்களுக்கு உறுதி கூறப்பட்டிருந்தும், சீர்திருத்த கமிட்டி அங்கத்தினர்கள் நியமனம் சம்பந்தமாக தாங்கள் கூறும் யோசனைகள் அந்த உத்தரவுக்கு ஒத்திருக்கவில்லை. கமிட்டி அங்கத்தினர்கள் சம்பந்தமாக தங்கள் யோசனைகளேயோ அல்லது தங்களது இதர யோசனைகளையோ நான் ஏற்றுக்கொள்ள நியாயமில்லை. சீர்திருத்த கமிட்டியில் சமஸ்தானத்திலுள்ள பல தரப்பாரின் உண்மை பிரதிநிதிகளான தகுதியான மெம்பர்கள் அங்கம் வகிக்கும்படிச் செய்யும் பொறுப்பு ராஜகோட்டை மன்னர் என்ற தோரணையில் என்னையே சேரும். எனது சமஸ்தானம், எனது ஜனங்கள் இவர்களின் நன்மையை முன்னிட்டு நான் அந்தப் பொறுப்பை விட்டுவிட முடியாது. இத்தகைய முக்ய விஷயத்தில் மற்ற எவரும் முடிவு செய்ய அநுமதிப்பது எனக்கு 'சாத்யமல்ல. சீர்திருத்த கமிட்டியானது அமைதியான நிலைமையில் சீக்கிரம் வேலை ஆரம்பிக்குமென்பதே எனது நம்பிக்கை. அதன் மூலம் அவசியமான சீர்திருத்தங்களை ஏற்படுத்த தாமதம் இல்லாமற் போகும்.

தங்கள் உண்மையுள்ள,
தர்மேந்திர சிங்.

ஒப்புக்கொள்ளும்வரை உபவாசம்

ராஜகோட்டை தாகூர் சாஹிப்புக்கு மகாத்மா காந்தி மார்ச்சு 2உ அனுப்பிய இறுதிக் கடிதத்தின் முழு விவரம் பின்வருமாறு :—

“ தயவு நிறைந்த தாகூர் சாஹிப், தயக்கத்துடன் தான் நான் உங்களுக்கு இந்த கடிதத்தை எழுதுகிறேன். ஆனால் என் கடமையைச்செய்து தானாக வேண்டும். நான் இங்கு வந்ததின் காரணம் என்னவென்பதை நீங்கள் அறிவீர்கள். மூன்று நாட்களாக

நான் தர்பார் வீரவல்லாவுடன் சம்பாஷணைகள் நடத்தினேன். அவரிடம் எனக்கு மிகுந்த அதிருப்தி ஏற்படும்படி அவர் நடந்துகொண்டார். நிமிஷத்திற்கு நிமிஷம் அவர் மாறுகிறார். ஒரு நிமிஷத்தில் சொன்னது அவருக்கு அடுத்த நிமிஷத்தில் மறந்துவிடும் போலிருக்கிறது. நான் மூன்று நாட்களாக அவருடன் வைத்துக்கொண்டிருந்த சம்பந்தத்தின் பலனாக, அவரைப் பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயம் இது தான்.

இனி இக்கடிதம் எழுதுவதின் நோக்கத்தை சொல்லுகிறேன். நான் வார்தாவை விட்டுப் புறப்படும்போது, நீங்கள் உங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதாயிருந்தாலொழிய ராஜகோட்டையை விட்டுப் புறப்படுவதில்லை யென்ற தீர்மானத்துடன் புறப்பட்டேன். ஆனால் இங்கு நான் ஒன்றிரண்டு நாட்களுக்கு மேல் தங்கி யிருக்க நேருமென்று நினைக்கவேயில்லை. என்னுடைய பொறுமையின் எல்லை தாண்டி விட்டது. நான் திரிபுரிக்குப் போகவேண்டும் (முடியுமானால்.) நான் அங்கு போகாவிட்டால், ஆயிரக்கணக்கான என் சகபாடிகள் ஏமாற்றமடைவார்கள். லக்ஷக்கணக்கான ஏழை மக்கள் கலக்கமுறுவார்கள். ஆகவே, இப்போது எனக்கு காலம்தான் ரொம்ப முக்கியம்.

(1) டிசம்பர்மீ 26உ வெளியிடப்பட்ட அறிக்கையை ஊர்ஜிதம் செய்யவேண்டும். அதாவது உடன்படிக்கை பொறுப்புகளுக்கு முரணில்லாமல், ஜனங்களுக்கு சாத்தியமான அளவுக்கு அதிகாரங்கள் கொடுத்து சீர்திருத்த திட்டம் தயாரிப்பதற்கு கமிட்டி நியமித்தல்.

(2) ஜனவரிமீ 21உ வெளியிடப்பட்ட முதல் அறிக்கையை ரத்து செய்யவேண்டும்.

(3) சத்யாக்ரஹ இயக்கத்தின் தலைவரான ஸ்ரீ. திபார் உள்பட, பிரஜா பரிஷத் சார்பாக கமிட்டியில் ஐந்து பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும்.

(4) சீர்திருத்த விசாரணை கமிட்டிக்கு ஸ்ரீ. திபார் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

(5) கமிட்டியில் சமஸ்தானாதிபதியால் நியமிக்கப் படும் மூன்று மெம்பர்களுக்கும் வோட் இருக்கக் கூடாது.

6 டிசம்பர் 26உ வெளியிடப்பட்ட அறிக்கை யின் நோக்கத்தை அனுசரித்து ராஜகோட்டை நிர்வாக சபை நடந்துகொள்ள வேண்டும். சீர்திருத்தக் கமிட் டிக்கு மெம்பர்களை நியமிக்கும்போது மகாத்மாவை கலந்துகொண்டு செய்யவேண்டும்.

7. எல்லா சத்யாக்ரஹ கைதிகளையும், வியாழக் கிழமையன்று விடுதலை செய்துவிட வேண்டும். வசூலி க்கப்பட்ட அபராதப் பணங்கள் திருப்பிக் கொடுக்கப் படவேண்டும். எல்லா தடை உத்தரவுகளும் ரத்து செய்யப்படவேண்டும்.

முதல் அறிக்கையை ஊர்ஜிதம் செய்வதற்கு ரெ ஸிடென்ட் ஸ்ரீ. கிப்சனுக்கு ஆக்ஷேபணை இல்லை யென் பதையும் மகாத்மா எடுத்துக் காட்டியிருந்தார்.

"வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குள், இந்த கோரிக்கைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளா விட்டால், அது முதல் உபவாசத்தை ஆரம்பித்து, நீங்கள் அவை களை ஒப்புக்கொள்ளும் வரையில் தொடர்ந்து உபவாச மிருப்பே னென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே, என்னுடைய பின் கண்ட கோரிக்கைகளை நீங்கள் மனமார ஒப்புக்கொண்டு, என்னுடைய கவலை யைத் தீர்த்து, நாளைக்கு நான் ஊருக்குப் போகும்படி செய்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

3 தேதி பகல் 12 மணிக்குள் ராஜகோட்டை தாகூர் !சாகிப், ஏற்கனவே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதாக பதிலனுப்பாவிட்டால், உபவாசம் ஆரம்பிக்கப்போவதாக மகாத்மாகாந்தி, ராஜகோட்டை

தர்பாருக்கு அனுப்பிய இறுதிக் கடிதத்திற்கு இணங்க, காலை உபவாசத்திற்காக ஏற்பாடுகளெல்லாம் செய்து முடிக்கப்பட்டது. வழக்கம் போல் காலை காந்திஜி தனது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, கடிதப் போக்குவரத்துகளை கவனித்தார். உபவாசத்தை ஆரம்பிக்குமுன்னர் காந்திஜி கடைசி முறையாக, 11-மணிக்கு தனது வழக்கமான ஆகாரத்தை சாப்பிட்டார். ஒரு ரொட்டி, இரண்டு ஆரஞ்சு பழம், இரண்டு 'டொமாட்டோ' பழங்கள், சில கறி வகைகள், ஒரு டம்ளர் காய்ச்சிய ஆட்டுப்பால் ஆகியவை தான் அவருடைய ஆகாரம்.

ராஜகோட்டை தாகூர் சாகிபிடமிருந்து பதில் வராததால், சரியாக 12-மணிக்கு மகாத்மா தனது உபவாச விரதத்தை ஆரம்பித்தார். கான் சாஹிப் பத்தே முஹம்மதுகான் அனுப்பிய பதில் பகல் 1-30க்குதான் காந்திஜியிடம் சேர்ப்பிக்கப்பட்டது.

தாகூர் சாகிப்பின் கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டு மகாத்மாகாந்தி சொன்னதாவது:—"இவ்வித பதிலைப்பற்றி நான் வருந்துகிறேன். தாகூர் சாகிப் துர்போதனைக்கு ஆளாகிவிட்டாரென நான் கூறுவேன். இந்தப் பதில் எரிகிற நெருப்பில் எண்ணெ வார்ப்பது போலிருக்கிறது. தாகூர் சாகிப் சர்தார் பட்டேலுக்கு எழுதிக்கொடுத்த குறிப்பில் "இத் தேதியில் வெளி வந்த அறிக்கையின் 2-வது ஷரத்தில் குறிப்பிடப்பட்ட கமிட்டியின் 7 மெம்பர்கள் சர்தார் பட்டேலால் சிபார்சு செய்யப்பட்டு எம்மால் நியமிக்கப்படுமென்பதற்கு சம்மதிக்கிறோம்." என்று திட்டமாகக் குறிப்பிட்டிருக்கையில், இந்த பதிலில் வற்புறுத்தப்பட்டிருக்கும் காரணங்கள் ஒழுங்கானதே அல்ல. இப்பதிலின் பாஷையும் திட்டமானதாகவும் வற்புறுத்தும் தொனியிலுமிருக்கிறது. தாகூர் சாகிப், சர்தார் பட்டேலிடம் அந்தக் குறிப்பை எழுதிக்கொடுத்ததன் மூலம் கமி

ட்டி அங்கத்தினர்களை நியமிக்கும் பொறுப்பை விட்டுக்கொடுத்தே விட்டார். நியமனம் செய்யும் பொறுப்பு தாகூர் சாகிப்பையே சேரும். ஆனால் சர்தார்பட்டேல் சிபார்சு செய்யும் நபர்களையே நியமிக்க வேண்டுமென்பது நிபந்தனை. ஆகவே தக்கவர்களை சிபார்சு செய்யும் பொறுப்பு சர்தாரைச் சேர்ந்தது; ராஜகோட்டை மன்னரின் சம்மதத்தின் பேரிலேயே அந்த பொறுப்பு அவரிடமிருந்து மாறியது. சர்தார் பட்டேலின் சிபார்சுகள் தகுதியானவை அல்லவென்று கருதினால் தாகூர் சாகிப்பும் அவரது ஆலோசனை கர்த்தாக்களும் சர்தார் பட்டேலுடன் மீண்டும் பேச்சு ஆரம்பித்து இதர நபர்களைச் சிபார்சு செய்யும்படி அவரைத் தூண்டவேண்டும். ஆனால் சர்தார் பட்டேல் அதற்கு இணங்காவிட்டால், தாகூர் சாகிப், சர்தார் பட்டேலின் சிபாரசுகளையே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், முன்பே தாகூர் சாகிப், நியமனத்திற்கு நபர்களை நிச்சயிக்கும் பொறுப்பை விட்டுக் கொடுத்துவிட்டார். சீர்திருத்த கமிட்டிக்குக்குறிப்பிடும் அலுவல்கள் திருப்திகரமாக நிறைவேற வேண்டுமானால், யாருக்காக கமிட்டியின் லட்சியத்தைக் குறிப்பிட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோ (அதாவது நிர்வாகத்தில் ஜனங்களுக்கு விரிவான அதிகாரங்கள் ஏற்படவேண்டுமென்பதே அந்த உத்தரவு) அவர்களின் பிரதிநிதிகளே கமிட்டியில் அங்கம் வகிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வுத்தரவு மூலம் கொடுக்கப் பட்டதை மற்றொரு வகையில் பாழாக்குவதாக முடியும். சீர்திருத்த கமிட்டி அங்கத்தினர்களை நியமிக்கும் பொறுப்பு மன்னரிடமும் அவரது ஆலோசனை கர்த்தாக்களிடமும் விடப்படுமானால், லட்சியத்தையே முற்றிலும் பாழாக்கக்கூடிய கமிட்டி யொன்றை மன்னரும் அவரது கோஷ்டியும் நியமிப்பதைத் தடுக்க எதுவுமில்லை. ஆனால், இவ்விஷயம் விவாத நிலையை தாண்டிவிட்டது. தாகூர் சாகிப்பின் கடிதம் கடைசி வார்த்தையாகுமானால், நான் இப்பூமியில்

எனது வாழ்வு பூர்த்தியாகும் வரையில் (அதாவது இறக்கும் வரையில்) பட்டினியை நீடிக்க வேண்டியது தான். நான் இந்த அக்கினி பரீட்சையை அனுபவிப்பேன். மகிழ்ச்சிநிறைந்த ஹிருதயத்துடன் நான் நமபுவதும் எனக்குத் தெரிவதும் என்னவென்றால், எனது ஜீவிய காலத்தில் நடக்காதது இத்தியாகத்தின் பிறகு சிறிதும் சந்தேகமின்றி நடக்குமென்பதே."

தாகூர் சாகிப்புக்கு தான் எழுதிய கடிதத்தை பத்திரிகைகளில் வெளியிடக் கொடுத்தபோது, மகாத்மா காந்தி அத்துடன் பின்கண்ட அறிக்கையையும் வெளியிட்டார்.

"தாகூருக்கு நான் எழுதிய கடிதத்தின் நகலை மிகுந்த துக்கத்துடன் வெளியிடுகிறேன். ஆனால், கஷ்டமான கடமைகளைச் செய்யும் துர்ப்பாக்கியம் எனக்கு பல தடவைகளில் நேர்ந்திருக்கிறது. இதுவும் அவைகளிலொன்று. நண்பர்கள், எனக்காக ஒரு நாளைக்குக் கூட அனுதாப உண்ணுவிரதம் இருக்கக்கூடாதென்று விரும்புகிறேன். சத்யாக்ரஹத்தைப் போல் உபவாச விரதமும், இந்தக் காலத்தில் மிகவும் துஷ் பிரயோகம் செய்யப்படுகிறதென்பதை நான் அறிவேன். ஒன்றுமில்லாததற்கெல்லாம் உபவாசம் ஆரம்பித்து விடுகிறார்கள். பல சமயங்களில் இந்த உபவாசங்களுக்குப் பின்னல், பலாத்கார சிந்தனைகள் இருக்கின்றன. அர்த்தமில்லாமல் சிலர் "போலித்தனமாகச்" செய்வதைத் தடுப்பதற்காகவாவது நான் உபவாசம் ஆரம்பிக்கக் கூடாதென்று முதலில் தயங்கினேன். ஆனால், அந்தராத்மாவின் ஆக்ஞையை மீறவே முடியாது."

உபவாச அனுபவங்கள்.

சில உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. எப்போதாவதுதான் அவைகளை உட்கொள்ளலாம். அதுவும் நல்ல தேர்ச்சி பெற்ற வரை கேட்டுக்கொண்டுதான் செய்யவேண்டும். உபவாசமும் அதைப் போலவேதான்.

எல்லோருமே தங்களை நிபுணர்களென்று நினைத்துக் கொள்ளுவது தவறானது. பாபமானதும் கூட. ஆத்ம சுத்திக்காக ரொம்ப பால்யத்திலேயே நான் உபவாசம் மேற்கொள்ள ஆரம்பித்து விட்டேனென்பதை பொது ஜனங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். அப்போது, தவறான பாதையில் சென்ற என் மகன் ஒருவனுக்காக பல நாட்கள் உபவாசம் அனுஷ்டித்தேன். இதற்குப் பிறகு என் அருமை நண்பர்களில் ஒருவரின் குமாரத்தி, தவறான பாதையில் சென்றதற்காக இன்னம் நீண்ட உபவாசம் ஒன்றை அனுஷ்டித்தேன். அந்த உபவாசங்களின் பலன், உபவாசம் நியாயமானதுதானென்பனத ருசுப்பித்தது."

"முதல் முதலில் நான் பகிங்கரமாக உபவாசம் அனுஷ்டிக்க ஆரம்பித்தது தென் ஆப்ரிக்காவில். அங்குள்ள இந்திய தொழிலாளர்களின் கஷ்டங்கள் சம்பந்தமாக உபவாசமிருந்தேன். என்னுடைய உபவாச பரிக்ஷை ஒன்றாவது பலனளிக்காமற் போனதாக எனக்கு ஞாபகமில்லை. அத்துடன் அந்த உபவாச காலங்களில் எனக்கு எவ்வளவோ மனோ நிம்மதியும், சந்துஷ்டியும் ஏற்பட்டிருக்கின்றன கடைசியாக, உபவாசம் இருப்பது ஆண்டவனின் ஆக்ஞையா யிருந்தாலொழிய, அது பிரயோஜனமில்லாத பட்டினி என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்."

குரோத புத்தி கூடாது.

"இன்னொரு விஷயம். தாகூர் சாஹிபைப் பற்றியோ, அவர்களுக்கு ஆலோசனைக் கூறுபவர்களைப்பற்றியோ, குரோதமான முறையில் பிரசங்கங்களோ, எழுத்துகளோ இராது. ரெசிடெண்டைப் பற்றியும், சமஸ்தான அதிகாரிகளின் காரியங்களைப்பற்றியும் நான் கடுமையான பாஷை உபயோகித்திருக்கிறேன். அவர்கள் மீது நான் ஏதாவது அபாண்டம் சொல்லி விட்டதாக எனக்குத் தெரிந்தால், அதற்கு

என்ன பரிகாரம் செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியும்.



லிம்ப்டி தாகூர் சாஹெப் மகாராஜா சர். தௌலத் சிங். இவர் பிரஜைகளின் குறைகளைப் பூர்த்தி செய்தாலொழிய, அவருடைய ராஜ்யத்தில் ஒருவருமே இருக்கக்கூடாதென்றும், எல்லாரும் வெளியேறிவிட வேண்டுமென்றும் மகாத்மா யோசனை சொல்லி யிருக்கிறார்.

தாகூர் சாஹிபைப்பற்றியோ, அல்லது துக்ககரமான இந்த நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் இதரர்களைப்பற்றியோ கடுமையான பாஷை ஏதாவது உபயோகித்தால், இந்த உபவாசத்தினால் என்ன பலன் ஏற்படவேண்டுமென்று உத்தேசிக்கிறேனோ, அது கெட்டுப்போய் விடும். புனிதமான ஒப்பந்தத்தை ஒருவர் மீறுகிறாரென்றால், அது எவ்வளவு பெரிய கெடுதல்என்பதை எடுத்துக்காட்டுவதற்கோ; அதன் விளைவுகள் என்னவாயிருக்குமென்பதை எடுத்துக்காட்டவோ, கடுமையானபாஷை உபயோகிக்க வேண்டுமென்ற அவசியமே யில்லை.

தாகூர் சாஹிப் செய்தது தவறு என்பதையும், பொதுஜன அபிப்பிராயத்தின் வலுவையும், பத்திரிகை

கள் கண்யமானமுறையில் அவருக்கு எடுத்துக் காட்டினல் போதும். அவர்கள் செய்யகூடிய உபயோகமான வேலை இதுதான்.

ஆண்டவன் அருளிருந்தால் பிழைப்பேன்.

சத்யாக்ரஹம், உபவாசம் எல்லாம் தியாகத்தின் ஒரு அம்சம். அதற்கு பலனேற்பட வேண்டுமானல், நியாயமான பொதுஜன அபிப்பிராயம் வலுக்கவேண்டும். அதில் துவேஷமே இருக்கக் கூடாது. நான் உபவாசம் இருப்பதால் விரும்பிய பலன் சீக்கிரம் கிடைத்து விடவேண்டுமென்று அவசரப்படவேண்டாம். நான் உபவாசத்தை மேற்கொள்ளுவதற்கு ஆக்ஞாபித்த அந்தக் கடவுள், இதை நான் சமாளிப்பதற்கு எனக்கு போதுமான பலமும் அளிப்பார். மனிதவர்க்கத்திற்கு தொண்டு புரியும் வேலையைச்செய்ய நான் இன்னம் கொஞ்ச காலம் உயிருடன் இருக்கவேண்டுமென்பது ஆண்டவனின் விருப்பமானல், எவ்வளவு நீண்ட உபவாசம் இருந்தாலும் இந்தக் கட்டை அழியாது.

காலஞ்சென்ற ஸ்ரீ. ராம்சே மெக்டொனல்டின் வகுப்புத் தீர்ப்பை ஆக்ஷேபித்து நான் உபவாசம் இருந்தபோது, பலர் தங்கள் இஷ்டத்திற்கு விரோதமாக நடந்து கொண்டார்களென்பதை நான் அறிவேன். இந்த உபவாசத்தின்போது அப்படி எதுவும் நேராதென்று நம்புகிறேன்.

உபவாசத்தின் நோக்கம்.

தாகூர் சாகிப் ஜனவரி 21-ந் தேதி விடுத்த அறிக்கையின் மூலம், டிசம்பர் மாதம் 26-ந் தேதி அறிக்கையில் கொடுத்திருந்த வாக்குறுதியை மீறிவிட்டாரென்று நான் சொல்லுவது தவறென்று யாராவது கருதினல், நான் சொன்னதையும், என்னுடைய உபவாசத்தையும் சேர்த்து கண்டிக்கவேண்டும். அது ஒரு நண்பனுக்குச் செய்யும் உதவியாயிருக்கும். தாகூர்

சாகிப்பின் மனதை இளகவைக்க வேண்டுமென்பதே உபவாசத்தின் நோக்கம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பொதுஜன அபிப்பிராயத்தை வற்புறுத்த வேண்டுமென்பதற்காகவல்ல.

சகுனிமாமா வீரவல்லா.

என்னுடைய கடிதத்தின் முதல் பாராவில், தர்பார் வீரவல்லாவைக் கண்டித்து எழுதியிருப்பதைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக, நான் யார் மீதும் லேசில் குற்றம் கண்டு பிடிக்கமாட்டேன். ஏனெனில் என்னிடமே எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. ஆகவே மனிதர்களின் தர்ம சிந்தனை எனக்கு வேண்டும். யாரையும் பற்றிக் கண்டிப்பாகத் தீர்ப்பளித்துவிடுவதில்லை. ஏதாவது குறைகள் தோன்றினாலும், அதற்குக் காரணம் இருக்குமென்று சமாதானம் செய்துக்கொள்ளுவேன். ஸ்ரீ. வீரவல்லாவைப்பற்றி என்னிடம் கடுமையான புகார்கள் வந்து குவிந்திருந்தன. அவருடன் நான் பேசிக்கொண்டிருந்தபோது, இந்தப் புகார்களை அவரிடமே பிரஸ்தாபித்தேன். அந்தப் புகார்களைப் பரிசீலனை செய்யுங்களென்று அவர் சொன்னார். அதையும் சொல்லவேண்டுமல்லவா? பரிசீலனை செய்கிறேன் என்று அவருக்கு பதிலளித்தேன். அப்படிச் செய்ய வேண்டுமென்பதுதான் என் விருப்பமும். ஆனால், மத்தியில் இந்த உபவாசம் வந்துவிட்டது. அவர்மீது சொல்லப்படும் புகார்களுக்கு ருசுக்கள் இருந்தால், எனக்கு அனுப்பும்படி ஏற்கனவே நண்பர்களைக் கேட்டிருக்கிறேன்.

ஆனால், மூன்று நாட்களாக அவருடன் தொடர்ந்து நான் நடத்திய சம்பாஷணைகளினால் எனக்கு ஏற்பட்ட அபிப்பிராயமே, அவர்மீது சொல்லப்பட்ட புகார்களுக்குப் போதிய ருசுக்களாய் விட்டன. என் கடிதத்தின், முதல் பாராவில் அவரைப்பற்றி நான்

எழுதியிப்பது, வேண்டுமென்றே அடக்கி எழுதியிருக்கிறேன். அந்தப் பாராவை எழுதுவது என்மனதுக்கு மிகவும் கஷ்டமாய்த் தானிருந்தது. ஆனால் தாகூர்மீது அவருக்கிருக்கும் அசாத்யமான செல்வாக்கைப்பற்றி தாகூருக்கு எச்சரிக்க வேண்டியது என் கடமையாயிருந்தது. தாகூர் சாஹிப் மீது, ஸ்ரீ. வீரவல்லாவுக்கு போதுமான செல்வாக்கு இருக்கும் வரையில், ஜனங்களுக்கு அமைதி என்பது இராதென்று—ஒன்றல்ல, இரண்டல்ல—பல பிரமுகர்கள் என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். இதில் பெரிதும் உண்மையிருக்கிறதென்றுதான் நானும்நினைக்கிறேன். நான் உபவாசம் ஆரம்பிக்கும் சமயத்தில் இந்த உண்மையை பொது ஜனங்களுக்குத் தெரிவிக்காமல் மறைத்து வைப்பது தவறாகும். அவருக்கு அந்தரங்கமாக நான் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறேன். என் மூலமாக ஒரு நாளும் அது வெளி வரப்போவதில்லை.

தாகூர் சாஹப் அவருடைய செல்வாக்கிலிருந்து விடுபடுவது கஷ்டமாயிருந்தால் கூட, ஸ்ரீ. வீரவல்லா, தாகூரை இப்படி ஆட்டி வைக்கக்கூடாதென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். அவரை அறிந்தவர்களும், என்னுடைய இந்த வேண்டுகோளில் சேர வேண்டுமென்று விரும்புகிறேன்.

கத்தியவார் சூழ்ச்சிகள்

நான் இன்னம் எவ்வளவோ சொல்ல முடியும்; ஆனால், சொல்லக்கூடாது. நான் கத்தியவாரிலிருந்து வெளியேறி ஒன்றரை தலைமுறைக்கு மேல் ஆகப்போகிறதென்றாலும், கத்தியவார் அரசியல் எவ்வளவு கேவலமா யிருக்கிறதென்பதை நான் அறிவேன். துரதிர்ஷ்டம் பிடித்த இந்த பிரதேசம், சூழ்ச்சிகளுக்குப் பெயர் போனது. இந்த நான்கு நாட்களிலேயே அதன் விஷக்காற்றை நான் அனுபவித்திருக்கிறேன். இந்த

உபவாசத்தின் மூலமாகவாவது சத்தியவார் அரசியல் பரிசுத்தமடையக் கூடாதாவென்று பிரார்த்திக்கிறேன்.

சத்தியவாரில் யோக்கியமாக வாழ்வதென்பது அசாத்தியமாய் விட்டது. விஷத்தன்மை வாய்ந்த இந்த சுற்றுணர்ச்சியை தொலைத்து ஒழிக்க என்னுடைய உபவாசத்தை உபயோகித்துக்கொள்ளும்படி

மகாத்மாவின் துணையை விடுத்து, மற்றவர்கள் நட்பைக் கொள்ளுதல் பத்து மடங்கு தீமையைத் தேடிக்கொள்வதாகும்



பிக்கானீர் மகாராஜாவும், லேடி லின்லித்கோவும்

" பல்லார் பகைகொளல் விற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கைவிடல் " —குறள்.

கத்தியவாரிலுள்ள அரசியல் வாதிகளையும், சமஸ்தானாதி பதிகளையும் அழைக்கிறேன் ''

மார்ச் 5-ம் தேதி ராஜகோட்டை சமஸ்தான அதிகாரிகள் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியை, த்ரம்பா சிறையிலிருந்து, காந்திஜி உபவாசமிருக்கும் ராஷ்ட்ரீய சாலாவுக்கு மோட்டாரில் கொண்டு வந்தனர். அவரை காந்திஜீயின் இருப்பிடத்திற்குக் கொண்டு வந்த அதிகாரி, திட்டமான தகவல் எதுவும் கொடுக்காததால், ஸ்ரீமதி கஸ்தூரிபாய் விடுவிக்கப்பட்டாரா அல்லவா என்பது அச்சமயம் தெரியவில்லை. ஸ்ரீமதி கஸ்தூரிபாய் சமஸ்தான சர்க்கார் மோட்டார் ஒன்றில் ராஷ்ட்ரீயசாலாவுக்குக் கொண்டுவரப்படுவதைப்பார்த்த ஒரு நிருபர், ஸ்ரீமதி காந்தி விடுதலையாய் விட்டாராவென்று காந்திஜீயின் காரியதரிசி ஸ்ரீ. பியாரிலாலைக் கேட்டார். அவர் அதற்கு பதிலளித்ததாவது :—“திடீரென்று இங்கு கஸ்தூரிபாயை பார்த்ததால் உங்களைப்போல எனக்கும் ஆச்சர்யமேற்பட்டது. தனக்கு என்ன ஆகியிருக்கிறது என்று அவருக்கே தெரியாது.

ஒரு நோயாளியைப் பார்க்க ஸ்ரீமதி காந்தி போக வேண்டும் என்று தாகூர் சாஹெப் தன்னிடம் சொன்னதாக முதல் மெம்பர் ஸ்ரீ. பத்தே முகம்மத் தெரிவித்தார். இதைத் தவிர ஸ்ரீ. முகம்மத் எதுவும் சொல்லவில்லை. கஸ்தூரிபாய் மேலும் வற்புறுத்திக் கேட்ட போது, “காந்திஜி ராஜகோட்டையில் உள்ளவரை நீங்கள் (ஸ்ரீமதி காந்தி) அவருடன் இருக்கவேண்டுமென தாகூர் சாகிப் கூறினார்'' என்று ஸ்ரீ. முகம்மத் தெரிவித்தார். இதற்கு கஸ்தூரிபாய் “எனக்கு ஒன்றும் தெரியாதே” என்றார். த்ரம்பா சிறையிலிருப்பதென்று முடிவு செய்து விட்டேன். இருந்தபோதிலும் நீங்கள் ராஷ்டிரீயசாலாவுக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னதால், அங்கு சென்று நான் என்ன செய்யவேண்டுமென்று காந்திஜீயைக் கேட்கிறேன்'' என்று பதிலளித்தார்.

"சட்டரீதியாக கஸ்தூரிபாயின் நிலைமை என்னவென்று காந்திஜீ முதல் மெம்பரைக்கேட்டார். ஸ்ரீமதி காந்தி "சமஸ்தானவிருந்தினராக" யிருப்பதாக அதிகாரிகள் அறிவித்தனர். எனவே, மகாத்மாஜீ "சமஸ்தான விருந்தினர் என்றால் "ராஜாங்கக் கைதி" என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டுமா? அப்படியானல் எந்த சட்டப்படி, உத்தரவுப்படி அவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்? என்று முதல் மெம்பரைக் கேட்டார். பதில் கிடைக்குமென காத்திருந்தார். ஒரு வேளை கேள்விக்குப் பதிலாகவே ஸ்ரீமதி கஸ்தூரி பாய் அனுப்பப்பட்டாரோ! என்னவோ அன்னை கஸ்தூரி பாய் மூட்டை, முடிச்சின்றி வந்து சேர்ந்தார்.

ஸ்ரீமதி காந்தி, த்ரம்பாவுக்குத் திரும்பி, அவரைப் போலவே, அவருக்குள்ள சலுகைகளுடன் அங்கு சிறைப்படுத்தப்பட்டுள்ள மிஸ். மணிபென், மிஸ். மிருதுலாபென் இருவருடனும் இருக்க வேண்டுமென மகாத்மாஜி கூறிவிட்டார். கஸ்தூரிபாய் அந்த இருவரையும் பற்றி ரொம்பவும் கவலைப்படுகிறார். தனக்கு விசேஷ சலுகைகள் எதுவும் பெற விரும்பவில்லை."

திரும்ப அனுப்பப்பட்டார்

மாத்மாவின் யோசனைப்படி, பிரார்த்தனை முடிந்த பின் ஸ்ரீமதி காந்தி நகரிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள அவருடைய த்ரம்பா சிறைச்சாலைக்குச் சென்றார். ராஜகோட்டை அதிகாரிகள் ஒரு நிருபரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், ஸ்ரீமதி காந்தி மகாத்மாவுடன் இருக்கவும், இஷ்டப்பட்ட இடத்திற்குப் போகவும் தாங்கள் அனுமதித்து விட்டதாக கூறினர்.

ரெசிடெண்டும் மகாத்மாவும் சந்திப்பு

மார்ச்சுமீ 6வ காலை 11-மணிக்கு ராஜகோட்டை ரெஸிடென்ட் ஸ்ரீ. கிப்ஸனிடமிருந்து, ரெஸிடென்ஸி காரியாலய சிப்பந்தி ஸ்ரீ. பிரான்ஸிஸ் எப். பியர்ஸன்

ஒரு முக்கியமான கடிதம் கொண்டுவந்தார். அதை அவரே தன் கையால் மகாத்மாவிடம் கொடுத்தார். இன்று மகாத்மாவுக்கு மௌன விரத தினம். ஆதலால் வழக்கம்போல புன்முறுவலுடன் மௌனமாக ஸ்ரீ. பியர்ஸனை வரவேற்று கடிதத்தைப் பெற்றுக்கொண்டு சைகையால் வந்தனம் தெரிவித்தார்.

அந்த முக்யமான கடிதத்தில் என்ன இருக்கிறதெனத் தெரியவில்லை. ஆனால் அது ரொம்ப முக்யமானதாகக் கருதப்பட்டது. நேற்று முன்தினம் ரெஸிடெண்டு ஸ்ரீ. கிப்ஸன் மூலம், மகாத்மா வைஸிராய்க்கு அனுப்பிய கடிதத்திற்கு, ஒரு வேளை, இது வைசிராயின் பதிலாக இருக்குமென யூகிக்கப்பட்டது. ராஜகோட்டை விவகாரத்தில் மகாத்மாவுக்கும், தாகூர் சாகிப்பிற்கும் இடையே மூன்று நாளாக இருந்த நெருக்கடி சீக்கிரத்தில் தீர்ந்துவிடுமென்பதற்கான அறிகுறிகள் தெளிவாகக் காணப்பட்டன. சீக்கிரத்தில் ஒரு சமரசமுடிவு ஏற்படுமென உத்யோக வர்க்கத்தினர் வெகு நம்பிக்கையுடனிருந்தனர். "நம்மைப்பற்றிய வரையில் சமரச மேற்படுமென்று நம்பிக்கையுடனிருப்பதாகவும், சென்ற மூன்று தினங்களைவிட இப்போது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாகவும்" கூறினார்.

மகாத்மாவுடன் கிப்ஸன் பேச்சு

மார்ச்சுமீ 7௳ காலையில் ரெஸிடெண்ட் கிப்ஸனின் உதவி காரியதரிசி இரண்டு தடவை மகாத்மாவை வந்து பார்த்தார். பிறகு அவர் 10-30-மணிக்கு, கையில் ஒருஸீல் வைத்த கடிதத்துடன் வந்து கடிதத்தை நேரில் மகாத்மா கையில் கொடுத்துவிட்டுப்போனார். இக் கடிதத்துக்கு மகாத்மா உடனே பதில் எழுதியனுப்பினார். அரைமணி நேரத்துக்குப் பிறகு மீண்டும் மகாத்மாவின் ஜாகைக்குவந்தார். அப்போதும் கையில் வேறொரு கடிதம் கொண்டு வந்தார்.

ஸ்ரீ. பியர்ஸன் மகாத்மாவை சந்தித்துத் திரும்பிய பின் சிறிது நேரத்துக்கெல்லாம் ரெசிடெண்ட் கிப்ஸன் மகாத்மாவை வந்து பார்த்தார், சமரசம் ஏற்படுமென்ற சந்தோஷக்களை எல்லோர் முகத்திலும் காணப்பட்டது. மகாத்மாவைப் பார்த்துவிட்டுத் திரும்பியதும் தாகூர் சாஹிபையும், வீரவல்லாவையும் ரெஸிடென்ஸிக்கு வரவழைத்து ஒரு மணிநேரம் அதாவது 1-30-மணி வரையில் பேசிக்கொண்டிருந்தார்கள். மகாத்மாவின் காரியதரிசி ஸ்ரீ. பியாரிலால் டில்லியில் யாருடனோ மும்முரமாக டெலிபோனில் அடிக்கடி பேசிக்கொண்டிருந்தார்.

டில்லிக்கு அழைப்பும் காந்திஜி சம்மதமும்

ரெஸிடெண்ட் ஸ்ரீ. கிப்சன் மூலம் மார்ச். 7உ காலை 10.30 மணிக்கு மகாத்மாவுக்கு வைசிராய் அனுப்பிய மேற் சொன்ன கடிதத்தின் முழு விவரம்.—

என் அன்புள்ள காந்திஜி,

நான் நேற்று உங்களுடைய பதிலை வைசிராய்க்கு தந்தி மூலம் தெரிவித்தேன். வைசிராய் பின் வரும் செய்தியை உங்களிடம் தெரிவிக்கும்படி எனக்கு கட்டளையிட்டார்.

"எனக்கு இப்பொழுது உங்களுடைய (மகாத்மாவின்) செய்தி கிடைத்தது. அச் செய்திக்காக நான் (வைசிராய்,) உங்களுக்கு மிக்க வந்தனங் கூறுகிறேன். உங்களுடைய நிலைமையை நான் புரிந்துகொண்டேன். தாங்கள் எனக்கு தெரிவித்ததிலிருந்து இவ்விஷயத்தில் தாங்கள் முக்கியமானதாக கருதுவது என்னவென்றால், நம்பிக்கை துரோகம் ஏற்பட்டிருக்கிறதென்ற தங்கள் உணர்ச்சியே என்பது, ஸ்பஷ்டமாக விளங்குகிறது. தாகூர் சாகிப்பின் உத்தரவு பற்றி அவர் பின்பு சர்தார் பட்டேலுக்கு எழுதிய கடிதத்தின் பேரில் அர்த்தம் என்னவென்று பார்த்தால், அதில் சந்தேகங்களு

க்கு இடமுண்டென்று நான் உணருகிறேன். இந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்ய சிறந்த வழி அவைகளை இந்தியாவின் பிரதம நீதிபதியின் வியாக்யானத்திற்கு விடுவதென்று எனக்குத் தெரிகிறது. ஆகவே நான் தாகூர் சாகிப்பின் உத்தரவு, சர்தார் பட்டேலுக்கு தாகூர் சாகிப்பின் கடிதம் இவைகளின் பிரகாரம் சீர்திருத்தக்கமிட்டி எப்படி அமைக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றி இந்தியாவின் பிரதம நீதிபதியை யோசனை கேட்க உத்தேசித்திருக்கிறேன். இதற்கு தாகூர் சாகிப்பும் சம்மதமளிப்பார். பிரதம நீதிபதி தீர்ப்பின்படி சீர்திருத்த கமிட்டி அமைக்கப்பட்டப்பிறகு; அக்கமிட்டி மெம்பர்களுக்குள், தாகூர் சாகிப்பின் உத்தரவின் எந்த பாகத்தின் அர்த்தத்தைப்பற்றியும் அபிப்பிராய பேதம் ஏற்படுமானால் அப்பிரச்னையையும் இந்தியாவின் பிரதம நீதிபதி தீர்ப்புக்கு விடலாம். அவரது தீர்ப்பே முடிவானது. இந்த ஏற்பாடும் தமது உத்தவில் கண்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக தாகூர் சாகிப்பின் உறுதி மொழியும், தாகூர் சாகிப் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு எனது செல்வாக்கை உபயோகிப்பேனென்று எனது உறுதிமொழியே தங்களுடைய உணர்ச்சியைத் திருப்தி செய்ய போதுமானதென்றும், நேர்மையான முறையில் காரியங்கள் நடக்க எல்லா வகையிலும் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்ற எனது உணர்ச்சியை தாங்களும் பகிர்ந்துகொள்வீர்களென்றும் உபவாசத்தை நிறுத்தி மேற்கொண்டு தங்கள் தேகத்திற்குச் சிரமம் ஏற்படாதபடி செய்து உங்களுடைய நண்பர்களின் கவலையைத் தீர்ப்பீர்களென்றும் நான் பூரணமாக நம்புகிறேன். நான் முன்பு தெரிவித்தபடி உங்களை டில்லியில் சந்தித்து விஷயங்களைக் கலந்து பேச விரும்புகிறேன். அதன் மூலம் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

சமரசம் ஏற்பட்டது

வைசிராயின் கடிதத்தை படித்துவிட்டு, ஆரஞ்சு பழ ரசத்தை மகாத்மா சாப்பிடும்பொழுது சந்தோஷம் தெரிவித்தார். மகாத்மா பொக்கைப் பல்லைக்காட்டி நன்றாகப் புன்முறுவல் செய்தார். "கொஞ்ச நேரம் பொறுத்து உங்களுக்கு சொல்லியனுப்புகிறேன்." என்றார். உபவாசம் நிறுத்தப்பட்டதைக் கேட்டு ராஜ கோட்டை பூராவும் ஒரே குதூகலமாயிருக்கிறது. இச் செய்தி ஒரே வினாடியில் ஊரெங்கும் பரவிவிட்டது. ராஷ்டிரீய சாலா வாசலில் ஜனங்கள் கூடினர்

வைசிராய்க்குப் பதில்

ரெஸிடென்ட் ஸ்ரீ. கிப்ஸன் மூலம், மகாத்மா காந்தி வைசிராய்க்கு அனுப்பிய பதில் வருமாறு:—

அன்புள்ள ஸ்ரீ. கிப்ஸன், தங்களுடைய கடிதம் கிடைத்தது; சில சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள நான் விரும்பியதும் தாங்கள் என்னிடம் வந்து கலந்து பேசினீர். தற்போதுள்ள எனது தேக நிலையில், நான் எனது சக்தியை செலவழிக்க விரும்பவில்லை. ஆகவே, அவ்விஷயங்களை எழுத்துமூலமாக தெரிவிக்க விரும்பவில்லை. வைசிராய்க்கு எனது பின்வரும் செய்தியை தந்தி மூலம் தெரிவியுங்கள்.

"தாங்கள் உடனே பதில் அனுப்பியதற்காக நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அப்பதில் இன்று காலை 10-45-மணிக்குக் கிடைத்தது. அப்பதில் பல விஷயங்களைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லையென்றாலும், எனது உபவாசத்தை நிறுத்தவும், பிரார்த்தனை செய்து கொண்டும் சமரஸ ஏற்பாட்டை துரிதப்படுத்த பலவித முயற்சிகள் செய்துகொண்டிருக்கும் கோடிக் கணக்கான மக்களின் கவலையை உபவாசம் நிறுத்துவதன் மூலம் தணிக்கவும், தங்களுடைய அன்பான செய்தி போதியதாகுமென்று நான் கருதுகிறேன். தங்களுடைய செய்தியில் குறிப்பிடாத விஷயங்களை நான்

விட்டுக்கொடுத்து விடவுமில்லை. அவ் விஷயங்களைப் பற்றி நான் திருப்தி யடைய எதிர்பார்க்கிறேன். அவ் விஷயங்களைப்பற்றி பரஸ்பரமாக விவாதிக்கலாம். டில்லிக்கு யாத்திரை செய்யலாமென்று என்னை டாக்டர்கள் அநுமதித்தவுடனே நான் அங்கு வருகிறேன். எனது உபவாசத்தால் ஏற்பட்ட விஷயத்தை கால தாமதமின்றியும், அநுதாபத்துடனும் நிவர்த்தித்ததற்காக நான் தங்களுக்கு மீண்டும் வந்தனம் கூறுகிறேன்.” இதே கடிதத்தில் ஸ்ரீ. கிப்ஸனுக்கு எழுதிய குறிப்பொன்றில் எல்லா கைதிகளும் விடுதலை யாவார்களென்று நம்புவதாக மகாத்மா கூறியிருநதார்.

மார்ச்சுமீ 7உ அன்றே அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலையானார்கள்.

6-வது அத்தியாயம்

மகாத்மாவின் வெற்றி

வைசிராய் அழைப்பிற்கிணங்கவும், டாக்டர்கள் கூறியபடியும், மகாத்மா காந்தி மார்ச்சுமீ 15உ காலை 7-35-க்கு டில்லி கன்டோன்மெண்டு ஸ்டேஷனில் இறங்கினார். அங்கிருந்து நேராக பிர்லா ஹவுஸுக்கு, மோட்டாரில் சென்றார். மகாத்மா, பிர்லா ஹவுஸிலிருந்து 10-45-க்கு ஸ்ரீ. மகாதேவ தேசாயுடன் வைசிராய் மாளிகைக்குப் புறப்பட்டார். புறப்படுமுன் சர்தார பட்டேல், ஸ்ரீமதி நாயுடு, அப்துல் கபார்கான், ராஜகுமாரி அம்ருத கௌரி, ஸ்ரீ ஜி. டி. பிர்லா ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தார். மகாத்மா உற்சாகத்துடனிருந்தார்.

டில்லி ஸ்டேஷனில் வரவேற்பு

மகாத்மா பிரயாணத்தை நன்கு சமாளித்தார். ஆனால், ஆஜ்மீரிலும் ஜயப்பூரிலும் மாத்திரம் கும்பல்

கள் அவருடைய வண்டிக்கு முன்கூடி, அவரை தரிசிக்க வேண்டுமென மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். கண்டோன்மெண்டு ஸ்டேஷனுக்கு காலை ரயில் வந்ததும் மகாத்மாவை அவருடைய புதல்வர் ஸ்ரீ. தேவதாஸ் காந்தி வண்டியிலிருந்து அப்படியே தூக்கி, பிளாட்பாரத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்த மோட்டாரில் வைத்தார். மகாத்மாவுக்கு ஒரு பக்கத்தில் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியும், இன்னொரு பக்கத்தில் சர்தார் வல்லபபாய் பட்டேலும் உட்கார்ந்தனர். மோட்டார் பிர்லா ஹவுஸுக்குச் சென்றது.

மகாத்மாவை ஸ்டேஷனில் வரவேற்க சர்தார் பட்டேல், எல்லைப்புற காந்தி கபார்கான், ஜி. டி. பிர்லா மகாதேவ தேசாய் முதலியோர் வந்திருந்தார்கள். கும்பல் கூடுவதை தவிர்ப்பதற்காகவே கண்டோன்மெண்ட் ஸ்டேஷனில் மகாத்மா இறங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் பல பிரமுகர்கள் கூடியிருந்தார்கள். வண்டி ஸ்டேஷனில் நின்றதும் இவர்கள் மகாத்மாவின் மோட்டாரைச் சூழ்ந்து விட்டனர்.

பலன்பூர் நவாபுக்கு பேட்டி

நேற்று மத்தியானம் பலன்பூருக்கு அருகிலுள்ள ஒரு சிறிய ஸ்டேஷனில் ரயில் நின்றது. பலன்பூர் நாவாப் மகாத்மா யிருந்த வண்டியில் நுழைந்து அவருடன் 10 நிமிஷம் பேசினர்.

தஸ்தாவேஜிகளுடன் சென்றார்

காலை சரியாக 11-மணிக்கு மகாத்மா காந்தி வைசிராய் மாளிகையில் நுழைந்தார். மகாதேவ தேசாய் தஸ்தாவேஜிகளுடன் மகாத்மாவுக்குப் பின்னல் சென்றார். மகாத்மாவை வைசிராயின் மாளிகைக்குப் புறப்படுவதைப் பார்ப்பதற்காக ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். அவர் செக்ரிட்டிடேரியட் கட்டிடத்தை

கடந்துச் செல்கையில், சர்க்கார் ஊழியர்களில் அநேகர் வைசிராய் மாளிகைக்குச் செல்லும் ரோட்டின் இரு பக்கத்திலும் நின்று தரிசித்தனர்.

மகாத்மா வைசிராயை சந்தித்துப் பேசியபின் சரியாக மாலை 1-மணிக்கு வைசிராய் மாளிகையிலிருந்து வெளிவந்தார். வைசிராய் மாளிகை வாசலில் அவருடைய மோட்டார் செல்ல முடியவில்லை, இந்திய சர்க்கார் காரியாலயத்திலிருந்து வந்திருந்த சிப்பந்திகளின் கும்பல் மகாத்மாவைத் தரிசிப்பதற்காக வழியை யடைத்து நின்றிருந்தனர். இந்த சிப்பந்திகள் மகாத்மாவை நமஸ்கரித்தனர். மகாத்மா வழக்கம் போல புன்சிரிப்புடன் நன்றி தெரிவித்தனர். வைசிராய் மகாத்மா பேட்டி கிட்டத்தட்ட 1¾-மணி நேரம் நடந்தது.

சிறைக்கு விஜயம்

மகாத்மா நேராக பிர்லா ஹவுசுக்குச் சென்று அங்கிருந்து, டில்லி சிறைக்குப் புறப்பட்டு சிறையில் உண்ணு விரதமிருக்கும் ராஜாங்கக்கைதிகளை உண்பித்து அவர்களுடன் ஆரஞ்சு பழரசம் சாப்பிட்டார். பிர்லா ஹவுஸில் பத்திரிகை நிருபர்கள் மகாத்மாவை பேட்டி கண்டனர். "நானும் வைசிராயும் சந்தித்ததுபற்றி வைசிராய் மாளிகையிலிருந்து ஒரு அறிக்கை வெளி வரும்" என்றார். "வைசிராயை மீண்டும் சந்திக்கப் போகிறீர்களா?" என்று ஒரு நிருபர் கேட்டார். இதற்கு, "எனக்கு ஒன்றும் தெரியாது" என்று மகாத்மா பதிலளித்தார்.

நரி ஓடுகின்றது

மகாத்மா காந்தி ராஜகோட்டை விட்டுப் புறப்பட்டதும், ராஜகோட்டை பழைய ரீதிக்கு வந்துவிட்டது. அதாவது, மகாத்மா காந்தி இங்கிருந்தபோது இருந்த உற்சாகம் இப்பொழுதில்லை. டாக்டர் ஜீவாராஜ் மேத்தாவும், ஸ்ரீ. மதுரதாஸ் திரிகம்ஜியும் பவ நகருக்குப்

பிரயாணமானார்கள். அங்கிருந்து ஆகாய விமானத்தில் பம்பாய்க்குச் செல்லுவார்கள். மோர்வி மகா ராஜா வாங்கனீர் ஜங்ஷனில் மகாத்மாவுடன் 15 நிமிஷம் பேசிக்கொண்டிருந்தாரென தெரிந்தது.

பெடரல் பிரதம நீதிபதி தீர்ப்பு

இந்தியாவின் பிரதம நீதிபதி சர் மாரிஸ்குவயர் ராஜகோட்டை தகராறு சம்பந்தமாக ஏப்ரல் 3உ தீர்ப்புக்கூறியதாவது சீர்திருத்தக் கமிட்டியின் 10 மெம்பர்களில் ஏழுபேர்களை நியமிப்பதில் சர்தார் பட்டேலின் வார்த்தையே முடிவான தென்பதையும் தாகூர் சாகிப்பின் வார்த்தை முடிவானதல்ல வென்பதையும் ஊர்ஜிதம் செய்தார்.

“இரு கட்சிகளுக்குள்ளும் முடிவான ஓர் ஏற்பாடு ஏற்பட்ட தென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தாகூர் சாகிப் பல சம்பவங்களின் நிர்ப்பந்தத்தால் தமக்கு மிக்க உற்சாகம் அளிக்காத ஓர் ஏற்பாட்டிற்கு சம்மதிக்கவேண்டிய திருந்ததென்று கூறலாமே யொழிய அவரை ஏமாற்றியோ அல்லது மிரட்டியோ பலவந்தம் செய்தோ ஒப்பந்தத்தில் கையொப்பம் வாங்கப்படவில்லை:

‘சீர்திருத்த கமிட்டி அக்ராசனர் நியமனம் சம்பந்தமாக ஒரு பிரச்னை கிளம்பி யிருப்பதால், அதை பற்றி எனது அபிப்ராயத்தைக் கூறவேண்டுமென்று நான் நினைக்கிறேன். டிசம்பர்மீ 26ந் தேதி உத்தரவு கமிட்டியின் மெம்பர்கள் தொகையை 10 ஆக நிச்சயிக்கிறது. ஆகவே தாகூர் சாகிப் 10 பேரில் ஒருவரை அக்ராசனராக நியமிக்கலாமே யொழிய 11 வது நபரை அந்த ஸ்தானத்தில் நியமிக்க முடியாது.

‘தாகூர் சாகிப் நம்பிக்கை துரோகம்செய்தாரா வென்பது பற்றி தீர்ப்பு கூற என்னை வைசிராய் கேட்கவில்லை. ஆகவே நான் அவ்விஷயமாக எவ்வித அபிப்பிராயமும் கூறவில்லை.’


மகாத்மாவுக்கு சந்தோஷம்

தாகூர் சாகிப்-பட்டேல் ஒப்பந்தத்தைப்பற்றி மகாத்மாவின் அபிப்பிராயங்களை ஏகமனதாக ஒத்துக்கொள்ளப்படுகிறது. இத்தீர்ப்பு ராஜகோட்டை ஜனங்களுக்கு மிக்க திருப்தியை உண்டுபண்ணியிருக்கிறது. மகாத்மா கூட திருப்தியடைந்ததாக தெரிகிறது. மகாத்மா டில்லியை விட்டு புறப்படும் முன்பு வைசிராயை மீண்டும் ஒரு முறை சந்தித்தார்.

ராஜகோட்டை தகராறில் மகாத்மா வற்புறுத்திய நியாயம் பூரணமாக நிலைநாட்டப்பட்ட தென்று ஒரு பெரிய சட்ட நிபுணர் கூறினர். டாக்டர்கள் பிதன் ராய், ஜீவராஜ் மேத்தா, எஸ், அன்ஸாரி இவர்கள் மகாத்மாவின் தேகநிலையை சோதனை செய்து பார்த்து, மிக்க அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதென்று கூறினர்கள். மகாத்மாவின் இருதயம் இப்பொழுது முன்யிருந்ததைவிட நன்ருகவிருக்கிறது. குவயர் தீர்ப்பு மகாத்மாவின் கவலையை அகற்றியது. தீர்ப்பு விவரத்தைக் கேட்டு அவர் சந்தோஷப்பட்டதால் அவரது தேகநிலை மிக்க அபிவிருத்தி யடைந்ததென்று ஒரு டாக்டர் கூறினர்.

தீர்ப்பு தெரிந்தவுடனே சர்தார் பட்டேலும் ஸ்ரீ. மஹாதேவ தேசாயும் மகாத்மாவுடன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவும் சம்பாஷணையில் சேர்ந்தார். ஸ்ரீமதி நாயுடு குவயர் தீர்ப்பை அறிந்த பிறகு ஒரு நிருபரின் கேள்விக்கு பதில் கூறும் வாயிலாக 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று கோஷித்தார். பிறகு ஸ்ரீ. புலாபாய் தேசாயும் மகாத்மாவுடன் சம்பாஷணையில் கலந்து கொண்டார். பிரார்த்தனை நடந்தது. மகாத்மா இரண்டொரு நாளில் டில்லியை விட்டு புறப்படுவாரென்று தெரிகிறது. புறப்படும் முன்பு அவர் வைசிராயை சந்திக்கக்கூடும்.

விரதங்களினுல் உணவைவிட்டு தம்மை வந்தடைந்த பசி நோயைப் பொறுத்துக் கொள்பவர் எல்லோரினும் பெரியாராவார். அத்தகைய பெரியவர்களைவிட, தம்மை பிறர் வெறுக்கப்படுஞ் சொற்களையும் பொறுத்துக் கொள்பவரே மகாத்மா ஆவார்



“உண்ணுது நோற்பார் பெரியர் பிறர் சொல்லு
மின்னுச் சொ ஞேற் பாரிற் பின்” குறள்

பகைவேந்தர்மனம் ஒப்பும்படி தூது சென்ற



ஸ்ரீமதி அகாத்தா ஹாரிசன்
ஸ்ரீமதி காந்தியுடன் நிற்கின்றார்

"கற்றுக்கண் அஞ்சான் செலச் சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது"

—குறள்.

காந்திஜி - வைசிராய் சம்பாஷணை

மகாத்மா காந்தி ஏப்ரல் 4ந் தேதி பிற்பகல் வைசிராயைச் சந்தித்தார். இருவரும் 1½ மணி நேரம் சம்பாஷித்தனர். சம்பாஷணை முடிந்ததும் மகாத்மா மாலை 4-40-மணிக்கு பிர்லா மாளிகைக்கு திரும்பினார். அவர் காரிலிருந்து இறங்கியபோது மிக்க உற்சாகத்துடன் காணப்பட்டார். ராஜ கோட்டை விவகாரம் சம்பந்தமாக குவயர் தீர்ப்புப் பிரசுரமான தன் விளைவாகவே மகாத்மா வைசிராய் சந்திப்பு ஏற்பட்டதென்று பொதுவாக கருதப்பட்டது. இருவர் சம்பாஷணையின் முடிவுகள் என்னவென்பதுபற்றி எதுவும் தெரியவில்லை. மகாத்மாவின் அடுத்த சில தினங்களின் வேலைத் திட்டம் பற்றி இன்னும் ஒருவித முடிவும் ஏற்படவில்லையென்று பிர்லா மாளிகையில் விசாரித்ததிலிருந்து தெரிந்தது. மகாத்மாவின் அடுத்தபடி வேலைத்திட்டம் நிச்சயமில்லாமலிருப்பதால் வைசிராய்-மகாத்மா சம்மாஷணை இன்னும் பூர்த்தியாகவில்லையென்று கூறலாம்.



சமஷ்டி கோர்ட்டு பிரதம நீதிபதி ஸ்ரீ மாரிஸ் குவையர்.

கடவுளின் கட்டளை

"கடவுளின் செயல்கள் எவ்வளவு மர்மமாகயிருக்கின்றன! அவர் ராஜகோட்டைக்குப் பிரயாணமானது

எனக்குக்கூட ஆச்சர்யமாக யிருந்தது" என்று, ஸ்ரீ. மகாதேவ தேசாய், மகாத்மா காந்தியின் உபவாசம், எப்படி 'கடவுளின் கட்டளையின் பேரில் ஆரம்பமானது' என்பதை விளக்கி மார்ச்சுமீ 11உ "ஹரிஜனில்" எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

"உபவாசம் இருக்குமாறு கடவுள் கட்டளையிட்டதைச் சந்தேகப் பேர்வழிகளுக்கு என்னால் நிரூபிக்க முடியாமற் போனாலும், இந்த உபவாசம் 1933-ல் ஆரம்பித்ததைத் தவிர, பாக்கி எல்லா உபவாசங்களைக் காட்டிலும் பரிசுத்தமானது என்பதைக் கூறமுடியும். இது "தன்னைத்தானே கொலை செய்துக் கொள்வதாகும்" என்று வர்ணிக்கப்பட்டது. பாக்கி எல்லோரும் வாழ வேண்டும் என்பதற்காக ஏசுநாதர் 'தன்னைத் தானே கொலை செய்து கொண்டார்' என்றால், இதையும் அப்படியே வைத்துக் கொள்ளலாம். தவறுகள் செய்யும் மானிடர்களாகிய நாம் மனச்சாட்சிக்கு எதிராக வாழ்க்கை நடத்தும் ஒவ்வொரு நிமிஷமும் இறந்து கொண்டிருக்கிறோம்.

கொடுக்கப்பட்ட வாக்குறுதியையோ, நல்ல நிர்மானத்தையோ மீறுவது கொலை செய்வதாகும். ஆனால் மனிதன் தான் மீறியது தன்னுடைய பலவீனத்தாலே என்று ஒப்புக்கொண்டுவிட்டால் அந்தச் சாவு மன்னிக்கக்கூடிய சாவாகிறது. மீறிவிட்டு, அதைக் குறித்து மனிதன் மனமகிழ்ச்சியடைந்தால், அது மன்னிக்கமுடியாத தற்கொலையாகிறது. கண் காது தெரியாமல் மன்னிக்க முடியாத தற்கொலையை நோக்கி செல்கிறவர்களுக்கு ஞான உதயமாவதற்காகத்தான், மகாத்மா, தன்னைத்தானே மாய்த்துக் கொள்வதென்று முடிவு செய்தார். 'மன்னிக்க முடியாதது' என்று சொன்னேன்-நம்மால் மன்னிக்க முடியாததல்ல, கடவுளால் மன்னிக்க முடியாதது. 'பழிக்குப் பழிவாங்க வேண்டியது. என் கடமை; நான் பதிலளிக்கிறேன்' என்று கடவுள் அறிவித்திருக்கிறார். மனிதனால் பிரார்த்

தனை தான் செய்ய முடியும். நாம் கோபமடைகையில், மனித ஆத்திரம் எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதை நாம் உணரலாம். அந்தக் கோபம் வேதனை யடைந்த ஹ்ருதயத்திலிருந்து கிளம்புகிறது.

தெய்வீக தியாக அக்னி

ஆனால் நாம் கோபத்தை ஒதுக்கி விட்டால், நமது ஹ்ருதயத்திலிருந்து கிளம்புவது கொடூரமானது எதுவுமில்லை; தெய்வீக தியாக அக்னி தான் என்பதை அறியத் தவறமாட்டோம். அந்த அக்னி நம்மிடமுள்ள தெய்வீகப் பொறிகளை தட்டி எழுப்பி, கடவுளால் வந்து சேராத அசுத்தங்களை பஸ்மீகரமாக்கி விடுகிறது. எல்லாதுர் எண்ணங்களும், அங்குதான் குவிந்திருக்கின்றன. அது இருப்பதை நாம் எவ்வளவுக் கெவ்வளவு உணருகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நாம் மகிழ்ச்சியடைந்து, கோபமில்லாமலிருப்போம்.

இப்பேர்ப்பட்ட கட்டளை கடவுளால் அல்லாமல் வேறு யாரால் கொடுக்கப்பட்டிருக்க முடியும்? என் உடல் பாபுவுடன் சிவகிராமத்திலும், ராஜகோட்டையிலும் இருந்ததால், உபவாசத்திற்கு முன் என்னென்ன நடந்தது என்பதை எடுத்துரைத்து கடவுளின் கட்டளைப்படியே உபவாசமிருந்ததை என்னால் நிரூபித்திருக்க முடியும். இங்கு இருக்கும்போதுகூட அது கடவுள் கட்டளை என்பதற்கு அத்தாட்சிகள் வந்து கொண்டிருந்தன. ராஜகோட்டையிலும் இதர சமஸ்தானங்களிலும் நடந்தவைகள் அவருக்கு வேதனையைக் கொடுத்தது; அதை அனைவரும் அறிவார்கள். அவர் மனோவேதனையின்போது மகிழ்ச்சியுடனிருந்தார் என்பதை அவருடைய ஒரு கடிதம் கீழ்காணும் வார்த்தைகளில் முடிந்ததிலிருந்து கண்டு கொண்டேன்.

"எங்கு பார்த்தாலும் அக்னியாக யிருக்கிறது அக்னியில் நுழைந்து விடுகிறவர்கள்தான் சந்தோஷ

மாக யிருப்பார்கள்; வேடிக்கைப் பார்ப்பவர்கள் ஜ்வாலையால் காயமடைவார்கள்." அவர் ராஜகோட்டைக்குப் புறப்படுகையில் உபவாசம் ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை யென்பதை, எனக்கு 26-ந் தேதி எழுதிய கடிதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

"நீங்கள் கவலைப் படக்கூடாது. இந்த பிரயாணத்தின்போது நீங்கள் என்னுடன் இல்லாததைக் குறித்து வருந்துகிறேன். கடவுள் என்னைக் கொண்டு போவதால்தான் நான் அங்கு செல்கிறேன். சந்தோஷமும், நம்பிக்கையுமே மனதில் குடி கொண்டிருக்கிறது. எல்லாம் வெற்றுக் கனவாக முடிந்தாலும் முடியலாம். யாருக்குத் தெரியும்? நான் எதிர் பார்ப்பது நடக்காமல் ராஜகோட்டையிலிருந்து திரும்பமாட்டேனென்பது எனக்குத் தெரியும். அடுத்த நாள் அவர் எழுதியதாவது:-

"கடவுளின்போக்கு எவ்வளவு மர்மமாயிருக்கிறது! இந்த பிரயாணம் எனக்குகூட ஆச்சர்யமாயிருக்கிறது." "ஏன் போகிறேன்? எங்கு போகிறேன்? எதற்காக்? இந்த விஷயங்களைக் குறித்து நான் ஒன்றும் நினைக்கவேயில்லை. நான் என்ன நினைக்கவேண்டுமென்பதை கடவுளே காட்டிவிட்டால் நான் எதற்காக நினைக்கவேண்டும்? கடவுள் வழி காட்டுகையில் நான் எதையேனும்பற்றி சிந்திப்பது கூட ஒரு தடையாக யிருக்கலாம்." "சிந்தனை செய்வதை நிறுத்த முயற்சி அவசியமில்லாமலிருக்கிறது. எண்ணங்கள் வரவில்லை. மனது காலியாக யிருப்பதாக எண்ண வேண்டாம். நான் செய்யப்போகும் காரியத்தைப்பற்றி ஒன்றும் தோன்றவில்லையென்றே கூறுகிறேன்."

மார்ச் 2ந் தேதி இரவு திடீரென்று இந்த எண்ணம் உதித்தது. தர்பார் வீரவல்லாவுடன் அந்த வேதனைப்பேச்சுகள் முடிந்தவுடன்-அந்த பேச்சுகளும் எல்லையை அடைந்துவிட்டது - எனக்குக் கிடைத்த

இன்னொரு கடிதத்தில் இந்த தகவல் எனக்குக் கிடைத்தது. 'இறுதித் தியாகம் செய்தேயாக வேண்டும்' என்று அவர் மனதிற்குள் ஏதோ சொல்லிற்று.

ராஜகோட்டைக்குப் புறப்பட்ட சமயத்தில் எதற்காக கீழ்க்காணும் வார்த்தைகளைச் சொன்னார் என்று நினைக்கிறீர்கள்? "நம்பிக்கை என்பதற்கு மதிப்பேயில்லாவிட்டால் கௌரவமான பரஸ்பர ஒப்பந்தம் ஏற்படமுடியவே முடியாது. இந்த விஷயத்தில் நான் பார்ப்பதைப் போல, நம்பிக்கைத் துரோகம் செய்யப்படுவதை நான் பார்க்கையில் உயிர் பெரும் பாரமாகிவிடுகிறது.

அவருக்குத் தெரியுமா? 1931 நவம்பர்மீ 13உ அவர் லண்டனில், "இந்த வகுப்புவாதத் தீர்ப்பை நான் ஒருவனே எதிர்ப்பவனாக யிருந்தால் என்னுடைய உயிரைக் கொடுத்தாவது எதிர்ப்பேன் என்பதை அழுத்தமாகக் கூறினேன்." என்ற தெய்வீகச் சொற்களைச் சொன்னார். இந்தியாவில் 1932 செப்டம்பர் 20உ அந்த தீர்ப்பை எதிர்த்து சாகும் வரை உபவாசம் இருக்கப்போவதாக, அவருக்கே லண்டனில் இருந்த போது தெரியாது. இந்த ராஜகோட்டை விஷயத்திலும் அப்படித்தான்- ஆனால் அனாவசியமாக ஒரு வார்த்தை கூட நான் சொல்லுவதில்லை யென்பது அவருக்கே தெரியும். அவருக்குத் தெரிந்திருக்குமானால், கடவுளே இந்த வார்த்தைகளை உச்சரிக்குமாறு அவரை கட்டளையிட்டிருப்பதாகத் தான் எடுத்துக்கொள்ள வேண்டும். கடவுளுக்குத்தான் தெரியும்; மகாத்மாவுக்குத் தெரியாது.

சத்தியாக்ரஹியின் யோக்கியதாம்சங்கள் மகானின்உபதேசம்

ஒரு சத்தியாக்ரஹியிடம் இருக்கவேண்டிய முக்கியமான யோக்கியதாம்சங்கள் என்னவென்பது பற்றி மகாத்மா 'ஹரிஜன்' பத்திரிகை

யில் ஒரு கட்டுரை மார்ச் 25உ எழுதினர். எனது நான்குநாள் உபவாசம், சத்தியாக்ரஹிடம் இருக்கவேண்டிய முக்கியமான யோக்கியதாம்சங்கள் என்ன என்பது பற்றி என்னை சிந்தனை செய்யும்படி செய்தது. அந்த யோக்கியதாம்சங்கள் என்னவென்பது நன்கு ஜாக்கிரதையாக கவனிக்கப்பட்டு 1921-லேயே எழுத்திலும் உருவகப்படுத்தி எழுதப்பட்டிருக்கிறது. இப்போது பல சமஸ்தானங்களில் சட்ட மறுப்பு என்ற ரூபத்தில் சத்தியாக்ரஹம் நடத்தப்படுவதால், ஊழியர்களிடையே இருக்கக்கூடிய சில தவறான எண்ணங்களைப் போக்கடிப்பதற்காக, இப்போது சத்தியாக்கிரஹியின் யோக்கிய தாம்சங்கள் என்னவென்பதை மீண்டும் சொல்லவேண்டியிருக்கிறது.

ஜாக்கிரதையின் அவசியம்

இப்போது எங்கும் அஹிம்சையைவிட பலாத்காரம் நிரம்பின சுற்றுணர்ச்சியே அதிகம் காணப்படுவதால், இந்த தருணத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம். பலாத்கார உணர்ச்சி மலிந்து கிடக்கும் சந்தர்ப்பத்தில் அஹிம்சைக்கு இடமேது என்று கூட தர்க்க ரீதியாக வாதிக்க முடியும். அஹிம்சையால் எவ்வித பயனும் ஏற்பட முடியாது என்றுகூட சிலர் காரணங் காட்டி வாதித்து விடக்கூடும். ஆனால் நாமோ பலாத்காரத்தை - எவ்வளவு பயங்கரமான பலாத்காரத்தையும்-எதிர்த்து நிற்பதற்கு அஹிம்சைதான் திறமை யுள்ள சக்தி யென்று பாத்தியதை கொண்டாடுகிறோம்.

ஆனால் தலைவிரித்தாடும் சுற்றுணர்ச்சியின் மத்தியில் அஹிம்சையை பிரயோகிக்கும் சரியான துறை சட்ட மறுப்பாயிருக்கிறது. சட்டமறுப்பை கடந்து தானாக வேண்டுமென்றிருந்தால் அது போதிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும்.

எண்ணிக்கை பெரிதல்ல

சத்தியாக்ரஹப் போரில், சத்தியாக்கிரஹிகளின் தொகையைப் பற்றி லக்ஷியமேயில்லை. சத்தியாக்கிரஹி களின் தொகை குறைவாக இருந்தால் பாதகமில்லை. ஆனால் சத்தியாக்கிரஹிகளின் ரகம் மிகவும் உயர்ந்த ரக மாக இருக்கவேண்டும். இது மிகவும் அவசியமான விஷயமாகும்.

நல்லுணர்ச்சியை தூண்டுவதே நோக்கம்

ஒரு விஷயத்தை சிலர் மறந்துவிடுகிறார்கள். அதாவது தவறு செய்பவனை தர்ம சங்கடமான நிலைமை யில் வைப்பது சத்தியாக்ரஹியின் நோக்கமல்ல! பயமு றுத்தி பணியவைப்பதும் நோக்கமல்ல! ஹிருதயத்தில் நல்ல உணர்ச்சியை தூண்டுவதன் மூலம் லக்ஷியத்தை அடைவதே சத்தியாக்ரகிஹியின் முறை. எதிரியை நிர்ப் பந்தப்படுத்துவது சத்தியாக்கிரஹியின் லக்ஷியமல்ல. எதிரியிடம் மனமாறுதல் ஏற்படுத்துவதே லக்ஷியம். எப்போதும் இயற்கையான போக்கிலும் மனதில் தன் கொள்கையைப் பற்றிய உறுதியான நம்பிக்கையுடனும் சத்தியாக்கிரஹி காரியம் செய்வான்.

முக்கியமான யோக்கியதாம்சங்கள்

நான் கூறியுள்ள இந்த பொதுப்படையான தத்து வங்களை வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண் டால், பின் வரும் யோக்கியதாம்சங்கள் சத்தியாக்கிரஹி யிடம் அவசியம் இருக்கவேண்டும் என்பதை உணர லாம்.

1. சத்தியாக்கிரஹிக்கு கடவுளிடம் உண்மையான நம்பிக்கை இருக்கவேண்டும்; ஏனென்றால் கடவுள் தான் அவனுக்கு உறுதியான ஆதாரம்.

2. சத்தியத்திலும் அஹிம்சையிலும் அவனுக்கு பூரணமான நன்நம்பிக்கையிருக்க வேண்டும். ஆகவே அவனுக்கு மனிதவர்க்கத்தின் இயற்கையான நற்குண

த்தில் நம்பிக்கை யிருக்க வேண்டும். தியாகத்தின் மூலமும், கஷ்டத்தின் மூலமும் காட்டப்படும் அன்பி ணுலும் சத்திய உணர்ச்சியாலும், அவன் மனிதனிடம் இயற்கையாக அமைந்துள்வ நற்குணத்தை தூண்டி யெழுப்பலாமென்று எதிர்பார்ப்பான் (இந்த இயற்கையான நற்குணம் எல்லா மனிதரிடமும் இயற்கையாக அமைந்திருக்கிறது என்பது சத்தியாக்ரஹியின் நம்பிக்கையா யிருக்கவேண்டும்.)

(3) அவன் வாழ்க்கையில் பரிசுத்த முள்ளவனுக (பிரம்மசாரிய நியம முள்ளவனுக) இருப்பான். தனது லட்சியத்துக்காக தன் உயிரையும், உடமைகள் யாவற்றையும் தியாகம் செய்யத் தயாராகயிருக்கவேண்டும்.

4. அவன் வழக்கமாக கதர் கட்டுபவனுகவும், நூல் நூற்பவனுகவும் இருக்கவேண்டும். இந்தியா சம்பந்தப்பட்டமட்டில் இது மிகவும் முக்கியமான விஷயம்.

(5) அவன் எவ்வித லாஹிரிப் பொருளும் உப யோகிக்கக்கூடாது. ஏனென்றுல் அவனது மனது எப்போதும் நிலையுள்ள தாகவும் மாசுபடியாததாகவும் இருக்கவேண்டும்.

(6) ஒழுங்கு முறைகள், கட்டுப்பாடுகள் பற்றி அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதிகளை அவன் முழு மனதுடன் ஏற்று நடக்கவேண்டும்.

(7) ஜெயில் விதிகளை அவன் பூரணமாக அனுஷ்டிக்கவேண்டும். அந்த விதிகள் அவனது சுய மதிப்பை தாக்குவற்கென்றே ஏற்பட்டவை யென்றிருந்தாலொழிய விதிகளை மீறக்கூடாது.

மேலே கூறப்பட்டுள்ள யோக்கியதாம்சங்கள் உதாரணத்துக்காகத் தரப்படுகின்றன. "சத்தியாக்ரஹியின் யோக்கியதாம்சங்கள்" என்பது இவ்வளவுதான் என்று மதித்துவிடக்கூடாது.

தலைவர்கள் வாழ்த்து.


ராஜகோட்டை விவகாரங்களில் சர். மாரிஸ் குவயர் தீர்ப்பு சம்பந்தமாக ஸ்ரீ. சுபாஷ் சந்திரபோஸ் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

"ராஜகோட்டை விவகாரங்கள் சம்பந்தமாக சர். மாரிஸ் தீர்ப்பை நான் இப்பொழுதுதான் படித்து முடித்தேன். தாகூர் சாஹிப் தாம், சர்தார் பட்டேலுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டுவர மறுத்தது ஒவ்வொருவருக்கும், முக்கியமாக மகாத்மா காந்திக்கும் மிக்க மனவருத்தத்தையும், திகைப்பையும் உண்டுபண்ணியது. மகாத்மாஜி, சர்தார் வல்லபாய் இவர்களது கட்சி நியாயமென்பதை குவயர் தீர்ப்பு பூர்ணமாக நிலைநாட்டி விட்டபடியால் அத்தீர்ப்பை தாகூர் சாஹிப் சரியான உணர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு அத்தீர்ப்பைத் தாமதமின்றி நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுப்பாரென்று நான் நம்புகிறேன். சீர்திருத்த கமிட்டி, ராஜகோட்டை சமஸ்தான பிரஜைகளின் உரிமைகளை வற்புறுத்தி ஒரு சாசனத்தைத் தயாரிக்குமென்றும் அச்சாசனத்தை சமஸ்தானம் நிறைவேற்றுமென்றும் மேற்கொண்டு நம்புகிறேன்.

இச்சமயத்தில் மன்னர்கள், சமஸ்தான மக்களிடை மகத்தான விழிப்பு ஏற்பட்டிருப்பதின் விசேஷத்தை அறிய முயன்று இதனை நன்கு மதிப்பார்களென்றும் நம்புகிறேன். சமஸ்தான பிரஜைகளின் விழிப்பை சட்டத்தாலோ, பலாத்காரத்தாலோ நசுக்கிவிட முடியாது. பிரஜா சுதந்திரம், பொருப்பாட்சி, ஜனநாயகம் இவை வேண்டுமென்று பிரஜைகள் கோருவதை மன்னர்கள் பூர்த்தி செய்வதுதான் நீதி, ஜீவகாருண்யம், விவேகமாகும்."

டாக்டர் பட்டாபியின் அறிக்கை.

குவயர் தீர்ப்பு சம்பந்தமாக டாக்டர் பட்டாபி சீதாராமையா பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்.



கோலாப்பூர் சமஸ்தான
பிரஜைகள் மகாநாட்டு தலைவர்
டாக்டர்
பட்டாபி சீதாராமையா.

இத்தகராறின் நியாய அநியாயங்களை அறிந்தவருக்கு ராஜகோட்டை தீர்ப்பின் தன்மை எதிர்பார்த்த விஷயமே. எந்த நீதிபதியும் வேறு விதமான முடிவுக்கு வந்திருக்க முடியாது. இத்தீர்ப்பின் விசேஷத்தைப் பற்றி சில கோஷ்டியினர் குறைவான மதிப்பு கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி நாங்கள் மனத்தாங்கல் கொள்ளவேயில்லை. எங்கள் வெற்றியைப் பற்றி எங்களுக்கு பெருமையே கிடையாது. சிறு பிரச்னையாகயிருந்தாலும் நியாயத்திற்காகவே சத்தியாக்கிரகிகள் போராடுவது வழக்கம். ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்தபோது நாங்கள் ஜனரல் டையரின் தலையைக் கேட்கவில்லை; இந்திய சர்க்காரிடமிருந்து மன்னிப்பு மட்டுமே கோரினோம். பம்பாயில் ஆபீசர்களால் வேண்டுமென்றே காந்தி-இர்வின் ஒப்பந்தம் மீறப்பட்டபோதும், பர்தோலியில் காங்கிரஸ் கட்டளைப்படி சர்க்காருக்குக் கொடுக்கப்பட்ட ரூ. 20 லட்சத்துக்குமேல் ரூ. 50,000 அதிகப்படியாக வசூல்

செய்யப்பட்டபோதும் அவ்விதம் போலீசார் கிரமம் மீறி நடந்ததைப்பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டு மென்று மட்டுமே நாங்கள் கோரினேம்.

இன்று ராஜகோட்டை பிரச்னை சமஸ்தான பிரச்னையோ, பொறுப்பாட்சி பிரச்னையோ அல்ல. தாகூர் சாகிப் தாம் கொடுத்த வார்த்தையை நிறைவேற்றினரா? வென்பதே ராஜகோட்டை பிரச்னையாகும். இந்த சிறு விஷயத்திற்காக மரண பரியந்தம் உண்ணுவிரதம் அநுசரிக்க ஏன் முடிவுசெய்ய வேண்டுமென்று ஜனங்கள் வினவுகிறார்கள். காந்திஜிக்கு ராஜகோட்டை மன்னர் 562 மன்னர்களில் ஒருவரல்லவென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும், காந்திஜிக்கு ராஜகோட்டை மன்னர் ஒரு மகன் போலாகும். மகாத்மாவின் தகப்பனர் 20 வருஷ காலம் ராஜகோட்டை திவானக இருந்தார். இளைய தாகூர் சாகிப் விவாக சம்பந்தமாக ஸ்ரீமதி கஸ்தூரிபாயே உதவி செய்தார். உங்களுடைய சொந்த மகன் தனது வாக்கை மீறினல், ஒரே பரிகாரம் உண்ணுவிரதமிருப்பதே. இதுதான் உபவாசத்தின் வரலாறு; இதன் முடிவு சரித்திர சம்பந்தமான ஒரு சம்பவமாகிவிட்டது. இது மன்னர்களை தங்கள் அதிகாரத்தை பிரஜைகளிடம் பகிர்ந்து கொடுக்கவும் வாக்களிப்பதில் உஷாராகவிருந்து அந்த வாக்கை நிறைவேற்ற தவறுதிருக்கவும் பெரிய தூண்டுதலாகும். இந்தியாவில் இப்பொழுது கொடுத்த வாக்கின் தெய்வீக தன்மையை அலட்சியம் செய்வதாய் இருக்கிறது. அவ்வித அலட்சியம் மறையவேண்டும். 140 வருஷ காலமாக அந்நிய ஆட்சியின்கீழ் வாக்குக்கு மதிப்பு மறைந்துவிட்டது. நாம் சத்தியத்தை மீண்டும் அனுசரிக்க ஆரம்பித்தால் நமது அபிவிருத்தி நிரந்தரமாகிவிடும்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் அபிப்பிராயம்

ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

உண்மைக்கு வெற்றி நிச்சயம். பெடரல் பிரதம நீதிபதி தமது தீர்ப்பைக் கூறிவிட்டார். அத்தீர்ப்பு அவரது அந்தஸ்துக்கும், பதவிக்கும் பொருத்தமான தாக விருக்கிறது. வைசிராயும், அவரது ஆலோசனை கர்த்தாக்களும் ராஜகோட்டை தகராறை பெடரல் கோர்ட்டு பிரதம நீதிபதி தீர்ப்புக்குவிட்டது சிலாக்கிய மான காரியமே. பிரதம நீதிபதி ஸ்பஷ்டமாக தீர்ப்பு கூறிவிட்டார்.

சர்தார் பட்டேலின் சிபார்சுப்படி மெம்பர்களை நியமிக்க தாகூர் சாகிப் வாக்களித்ததின் அர்த்தம் நிய மன விஷயத்தில் தாகூர் சாகிப்புக்கு சமயோசித அதி காரமில்லை யென்பதே என்று பிரதம நீதிபதி முடிவு செய்ததை ஒவ்வொருவரும் ஒத்துக்கொள்வார்கள்.

இத்தீர்ப்பு ராஜகோட்டை பிரச்னையை மட்டும் தீர்த்துவிடவில்லை; சமாதானமானதும், கௌரமானது மான முறைகளில் இந்திய சமஸ்தானங்களின் பிரச்னை யையும் தீர்க்க வழிபிறந்துவிட்டது. மகாத்மா காந்தி யாராலும் செய்ய முடியாத முறையில் தேசத்துக்கு மகத்தான சேவையொன்று புரிந்திருக்கிறார்.

சமஸ்தானங்களுக்கு காந்திஜி உபதேசம்

சமஸ்தானங்களில் சட்டமறுப்பு நிறுத்தப்பட் டிருப்பது பற்றியும், சட்டமறுப்பை நிறுத்திய பிறகும் சில சமஸ்தானங்களில் அடக்குமுறை அதிகரித்திருப் பது பற்றியும், மகாத்மா காந்தி ஏப்ரல் 8 தேதி ஹரிஜன் பத்திரிகையில் எழுதியுள்ளதாவது :—

அடக்குமுறை எதிர்பாராததல்ல

சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டதால் ஏற் படவேண்டிய முழுப்பயனையும் ஜனங்கள் பெறவேண்டு மாயின், சட்ட மறுப்பு நிறுத்தப்பட்டது சம்பந்தமான தத்துவத்தை தெரிந்துக்கொள்வது அவசியம். சட்ட மறுப்பு நிறுத்தப்பட்டதால் சில சமஸ்தான சர்க்கார் கள், அவ்வியக்கம் நிறுத்தப்பட்டதற்கு முன்புகூட

நினைக்காத அவ்வளவு அதிகமான அடக்குமுறைகளை இப்பொழுது கையாண்டு தயை தாக்ஷண்யமற்று நடக்க ஆரம்பிப்பதாகத் தெரிகிறது; இது எதிர்பார்க்காத விஷயமல்ல. ஆகவே இவ்வாறு சர்க்காரின் கடுமை அதிகரிப்பது பற்றி யாரும் மனசில் சோர்வடைய நியாயமில்லை.

பயிற்சிக்கு சந்தர்ப்பம்

வலுவில் வந்த யுத்தம் எப்படி சோல்ஜர்களுக்கு பெரிய பயிற்சியாக அமையுமோ அதுபோலவே இந்த அடக்குமுறை சத்யாக்கிரஹத்தில் பயிற்சிக்கு சந்தர்ப்ப மளிக்கிறது. அடக்குமுறையின் காரணம் என்னவென் பதை சத்தியாக்ரகிகள் கண்டறியவேண்டும். ஒடுக்கப் பட்ட ஜனங்கள் சர்க்காரின் பலாத்காரத்தைக் கண்டு எளிதில் பயந்துவிடுகிறார்கள்; கஷ்டத்துக்கும் தியாகத் துக்கும் அவர்கள் தயாரா யிருப்பதில்லை. இந்த சந்தர்ப் பந்தான் சத்தியாக்ரகத்தின் ஆரம்பப் பாடங்களை கற் றுக்கொள்ள சரியான சந்தர்ப்பம்.

தைரியத்துடன் பணிவது

ஈடிலக்கிலாத இப்பெரும் சக்தியைப் பற்றி (சத்யாக் ரஹ சக்தியைப் பற்றி) சிறிதளவாவது தெரிந்து கொண்டிருப்பவர்கள், அடக்குமுறையை (நிர்க்கதியாக வும், சோர்வுடனு மல்லாது) தைரியத்துடனும் சங்கற் பத்துடனும் தாங்கி நிற்க மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். உதாரணமாக, ஒரு சமஸ்தானம், ஒரு சங்கத்தை சட்ட விரோதமென்று அறிவிப்பதாக வைத்துக்கொள்வோம். சிலர் தண்டனைக்கு பயந்து அவ்வுத்தரவுக்கு பணியலாம்; வேறு சிலர் 'இப்போது சட்டமறுப்புச் செய்யவேண்டாம்' என்ற அபிப்ராயத் தால் வேண்டுமென்று அவ்வுத்தரவுக்கு கீழ்ப்படலாம். இப்போது சட்டமறுப்பு வேண்டாம் என்ற காரணத் துக்காக, உத்தரவுக்கு பணிந்தால், அவர்கள் தமது

சக்திகளைக் காப்பாற்றி, சட்டத்தை அஹிம்சை முறையில் எதிர்த்து நிற்பதற்கு வேண்டிய முறையில் அந்த சக்தியை வளர்ப்பார்கள்.

சட்டபூர்வமாக கிளர்ச்சியை நடத்துக

சங்கத்தின் மெம்பர்கள் தனி ஹோதாவில் எந்த காரியங்கள் சட்ட விரோதமல்லவோ அந்த காரியங்களையெல்லாம் நடத்திக்கொண்டே இருப்பார்கள். தமது ஸ்தாபனத்துக்கு சட்ட பூர்வமான ஸ்தானம் கிடைக்க வேண்டுமென்பதற்கான சட்ட பூர்வமான கிளர்ச்சியையும் அவர்கள் நடத்திக்கொண்டே இருப்பார்கள். இவ்வாறு சட்டத்தின் எல்லைகளுக்குட்பட்டே அவர்கள் காரியம் செய்தும்கூட, ஊழியர்கள் கைது செய்யப்பட்டோ, வேறு வகையில் அடக்கப்பட்டோ வருவார்களாயின், அந்தக் கஷ்டங்களையும், அடக்குமுறைகளையும் அவர்கள் சந்தோஷத்துடன் தாங்கி நிற்பார்கள்.

அஹிம்சை "ஸாதகம்."

இவ்வாறு கஷ்டத்தைத் தாங்கும்போதும் அவர்கள் தம்மனதை சோதனை செய்து, தம்மீது கொடுமை புரிவோர்பால், கோபமோ, மார்ச்சரியமோ ஏற்படுகிறதா என்றும் கவனித்துக் கொள்வார்கள். "கடவுள் நம்மை காப்பாற்றுகிறார்; அவர்தான் நமது சங்கடங்களில் வழிகாட்டுகிறார்" என்ற உணர்ச்சி தமது மனதில் இருக்கிறதா? என்று அவர்கள் தம்மைத் தாமே கேட்டுக் கொள்வார்கள். இம்மாதிரியான ஒரு பயிற்சியை விடாமல் உறுதியுடன் ஸாதகம் செய்துவந்தால், அந்த ஸாதகர்களுக்கு அஹிம்சை சக்தி தானாகவே வளர்ந்து சட்ட மறுப்புக்கான விசேஷ முயற்சிகள் எதுவும் செய்வதே அனாவசியமாய்விடும்.

இதற்கு முந்தின சட்டமறுப்புகளை ஆரம்பித்ததில் நான் அவசரப்பட்டும், எவ்வளவு நம்பிக்கை வைக்கலாமோ அதைவிட அதிக நம்பிக்கை வைத்தும் ஆரம்பித்

திருக்கிறேன்; அது தவறு; அந்த தவறை நான் செய்திருக்கிறேன் என்று ஒப்புக்கொள்ள வேண்டியதே. இருந்தாலும் அந்த தவறால் விசேஷ அனர்த்தம் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் நான் எப்போதும் தேசத்தின் நாடியில் கைவைத்து நிலைமை எப்படியிருக்கிறதென்று இடைவிடாமல் கவனித்துக்கொண்டே வந்திருக்கிறேன்; செய்த காரியத்தில் ஏதாவது தவறு அல்லது நிதானப் பிசகு ஏற்பட்டதாக அபாய அறிகுறி காணப்படும்போது, உடனே தவறை திருத்துவதற்காக, முன்வைத்த காலை பின்வாங்குவதற்குள்ள துணிவை எனக்கு கடவுள் கொடுத்திருக்கிறார். தவறென்று தெரிந்தால் பின்வாங்குவதற்கு நான் சிறிதும் தயங்குவதில்லை. இதற்காக நான் கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டும்.

முன் தயாரிப்பின் அவசியம்

இதற்கு முன்பு அவசரப்பட்டு சட்டமறுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக ஒரே ஒரு கெடுதிமட்டும் ஏற்பட்டிருக்கிறது. அதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். அதவாது சட்ட மறுப்பு ஆரம்பிப்பதற்கு வேண்டிய தயாரிப்புகள்பற்றியும், முன்னேற்பாடுகள் பற்றியும் போதிய அளவு சிரத்தை காட்டப் படாமல் ஒரு அலக்ஷிய புத்திக்கு ஜனங்கள் பழக்கப்பட்டு விட்டார்கள். ஆகையால், சட்ட மறுப்புக்கு முன்னதாக சில தயாரிப்பு வேலைகள் நடந்தாக வேண்டுமென்று கண்டிப்பான விதி முறைகள் ஏற்படுத்தும்போது ஜனங்களுக்கு அது பிடிக்கிறதில்லை. தயாரிப்பு வேலைகள் உற்சாகமும், ஆவேசமுமுள்ளவையாக இல்லாததால் வீண் தொந்தரவாக சிலர் மனதுக்குப்படுகிறது.

நிர்மாண வேலையில் ருசியில்லையா?

அடக்குமுறையின் தன்மை, பயன், இவற்றை நாம் சரிவர உணர்ந்தால் சத்தியாக்ரஹியிடம் எதிர்ப்புசக்தி தானகவே, இயற்கையாகவே வளரும். இந்த உண்

மையை நான்எல்லோருக்கும் புரியும்படி செய்ய முயற்சிக்கிறேன். இந்த உண்மை எல்லோருக்கும் புரிந்துவிட்டதானால் பிறகு "நிர்மாண வேலை ருசிகரமாக இல்லையே; எத்தனை நாள் காத்துக் கொண்டே இருப்பது; ஆவேசமும் உற்சாகமும் எப்படியேற்படும்" என்றெல்லாம் தோன்ருது. நிர்மாண வேலையிலும் காத்திருந்து தயாரிப்பு வேலைகள் செய்வதிலும் ருசிக் குறைவு தட்டாது.

நிர்மாண வேலையில் ருசிக் குறைவு காணப்படுவதே, நமக்கு சத்தியாக்ரஹத்தின் முழுக் கருத்தும் புலனுகவில்லை யென்பதற்கு அடையாளமாகும். அஹிம்சையின் கம்பீரத்தையும் அழகையும் சக்தியையும் பற்றி ஜனங்கள் சரியாக உணரவில்லை யென்பதையே இது காட்டுகிறது. அதாவது சத்தியாக்கிரஹிகளின் ஹிருதயத்தில் அஹிம்சை ஆழமாக பதியாமல் இன்னும் பலாத்கார உணர்ச்சி ஒட்டிக்கொண்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

பேச்சிலும், எழுத்திலும் அஹிம்ஸை

அடக்குமுறை அநுஷ்டிக்கப்படு மிடங்களில் அந்த அடக்குமுறையானது, ஒடுக்கப்பட்ட ஜனங்களுக்கு மனச் சோர்வை ஏற்படுத்தாது, அவர்களது நிர்மாண முயற்சிகளின் வேகத்தை அதிகப்படுத்துமென்றே நான் நம்புகிறேன். நம்முடைய உத்தேசம் அஹிம்சைதான் என்பதை சர்க்கார்கள் உணரும்படி செய்வது அவசியம். ஆதிக்கம் செலுத்துவோர் மனதில் நாம் அந்த நம்பிக்கையை ஏற்படுத்த முடியுமானல், நமது போராட்டம் ஒரு பாதி வெற்றி பெற்ற தாகவே அர்த்தம். இந்த நம்பிக்கை ஏற்படும்படி செய்யவேண்டுமாயின், நாம் நமது பேச்சுக்கு சிறிது லகான் போட்டு மிதப்படுத்த வேண்டும். நாம் பேசுவதும், எழுதவும் செய்வதும் நிச்சந்தேகமாக அஹிம்சைக்குப் பொருத்தமாக இருப்பது அவசியம்.

7-வது அத்தியாயம்.

தாகூர் சாஹிபின் வீண்வாதம்.

மேற்கு இந்திய சமஸ்தான ரெசிடெண்டு ஸ்ரீ. கிப்சன், கட்ச் சமஸ்தான பிரயாணத்தைக் குறைத்துக் கொண்டு ஏப்பிரல் 8-ந்தேதி ராஜகோட்டை வந்து சேர்ந்தார். இதோடு மகாத்மாவும் இங்கு வந்திருப்பதாலும் நாளைக்கு விமான மார்க்கமாக பட்டேல் வரப் போவதாலும் அடுத்த சில தினங்களில் முக்கிய சம்பவங்கள் நிகழுமென்று பல வட்டாரங்களில் நம்பப்படுகிறது. தர்பார் வீரவல்லா முஸ்லிம்களைக் கண்டு பேசினார். என்ன பேச்சு நடந்ததென்பது தெரியவில்லை.

மகாத்மாகாந்தி போய்ச் சேரும் நேரத்திற்கு ஒத்தாற்போல் சர்தார் பட்டேலும் நாளைக்கு ராஜகோட்டைக்கு வந்திருக்கும்படி மகாத்மா காந்தியிடமிருந்து ஒரு தந்தி கிடைத்ததன் பலனாகவே ராஜகோட்டைக்கு விமான யாத்திரை செய்ய சர்தார் முடிவு செய்தார்.

பட்டேலே பெயர்களை சிபார்சு செய்வார்

சர்தார் பட்டேல் ராஜகோட்டைக்கு வந்து சேர்ந்ததும் மகாத்மா காந்தியைக் கலந்து கொண்டு தாகூர் சாஹிப்புக்கு ஒரு கடிதம் எழுதுவாரென்றும், அக்கடிதத்தில் சீர்திருத்த கமிட்டி மெம்பர்களின் பெயர்களைக் குறிப்பிடுவாரென்றும் தெரிகிறது. அடுத்தபடி, தாகூர் சாஹிப் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு அவர் மூன்று சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் நியமிப்பார். 10-மெம்பர்களில் ஒருவரையே அவர் சீர்திருத்த கமிட்டி சேர்மனாக நியமிக்க வேண்டும்.

சீர்திருத்தக் கமிட்டி வேலை ஆரம்பித்து அதன் சிபார்சுகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதைத்

காண ஆவலுடையவராக விருப்பதால், மகாத்மா ராஜ கோட்டில் தங்குவது நீடித்திருக்கும். 8-ந் தேதி பிற்பகல் கத்தியவார் முஸ்லிம் லீக் காரியதரிசி ஸ்ரீ. உஸ்மான் இஸாபாய் தலைமையில் முஸ்லிம் பிரதி நிதிகள் காந்திஜியைப் பேட்டி கண்டு முஸ்லிம் உரிமை களைப் பற்றி விண்ணப்பித்தார்கள். சீர்திருத்த கமிட்டி யில் முஸ்லிம்களுக்குப் போதிய பிரதிநிதித்வம் வேண்டு மென்று கோரினார்கள். ஒரு மணி நேரம் விவாதம் நடந்தது. அதற்குள் முக்கிய விஷயங்கள் விவாதிக்கப் பட்டனவென்று தெரிகிறது. முஸ்லிம் பிரதிநிதிகள் நாளை காலை காந்திஜியை மீண்டும் சந்திப்பார்கள். அப் பொழுது தான் சமரச முடிவொன்று ஏற்படலாம் முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் நிலைமை நம் பிக்கை கரமாகவே இருக்கிறது.

இதற்கிடையில் சர்தார் பட்டேல் ராஜகோட்டை தலைவர் ஸ்ரீ. திபாருடன் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். சீர்திருத்த கமிட்டியில் முஸ்லிம் பிரதிநிதித்வம் பற்றியே பேச்சு நடந்தது.

ஸ்ரீமதி. கஸ்தூரிபாய்க்கு ஜுரம்

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்திக்கு மலேரியா ஜுரம் கண்டிருக்கிறது. இன்று பகல் 12-மணிக்கு அவருக்கு 102 டிக்ரி ஜுரமிருந்தது. சாயங்காலம் அவரது தேக நிலையில் சிறிது குணமேற்பட்டது. டாக்டர் வரியவா ஏப்பிரல் 10-ந்தேதி அன்று ஸ்ரீமதி. கஸ்தூரிபாய் காந்தி தேக நிலையை சோதனை செய்தார். அவர் குண மடைந்து வந்தார்.

மகாத்மா காந்தி டில்லியிலிருந்து பிரயாணம் செய்து ராஜகோட்டை ஸ்டேஷனுக்கு 1 மைல் தூரத் தில் இறங்கினார். ராஜகோட்டை ஸ்டேஷனில் மகாத் மாவை தரிசிக்க ஜனக்கூட்டம் அதிகமாக விருக்கு மாகையால் அதனால் மகாத்மா காந்திக்கு ஏற்படும் கஷ் டத்தைத் தவிர்க்கவே ஸ்டேஷனுக்கு ஓர் மைல் தூரத்

திலேயே அவர் இறங்கினர். காந்திஜி இறங்க மோர்வி ரயில்வே அதிகாரிகள் அவசியமான எல்லா வசதிகளை யும் செய்திருந்தார்கள். வழிநெடுக கூடியிருந்த ஜனக் கூட்டத்தை நிர்வகிக்க சமஸ்தான போலீசாரும் ஏஜென்ஸி போலீசாரும் காவல் புரிந்தனர். மகாத்மா "ஆனந்த குஞ்" என்ற மாளிகையில் தங்கினர்.

முஸ்லிம்கள் - காந்திஜி பேச்சு

முதலில் தர்பார் வீரவல்லாவை சந்தித்து பேசிய ராஜகோட்டை முஸ்லிம் தூதுகோஷ்டி, மகாத்மா காந்திஜியையும் சந்தித்து பேசியது.

சர்தார் விஜயம்

சர்தார் வல்லபபாய் பட்டேல் தமது புத்திரி மணி பென் பட்டேலுடன் ஸ்பெஷல் விமானமொன்றில் பகல் 12-மணிக்கு இங்கு வந்து இறங்கி நேராக காந்திஜி யைக்காணச் சென்றார். மகாத்மா காந்திஜி இன்று காலை ஸ்ரீ. திபாருடன் சம்பாஷித்தார். தர்பார் வீர வல்லா நேற்றிரவு ரிசிடெண்டு ஜி. கிப்சனைக் கண்டு பேசினர்.

தாகூர் சாஹிப்புக்கு காந்திஜி கடிதம்

10-ந்தேதி பிற்பகல் காந்திஜீ தாகூர் சாஹிப்புக்கு ஒரு கடிதம் எழுதினர். அக்கடிதத்தை ஒரு முக்கிய நபரே கொண்டுபோய் கொடுத்தார். ரிசிடெண்டு ஸ்ரீ. கிப்ஸனுக்கு மற்றொரு கடிதமொன்று காந்திஜீயால் எழுதப்பட்டு அனுப்பப்பட்டது. ஸ்ரீ. உஸ்மான் மீமன் தலைமையில் முஸ்லிம் தூதுகோஷ்டியொன்று மகாத்மா காந்திஜியை கண்டு ஒரு மணி நேரம் கலந்து பேசியது. அப்பேட்டி முடிவில் ஸ்ரீ. மீமன் எதுவும் கூற மறுத்தார். "பேச்சு பூர்த்தியாகவில்லை. நாளை காலை 8-மணிக்கு மீண்டும் காந்திஜியை சந்திக்கிறோம்." என்று மட்டும் கூறினர். ராஷ்டிரியசாலாவில் வழக்கம் போல் மகாத்மா பிரார்த்தனை நடத்துவார்.

மகாத்மா மௌன விரதம்

காந்திஜி இன்று மௌன விரத மனுஷ்டித்து வரு கிறார். இன்று சந்திக்கவிருந்த முஸ்லிம் பிரதிநிதிகள் மகாத்மாவை சந்திக்கவில்லை. லிம்டி சமஸ்தான தலை வர்களான ஸ்ரீமான்கள் ரசிக்லால் பரீக்கும், ஜரூபாய் பரீக்கும் இங்கு வந்து சர்தார் பட்டேலை சந்தித்தனர்.

மகாத்மா காந்தி, 16-ந்தேதி 'ஹரிஜன்' பத்திரிகை யில் "நான் செய்தது தவரு?" என்ற தலைப்பில் எழுதி யுள்ள பின்வரும் கட்டுரையை எழுதியிருக்கிறார்.

நான் செய்தது தவரு?

"ராஜகோட்டை விவகாரத்தில் போய் நான் மாட்டிக்கொண்டதற்காக சில நண்பர்கள் என் மீது குற்றம் சொல்லி என்னிடம் புகார் கூறுகிறார்கள். அவர்கள் சொல்வதின் சாராம்சமாவது :—

என் திரிபுரி செல்லவில்லை?

மற்றெல்லா விஷயங்களையும் ஒதுக்கிவிட்டு ராஜ கோட்டை விவகாரத்தில் தாங்கள் இவ்வளவு கவனம் செலுத்துவது தாரதம்யபொருத்தத்துக்கு மாறானது. தாங்கள் கட்டாயம் திரிபுரிக்குச் சென்றிருக்க வேண் டும்; அது உங்கள் கடமை. தாங்கள் திரிபுரிக்கு வந் திருந்தால் அங்கு விஷயங்கள் வேறுவிதமாக நடந்திருக் கும் அங்கு செல்லாமல் தாங்கள் உண்ணாவிரதம் ஆரம் பித்தீர்கள்.

"ஜனநாயக வளர்ச்சிக்கு பாதகமல்லவா?"

முன்னறிவிப்பில்லாமல் தாங்கள் இவ்வாறு தேசத் தின் வேலையில் அதிர்ச்சி ஏற்படுத்தக்கூடாது. ஒரு சமஸ்தானதிபதி தன் வாக்கைக் காப்பாற்றும்படி செய்ய தாங்கள் ஏன் உண்ணாவிரத மிருக்கவேண்டும்? ராஜகோட்டை ஜனங்களோ, தமது உரிமைக்காக சட்ட

மறுப்புச்செய்து கொண்டிருந்தார்கள். தாங்கள் அவ் வியக்கத்தை நிறுத்தியிருக்காவிட்டால் அவர்கள் எப் படியும் தமது பலத்தை வளர்த்துக் கொண்டிருப் பார்கள். தங்கள் வழியில் இந்நாட்டில் ஜனநாயகம் ஏற் படும்படி செய்ய முடியாது.

"வைசிராயை ஏன் பார்த்தீர்கள்?"

வைசிராய்களுடனும் கவனர்களுடனும் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளாதிருக்க வேண்டுமென் பதை தாங்கள்தான் போதித்தீர்கள். அவ்வாறு போதித்த தாங்கள் வைசிராய் முன்சென்று அவருடைய தயவையும், பேட்டியையும் நாடுகிறீர்கள். உங்கள் கவ னம் வேறிடத்திலிருக்க வேண்டிய சமயத்தில் தாங்கள் வைசிராயிடம் போய்க் காத்திருந்தீர்கள்.

"பெடரல் நீதிபதியை ஏன் மதித்தீர்கள்?"

தாங்கள் சமஷ்டியை எதிர்க்கிறீர்களென்றே நம் பப்படுகிறது. ஆனால் தாங்களோ பெடரல் நீதிபதி யின் அதிகாரத்தை மதித்து ஒப்புக்கொள்ளுகிறீர்கள். பெடரல் நீதிபதி தீர்ப்புச் சொன்ன பிறகுதான் டில்லி யை விட்டு கிளம்புவது என்றிருந்தீர்கள். மகாத் மாக்களின் போக்கே விசித்திரமாகத் தான் இருக் கிறது!'

கேள்விக்குப் பதில்

"ஆழ்ந்து கவனிக்கவேண்டும்"

அவசரமாக உட்புகுந்து கவனிக்காமல் படித்தால் மேலேயுள்ள புகார் நியாயமானதென்றே தோன்றும். ஆனால் விஷயத்தை சற்று உட்புகுந்து கவனித்தால் அவ்வாறு கவனிப்பவர் சத்யாக்ரஹத்தின் வேலை முறை யையும் தெரிந்துகொண்டால், இந்த புகாரிலுள்ள வாதம் சரியானதல்லவென்பதை எளிதில் அறியலாம்.

இந்தியா முழுதுக்கும் நன்மை

ராஜகோட்டை விஷயமாக நான் செய்ததிலோ இப்போதும் செய்துகொண்டிருக்கும் காரியத்திலோ புதிது ஒன்றுமில்லை. இந்தியா தேசப் படத்தில் ராஜகோட்டை ஒரு மிகச்சிறு இடந்தான் ஆனால், அங்கு நான் கண்ட கோளாறு, இந்தியா முழுதிலும், எங்கும் வியாபித்திருக்கும் ஒரு வியாதியின் அறிகுறியே. ஆகவே இந்த தீமையை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்று நான் எண்ணினேன்.

அங்கு நான் செய்த முயற்சியின் பயனாக, இது வரையில் இந்தியா முழுவதுமே நன்மை ஏற்பட்டிருக்கிறதென்றே நான் நம்புகிறேன்.

நான் ஒரு தளகர்த்தன்

புத்திசாலியான யுத்த தளகர்த்தன் தன்னுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளிலுள்ள ஒரு சிறு குறையையும் அலக்ஷியம் செய்யமாட்டான். நான் அப்படிப்பட்ட ஒரு தளகர்த்தனைப் போலவே நடந்துகொண்டேன்.

கெய்ரா, சம்பாரண்யம் முதலிய இடங்களில் சத்யாக்ரஹம் நடத்தியதும் இதே மாதிரி தான். அந்த இயக்கங்கள் நடந்து கொண்டிருந்தபோது இந்தியா முழுவதின் கவனமும் அங்கு இழுக்கப்பட்டது. நான் என்னுடைய முழுக்கவலையையும் நேரத்தையும் கவனத்தையும் அங்கேயே செலவிட்டேன். ஒரே சமயத்தில் எல்லாப் போர்முனைகளையும் சமாளிப்பது என்பது சற்று துர்லபமேயாகும்.

தயாரிப்பு வேறு, குட்டி யுத்தம் வேறு,

யுத்தத்துக்காக தயார்செய்வது ஒன்று; ஒரு குட்டி யுத்தம் நடந்து ஒரு இடத்தில் சண்டையே நடப்பது என்பது வேறொன்று. இரண்டுக்கும் வித்யாசம் உண்டு. திரிபுரியில் நடக்கும் காரியம் "யுத்த தயாரிப்பு"; ராஜகோட்டில் நடந்தது ஒருகுட்டி யுத்தம்.

எனக்கு கடவுள் தந்த ஆயுதம்

உபவாசமென்பது சத்தியாக்ரஹத்தின் ஆயுதச்சாலை லுள்ள ஒரு மிகவும் திறமையான ஆயுதம். ஒரு சிலர் தான் அந்த ஆயுதத்தை கையாள முடியுமென்பதற்காக அதை யாருமே உபயோகிக்கக்கூடாது என்று சொல்லு வது பொருந்தாது. மற்றவர்கள் உபயோகிக்க முடி யாது என்பதற்காக, நான் கடவுள் எனக்குக் கொடுத்த சக்திகளை உபயோகிக்காது பேசாமலிருப்பது முட்டாள் தனமாகும் ஒருவரிடமுள்ள சில விசேஷ சக்திகள், ஜன நாயகத்தின் சேவைக்காக கொடுக்கப்பட்டால், அது ஜனநாயகத்தின் வளர்ச்சியை எப்படி பாதிக்கமுடியும்; இதுவரை யாரும் அவ்வாறு கூறுவதாக நான் கேள்விப பட்டதில்லை. இந்த விசேஷ சக்தியை நான் உபயோகிக் காது ஜனநாயக வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமை ந்து ஊக்களிக்குமென்றே நான் நம்புகிறேன். ராஜ கோட்டை உண்ணுவிரதம் அவ்வாறுதான் செய்திருக் கிறதென்பதிலும் சந்தேகமில்லை.

உண்ணுவிரதத்தால் நன்மையே விளைந்தது

எனது முந்தின உண்ணுவிரதங்களால் தேசத் துக்கு நன்மை ஏற்பட்டது. என்பது உண்மையானுல் ராஜகோட்டை உண்ணுவிரதத்தை ஏன் பழிக்க வேண் டும்? என்னுடைய முந்தின உண்ணு விரதங்களைப் பற்றியும் குற்ரம் சொல்லப்பட்டிருக்கிறது என்று இவர்கள் சொல்லலாம். உண்மைதான். அவர்கள் அப் போதும் குற்றம் சொல்லியிருக்கிறுர்கள். ஆனல் ஓவ் வொரு உண்ணுவிரதத்தாலும் இந்நாட்டுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை.

பலாத்காரத்தை தடுத்தேன்

ஜனநாயக வளர்ச்சியும் ஜனநாயக மனப்பான்மை யும் பாதிக்கப்படுவது வேறெதனுலும் அல்ல; பலாத்

காரம் ஒன்றுதான் ஜனநாயக உணர்ச்சியின் வளர்ச்சியை தடை செய்யும்- என் உண்ணுவிரதத்தால் வேறு என்ன பயன் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் பலாத்காரம் தலை எடுக்காமல் தடுக்கப்பட்டது என்பது மட்டும் நிச்சயம், இவ்வாறு நான் கூறுவதை ஜனங்கள் நம்பட்டும்.

வைசிராயை பார்த்ததற்கு

வைசிராயிடம் சென்றது பற்றி நான் வெட்கப்படவேயில்லை. பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியென்ற ஹோதாவில் அவர், பிரிட்டிஷ் சர்க்காருக்குட்பட்ட ஒரு சமஸ்தானதிபதி தன் வாக்குறுதியை நிறைவேற்றும்படி செய்வதற்காக தலையிடவேண்டும் என்று நான் அவரது கடமையைக்கூறி அழைத்தேன்.

நான் அவருடைய தயவு அல்லது சலுகை அல்லது கருணைக்காக வேண்டிக்கொள்ளவில்லை. அவர் தலையிட வேண்டுமென்று நான் கூறியிருந்தேன். அந்த நிலைமையில் அவர் அந்த விவகாரத்தைப்பற்றி விவாதிப்பதற்காக அழைத்தால் அதற்கு நான் போக மறுப்பது முற்றிலும் சிறு பிள்ளைத்தனமாகவும் கண்ணியக் குறைவாகவுமே இருக்கும்.

உண்ணு விரதத்தின்போது வைசிராய் எவ்வளவு கண்ணியத்துடன் அழகாக நடந்துகொண்டார் என்பதை நான் ஏற்கனவே ஒப்புக் கொண்டு என் கருத்தை வெளியிட்டிருக்கிறேன். அவர் என் உண்ணுவிரதத்தை அலக்ஷியம்செய்து, அவர் இஷ்டம்போல், அவருக்கு எப்போது சவுகரியமோ அப்போது தலையிடவும், அல்லது தலையிடவே மறுக்கவும்கூட முடியும். அவர் அவ்வாறு செய்யவில்லை. தேசத்தின் பெரும் கவலையை அவர் உணர்ந்தார். ராஜபுதான சுற்றுப்பிரயாணத்தை அவர் திடீரென்று நிறுத்திக்கொண்டதற்கு அவரது நல்ல மனித உணர்ச்சியும் ஒரு காரணமென்றே நான் நம்புகிறேன். தாமதமின்றி ஏதாவது தீர்மானத்துக்கு

வரவேண்டுமென்று கருதித்தான் அவர் தன் யாத்திரையை முடித்துக்கொண்டு டில்லிக்குத் திரும்பினார். வைசிராயிடம் போய் காத்திருந்தது பற்றி நான் வருத்தம் தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை.

சத்யாக்ரஹத்தின் அம்சமே

கண்ணியமான முறையில் ஒரு ஒப்பந்தத்துக்கு வருவதும், எதிரியை தன் அபிப்பிராயத்துக்கு திருப்ப முயற்சிப்பதற்கான சந்தர்ப்பத்தை கைவிடாதிருப்பதும் சத்தியாக்ரஹத்தின் அம்சமாகும். இதற்கு முன் லார்ட் இர்வின் வைசிராயாக இருந்த காலத்தின் நான் எவ்வாறு நடந்து கொண்டேனோ, அதே முறையை இப்போது லார்ட் லின்லித்கோவுடன் அதைவிட சிறிய அளவில் நான் இப்போது திரும்பவும் செய்தேன்.

"மறுப்பது அனுசிதமாகும்"

கடைசியாக பெடரல் நீதிபதியின் தீர்ப்புக்கு விட்டதுபற்றி சொல்கிறேன். தாகூர் சாஹிப் சர்தார் பட்டேலுக்கு 1938 டிசம்பர் 26ல் எழுதின கடிதத்தின் சரியான வியாக்யான மென்னவென்று அபிப்பிராயம் கூறுவதற்கு பெடரல் நீதிபதியின் தீர்ப்புக்கு விடுவதென்று நான் ஏற்றுக்கொண்டேன். அந்தக் கடிதத்துக்கு தாகூர் சாஹிப் ஒருவிதமான வியாக்கியானம் கூறினார். ஸர்தார் பட்டேல் வேறு விதமாக வியாக்கியானம் செய்தார். இந்த நிலைமையில் இதுபற்றி பெடரல் நீதிபதி தன் வியாக்கியானத்தைச் சொல்லட்டும் என்று வைசிராய் யோசனை கூறினார். அந்த நிலைமையில் நான் செய்யவேண்டியதென்ன? "அவர் இந்திய அரசியல் சட்டப்படி யேற்பட்ட ஒரு கோர்ட்டின் நீதிபதியாகையால், அவர் அபிப்ராயத்துக்கு விடக்கூடாது" என்று நான் சொல்வதா? அவ்வாறு ஆக்ஷேபிப்பது எனது கண்ணிய உணர்ச்சிக்கும் உசிதானுசிதம் பற்றிய உணர்ச்சிக்கும் முற்றிலும் மாறாகும்; அவ்வாறு நான் ஒருக்காலும் சொல்லமுடியாது.

அந்த குறிப்பிட்ட ஒரு தஸ்தாவேஜின் வியாக்கியான மென்ன என்று கூறுவதற்கு ஸர் மாரிஸ்குவயரை கேட்டுக்கொள்ள நான் இணங்கியதால் சமஷ்டி ஒரு அங்குலம்கூட நெருங்கி விடவில்லை.

என்னால் சமஷ்டி வந்துவிடாது

அந்த சமஷ்டி வருவதாயின் அது என்னால்வராது நமது பலக்குறைவால் தான் சமஷ்டி வரமுடியும்; அதாவது தேசத்தில் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் பலாத்காரத்தை அஹிம்சையால் ஒடுக்க நமக்கு சக்தியில்லாது போவது; காங்கிரஸில் வளர்ச்சிக்கும் கட்டுப்பாட்டுக் குறைவு ஊழல் இவற்றை ஒழிக்க நமக்கு சக்தியில்லாமல் போவது; இவற்றால் நமது பலம் குறையும்; இந்த பலக்குறைவால் தான் சமஷ்டி வரக்கூடுமே யொழிய வேறு காரணத்தால் சமஷ்டி வரமுடியாது. காங்கிரஸிலுள்ள ஊழலைப்பற்றி நான் சென்ற 1 மாதங்களாக சொல்லி வந்திருக்கிறேன்.

தாகூர் சாஹிப்பின் பிடிவாதம்

சர் மாரிஸ் குவயர் வியாக்கியானத் தீர்ப்பு அளித்தது பெடரல் நீதிபதியென்ற ஹோதாவிலல்ல. கியாதி பெற்ற ஒரு சட்ட நிபுணர் என்ற ஹோதாவிலேயே பிரச்னை அவரது அபிப்பிராயத்துக்கு விடப்பட்டது. அவர் எவ்வளவு உழைப்புடன் தன் கடமையைச் செய்திருக்கிறார் என்பதை அவரது தீர்ப்பைப் பார்த்தால் யாரும் தெரிந்துக் கொள்ளலாம்.

கடந்த டிசம்பர் 26-ந் தேதி தாகூர் சாஹிப் வெளியிட்ட அறிக்கை பிரகாரம் சீர்திருத்த கமிட்டி மெம்பர்களை நியமிக்கும் பிரச்னையில் மீண்டும் புதிய தகராறுகளும், கஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன. சர்தார் பட்டேல் நியமிக்கும் ஏழு மெம்பர்களை தாகூர் சாஹிப் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று குவயர் தீர்ப்புக் கூறி

விட்டார். ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கஷ்டம் என்னவென்றால், சீர்திருத்த கமிட்டியில் பரிஷத் பிரதிநிதிகளுக்கு மெஜாரிட்டி இருக்க வேண்டுவதோடு முஸ்லிம்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் பிரதிநிதித்வம் அளிக்க வேண்டியிருப்பதே. இதற்கு ஒரு வழியும் கண்டு பிடிக்கப்படவில்லை. சீர்திருத்த கமிட்டி அங்கத்தினர்களின் தொகையை அதிகப்படுத்தவோ அல்லது சீர்திருத்த கமிட்டியில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஓட்டுரிமை இல்லாதபடி செய்யவோ தாகூர் சாஹிப் மறுத்துவிட்டார். மைனாரிட்டிக்கு பிரதிநிதித்வம் அளிக்கவும் பரிஷத்துக்கு மெஜாரிட்டி ஸ்தானங்களை அளிக்கவும் அவ்விரண்டு யோசனைகளே சிறந்தவை.

மகாத்மா காந்தி இங்கு வந்ததும் தாகூர் சாஹிப்புக்கு பின்வரும் கடிதம் எழுதினார். முன்பு உம்மால் அறிவிக்கப்பட்ட நாலு பெயர்களும் எடுபடாமலிருக்க வேண்டுமென்று நீர் விரும்புவீரென்று எனக்குதோன்று கிறது. பரிஷத்தின் சார்பில் சர்தார் பட்டேல் நியமிக்கும் நபர்கள் மெஜாரிட்டியாக விருக்கும் வரையில் சர்க்கார் சந்தோஷத்துடன் அந்த நாலு பெயர்களையும் ஒத்துக் கொள்ளும், அந்த நாலு பெயர்களும் இன்னுமிருக்குமானால், சர்தார் 8 பெயர்களை சிபார்சு செய்ய வேண்டும். உம்மால் நியமிக்கப்பட்ட நாலுபேர்களை நீர் வாபஸ் வாபஸ் வாங்கிக்கொண்டால், சர்தார் பட்டேல் 7 பெயர்களையே சிபார்சு செய்யவேண்டும்.

உமது அபிப்பிராயத்தை அன்புடன் தெரிவிக்கவும். நீர் நியமிக்கப் போகும் மூன்று ஆபீசர்கள் யாரென்பதையும், யார் தலைவராக விருப்பாரென்பதையும் தெரிவிக்கவும்.

தாகூர் சாஹிப் பதில்

மேற்படி கடிதத்திற்கு தாகூர் சாஹிப் பின்வரும் நீண்டபதில் அனுப்பினார் :-முஸ்லிம்கள். ஜமீன்தார்கள்,

ஹரிஜன்கள் இவர்களின் பிரதிநிதிகளாக என்னால் நியமிக்கப்பட்ட நாலு கனவான்கள் சீர்திருத்த கமிட்டியில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்பதே எனது விருப்பமென்று நீங்கள் யூகிப்பது சரி. சர்தார் பட்டேல் நியமிக்கும் நபர்கள் பெரும்பான்மையோராக இருக்கும் பொருட்டு சீர்திருத்த கமிட்டி மெம்பர்களை அதிகப்படுத்தலாமென்று தாங்கள் கூறும் யோசனை இப்பொழுது அநுஷ்டானத்திற்கு யுத்தமானதே அல்ல. இப்பொழுது செய்யப்படவேண்டுவது என்னவென்றால் கடந்த டிசம்பர் மீ 26உ நான் பிறப்பித்த அறிக்கையின் ஷரத்துக்களை இந்தியா பிரதம நீதிபதியின் தீர்ப்புப்படி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதேயாகும். சமிட்டி மெம்பர்கள் 10 பேராகவே இருக்கவேண்டுமென்று அந்நீதிபதி தீர்ப்பு கூறிவிட்டார், முஸ்லிம்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் தக்க பிரதிநிதித்வம் அளிக்க வேண்டுவது மிக முக்கியம். அந்நோக்கத்துடனேயே நான் ஜனவரி 21உ உத்தரவுபடி இரு முஸ்லிம்களையும் ஒரு ஜமீன்தாரையும் நியமித்தேன்.

இந்த அபிப்பிராயத்தைத் தாங்களும் பகிர்ந்து கொண்டிரென்பதற்கு அத்தாட்சியாக தாங்கள் பிப்ரவரி மாதம் 28-ந் தேதி உங்களைக் காணவந்த முஸ்லிம் ஜமீன்தார் தூதுகோஷ்டிகளுக்கு உறுதி அளித்தீர்கள். அவர்கள் சார்பில் கமிட்டியில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமிட்டியில் நிச்சயம் சேர்க்கப்படுவார்களென்பதே உங்கள் உறுதி மொழி.

தாங்கள் இவ்விதம் உறுதி அளித்திருப்பதை முன்னிட்டு, இந்த பெயர்களை சர்தார் பட்டேல் சிபார்சு செய்யும் உத்தியோக பற்றற்ற மெம்பர்கள் ஜாபிதாவில் சேர்க்கும்படி தாங்கள் ஸ்ரீ பட்டேலுக்கு யோசனை கூறுவீர்களென்று நம்புகிறேன். ஒரு தனிப்பட்ட கட்சிக்கு மெஜாரிட்டியைப் பெறுவது முக்கியமல்லவென உண்மையில் எல்லா வகுப்புகளின் பிரதிநிதிகளும் அடங்கிய கமிட்டி யொன்றை நியமிப்பதும் அம் மெம்

பர்கள் தங்கள் பொறுப்புகளை நிர்வகிக்கத்தக்கவர்களாக விருக்கவேண்டுவது மிக முக்கியமென்று, தாங்களும் நப்புவீர்களென்று நான் நினைக்கிறேன்.

ஸ்ரீ. பட்டேலின் பெயர்களுக்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன். அப்பெயர்கள் கிடைத்ததும் நான் மூன்று உத்தியோகஸ்தர்களை நியமிப்பேன். அவர்களுக்கு ஓட்டு உரிமை உண்டு. கமிட்டி தலைவர் யாரென்பதையும் தீர்மானிப்பேன். என்னால் நியமிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மெம்பர்களின் பிரதிநிதிகளும் கமிட்டியில் சேர்க்கப்படுவார்களென்று நான் நினைக்கிறேன்.

தாமதத்திற்கு காரணம்

தாகூர் சாஹிப், சீர்திருத்த கமிட்டி மெம்பர்களை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதற்கு காரணம் என்னவென்பதுபற்றி விசாரித்ததில், பரிஷத் சார்பில் 7-மெம்பர்களை சர்தார் பட்டேலும் காந்திஜியும் இன்னும் நியமிக்காதிருக்கிறார்கள் என்பதாம்.

உத்தியோக பற்றற்ற கோஷ்டியில் முஸ்லிம்களையும், ஜமீன்தார்களையும் சேர்க்கும் நோக்கத்துடன், சீர்திருத்துக்கமிட்டியில் 8 பரிஷத் மெம்பர்கள், 2 முஸ்லிம்கள், 1 ஜமீன்தார், தாகூர் சாஹிப்பின் ஆளான ஸ்ரீ. மோகன்லால் மன்டான், மூன்று சமஸ்தான ஆபீசர்கள் இவர்கள் அங்கம் வகிக்கும் பொருட்டு அக்கமிட்டியை விரிவாக்கும்படி காந்திஜி, தாகூர் சாஹிப்புக்கு கடிதம் எழுதினார். அதன்படி கமிட்டி மெம்பர்கள் தொகை 15 ஆகும். பிரஜா பரிஷத் மெம்பர்களுக்கு ஒரு ஸ்தான மெஜாரிட்டி வேண்டுமென்றே அதாவது 15 பேரில் 8 பேர் பரிஷத்தைச் சேர்ந்தவர்களாக விருக்க வேண்டுமென்றே காந்திஜி அக்கமிட்டியைப் பெரிதாக்கும்படி கேட்டார். தாகூர் சாஹிப்பு 10 மெம்பர்களை இருக்க வேண்டுமென்கிறார்.

இதுவரை ஒரு முடிவும் ஏற்படவில்லை. சர்தார் பட்டேல் ஸ்தலதொண்டர்களுடன் கலந்து பேசினர்.

மைனாரிடிகளுக்கு வீரவல்லா பரிவு !

நேற்று பிற்பகலே காந்திஜியின் கடிதம் தாகூர் சாஹிப்புக்கு கிடைத்ததென்றும், பதில் ஒன்று தயாரிக்கப்பட்டு சமஸ்தான சபை முன்பு சமர்ப்பிக்கப் பட்டதென்றும் விசாரித்ததிலிருந்து தெரிந்தது. தர்பார் வீரவல்லா கூறியதாவது :—

"முஸ்லிம்கள் ஜமீன்தார்கள் உள்பட பிரஜைகள் அனைவருக்குள்ளும் ஒற்றுமை இருப்பதா இல்லையா வென்பதைக் கவனிக்கவேண்டும். சர். மாரிஸ் குவயர் தீர்ப்புக்குப் பிறகு தாகூர் சாஹிப், சீர்திருத்த கமிட்டியில் சர்தார் பட்டேல் சிபார்சு செய்யும் 7 பேர்களை நியமிப்பது தவிர வேறு வழியில்லை. சீர்திருத்த கமிட்டியில் முஸ்லிம்கள், ஜமீன்தார்கள் இவர்களுக்கு பிரதிநித்துவம வழங்குவதை காந்திஜியும் சர்தார் பட்டேலுமே தீர்மானிக்கவேண்டும். நிர்வாகம் தடைபடாமல் நடக்கும்பொருட்டு சீர்திருத்த கமிட்டியில் எல்லா வகுப்பாருக்கும் போதிய அளவு பிரதிநிதித்வம் அளிக்கப்பட வேண்டும்." காந்திஜியும் சர்தார் பட்டேலும் 10 ந்தேதி பிற்பகல் ஸ்தல பரிஷத் தொண்டர்களுடன் ஒருமணி நேரம் பரிஷத் விவகாரங்களைப்பற்றி விவாதித்தனர். மகாத்மாவிடமிருந்து இன்று ரெசிடெண்டு ஸ்ரீ. கிப்ஸனுக்கு மற்றொரு கடிதம் அனுப்பப் பட்டது.

முஸ்லிம்கள் மகாத்மாவை கண்டு பேசினர்

ஏப்ரல் 11ல் மாலை 3-மணிக்கு மகாத்மா காந்தி ரெசிடெண்டு ஸ்ரீ. கிப்சன் மாளிகைக்குச் சென்று ரெசிடெண்டுடன் பேசினர். ரெசிடெண்டை காண திடீரென்று முடிவு செய்ததற்குக் காரணம் மிக்க ரகசியமாக விருக்கிறது. காந்தி அங்கு வந்தது முதல் அவ

ருக்கும் ஸ்ரீ. கிப்ஸனுக்கும் நடந்த கடிதப் போக்கு வரத்துகளின் விளைவாகவே மகாத்மா ரெஸிடெண்டைச் சந்தித்தார். சீக்கிரம் சீர்திருத்த கமிட்டி ஒன்று நியமிக்கப்பட வேண்டு மென்பதற்கும் அதன் மூலம் ராஜகோட்டை நகராறில் சமரசம் ஏற்படுவதற்கும் அனுகூலமாகவே காந்திஜி ரெசிடெண்டை சந்தித்தா ரெனத் தெரிகிறது.

வெய்யிலில் காந்திஜி நடந்தார்

ஏப்ரல் 11ல் மாலை 3-மணிக்கு மகாத்மா காந்தி ஸ்ரீ. கிப்ஸனைச் சந்திக்க ரெசிடெண்சிக்கு புறப்பட்டார், மோட்டார் தயாராக விருக்கவில்லை. ஆதலால் காந்திஜி கடும் வெயிலில் சிறிது தூரம் நடந்து சென்றார். மிச்ச தூரத்தை ஒரு டாங்காவில் கடந்தார் கார் அவருக் கும் பின் சென்றது. ரெசிடெண்டு ஸ்ரீ. கிப்ஸனுடன் காந்திஜி 75 நிமிஷ நேரம் பேசினார். 4-20 மணிக்கு ரெசிடெண்டு காரியாலயத்தைவிட்டுப் புறப்பட்ட போது மகாதமா உற்சாகத்துடன் காணப்பட்டார். "ஸ்ரீ. கிப்சனுடன் பேசியது என்னவென்பதை தெரி விக்க முடியாது" என்றார் காந்திஜி. ஸ்ரீ. கிப்ஸனும் தாம் மகாத்மாவுடன் பேசியதுபற்றி மௌனம் சாதிக்கி றார். ஸ்ரீ. கிப்ஸனுடன் விவாதித்ததை முன்னிட்டு, ராஜகோட்டை சிக்கல், சீக்கிரம் தீருமென்று எதிர்பார்க் கிறீர்களா வென்று நண்பர்கள் கேட்டதற்கு காந்திஜி தமது பொக்கைவாய் புன்முறுவலுடன் கூறியதாவது:-

"நான் 70 நிமிஷம் ஸ்ரீ கிப்ஸனுடன் பேசினேன். ஆனல் என்ன நடக்குமென்பது எனக்குத் தெரியாது." காந்திஜியுடன் பேசியது அந்தரங்கமானதேன்று ஸ்ரீ. கிப்ஸனும் எதுவும் கூற மறுத்து விட்டார்.

முஸ்லிம்களின் கடிதம்

இன்று மாலை 7-30 மணிக்கு காந்திஜியை காண விருந்த முஸ்லிம் தூதுகோஷ்டியிடமிருந்து கடிதமொ

ன்று வந்தது பிரார்த்தனை செய்ய மகாத்மா ராஷ்டிரீய சாலாவில் வந்திறங்கியபோது இவருக்கு அக்கடிதம் கிடைத்தது. அக்கடிதத்தில் கண்டுள்ள விஷயங்கள் என்னவென்பது தெரியவில்லை.

முஸ்லிம் பிரதிநிதித்வத்திற்கு நிபந்தனை

பிறகு முஸ்லிம் தூது கோஷ்டி காந்திஜியைக் கண்டு அவருடைன் 2 மணி நேரம் பேசிக்கொண்டிருந்தது. அக்கோஷ்டியின் தலைவர் நிருபர்களிடம் சொன்னதாவது:- "இப்பொழுது எங்களால் ஒன்றுச்சொல்வதற்கில்லை. மீண்டும் மகாத்மாவை சந்திப்போமாவென்பதையும் கூறுவதற்கில்லை. சீர்திருத்த கமிட்டியில் முஸ்லிர்களுக்கு இரு ஸ்தானமும் அளிப்பதாக மகாத்மா காந்தி வாக்களித்திருப்பதாக கூறப்படுவது சம்பந்தமாக விசாரித்ததில் அவ்வித வாக்குறுதி நிபந்தனை இல்லாததால்; நிபந்தனையோடே கூடியதாகும். ஸ்தானங்களுக்கு வாக்குறுதி அளித்த காலத்தில் காந்திஜி சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் ஓட்டுரிமை கூடாதென்றும், அப்படியாயிருக்கும் பக்ஷத்தில் முஸ்லிம்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் வழங்கப்பட்ட ஸ்தானங்கள் இருக்கலாமென்றுமே கூறினர். அதோடு, காந்திஜி அங்கு வந்தது முதல், டில்லிக்குப் புறப்படும் வரையில் வெளியிட்ட எல்லா அறிக்கைகளிலும் பரிஷத் மெம்பர்களுக்கு கமிட்டியில் மெஜாரிட்டி இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். ஆகவே அந்த நிபந்தனை பேரிலேயே காந்திஜி வாக்களித்தார். தங்களுக்கு மெஜாரிட்டி வேண்டுமென்றும் முஸ்லிம்களும் ஜமீன்தார்களும் பரிஷத் மெம்பர்களுடன் ஏகோபித்து வேலை செய்ய உறுதியளித்தாலொழிய பரிஷத் மெஜாரிட்டி குறையக் கூடாதென்றும் பரிஷத் வட்டாரங்களில் அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. சர்தார் பட்டேல் ஏழு பெயர்களை இன்னும் தாகூர் சாஹிப்புக்கு அனுப்பிவிடவில்லை.



ஹிஸ் ஹைனஸ் தாகூர் சாகிப்

தர்மேந்திர சிங்ஜி

ராஜகோட்டை மன்னர்

ராஜகோட்டை விஸ்தீரணம்
283 சதுர மைல்

ஜனத்தொகை 75,540

வருஷ வரவு 12,50,000

மரியாதை குண்டு 9

ராஜகோட்டை திவான்

தர்பார் வீரவல்லா

சியல் காரியதரிசியாக இருந்தார்
காடல் விலகிவிட்டப் பிறகு
திவானை வந்து சேர்ந்தார்.



பயன் நிறைந்த சொல்லையுடைய மகாத்மா இவ்வுலகத்தில் சாபமான மந்திரங்களை அம்மகான் கூறிவிட்டால் அவைகளே பிரத்தியட்சமாகிவிடும்



உண்ணாவிரதம் ஆரம்பிக்கு முன் ஆட்டுப் பால் சாப்பிடுகிறார்

8-வது அத்தியாயம்

பொறுத்தவர் பூமி ஆண்டார்

ஏப்ரல் மாதம் 16ந்தேதி மாலை பிரார்த்தனைக்குப்பிறகு மகாத்மா காந்தி ராஷ்டிரீய சாலாவை விட்டு புறப்படுகையில் ஜாகிர்தார்களும், முஸ்லிம்களுமாக 500 பேர்கள் மகாத்மா காந்தியை சூழ்ந்துக் கொண்டனர். முன்பே காந்திஜி தமது சகாக்களுடன் பிரார்த்தனைக்காக ராஷ்டிரீயசாலாவுக்கு வந்தார். பிரார்த்தனையின் ஆரம்பத்தில் ஜனக் கூட்டம் மிதமாக இருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஆர்ப்பாட்டக்காரர்களான ஜாகிர்தார்களும், முஸ்லிம்களும் 'ஜாகிர்தாருக்கு ஜே' என்று கோஷம் செய்துக் கொண்டும், கருப்பு கொடிகள் பிடித்துக் கொண்டும் அங்கு வந்தனர். அவர்கள் ராஷ்டிரீய சாலாவுக்கு வந்ததும் அதனை சுற்றியுள்ள வேலியைச் சூழ்ந்துக்கொண்டு உள்ளே பிரார்த்தனை நடைபெறுகையில் கோஷம் செய்துக் கொண்டிருந்தனர். அந்த கும்பலில் தாகூர் சாகிப்பின் சகோதரர்ரான கே. எஸ். பிரதுமன் சிங்கும், தாகூர் சாகிபால் முன்பு நியமிக்கப்பட்ட மூன்று மெம்பர்களும் இருந்தார்கள். இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் செய்தபோதிலும், பிரார்த்தனை தொடர்ச்சியாக நடந்தது.

சிவ பூஜையில் கரடி

பிரார்த்தனைக்குப் பிறகு மகாத்மா காந்தி மேடைக்கு அருகில் தயாராகவிருந்த காரில் ஏறமறுத்துவிட்டார்; ஆனால் அவர் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கிச் சென்றார். பரிஷத் தொண்டர்களும், மற்றவர்களும் வரிசையாக கைகோர்த்து, காந்திஜிக்குக் கஷ்டம் ஏற்படாதபடி கூட்டத்தைச் சமாளித்தனர். ஆனால் குழப்பம் ஏற்படாமற் போகவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் மகாத்மா காந்தி இருக்குமிடத்தை நோக்கிச்

சென்றனர். குறுகிய வாசல் நெருக்கத்தால் தடைப் பட்டது. ஜாகிர்தாரர்களும், முஸ்லிம்களும் அடங்கிய கும்பலில் சிலர், பலாத்காரம் புரியும் ஆவேசத்துடனிருந் தார்கள். மகாத்மாவுக்கு ஆபத்து ஏற்படுமோவென்று கவலை ஏற்பட்டது. காந்திஜி, ஜனங்களின் காலடியால் எழுந்த தூசியால் தொந்தரவு அடைந்தார். அவர் ரஸ் தாவுக்கு நடந்து செல்லுவதற்குள் ஆர்ப்பாட்டக்காரர் கள் அவரை நெருங்கி சூழ்ந்துகொண்டனர். அவர் சில நிமிஷம் கண்களை மூடிக்கொண்டிருந்தார். துரித மாக ஒரு டம்ளர் ஜலம் அங்கு கொண்டுவரப்பட்டது. சில நிமிஷங்களுக்குப் பிறகு மகாத்மா, காருக்குச் சென் றார். தம்மைச் சூழ்ந்துகொண்டு பாதுகாத்தவர்களை நோக்கி காந்திஜி சொன்னதாவது:—"நான் விரோதி யின் பாதுகாப்பில் செல்ல விரும்புகின்றேன்." அவர் புன்முறுவலுடன் ரஸ்தாவிலிருந்த தமது காரில் ஏறினார். கார் வரையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பின் தொடர்ந்தனர். கடைசி வரையில் அவர்கள் கோஷம் செய்வதையும் விடவில்லை. பிறகு கார் காந்திஜியின் ஜாகைக்குச் சென்றது. ஆர்ப்பாட்டகாரக் காலிகளும் கலைந்து போயினர். ஜாகைக்கு வந்ததும் மகாத்மா திறப்பான இடத்தில் ஒரு கட்டிலில் ஓய்வு எடுத்துக் கொண்டார். அன்றிரவு மகாத்மா மௌன விரதம் இருந்தார்.

அன்று மாலை நடந்த சம்பவத்தைப்பற்றி மகாத்மா பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:—அன்று மாலை நடந்த ஆர்ப்பாட்டத்தில் என் மனதை மிக்க புண்படுத்திய தென்னவென்றால், நல்ல தினத்தில், மிக்க புனிதமான நேரத்தில் ஆர்ப்பாட்டம் செய்ய ஆர்ப்பாட் டக்காரர்கள் தீர்மானித்ததே. இத்தனை வருஷ கால மாக நான் எனது மாலை பிரார்த்தனையை பகிரங்கமான கூட்டத்தில் எவ்வித பங்கமுமில்லாமல் நடத்தி வந்தி ருக்கிறேன். பிரார்த்தனை நேரத்தில் ஏன் என்னை தொந்தரவு படுத்த அவர்கள் எண்ணவேண்டும்?

இவ்வித குறுக்கிடுதலுக்கு ஆளாகுமாறு அங்கு கூடியிருந்த ஆடவரும், பெண்களும், குழந்தைகளும் என்ன செய்தனர்; அவர்கள் கடவுளைப் பிரார்த்திக்க அல்லவா கூடியிருந்தனர்? பிரார்த்தனைக்குத் தவிர மற்றபடி நான் வெளியே செல்வதில்லை யென்பதை அறிந்த அவர்கள், நான் பிரார்த்தனை மைதானத்தில் பிரவேசித்தபோதுமட்டும் கோஷம் செய்வதும், கருப்பு கொடி பிடிப்பதும் போதியதல்லவா? அப்படி செய்வது கூட கெட்டது. ஆனால் அவர்கள் பிரார்த்தனை நேரம் பூராவும் கோஷம் செய்தனர். அவர்கள் என் தேச மக்கள். நான், பிரார்த்தனை மீது மனதை செலுத்து கையில் அவர்களுடைய கூச்சல் என்னை அம்புகள் போல் தைத்தது. வெளியில் கூச்சல் குழப்பங்கள் இருந்தபோதிலும் அதனைக் கவனியாமல் தியானம் செய்யும் சக்தியை நான் அடைந்துவிடவில்லை. அவர்களுடைய கோபமான ஆர்பாட்டத்தையும், அவர்களுடைய கோபத்தையும் காணும்பொருட்டு என்னை அவர்களுடைய கூட்டத்திற்கு அழைத்திருந்தாலும், நான் பலவீன நிலைமையிலிருந்தபோதிலும் அவர்கள் கூட்டத்திற்குச் சென்று அவர்களை சமாதானப்படுத்த முயன்றிருப்பேன். நான் வாக்குறுதியை எவ்விதத்திலும் மீறவில்லை யென்பதை வற்புறுத்திக் கூறுவேன். எனது வாழ்க்கை முழுவதிலும் நான் கொடுத்த வாக்கை மீறியதே கிடையாது. இங்கே நான் வாக்கை மீறவேண்டியதன் காரணமே இல்லை. ஆனால் மார்ச்சு மாதம் 11-ந் தேதி பாயாத்களுக்கு எழுதிய கடிதத்தின் அர்த்தத்தை பொறுத்த வரையில் அவசரத்தில் அது வேறு விதமான அர்த்தத்திற்கு இடம் தரக்கூடிய வாக்குறுதியை அளித்திருக்கக் கூடும்.

அதுபற்றி நான் ராஜகோட்டையிலுள்ள சட்ட நண்பர்கள் பலரை அபிப்பிராயம் கேட்டேன்; பக்ஷபாதமில்லாமல் அபிப்பிராயம் கூறும்படியும் அவர்களை எச்சரித்தேன். பூர்ண காரணமில்லாமல் எனது கடி-

த்தைப்பற்றி அபிப்பிராயம் கூறினால், அவர்களுடைய மதிப்புக்கு பங்கம் விளையுமென்றும் அந்த சட்ட நண்பர்களுக்கு கூறினேன். அக்கடிதத்தைப் பற்றி நான் கூறும் அர்த்தத்தைப் பூரணமாக ஆதரித்து அவர்கள் நியாயத்தோடும், ஏகமனதாகவும் கூறிய அபிப்பிராயம் என் வசமுள்ளது. நிரபராதிகளான ஆடவர், பெண்கள் இவர்களின் பிரார்த்தனையில் அகாரணமாக குறுக்கிட்டதன் மூலம் அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கக்ஷிக்கு ஊனத்தையே ஏற்படுத்திக் கொண்டார்களென்று நான் அஞ்சுகிறேன். பிரதம நீதிபதி தீர்ப்பை நிறைவேற்றுவதில் மகத்தான கஷ்டங்கள் இருக்கின்றன. இந்நிலையில் அக்கஷ்டங்களை நான் விவரிக்கப் போவதில்லை. சர்தார் சமர்ப்பித்த ஜாபிதாவில் சில பெயர்கள் இல்லாததுபற்றி என் மீது குறை கொண்டவர்களை நான் பொறுத்திருக்கும்படி வேண்டுகிறேன். அவர்கள் தங்கள் குறைகளை நிவர்த்திசெய்ய நியாயமான முறைகளையெல்லாம் அநுசரிக்கலாம். ஏப்ரல் மாதம் 16-ந் தேதி மாலை அநுசரித்த முறை நியாயமானதே அல்ல.

ஒவ்வொரு மெம்பரும் எல்லோருக்கும் பிரதிநிதி

காந்திஜி பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

"தாகூர் சாஹிப் சீர்திருத்த கமிட்டியில் நியமித்த நாலு பெயர்களும் குவயர் தீர்ப்பு பிரகாரம், எடுபடவே வேண்டும். ஆனால் அந்த நாலு பெயர்களையும் தாகூர் சாஹிப் விரும்பினால் சர்தார் பட்டேலின் ஒத்துழைப்புடன் எடுபடாமல் செய்திருக்கக்கூடும். சீர்திருத்த கமிட்டி மெம்பர்களை அதிகப்படுத்துவதை குவயர் தீர்ப்பு தடுக்கவில்லை. 7 மெம்பர்களில் குறைந்தது இரு முஸ்லிம் ப்ரதிநிதிகளும் ஒரு பாயாத் பிரதிநிதியையும் சேர்க்க நான் மிக்க முயற்சி செய்தேன், அப்பிரதி

நிதிகள் பரிஷத் மெம்பர்களுடன் பூரணமாக ஒத்துழைக்க இணங்கவில்லை. ஆகவே அவர்களைச் சேர்ப்பது முடியாமற் போனது. அவர்கள் ஒத்துழைக்கா விட்டால் பரிஷத்துக்கு மெஜாரிட்டி இருக்க வேண்டுமென்ற முக்கிய நோக்கம் பாழாகிவிடும்.

சீர்திருத்த கமிட்டியில் தாகூர் சாஹிப் நியமித்த நாலு பேர்களும் விலக்கப்பட்டபோதிலும் சீர்திருத்த கமிட்டியானது எல்லா வகுப்பாருக்கும் எல்லா நன்மைகளுக்கும் பிரதிநிதி யென்ற தோரணையில் நடக்குமென்பது நிச்சயம். அந்த நாலு மெம்பர்கள் கவனிக்கும் நன்மைகளையும் சீர்திருத்த கமிட்டி கவனித்தே தீரும். ஒரு கமிட்டி ஏகோபித்து எல்ல நன்மைகளையும் யும் கவனிக்கமால் அக்கமிட்டியிலுள்ள பலர் பலவித நன்மைகளை தனிப்பட்ட தோரணையில் கவனிப்பதென்ற அடிப்படையில் உலகில் ஒரு கமிட்டிகூட ஏற்பட்டதாக எனக்கு தெரியாது. தேசத்திலுள்ள பல்வேறு நன்மைகளுக்கும் ஒவ்வொரு நபரும் பிரதிநிதி என்பதே ஜனநாயகத்தின் சாரமாகும். ஆனல், விசேஷ நன்மைகளுக்கு விசேஷ பிரதிநிதித்வம் இருப்பதை ஜனநாயகம் ஒதுக்கவில்லை; ஒதுக்ககூடாது, ஆனல் அவ்விதவிசேஷ பிரதிநிதித்வம் ஜனநாயகத்தின் களங்கமே தவிர சிறந்த அம்சமல்ல.

சீர்திருத்த கமிட்டியின் கடமை

சீர்திருத்த கமிட்டி அமைப்பு சிலாக்யமானதென்று நான் கூறவில்லை. ஆனல் பரிஷத்துக்கு மெஜாரிட்டி இல்லாமல் எல்லா விசேஷ பிரிவினருக்கும் சர்தார் பட்டேல், பிரதிநிதித்வம் வழங்கிவிட்டால், ராஜகோட்டை மக்கள் அனைவரின் நன்மைக்கும் உகந்த அரசியல் திட்டமென்றை தயாரிப்பது முடியமற்போய்விடும். ஏகோபித்து வேலை செய்யவேண்டுமென்ற முக்கிய நிபந்தனையை கவனித்தே சர்தார் பட்டேல் 7 பேர்களை நியமித்திருக்கிறர். ஆகவே அந்த மெம்பர்கள் ராஜகோட்

டை மக்கள் அனைவரின் நன்மையையும் கவனிக்கவேண்டுமென்ற உணர்ச்சியுடன் ஏகோபித்து வேலை செய்ய கூடும். முஸ்லிம்கள், பாயாத்கள், ஹரிஜன்கள் இவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுவது அந்த 7 மெம்பர்களின் கடமையாகும். தாகூர் சாஹிப் ஸ்ரீ மோகன் மந்தன் என்பவரை ஹரிஜன பிரதிநிதியாக நியமித்திருந்தார். அவர் ஒரு முக்கிய நகரவாசியாக விருந்த போதிலும் அவரை எந்த அர்த்தத்திலும் ஹரிஜன் என்று கூறமுடியாது.

தாகூர் சாஹிபுக்கு காந்திஜி கடிதம்

ராஜகோட்டை, ஏப்ரல் மாதம் 16-ந் தேதி சீர்திருத்த கமிட்டிக்கு பிரஜா பரிஷத் சார்பில் 7 பெயர்களைச் சமர்ப்பித்து காந்திஜி தாகூர் சாஹிபுக்கு எழுதிய கடிதம் வருமாறு:—

“ அன்புள்ள தாகூர் சாஹிப்,

ஏப்ரல் மாதம் 10-ந் தேதி நீர் எழுதிய கடிதத்திற்கு இன்றுதான் என்னால் பதில் எழுத முடிந்தது. உமது தலையிலிருந்து உமது பொறுப்பை உதறி விட்டது பற்றி நான் வருந்துகிறேன். நீர் குறிப்பிட்ட முஸ்லீம்கள், பாயாத்கள் இவர்கள் உம்மால் நியமிக்கப் பட்டவர்கள். இந்தியாவின் பிரதம நீதிபதியின் தீர்ப்பு உமது வியாக்கியானத்திற்கு விரோதமாகச் சென்ற போதிலும், (பெயர்கள் நியமன விஷயத்தில்) உமது வாக்குறுதி நிலைநாட்டப்படும் வழியில் உமக்கு உதவி செய்வேனென்ற அர்த்தமே எனது வாக்கைப்பற்றி ஏற்படக்கூடும். வேறு அர்த்தமும் இல்லை. எனக்கு பாத்யமில்லாத ஒன்றை கொடுக்க நான் வாக்களித்ததாக எனது யூகத்திற்கே சிறிதும் எட்டவில்லை. சர்தார் பட்டேலுக்கும் பரிஷத்துக்கும் ஒரு டிரஸ்டியாகவே நான் பாடு படுகிறேன். சர்தார் பட்டேலின் நம்பிக்கைக்கும் பரிஷத்தின் நம்பிக்கைக்கும் பங்கம் விளையுமாறு நான்

எதையும் கொடுப்பது முடியாதென்பது ஸ்பஷ்டமான விஷயம். ஆகவே எனது வாக்குக்கு ஒரே அர்த்தமே உண்டு.

அந்த நாலு கனவான்களின் பெயர்களும் எடுபடாமலிருக்க நீர் விரும்பினால், சர்தார் பட்டேல் நியமிக்கும் மெம்பர்கள் மெஜாரிட்டியாக விருக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் சர்தார் பட்டேல் சார்பில் நான் உமக்கு உதவி செய்வேனென்ற அர்த்தமே அதற்கு உண்டு.

இதனைவிட வேறு அர்த்தம் சாத்யமல்ல. துரதிஷ்டவசமாகநீர் அசாதாரண நடவடிக்கையை மேற்கொண்டீர்.

நீர் நியமித்த மெம்பர்களை சர்தார் நியமிக்கும் மெம்பர்களின் ஜாபிதாவில் சேர்க்கும் பொறுப்பை நீர் என் மீது சுமத்தினீர். எனது வாக்குறுதி பேரில் நீர் தவறான அர்த்தத்தைக் கற்பிக்கிறீர். அந்த அர்த்தத்தால் துவயர் தீர்ப்பால் சர்தார் பட்டேலுக்குள்ள உரிமை பாழாகிறது. இது வருத்தமான விஷயமே. உமது கடிதம் கிடைத்ததும் நான் சர்தார் பட்டேலின் சார்பில் 7 பெயர்களை அனுப்புவது தவிர எனக்கு வேறு காரியமில்லாதிருந்தபோதிலும், நீர் நியமித்த நாலு கனவான்களில் மூவரை சர்தார் பட்டேல் நியமிக்கும் மெம்பர்களுடன் பூரணமாக ஒத்துழைக்கும்படி வேண்டினேன். அப்படி ஒத்துழைக்கும் பக்ஷத்தில் அம் மூவரையும் சர்தார் பட்டேல் தாம் சிபார்சு செய்ய வேண்டிய 7 மெம்பர்களோடு சேர்க்க இணங்கினர். அம் மூவரும் ஒத்துழைக்க மறுத்தனர். எனது முயற்சி வீணானது. நீர் நியமித்த நபர்களை மதிக்க இதற்கு மேல் என்னால் முயற்சி செய்ய முடியாது.

நீர் உமது கடிதத்தில் நாலாவது பெயரையும் குறிப்பிட்டீர். ஸ்ரீ. மோகன் மந்தன் ஒரு ஹரிஜனர் அல்லவாகையால் அவரை அழைத்து விவாதிப்பது

விரும்பத் தக்கதென்று நான் கருதவில்லை. மேலே கண்ட நாலு பெயர்கள் சேர்க்கபபடவில்லையென்ப தால், சர்தார் பட்டேல் நியமிக்கும் நபர்கள் முஸ்லீம்க ளின் உரிமைகளையும், பாயாத்கள், ஹரிஜன்கள் முத லியவர்களின் நியாயமான உரிமைகளையும் பாதுகாக்க மாட்டார்களென்பது அர்த்த மல்ல. கமிட்டியைப் பொறுத்த வரையிலும், பொதுஜன சேவையைப் பொறுததவரையிலும் இக் கனவான்களுக்கு (சர்தார் பட்டேலால் நியமிக்கப்படுகிறவர்களுக்கு) ஜாதி சமூக அபிமானமில்லை. அவர்களுடைய நோக்கம் ராஜ கோட்டை மக்கள் அனைவரின் க்ஷேமாபிவிருத்தியே. ஜனங்களின் உரிமைகளுக்காக பரிஷத்தே போராட்டம் நடத்தியதால் அப் பரிஷத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கமிட்டியில் அங்கம் வகிக்கிறார்கள்.

"சீர்திருத்த கமிட்டியில் 7 அங்கத்தினர்களை நிய மிக்க நீர் சர்தார் பட்டேலுக்கோ அல்லது பரிஷத்து கோ உரிமை அளித்தபடி கீழ்க் கண்ட பெயர்களை சமர்ப்பிக்கிறேன்.

1. போபத்லால் புருஷோத்தம் ஆனந்தா பி.ஏ., எல்.எல்.பி.
2. போபத்லால் தான்ஜீபாய் மாளவியா.
3. யமுனாதாஸ் குஷால்சந்த் காந்தி.
4. பாச்சர்லாதா வாதர்.
5. விராஜ்லால் மாய சங்கர சுக்லா.
6. ஜதாலால் ஹரிகிருஷ்ண ஜோஷி.
7. கஜனன் பவானி சங்கர ஜோஷி பி.ஏ., எல்.எல்.பி.

நீர் சம்மதித்தால் நான் மீண்டும் ஒரு வேண்டு கோள் விடுக்கிறேன். கமிட்டி மெம்பர்கள் தொகையை மாற்றக் கூடாதென்று நீர் எழுதினீர், அது உண்மை யல்ல. அக்கமிட்டியில் 10 அங்கத்தினர்கள்தான்

இருக்கவேண்டுமென்றும் பிரதம நீதிபதியின் தீர்ப்பு மட்டுப் படுத்தவில்லை. பரஸ்பர ஒப்பந்தத்தின்பேரில் இரு தரப்பாரும் எவ்வித மாறுதலும் செய்யலாம். நீர் நியமித்த நபர்களின் பெயர்கள் அடிபடாதிருக்க உமக்கு உதவி செய்ய சர்தார் பட்டேல் இன்னும் விரும்புகிறார். பரிஷத்துக்கு மெஜாரிட்டி இருக்கவேண்டுமென்ற ஒரே நிபந்தனையையே வற்புறுத்துகிறோம். பிரதம நீதிபதி தீர்ப்புப்படி பரிஷத்துக்கு 4 ஸ்தான மெஜாரிட்டி உண்டு. உமக்காகவும், சச்சரவுகளைத் தவிர்க்கும் பொருட்டும் சர்தார் பட்டேல் பரிஷத்துக்கு ஒரு ஸ்தான மெஜாரிட்டி இருந்தால் போதுமென்று சம்மதிக்கிறார். மெஜாரிட்டியை நாலிலிருந்து ஒன்றாகக் குறைக்கவும், சர்தார் தாராளமாக இருக்கிறார். இதற்கு மேல் நீர் எதுவும் எதிர்பார்க்க முடியாது.

இப்பொழுது நீர் கமிட்டி தலைவர் உள்பட மூன்று மெம்பர்களை நியமிக்கவேண்டும். சீர்திருத்த கமிட்டியானது தனது அறிக்கையைப் பூர்த்திசெய்து உம்மிடம் சமர்ப்பிக்க 1 மாதம் 4 நாள் அனுமதிக்கப்பட்டது. அதற்குமேல் காலம் நீடிக்கவேண்டியதில்லை யென்பதையும் நான் உமக்கு கவனப்படுத்துகிறேன்.

இரண்டாவது போராட்டத்தின்போது ஏற்பட்ட ஜப்திகள், அபராதங்கள், இதர அடக்குமுறைகள் இவைகளை ரத்துசெய்ய வேண்டுவது அவசியமென்று கூற வேண்டியதில்லை.

ஆசிர்வாதம்,

மோகன் தாஸ்.

இக்கடிதம் எனது சம்மதத்துடன் எழுதப்பட்டது. இதில் கண்ட பெயர்கள் என்னால் சிபார்சு செய்யப்பட்டவை.

(கையொப்பம்) வல்லபாய் பட்டேல்.

கூர்ஜர பாஷையிலேயே கடிதம் எழுதப்பட்டது.

பிரார்த்தனையின் போது காலித்தனம்

17-ந் தேதி மாலை மகாத்மா காந்தி பிரார்த்தனை செய்துகொண்டிருக்கையில் பாயாத்கள் கலாட்டா செய்தனரல்லவா? அதுபற்றி காந்திஜி ஜாகிர்தார்கள் சங்கத் தலைவருக்கு எழுதிய கடிதம் பின் வருமாறு:—

"ராஜகோட்டை சமஸ்தான பாயாத் ஜாகிர்தார் சமிதி வெளியிட்ட ஒரு பத்திரிகையை நான் வாசித்தேன். அதில் கூறப்பட்டிருக்கும் புகார்கள் கடுமையானவை. எனக்குத் தெரிந்த வரையில் அப்புகார்கள் உண்மை அல்ல. இதுபற்றி ஒரு முடிவுக்கு வர ஒரே ஒரு வழிதா னிருக்கிறது. நாம் ஒரு பஞ்சாயத்தை நியமித்து அதன் முன்பு முழு புகாரையும் சமர்ப்பித்து பஞ்சாயத்தின் தீர்ப்பைப்பெறவேண்டும். பிரார்த்தனைக்குப் பிறகு நான் மோட்டார் காரில் உட்காருவதற்கு பதில் நடந்து சென்றதன் நோக்கம் வெளிபபடையானது. ஆர்ப்பாட் டக்காரர்கள் தாங்கள் கூறவேண்டுவதையெல்லாம் என் னிடம் சொல்ல விரும்பினார்கள். நடந்து சென்றால் அவர்கள் எனது தேகத்திற்கு எவ்விதக் கெடுதியும் செய்ய மாட்டார்களென்று நான் நம்பிக்கைக் கொண்டி ருந்தேன். அவர்கள் என்னை தாக்க விரும்பினாலும், நான் அவர்களுக்கு தூரமாக இருக்கவில்லை. இங்கே காங்கிரஸ் இல்லை; பிரஜா பரிஷத்தே இருக்கிறது. பரிஷத் எவ்வித பத்திரிகையையோ துண்டுப் பிரசுரத் தையோ வெளியிடவில்லை.

எம். கே. காந்தி.

ரஞ்சிட் சிங்கின் யோசனை

காந்திஜிக்கு ஸ்ரீ ரஞ்சிட் சிங்ஜியின் பதில் பின் வரு மாறு: "அன்புள்ள காந்திஜீ, 17-ந் தேதி காலையில் எழு திய தங்களுடைய குறிப்பு எனக்குக் கிடைத்தது. ராஜ கோட்டை சமஸ்தான பாயாத் ஜாகீர்தார் சமிதி வெளி யிட்ட துண்டுப்பிரசுரத்தை தாங்கள் வாசித்திருக்கிறீர் களென்றும், தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்ற

மறுக்கதாக அதில் கூறப்பட்டிருக்கும் புகார் கடுமையானதென்று தாங்கள் கருதுவதாகவும் தங்களுடைய பதிலிலிருந்து நான் அறிகிறேன். இவ்விஷயத்தை ஒரு பஞ்சாயத்தின் தீர்ப்புக்கு விடலாமென கூறியிருக்கிறீர்கள். மார்ச் 11ௌ தாங்கள் எழுதிய கடிதத்தின் அர்த்தம் என்னவென்பதுபற்றி சர் மாரிஸ் குவயரே தீர்ப்புக் கூற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் சிபார்சு செய்கிறேன். பஞ்சாயத்தார் தீர்ப்புக்குவிட தாங்கள் சம்மதிக்கையில், தற்போதுள்ள சந்தர்ப்பங்களில் சர் மாரிஸ் குவயரைவிட இவ்விஷயத்தை நிர்வகிக்க சிலாக்யமானவர் வேறு எவரும் இருக்க முடியாது.

(நேற்று மாலை கலாட்டாவை குறிப்பிட்டு) என்ன நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், நாங்கள் அமைதிகரமாகவும், அஹிம்சா தர்மத்தை அநுசரித்துமே நடப்போம். தங்களைத் தாக்க முயற்சி நடந்ததாக எவரும் உங்களிடம் கூறுவது பொருத்தமல்ல. இதில் தங்களுக்கோ அல்லது மற்றெவருக்கோ சிறிது சந்தேகமிருந்தாலும், நான் எங்கள் பாயாத் தொண்டர்கள் 25 பேர்களை உங்களைப் பாதுகாக்கும்படி ஏற்பாடு செய்ய தயாராக விருக்கிறேன்.

ரஞ்சிட் சிங்ஜி.

காந்திஜி சம்மதம்

இன்று மகாத்மா ஸ்ரீ. ரஞ்சிட் சிங்ஜிக்கு அனுப்பிய கடிதம் வருமாறு:—

“எனது கடிதத்தின் அர்த்தத்தைப்பற்றி பிரதம நீதிபதி தீர்ப்பு கூற வேண்டுமென்று நீர் வைசிராயை வேண்டிக்கொண்டதாக நான் பத்திரிகைகளில் வாசித்தேன். பிரதம நீதிபதியை தொந்தரவு செய்யக்கூடிய அளவுக்கு இவ்விஷயம் இருக்கவில்லை. வைசிராய் என்னை இணங்கும்படி செய்வதற்கும் இடமில்லை. நீங்கள் விரும்பினாலும், பிரதம நீதிபதி சம்மதித்தாலும் நான் சித்தமாகவிருக்கிறேன். இவ்விஷயத்தை பம்பாய்

நீதிபதியிடம் சமர்ப்பிக்கலாமென்பது எனது யோசனை. ஒரு பஞ்சாயத்திடம் இவ்விஷயத்தைச் சமர்ப்பிக்கவும் நான் சம்மதிக்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. சீர் திருத்த கமிட்டியின் வேலை நிற்ககூடாது. உங்களுடைய அர்த்தம் ஒத்துக்கொள்ளப்படுமானால் கமிட்டியிலிருந்து ஒரு மெம்பரை எடுத்துவிட்டு உங்கள் பிரதிநிதிக்கு இடமளிக்கிறேன்.

எம். கே. காந்தி.

ஆர்பாட்டங்கள் நின்றன.

பிறகு ஜாகீர்தார்கள் சங்கத் தலைவர் விடுத்த நிருபம் வருமாறு: "உங்களுக்கு விரோதமாக பாயாத்கள் ஆரம்பித்த ஆர்ப்பாட்டங்களையெல்லாம் நிறுத்த இப்பொழுது ஏற்பாடு செய்திருக்கிறேன். ராஜகோட்டை பாயாத்களுக்கும், தங்களுக்கும் ஏற்பட்டத் தகராறை பஞ்சாயத்தார் தீர்ப்புக்கு சமர்ப்பிக்சத் தாங்கள் சம்மதித்துக்காட்டும் தைரியத்திற்காக நான் தங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்து கூறுகிறேன்."

குறிப்பு: இக்கடிதத்தை நான் எழுதுகையில் உமது கடிதம் கிடைத்தது. அதற்கும் எனது பதில் மேலே கண்ட கடிதத்திலிருக்கிறது. பிரதம நீதிபதி இவ்வேலையைச்செய்ய சம்மதித்த போதிலும், உங்கள் பத்திரிகையில் குறிப்பிட்ட புகார்களை விசாரிக்க ஒரு பஞ்சாயத்து அவசியமே.

தப்பபிப்பிராயம் வேண்டாம்

மேலே கண்ட கடிதத்திற்கு காந்திஜியின் பதில் :-

குமார்ஜி ரஞ்சிட் சிங்ஜி,

உமது கடிதம் கிடைத்தது. நமக்குள் தப்பபிப்ராயமோ ஆர்ப்பாட்டமோ ஒழியுமாக! நான் பத்திரிகைகளில் வாசித்தவுடனே பஞ்சாயத்து நியமிக்க எனக்கு ஆட்சேபணை இல்லையென்று உமக்கு எழுத தீர்மானித்தேன். பம்பாய் நீதிபதி எவரையாகிலும் நாம் நிச்ச

யிக்கலாம். பிரதம நீதிபதி பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. அவருக்கு தொந்தரவு ஏற்படுத்த நான் தயாராக விருக்கவில்லை. அவருக்குத் தொந்தரவு கொடுப்பது முறையல்ல. நீர் இன்னும் வற்புறுத்தினால் நீரே அவரது சம்மதத்தைப் பெறவேண்டும். யார் பஞ்சாயத்தாராக நியமிக்கப்பட்ட போதிலும் எனது நிபந்தனையை மறந்துவிடக்கூடாது. பஞ்சாயத்து தீர்ப்பு வரையில் கமிட்டி வேலை ஆரம்பம் ஒத்திவைக்கக்கூடாது. எனது இதர வேண்டுகோளுக்கு நீர் பதில் கூறவில்லை. உங்கள் பத்திரிகையில் கூறப்பட்ட புகார்களை ஒரு பஞ்சாயத்தின் தீர்ப்புக்கு விடவேண்டும்."

எம். கே. காந்தி.

கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு—குறள்.

முடிவுரை

ராஜகோட்டை சமஸ்தானத்தில் ஒரு நகரமும், 432 கிராமங்களுமிருக்கின்றன. ராஜகோட்டை நகரத்தில் 47,485 ஜனத் தொகையும், கிராமத்தில் 28,055 ஜனத் தொகையுமுள. ஆக மொத்த ஜனத் தொகை 75,540ல் ஹிந்துக்கள் 62,495, முஸ்லிம்கள் 8,051, ஜயினர்கள் 4,894, கிருஸ்தவர்கள் 13, ஜோராஸ்திரியர்கள் 5, மலைவாசிகள் 82 பேர்களிருக்கின்றார்கள். சமஸ்தானத்திலுள்ள எல்லா வகுப்பினருக்கும் பொறுப்பாட்சி வேண்டுமென்று பிரஜா பரிஷத் தன் கடமையைச் செய்தது. சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது, ஜனாப் ஜின்னாவோ, ஸ்ரீ அம்பேத்காரோ வாயைத்திறந்து ஒரு வார்த்தையும் பேசாதிருந்தார்கள். அன்று கடிவாளத்தைக் கண்டு வாய்திறவாதிருந்த இக் குதிரைகள், இன்று கொள்ளு என்றதும் குதித்தெழுந்து ஓடுகின்றன. அடிமையிலும், அடிமைகளாகக் கிடந்த இந்த 8,051 முஸ்லீம்களுக்காக ஜனாப் ஜின்னா என்ன சேவை செய்தா


றென்பது தெரியவில்லை. ராஜகோட்டை என்ற ஒரு சமஸ்தான மிருப்பதாகவோ அல்லது அங்கு முஸ்லீம் களிருக்கின்றார்களென்றோ சகுனி வீரவல்லா சொல்லும் வரை ஜனாப் ஜின்னா தெரிந்துக் கொண்டிருக்கமாட்டார். வகுப்புவாதப்பேய் தலை விரித்தாட வேண்டுமானால் பூசாரிகள் அவசியமல்லவா? ஆகவே இப் பூசாரிகளோ, பேய்களோ மகாத்மாவின் முன் நிற்காதென்பது உறுதி.

சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி கிடைப்பதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை நேரில் கண்டவர்களே அறிவர் அல்லது இதுவரையில் ராஜகோட்டை விஷயமாக நடந்த சத்தியாக்கிரகப் போரை ஊன்றிப் படிப்பவர்கள் ஒருவாறு அறிந்துக் கொள்ளலாம். மன்னர்களின் சொந்த செலவுக்காகவும், இந்திரபோகங்களை அனுபவிக்கவுமே வரி வசூல் செய்வதாக நினைத்திருந்த மன்னர்களைத் திருத்தி, பிரஜைகளின் க்ஷேமத்தைக் கவனிக்கும்படி வேண்டிக்கொண்டால், வேண்டிக் கொள்பவர்களைத் தண்டிக்க அவர்கள் பின்வாங்குவதில்லை. தாய் பத்தடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயுமென்று சொல்வது போல், சமஸ்தான அதிகாரிகள், மன்னரை விட அதிகமாக சீறிவிழுகிறார்கள். ராஜகோட்டையில் 5 மாதம் நடந்த சத்தியாக்கிரகப்போரில் சுமார் 4000 பேர்கள்வரையில் சிறை சென்றார்கள். பல பிரபுக்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்தார்கள். தடியடிப் பிரயோகமும் குறைவில்லாமல் நடந்தது. இவ்வளவு கொடுமைகளையும் பிரஜைகள் பொறுமையாக ஏற்றுக் கொண்டார்கள். பொறுத்தார் பூமியாண்டார் என்னும் வாக்குப்படி பொறுத்த பிரஜைகள் சார்பாக கமிட்டி நியமிக்க வல்லபாய் பட்டேல், மகாத்மா காந்தி ஏழு பெயர்களை சிபார்சு செய்து தாகூர் சாகிப்புக்குக் கடிதம் எழுதிவிட்டார்கள். சமஸ்தான சார்பாக மூன்று பேர்களும், பிரஜைகள் சார்பாக ஏழு பேர்களும் ஆக மொத்தம் பத்து பேர்களும்

சேர்ந்து நிர்ணயிக்கும் கட்டளைப்படி சமஸ்தான சர்க்கார் நடக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இக் கமிட்டியில் சில வகுப்பினருக்கு பிரதிநிதித்வமில்லை யென்பது உண்மையே. இந்தக் குறையைப் போக்கவும் மகாத்மா அரும்பாடுபட்டார். ஆனால் சகுனி வீரவல்லாவும், தாகூர் சாகிப்பும் இடங் கொடுக்க மறுத்துவிட்டார்கள். சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்வம், கமிட்டியில் இல்லாதிருப்பதொன்றினாலேயே அவர்களின் நன்மைகள் அதிகமாக கவனிக்கப்படுமென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. மகாத்மா காந்தியைவிட ஏழைகள் பால் இரக்க முள்ளவர்கள் வேறெவரும் கிடையாது. சிறுபான்மையோர்கள் மீதும், முஸ்லீம்கள் மீதும், பய்யாத்கள் மீதும் தாகூர் சாகிப்புக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அன்பு சென்ற வருஷமே ஏற்பட்டிருந்தால் எவ்வளவோ நன்மையாக இருந்திருக்கும். தங்கள் சுயநலம் பாதிக்கும்பொழுது வகுப்புவாதப் பேயைக் கொண்டுவருவது எங்கும் வழக்கமா யிருக்கிறது. இவ் வழக்கத்தை தாகூர் சாகிப் பின்பற்றியதும், மக்களை மகாத்மா மீது ஏவ விட்டதும் பொறுப்புள்ள மன்னருக்கு அழகல்ல! மன்னிக்கும் குணம் படைத்த மகாத்மா, கலகம் விளைவித்தவர்களையும், கலகத்திற்குக் காரணபூதரான அதிகார வர்க்கத்தையும் மன்னித்து விடுவாரென்பதில் சிறிதும் சந்தேக மில்லை. ராஜகோட்டை உதாரணத்தை எடுத்துக்கொண்டு மற்ற சமஸ்தானங்களும் பின்பற்றி பொறுப்பாட்சி கொடுப்பார்களென்று நம்புகிறோம்.

உதாரணம்

ராஜா ஸ்ரீமாண்ட் பாவனராவ் என வழங்கும் பாலாசாகிப் பண்ட் அவுந்த் ராஜா. பி.ஏ., பாஸ் செய்திருக்கிறார். இவர் ஒரு பிராமணர். சூரிய நமஸ்காரம் செய்வதில் மிக்க பற்றுடையவர். சதாரா ஜாகிரில் ஒரு



அவந்த் ராஜா ஸ்ரீமாண்ட் பாவனராவ்

சமஸ்தானம் அவந்த். இந்த சமஸ்தானம் ராஜாராம் பான்ஸ்லேவின் மனைவியான தாராபாய் சதாரா ராணியால் 1700 ஆண்டு ஸ்ரீபண்ட் பாரசராம் திரும்பக்கு என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. மேராபென் கோபல் கிருஷ்ணராவ் காலஞ் சென்ற பிறகு அவருடைய அம்மான் ஸ்ரீ மாண்ட் பாவனராவ் 1909 வது வருஷம் நவம்பர் மாதம் 4 தேதி பட்டத்திற்கு வந்தார். பட்டத்திற்கு உரிமையாளர் இவருடைய பேரன் பகவந்தராவ். ஸ்ரீ மாண்ட் பாவனராவுக்கு 6 குமாரர்களிருக்கிறார்கள். 1936௵ ஜனவரி௴ 1௳ இவருக்கு ராஜா பட்டம் அளிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் ஆணைப்படி தனது சமஸ்தானத்திற்கு பொறுப்பாட்சிக் கொடுக்க ஒப்புக்கொண்டார்.

உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி
நீடூழி வாழ்க! வாழ்கவே!!

வந்தேமாதரம்.

9-வது அத்தியாயம்.

சமஷ்டியில் அங்கம் வகிக்கப்போகும் சமஸ்தானங்கள்.

	சமஸ்தானங்கள்.	சதுர மைல்.	ஜனத்தொகை.	வருஷ வருமானம் ரூ.	பிரிட்டிஷாருக்கு கப்பம்.
1	ஹைதராபாத்	82,698	1,44,36,148	8,42,13,000	இல்லை
2	மைசூர்	29,475	65,57,302	3,66,96,000	2,45,000 ரூ.
3	காஷ்மீர்	85,885	36,46,243	2,54,79,000	2 சால்வை, 3 ருமால்
4	குவாலியர்	26,367	35,23,070	2,67,65,000	இல்லை
5	பரோடா	8,164	24,43,007	2,38,37,000	,,
6	காலட்	73,278	3,42,101	14,40,000	,,
7	சிக்கிம்	2,818	1,09,651	4,72,000	,,
8	ராம்பூர்	892	4,64,919	45,50,000	,,
	காசி	875	3,91,165	19,38,308	2,19,000 ரூ.
9	திருவாங்கூர்	7,625	50,95,973	2,45,28,000	7,96,430 ரூ.
	கொச்சின்	1,480	12,05,016	87,58,000	2,00,000 ரூ.
	புதுக்கோட்டை	1,179	4,00,694	20,47,000	இல்லை
	பங்கனபல்லி	275	39,239	3,65,000	,,

	சாண்டேர்	167	13,583	1,53,000	,,
10	உதயபுரி	12,923	15,66,910	74,13,000	2,66,000 ரூ. *
	ஜெயபுரி	15,590	26,31,775	1,34,63,000	4,00,000 ,,
	ஜோதிபுரி	36,021	21,25,982	1,58,32,000	2,13,000 ,,
	பிகானிர்	23,317	9,36,218	1,22,64,000	இல்லை
	ஆழ்வார்	3,158	7,49,751	38,04,000	இல்லை
	கோட்டா	5,725	6,85,804	47,93,000	2.34,720 ரூ. *
	பாரத்பூர்	1,978	4,86.954	33,74,000	இல்லை
	டோங்க்	2,553	3,17,360	22,49,000	,,
	தோல்பூர்	1,173	2,54,986	15,76,000	,,
	காராளி	1.227	1,40,525	7,21,000	,,
	பூண்டி	2,220	2,16,722	12,19,000	1,2),000 ரூ.
	ஸிரோஹி	1,994	2,16,528	10,03,000	இல்லை
	துங்கார்பூர்	1,460	2,27,544	6,37,000	17,500 ரூ.
	பன்ஸ்வாரா	1,606	2,25,106	4,13,000	17,500 ,,
	பர்தாப்கார்	889	76,539	5,87,000	36,350 ,,
	ஜாலாவார்	813	1,07,890	7,35,000	30,000 ,,

	ஜெயஸால்மர்	16,062	76,255	4,34,000	இல்லை
	கிஷன்கார்	858	85,744	7,50,000	,,
11	இந்தூர்	9,902	13,25,089	1,26,45,000	,,
	போபால்	6,924	7,29,955	80,00,000	1,01,290—5—0
	ரீவா	13,000	15,87,445	51,80,000	இல்லை
	டாட்டியா	912	1,58,834	13,66,000	10,000 ரூ. *
	அர்ச்சகா	2,080	3,14,661	13,82,000	இல்லை
	தார்	1,800	2,43,521	17,60,000	6,601 ரூ.
	சின்ன தேவாஸ்	419	70,513	6,83,000	14,237—4—7
	பெரிய தேவாஸ்	449	83,321	6,50,000	14,237—4—7
	ஜவோரா	602	1,00,166	12,44,000	1,57,127 ரூ.
	ரத்லம்	693	1,07,321	10,00,000	42,000 ,,
	பன்னா	2,596	2,12,130	8,96,000	9,955 ,,
	ஸம்தார்	178	33,307	3,50,000	இல்லை
	அஜெயகார்	802	85,895	3,54,000	7,013—12—0
	பிஜாவார்	973	1,15,852	3,24,000	இல்லை
	சர்க்காரி	880	1,20,351	6,30,000	8,583—9—6

	சத்தார்பூர்	1,130	1,61,267	7,55,000	இல்லை
	பவோனி	121	19,132	1,50,000	இல்லை
	[illegible]கோத்	501	74,589	2,36,000	,,
	மெய்கார்	407	68,991	4,08,000	,,
	பரௌண்டா	218	16,071	53,000	,,
	பர்வானி	1,178	1,41,110	10,83,000	3,389 ரூ.
	அலி ராஜ்பூர்	836	1,01,963	4,96,000	1,271—0—0
	ஷாப்பூரா	405	74,219	4,32,000	10,000 ரூ.
	ஜாபுவா	1,336	1,45,522	4,28,000	1,271—0—0
	ஸீலானு	297	35,223	2,61,000	21,000 ரூ.
	ஸீதாமா	202	28,422	2,71,000	27,500 ,, *
	ராஜ்கார்	962	1,34,891	10,79,000	62,621 ,, *
	கார்ஸிங்கார்	734	1,13,873	7,42,000	42,760—1—3 *
	கில்சிபூர்	273	45,583	2,92,000	11,134—3—6
12	கட்ச்	8,249	5,14,307	26,33,270	82,257—15—0
	இடார்	1,669	2,62,660	21,00,000	30,340 ரூ. *
	நவாநகர்	3,791	4,02,192	92,67.507	50,312 ,,

பலங்கர்	2,961	5,00,274	1,47,76,273	1,28,060	,,
ஜுனுகாட்	3,337	5,45,152	86,28,291	28,394	,,
ராஜபிபாலா	1,517	2,06,086	25,54,506	50,001	,, *
பாலன்பூர்	1,769	2,65,424	11,34,000	38,462	,, *
தாரங்கதரா	1,167	88,961	15,00,000	40,671	,,
கொன்டால்	1,024	2,05,846	50,00,000	49,096	,,
போர்பந்தர்	642	1,15,673	20,00,000	21,202	15 000 வி.க.
மோர்வி	822	1,13,023	56,39,000	9.263	,,
ராதன்பூர்	1,150	70,530	5,87,000	இல்லை	
வங்கனீர்	417	44,259	7,35,000	17,422	ரூ.
பலிதாணு	300	62,150	8,12,000	10,364	,, *
காம்பே	392	87,761	13,07,472	21 924	,,
தர்மபூர்	704	1,12,031	8 72,551	9,000	,,
பலவிஞர்	189	52,525	2,83,820	9 766	,,
பாரியா	813	1,59,492	11,74,000	இல்லை	
சின்ன உதயபுரி	890	1,44,660	11,26,000	7,806	ரூ. *
ஸாந்த்	394	83,538	3,90,819	5,385	,,

	லுனவாடா	388	95,162	5,60,000	9,231 ,,
	பன்ஸடா	215	48,807	7,38,000	154 ,,
	சச்சின்	49	22,107	3,97,000	இல்லை
	ஜவார்	308	57,261	4,22,000	,,
	தன்தா	347	26,172	2,01,000	2,791—15—3 *
	தரோல்	282	27,639	2,52,708	10,231 ரூ. *
	லிம்டி	343	40,688	7,89,707	54,517—1—0
	வதுவாண்	242	42,602	5,70,000	26,009—8—8
	ராஜகோட்டை	282	75,540	14,04,597	18 991—(2330) ரூ.
13	கோலாபூர்	3,217	9,57,137	49,90,000	இல்லை
	ஸங்கிலி	1,136	2,58,442	15,35,000	1.35,000 ரூ.
	ஸவந்தவாடி	930	2,30,589	6,66,000	இல்லை
	ஜஞ்ஜிரா	379	1,10,388	11,60,000	,
	முதோல்	368	62,860	3,36,000	2,672 ரூ.
	போர்	910	1,41,546	5,70,000	4,684 ,,
	ஜம்கந்தி	524	1,14,282	9,22,000	20,841 ,,
	(சின்ன) மிராஜ்	196½	40,686	2,86,000	6,413 ,,

	(பெரிய) மிராஜ்	342	93,957	5,10,000	12,558 ,,
	சின்ன குருந்தவாட்	116	39,583	2,07,000	இல்லை
	பெரிய குருந்தவாட்	182	44,204	2,57,000	9,619 ரூ.
	அகல்கோட்	498	92,605	6,00,000	14 592 ,,
	பலத்தான்	397	58,761	4,90,000	9,600 ,,
	ஜாத்	980	91,102	3,14,000	11,217 ,,
	அவுந்த்	501	76,507	4,25,000	இல்லை
	ராமதுர்க்	169	35,401	2,24,000	இல்லை
14	பாட்டியாலா	5,942	16,25,520	1,38,75,000	,,
	பகவல்பூர்	16,434	9,84,612	42,56,000	,,
	கெயிர்பூர்	6,050	2,27,183	21,93,000	,,
	கபூர்தாலா	599	3,16,757	32,49,000	,,
	ஜிந்த்	1,299	3,24,676	25,23,000	,,
	நாபா	347	2,87,574	27,9[illegible],000	,,
	மண்டி	11,39	2,07,465	12,06,000	1,00,000 ரூ.
	ஸுகெட்	392	58,408	2,60,000	11,000 ,,
	பிலாஸ்பூர்	453	1,00,994	2,90,000	8,000 ,,

	தெஹ்ரிகார்வால்	4,500	4,70,109	20.34,000	இல்லை
	ஸிர்மூர்	1,046	1,48,568	7,50,000	,,
	சம்பா	3,127	1,46,870	9,14,000	2,307—4—0
	பரித்கோட்	638	1,64,364	17,84,000	இல்லை
	மாலர் கோட்லா	165	83,072	8,77,000	இல்லை
	லோஹாரு	226	23,338	1,19,000	,,
15	கொச் பிஹார்	1,318	5,90,866	26,93,000	67,700—15—0
	திரிபுரா	4,116	3,82,450	26,44,000	இல்லை
	மணிப்பூர்	8,638	4,45,606	8,07,000	30 000 ரூ.
16	மயூர்பஞ்ச்	4,243	8,89,603	29,11 000	1,068 ,,
	ஸோனெபூர்	906	2,37,945	4,92,000	12,000 ,,
	பாட்னு	2 511	5,66,924	9,07,000	13,000 ,,
	காலஹண்டி	3,745	5,13,716	6,25,000	16,000 ,,
	கியோஞ்சஹார்	3,096	4,60,647	9,79,000	1,000 ,,
	தென்கனல்	1,463	2;84,328	5,31,000	5,099 ,,
	நயாகர்	590	1,42,399	4,11,000	5,525 ,,
	தல் சேர்	399	69,702	3,21,000	1 040 ,,

நில்கிரி	284	68,598	1,73,000	3,900	,,
பாம்ரா	1,988	1,51,259	4,36,000	7,500	,,
சங்கபூர்	2,492	3,56,388	5,08,000	10,000	,,
ஸெரிகேலா	449	1,38,671	3,49,000	இல்லை	
பாட்	1,264	1,35,248	3,21,000	800	ரூ.
போனெய்	1,296	80,144	1,80,000	2,700	,,
பாஸ்டர்	13,062	5,24,721	9,18,000	18,000	,,
ஸர்கூஜா	6,055	5,01,939	7,02,000	3,500	,,
ரெய்கார்	1,486	2,77,569	5,09,000	5,500	,,
நந்தகோவன்	871	1,82,380	4,97,000	80,000	,,
கெய்ராக	931	1,57,400	5,83,000	80,000	,,
ஜாஷ்பூர்	1,963	1,93,698	3,25,000	2,000	,,
காங்கெர்	1,431	1,36,101	3,14,000	இல்லை	
கொரியா	1,631	90,886	2,86,000	750	ரூ.
ஸாரங்கர்	540	1,28,967	2,65,000	4,500	,,

* இக்குறி போட்டுள்ள தொகைகள் பெரிய சமஸ்தானங்களுக்குச் செலுத்தும் கப்பம்.

ஸ்பார்ட்டன் & கோ., 156, பிராட்வே, மதராஸ்.

Chacel
6086

தியாகபூமியில் ஓர் காட்சி



சாருவும், சம்பு சாஸ்திரியும்



Wrapper pages Printed at The Modern Printers, Madras.